'ரூத்தின் சரித்திரம்', தன் வாழ்வில் நிராசையடைந்திருந்த நகோமி என்னும் ஒரு ஸ்திரீயையும், அன்பும் பாசமும் மிக்கவளாயிருந்த ரூத் என்ற அவளுடைய மருமகளையும் பற்றிய ஒரு சரித்திரமாகும். வெறுமையும் கசப்பும் தனிமையும் நிராசையும் அடைந்திருந்த நகோமியின் வாழ்வில், ரூத் (போவாசின் உதவியுடன்) நிறைவையும் இனிமையையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொண்டுவருகிறாள்!

ரூத்தின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்நூல், கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டியாகிய புதிய ஏற்பாட்டுச் சபைக்கும் முறையே அடையாளமாயிருக்கிற போவாஸ், ரூத் என்பவர்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க நற்பண்புகளை எடுத்தியம்புகிறது. ரூத்தின் தாழ்மையும், போவாசின் தூய்மையும் - கிறிஸ்துவில் உள்ளதும், அவருடைய மணவாட்டியில் எதிர்பார்க்கப்படுகிறதுமான பூரணமான தாழ்மைக்கும் தூய்மைக்கும் நிழலாட்டமாயிருக்கின்றன. தாழ்மையும் தூய்மையும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன. ஒருவரது வாழ்வில் தெய்வீக அன்பு நடைமுறையில் செயல்படுத்தப்படும் போது, அது மற்றவர்களின் வாழ்வில் எவ்வளவு வல்லமையாகப் பலன்செய்யக் கூடும் என்பதையும் ரூத்தின் சரித்திரத்தில் மறைமுகமாக நாம் காண்கிறோம். மரணம், பிரிவின் துயரம், அழுகை இவற்றுடன் ஆரம்பிக்கும் இச்சரித்திரம், இனிய நட்புறவு, ஆனந்தப்பரவசம், ஆண் பிள்ளையின் பிறப்பு இவற்றில் முடிவுறுகிறது.

நேயரே, உங்கள் வாழ்வின் நிராசை நம்பிக்கையாகவும், கசப்பு மதுரமாகவும், பலனின்மை நிறைபலனாகவும், வறட்சி செழிப்பாகவும், தனிமை நட்புறவாகவும், புலம்பல் ஆனந்தக் களிப்பாகவும், யாதுமற்ற அவலநிலை ஒளிமயமான எதிர்காலமாகவும் மாறுவதற்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம். "உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" என்ற வாக்குத்தத்தத்துடன் இந்நூல் உங்களைச் சந்திக்கிறது!

தாழ்மையும் தூய்மையும் (ரூத்தின் சரித்திரம்)

# தாழ்மையும் தூய்மையும்

## (ரூத்தின் சரித்திரம்)

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;
பரலோகராஜ்யம் அவர்களுடையது"
"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"
(மத். 5 : 3, 8)

# இதர வெளியீடுகள்

| | A. உபதேச புத்தகங்கள் | வெளியீடு எண் |
|---|---|---|
| 1 | தேவன், தேவ தூதர்கள், மனுஷன் | A 1 |
| 2 | மீட்பு, மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் | A 2 |
| 3 | ஞானஸ்நானம் பற்றிய உபதேசம் | A 3 |
| 4 | தெய்வீக சுகத்தைப் பற்றிய உபதேசம் | A 4 |
| 5 | லௌகீகம் பற்றிய உபதேசம் | A 5 |
| 6 | பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பற்றிய உபதேசம் | A 6 |
| 7 | புதிய ஏற்பாட்டு ஊழியம் ( பகுதி I ) | A 7 |
| 8 | பூரண பரிசுத்தமாகுதல் (வினா - விடை) | A 8 |
| 9 | கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (வினா - விடை) | A 9 |
| 10 | மகா உபத்திரவம் (வினா - விடை) | A10 |
| 11 | கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், நித்தியமும் | A11 |
| 12 | ஞானஸ்நானம் | A12 |
| 13 | பரிசுத்தஆவியின் அபிஷேகம் | A13 |
| 14 | தெய்வீக சுகத்தின் தூதுகள் | A14 |
| 15 | புதியஏற்பாட்டுஊழியம்( பகுதிII ) | A15 |

| | B. விளக்கவுரை புத்தகங்கள் | |
|---|---|---|
| 1 | அப்போஸ்தலருடைய நடபடிகள் - விளக்கவுரை | B 1 |
| 2 | எபேசிய நிருபத்தின் விளக்கவுரை | B 2 |
| 3 | வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கவுரை | B 3 |
| 4 | உன்னதப்பாட்டு - விளக்கவுரை | B 4 |

| | C. இதர புத்தகங்கள் | |
|---|---|---|
| 1 | மனுஷனின் நித்திய வாழ்க்கை | C 1 |
| 2 | ஆசரிப்புக்கூடாரம் | C 2 |
| 3 | ஜெபம் | C 3 |
| 4 | வேதத்தின் மறைபொருள் விளக்கங்கள் சில | C 4 |
| 5 | பிதாக்களின் கல்லறைகள் | C 5 |
| 6 | சோதனை ஜீவகிரீடம் பெற இன்றியமையாதது | C 6 |
| 7 | பாஸ்டர் பால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு | C 7 |
| 8 | தேவசித்தம் | C 8 |
| 9 | கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும் | C 9 |
| 10 | யோசேப்பின் வாழ்க்கை - சிறந்ததோர் மாதிரி! | C10 |
| 11 | எருசலேமின் அலங்கமும் வாசல்களும் | C11 |
| 12 | மன்னித்தல் - பரலோகத்தின் ஒரு முன்சுவை! | C12 |
| 13 | மனுஷீகப் பெருமையும் தெய்வீகத் தாழ்மையும் | C13 |

வெளியீடு எண் : C 14

# தாழ்மையும் தூய்மையும்

## (ரூத்தின் சரித்திரம்)

First Edition : 2003
Reprint : 2005
Reprint : 2011

இந்நூலைப் பிரசுரிக்க விரும்பும் எவருக்கும் பதிப்புரிமை அளிக்கப்படுகிறது. உண்மையில், பாரெங்குமுள்ள மாந்தர் அனைவரும், குறிப்பாக தேவ ஊழியர்களும் தங்கள் வாழ்வில் உள்ளான தாழ்மையையும் மெய்யான தூய்மையையும் ஆவலுடன் நாடித்தேடி அடைந்து கொள்ளத்தக்கதாக, இத்தூது எல்லா மொழிகளிலும் வெளியிடப் படுவதைக் காண நாங்கள் விழைகின்றோம்.

**பிரதிகளுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**
**பெந்தெகொஸ்தே சபை,**
ரோஜா தெரு, S.V. நகர் போஸ்ட்,
இரும்புலியூர், சென்னை - 63.
இந்தியா.
தொலைபேசி : (044) 2279 – 0079
Email : tpmibr@gmail.com

*Printed by*

Pentecost Press Trust,
Roja St., S.V. Nagar Post,
Irumbuliyur, Chennai - 63.

# முகவுரை

**தாழ்மையும் தூய்மையும்** கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக இன்றியமையாத இரு நற்பண்புகளாகும். நாம் பரலோக ராஜ் யத்தில் பிரவேசிப்பதற்கும், தேவனைத் தரிசிப்பதற்கும் அத்தியா வசியமான இப்பண்புகளை 'ஒரு கிறிஸ்தவனின் இரு கண்கள்' என்று கூறின் அது மிகையாகாது (மத். 5 : 3, 8 ; 18 : 3, 4 ; எபி. 12 : 14). கிறிஸ்து பூரணமான தாழ்மையும் பூரணமான தூய்மையு முள்ளவராய் இவ்வுலகில் ஜீவித்து, நாம் அவருடைய அடிச்சுவடு களைப் பின்பற்றும்படி நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போயிருக்கிறார் (மத். 11 : 29 ; எபி. 7 : 26 ; I யோவான் 3 : 3). நாமும் அவருடைய அதே தாழ்மையையும் பரிசுத்தத்தையும் தரித்துக்கொண்டவர்களாய், அவருடைய பிரசன்னமாகுதலுக்காக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும்படி, இக்கடைசி நாட்களில் அவர் பல ஏதுக்களின் வாயிலாகத் தம்முடைய ஜனங்களாகிய நம்மைத் தட்டியெழுப்புகிறார். உங்கள் கரங்களை வந்தெட்டியுள்ள இந்நூல் அவற்றுள் ஒன்றாகும். வேதாகமத்திலுள்ள சிறு புத்தகங் களுள் ஒன்றாகிய ***ரூத்தின் சரித்திரத்தை*** அடிப்படையாகக் கொண்ட இந்நூல் கிறிஸ்துவின் தாழ்மையையும் தூய்மையையும் தழுவிக்கொள்ளும்படி உங்களை அறைகூவி அழைக்கிறது! பரமனின் இவ்வரும் அழைப்பிற்குத் தங்களை அர்ப்பணிக்கும் எவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த ஒளிமயமான ஓர் எதிர்காலத்தையும் இது வாக்குப்பண்ணுகிறது!

ரூத்தின் சரித்திரத்தில் மறைந்து புதைந்து கிடக்கும் ஆன்மீகப் புதையல்களைத் தோண்டியெடுத்து வழங்கும் இந்நூல், ஓர் ஆழமான ஆவிக்குரிய ஜீவியத்திற்காக ஏங்கித் தவிக்கும் தேவபிள்ளைகள் யாவரையும் கிறிஸ்துவின் பூரணத்தை நோக்கி வெற்றிநடைபோடச் செய்யும் என்பதில் ஐயமில்லை. குறிப் பாக, வெற்றிகரமான ஒரு வாழ்க்கையையும் பலனுள்ளதொரு

சேவையையுமே தங்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கும் ***புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர்களுக்கு*** இந்நூல் அள்ளி வழங்கும் அரும் தெய்வீக ஆலோசனைகளாம் 'பரலோகப் பொக்கிஷங்கள்' பற்பல! இந்நூல் குறிப்பாக ஒரு நபரில் திவ்ய சுபாவம் உருவாக்கப்படுதலையே பிரதான நோக்கமாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளது. இதனை ஜெபத்தியானத்துடன் கருத்தூன்றிப் படிப்போர் பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறிந்துகொள்ளத் தக்கதாகத் தங்கள் மனக்கண்கள் தெளிவாக்கப்பட்டு, தங்கள் வாழ்க்கையில் வெற்றிசிறப்பது திண்ணம். தேவன் தாமே தமது வேதத்திலுள்ள அதிசயங்களை நாம் பார்க்கும்படிக்கு நம் கண்களைத் திறந்தருளுவாராக (சங். 119 : 18). அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக!

ஒரு தேவபிள்ளை தன் தரிசனத்தில் ஏராளம் பேர் பரலோகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் யாவரும் நீண்ட தூரம் ஓடி ஓடி, முடிவாகப் பரலோகத் தின் வாசலை அடைந்தனர். தங்கள் நீண்ட காலப் பயணத்தின் முடிவில், தாங்கள் நாடிவந்த இலக்கை வந்தெட்டிவிட்டதைக் கண்டு, அவர்கள் மிகவும் அகமகிழ்ந்தனர். ஆவலுடன் அவர்கள் உட்பிரவேசிக்கப்போகையில் அதன் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த தேவதூதர்கள், 'நீங்கள் இவ்வளவு தூரம் ஓடி வந்தது நல்லதுதான்; ஆயினும் நீங்கள் உட்பிரவேசிப்பதற்கான அனுமதிச் சீட்டு எங்கே?' என்று கேட்டனர். தாங்கள் சற்றும் எதிர்பார்த்திராத இக்கேள்வியைக் கேட்டு, அவர்களில் பெரும் பாலானோரும் அதிர்ச்சியுற்று, திகைத்துப்போயினர். வெகு சிலரிடம் மாத்திரமே அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட அனுமதிச் சீட்டு இருந்தது. அவர்களுக்கு மாத்திரம் பரலோகத்தினுள் பிரவேசம் அளிக்கப்பட்டது. ராஜமரியாதையுடன் அவர்கள் பிதாவின் ராஜ்யத்திற்குள் வரவேற்கப்பட்டனர். மற்றவர்களோ வெட்கத்துடனும் துக்கத்துடனும் மனவேதனையுடனும் முகம் கறுத்துப்போனவர்களாய்ப் பின்னிட்டுத் திரும்பினர்! வெகு சிலரின் கரங்களில் இருந்த அனுமதிச் சீட்டில் இரு வார்த்தைகள் மாத்திரமே பொறிக்கப்பட்டிருந்தன. அவை **'தாழ்மை, தூய்மை'** *(humility, purity)* என்பவையே. ஆம்! "ஆவியில் எளிமை யுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடை யது" (மத். 5 : 3); "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (வச. 8). மற்ற அனைத்துத் திவ்ய சுபாவங்களும் இவ்விரு நற்பண்புகளுக்குள் அடங்கும். 'கிறிஸ்தவ ஜீவியத்தின் நீண்ட கால அனுபவமோ, இளைப் படையாத பிரயாசமோ, கிறிஸ்துவுக்காகச் செய்யப்படும் அரும் பெரும் சாதனைகளோ அல்ல, ***சுபாவம் மறுரூபமாகுதலே*** பரலோகத்திற்கு உன்னைத் தகுதியுள்ளவனாக்கும்' என்ற உண்மையைத் தேவன் அத்தேவபிள்ளைக்கு இத்தரிசனத்தின் வாயிலாக உணர்த்த விரும்பினார். ஆதலால் பிரியமானவர்களே, "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி. 2 : 12).

# ரூத்தின் சரித்திரம்

பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள சிறு புத்தகங்களுள் ***'ரூத்தின் சரித்திரம்'*** ஒன்றாகும். அது 85 வசனங்கள் மட்டுமே அடங்கிய, நான்கு சிறு அதிகாரங்களைக் கொண்ட ஒரு புத்தகமாயிருப்பினும், அதினுள் விலைமதித்தற்கரிய திரவியங்கள் அடங்கிய சுரங்கங்களும், பொக்கிஷங்கள் அடங்கிய புதையல்களும் மறைந்துள்ளன. புறஜாதியைச் சேர்ந்தவளாயிருந்தும், ஜீவனுள்ள மெய்த்தேவன் பேரில் கொண்ட பயபக்தியினாலும் பற்றினாலும் தன்னை அவருக்கு அர்ப்பணித்திருந்த ரூத் என்ற ஒரு பெண்பிள்ளையின் இச்சரித்திரத்தைப் போன்ற மற்றொரு சரித்திரத்தை முழு வேதாகமத்திலும் வேறெங்கும் நாம் காண்பதரிது. இச்சரித்திரம் எவ்விடத்தில், யாரால் எழுதப்பட்டது என்று தீர்க்கமாகக் கூறுவதற்கில்லை. அதன் இலக்கிய நடை, அதில் இடம் பெற்றுள்ள விஷயங்கள் ஆகியவற்றைக் கொண்டு, அது கி. மு. 1163 – 1123 கால அளவில் எழுதப்பட்டிருக்கக் கூடும் என நாம் நிதானிக்கலாம் (Dake's Annotated Bible). தாவீதின் காலத்திற்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முந்தின காலகட்டத்திற்குரிய இச்சரித்திரம், அவனது ஜீவிய காலத்தின் ஆரம்ப நாட்களில் சாமுவேலினால் எழுதப்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. ரூத்தின் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள போவாசின் வம்ச வரலாறு தாவீதின் பெயரோடு முடிவுறுவதையும் நாம் இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம் (ரூத் 4 : 17 – 22).

வேதாகமத்தின் 66 புத்தகங்களில் இரு புத்தகங்கள் மாத்திரமே பெண்களின் பெயர்களைத் தலைப்பாகக் கொண்டுள்ளன. அவை ரூத்தின் சரித்திரமும் எஸ்தரின் சரித்திரமுமாகும். எஸ்தரின் சரித்திரத்திற்கும் ரூத்தின் சரித்திரத்திற்குமிடையே சில வேற்றுமைகள் உள்ளன. ரூத்தின் சரித்திரத்தில், ஒரு யூதன் (போவாஸ்) புறஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம்

பண்ணுகிறான்; எஸ்தரின் சரித்திரத்தில் ஒரு புறஜாதியான், யூத குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம்பண்ணுகிறான். ரூத்தின் சரித்திரம் ஒரு பஞ்சத்தில் ஆரம்பமாகிறது; எஸ்தரின் சரித்திரமோ ஒரு விருந்தில் ஆரம்பமாகிறது. மேலும் ரூத்தின் சரித்திரம் ஒரு ஆண்பிள்ளையின் பிறப்பில் முடிவுறுகிறது; எஸ்தரின் சரித்திரமோ ஒரு துன்மார்க்கனின் மரணத்திலும், யூதரின் பகைஞருடைய அழிவிலும் முடிவுறுகிறது.

ரூத் புறஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணாயிருந்தும், அதினும் அவள் பத்தாம் தலைமுறையிலும், என்றைக்கும் கர்த்தருடைய சபைக்குள் சேரலாகாது என்று விலக்கப்பட்டிருந்த ஒரு அந்நிய ஜாதியைச் சேர்ந்தவளாயிருந்தும் (உபா. 23 : 3 ; ரூத் 2 : 6), பரிசுத்த வேதாகமத்தின் ஒரு முழு புத்தகமே அவளுடைய பெயரால் எழுதப்பட்டு, ஜீவனுள்ள தேவன் பேரில் அவளுக்கிருந்த பற்றுறுதியையும் அர்ப்பணத்தையும் விவரிப்பதாக அமைந்திருப்பது ஒருபுறம் நம்மை வியப்படையச் செய்வதாயும், மறுபுறம் நம்மை ஊக்குவிப்பதாயும் உள்ளதன்றோ? புதிய ஏற்பாட்டில் அப். பவுல் விடுக்கும் ஓர் அறைகூவலுக்கும் ரூத் மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்: “கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே” (ரோமர் 8 : 36, 37). கானான் தேசத்தில் அவளுக்கு ஒரு வீடோ, ஆஸ்தியோ, வேலை வாய்ப்போ, பணமோ, நண்பரோ, உறவினரோ அளிக்கப்படுவதாக யாதொரு வாக்குறுதியும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. தன் மாமியைப் பின்பற்றத் துவங்கி, பாதி வழியில் பின்திரும்பிச் சென்றுவிட்ட ஓர்பாள், அவள் பின்பற்றத் தகுந்த நல்லதொரு முன்மாதிரியாய் இருக்கவில்லை. நகோமியும் அவளைத் தன் தேசத்திற்கும் தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிச் சென்றுவிடும்படியாக வற்புறுத்தி, தவறான ஓர் ஆலோசனையையே



அவளுக்கு அளித்துக்கொண்டிருந்தாள். ஆயினும் இவைகளிலொன்றும் அவளைத் தேவனுடைய அன்பை விட்டுப் பிரிக்க இயலவில்லை! இப்புத்தகத்தில் ‘அன்பு’ என்னும் பதம் ஒரு முறையேனும் குறிப்பிடப்படாவிடினும், அதில் வெளிப்படுத்தப்படும் சுயநலமற்ற தூய அன்பினை இவ்வுலகில் வேறெங்கும் நாம் காண்பது அரிது. ரூத்தின் வாழ்க்கை இன்று பல மருமக்களை, ஏன், மகள்களையுங்கூட நாணமடையச் செய்கிறது! இந்நாட்களில் உலகில் நகோமிகளும் ஓர்பாள்களும் ஏராளம் பேர் இருக்க, ரூத்தைப் போன்ற எத்தனை பேரை நம்மால் காணக் கூடும்? புதிய ஏற்பாட்டுத் தேவஜனங்களாகிய நமக்கு ரூத்தின் ஜீவியம் பின்பற்றத் தகுந்த சிறந்ததொரு மாதிரியாகவும் சவாலாகவும் இருக்கிறது!

பழைய ஏற்பாட்டில் உல்தாள், மிரியாம் போன்ற எத்தனையோ பரிசுத்த ஸ்திரீகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஆனால் ஜீவனுள்ள தேவனைக் குறித்த மிகச் சிறிய ஒளிக்கதிர் மட்டுமே தனக்குக் கிடைத்திருந்தும், முழு தூரமும் அவரைப் பின்பற்ற ஆயத்தமாயிருந்த இந்த மோவாபியப் பெண் பிள்ளையைப் போன்றோர் யாரும் இல்லை! ஆகவே தாவீதின் வம்சம் அவள் மூலமாகத் தோன்றியதும், உலக இரட்சகரான ஆண்டவராகிய இயேசு அவ்வம்சத்தில் அவதரித்ததும், ஏதோ தற்செயலாய் நடந்த காரியங்களன்று! (மத். 1 : 1, 5, 6). அவை தேவனுடைய மகத்தான திட்டத்திற்குட்பட்டவையாயிருந்தன! எனவே ரூத் மூலமாக உலக சரித்திரம் முழுவதும் மாறிற்று என்று கூறின் அது மிகையாகாது. ஆகவே ரூத்தின் சரித்திரம் நாம் கற்றறியத் தகுந்ததும், கற்றறிய வேண்டியதுமான ஒரு புத்தகமாகும்.

ரூத்தின் சரித்திரத்தில் இரு அடிப்படையான சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

(1) புறஜாதியார் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களாக, கிறிஸ்து அற்றவர்களாக இருந்த அக்காலகட்டத்தில்

புறஜாதியைச் சேர்ந்தவளான ரூத் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டது போல, இக்காலத்திலும் புறஜாதியார் உண்மையாகவே ஜீவனுள்ள மெய்த்தேவனைத் தேடி, அவரைப் பின்பற்றுவார்களா யின், தேவனின் ஆசீர்வாதங்கள் அவர்களையும் சென்றடையக் கூடும்;

(2) தேவனுடைய மாறாத அன்பு மிகக் கடின உள்ளம் படைத்த மனிதரையுங்கூட மாற்றியமைத்து, அவர்கள் வாயி லாகவும் தன்னை வெளிப்படுத்தக் கூடும்.

ரூத்தின் சரித்திரத்தின் நான்கு அதிகாரங்களையும் ஒரு தேவமனிதன் இவ்விதமாகப் பெயரிட்டழைக்கிறார்:

அதி. 1 - **அழுகையின் அதிகாரம்** *(Chapter of weeping)*
(ரூத், ஓர்பாள், நகோமி ஆகிய மூவரும் அழுகின்றனர்.)

அதி. 2 - **அலுவலின் அதிகாரம்** *(Chapter of working)*
(ரூத் மிக அலுவலாயிருக்கிறாள்.)

அதி. 3 - **அமர்ந்திருத்தலின் அதிகாரம்** *(Chapter of waiting)*
(போவாசை விவாகம்பண்ணும்படி பொறுத்திருக்க வேண்டுமென ரூத்திற்குச் சொல்லப்பட்டது.)

அதி. 4 - **அந்நியோந்நியத்தின் (விவாகத்தின்) அதிகாரம்** *(Chapter of wedding)*
(போவாஸ் ரூத்தை விவாகம்பண்ணுகிறான்.)

# பொருளடக்கம்


| அதிகாரம் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | *ஏன் இந்த இன்னல்கள்?* | **1** |
| 2. | *நான் பின்வாங்குவதில்லை !* | **37** |
| 3. | *மெய்யான மனத்தாழ்மை* | **100** |
| 4. | *தாழ்மையும் தயையும்* | **150** |
| 5. | *தாழ்மையில் தங்கும் இளைப்பாறுதல்* | **176** |
| 6. | *மெய்யான தூய்மை* | **206** |
| 7. | *மகிழ்ச்சிகரமான முடிவு !* | **249** |

அதிகாரம் 1

# ஏன் இந்த இன்னல்கள்?

***"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதா விலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத் திலே போய்ச் சஞ்சரித்தான். அந்த மனுஷனுடைய பேர் எலிமெ லேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப்தேசத்திற்குப் போய், அங்கே இருந்துவிட்டார்கள்"*** (ரூத் 1 : 1, 2).

**கர்த்தர் அனுமதிக்கும் பஞ்சம்:**

"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்" என ரூத்தின் சரித்திரம் துவங்குகிறது. இங்கே 'நியாயாதிபதிகள்' என்பது, நம்மை நடத்தும்படி சபையில் தேவனால் நமக்கு மேலாக நியமிக்கப்பட்டுள்ளவர்களைக் குறிக்கிறது. எனவே "நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்" என்பது, 'நம்மை நடத்தும்படி தேவனால் நியமிக்கப்பட்டவர்களால் நாம்

நடத்தப்பட்டுக்கொண்டிருக்கையில்' என்று பொருள்படும். நியாயாதிபதிகள் யூதா தேசத்தை ஆண்டு நடத்திக்கொண்டிருந்த நாட்களில் தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. பஞ்சம் என்பது நம் ஜீவியத்தில் நேரிடுகிற ஒரு சோதனையாகவோ அல்லது நம்மை ஒழுங்குக்குட்படுத்தும்படி தேவனால் அனுமதிக்கப்படுகிற ஒரு சிட்சையாகவோ இருக்கலாம். பஞ்சம், நாம் ஒழுங்குக் குட்படுத்தப்படும்படி தேவனால் அனுமதிக்கப்படுகிற ஒரு சிட்சை என நாம் வாசிக்கிறோம் (உபா. 29 : 23 ; 30 : 1 - 9). சில வேளைகளில் நம்மை நடத்துகிறவர்கள் மூலமாகவே நாம் சில சிட்சைகள் அல்லது சீர்திருத்துதலுக்குட்படுத்தப்படக் கூடும். அவ்வேளைகளில் அவர்கள் நம்மிடத்தில் கடினமாய்ச் செயல் படுவது போல நமக்குத் தோன்றக் கூடும். சில வேளைகளில் நம்மை நடத்தும்படி தேவனால் நியமிக்கப்பட்டவர்களின் நடத்துதலுக்குக் கீழடங்கி நடந்துகொண்டிருக்கும்போதுதானே நாம் நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திலோ அல்லது சபையிலோ ஆவிக்குரிய பஞ்சத்தைச் சந்திக்கக் கூடும். "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்து கொள்ளக்கடவன்" (ஏசாயா 50 : 10) என நாம் வாசிக்கிறோமே! நாம் நம்மை நடத்துகிற தேவ ஊழியரின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போதும் சிற்சில வேளைகளில் இருளான பாதைகளினூடே செல்ல வேண்டியதாயிருக்கும் என்பதை இவ்வசனத் திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். அவ்வேளைகளிலும் நாம் சோர்ந்துபோகாமல் கர்த்தரையே நம்பிச் சார்ந்துகொள்ள வேண்டும். நாம் அவ்விதமான ஆவிக்குரிய பஞ்சங்களை அதாவது சோதனைகளைச் சந்திக்கும்போது, தேவசித்தத்தை விட்டு விலகிப்போகக் கூடாது.

தேசத்தில் பஞ்சம் உண்டானபோது எலிமெலேக்கின் குடும்பத்தார் செய்தது என்ன? அவர்கள் யூதா தேசத்திலுள்ள



பெத்லெகேமை விட்டு மோவாப் தேசத்திற்குப் போய் அங்கேயே இருந்துவிட்டனர். அவர்கள் மோவாப் தேசத்தில் தாராளமாக ஆகாரம் உண்டு என்று கேள்விப்பட்டு அங்கு சென்றிருக்கக் கூடும். ஆகாரத்தை நாடி அவர்கள் தேவசித்தத்தினின்று விலகிப் போய்விட்டனர். யூதா என்பதற்குத் 'துதி' என்றும், பெத்லெகேம் என்பதற்கு 'அப்பத்தின் வீடு' என்றும் பொருள். தேவனுடைய வீடாகிய சபையில் வைக்கப்பட்டிருக்கிற நாம் சில சிட்சைகளினூடே நடத்தப்படும்போது தேவனைத் துதிக்கிற அனுபவத்தை விட்டுவிடக் கூடாது; தேவசித்தத்தின் மத்தியில் இருப்பதை விட்டு விலகிப் போகவுங்கூடாது. எலிமெலேக்கின் குடும்பத்தார் யூதாவிலுள்ள பெத்லெகேமாகிய கர்த்தருடைய வீட்டையும் தேவஜனங்களையும் விட்டுப் பிரிந்து சென்றபோது, கொஞ்சக் காலத்திற்குக் காரியங்களெல்லாம் சுமூகமாகப் போய்க் கொண்டிருப்பது போலவே அவர்களுக்குத் தென்பட்டது. தாங்கள் விட்டு வந்த இடத்தைப் பார்க்கிலும் நல்லதும், வசதியானதும், அப்பக் குறைவற்றதுமான ஒரு இடத்தைத் தாங்கள் கண்டடைந்ததாக எண்ணி அவர்கள் மகிழ்ந்திருக்கக் கூடும். ஆனால் ... இந்நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை!

***"நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்துபோனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும்மாத்திரம் இருந்தார்கள். இவர்கள் மோவாபியரில் பெண் கொண்டார்கள்; அவர்களில் ஒருத்தி பேர் ஒர்பாள், மற்றவள் பேர் ரூத்; அங்கே ஏறக்குறையப் பத்துவருஷம் வாசம்பண்ணினார்கள். பின்பு மக்லோன் கிலியோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்து போனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்"*** (ரூத் 1 : 3 - 5).

### தன் கூட்டை விட்டு அலைதல்:

"தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும்

இருக்கிறான்” என்று ஞானி கூறுகிறான் (நீதி. 27 : 8). யூதா தேசத்திலிருந்த பெத்லெகேமை விட்டுப் போன எலிமெலேக்கின் குடும்பம் பெரும் நாசத்தைச் சந்தித்தது. அதிக தாமதமின்றியே அக்குடும்பத்தில் பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தலை யெடுக்க ஆரம்பித்தன! பெத்லெகேமில் மற்ற தேவஜனங்கள் யாவரும் பஞ்சத்தில் தவித்துக்கொண்டிருக்க, தாங்கள் மாத்திரம் ஏதோ ஞானமுள்ள ஒரு செயலைச் செய்துவிட்டதாக எண்ணிப் பெருமிதம்கொண்டிருந்த எலிமெலேக்கின் குடும்பத்தார், இப் போது பிரச்சினையின் மேல் பிரச்சினையைச் சந்திக்கலாயினர். இங்கே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் ஒன்றுண்டு. தேவபிள்ளையே, தேவனுடைய சித்தத்தின்படி நீ வைக்கப்பட்டுள்ள இடத்தில் உனக்கு அனுமதிக்கப்படுகிற கடினமான, இருளான பாதைகளினிமித்தம் அவற்றுக்குத் தப்பிக் கொள்ளும்படி நீ தேவசித்தத்தின் மத்தியிலிருந்து விலகிப்போக முற்பட்டால், நீ பெரும் ஆபத்தை நோக்கியே சென்றுகொண் டிருக்கிறாய் என்பதை நினைவிற்கொள்வாயாக. அக்குடும்பத்தார் தேவசித்தத்தையும் தேவஜனங்களையும் விட்டு விலகிப்போன போது, அதின் முடிவு மரணமாயிருந்தது. முதலாவதாக, குடும்பத் தலைவனாகிய எலிமெலேக்கு மரித்துப்போனான்! நாம் தேவ னால் நமக்கு நல்கப்பட்டுள்ள ‘ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தை’ விட்டு விலகி உலகத்தின் பின்னே போவோமாகில், ஆரம்பத்தில் அது நன்மை போல் தென்பட்டாலும், அதன் முடிவோ துயரமும் மரணமுமாயிருக்கும்!

மேலும், தேவபிள்ளைகள் சிலருக்கு ஆகாரம் ஒரு சோதனையாயிருக்கிறது. மனுக்குலத்தைச் சந்தித்த முதல் பாவம் புசித்தலோடு சம்பந்தப்பட்டதாயிருந்தது என நாம் அறிவோம் (ஆதி. 2 : 17 ; 3 : 6). கர்த்தராகிய இயேசு தம் ஊழியத்தை ஆரம் பித்தபோது அவருக்கு நேரிட்ட முதல் சோதனையும் புசித்தல் சம்பந்தமானதாயிருந்தது. நாற்பது நாட்கள் உபவாசித்த பின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று. அவரோ அப்பரீட்சையில்



வெற்றிபெற்றார் (மத். 4 : 2 - 4). ஆதாமும் ஏவாளும், எலிமெ லேக்கும் அவனுடைய குடும்பத்தாருமோ தங்கள் பரீட்சையில் தோல்வியுற்றனர். இன்றும் தேவபிள்ளைகள் சிலர் தங்கள் வயிற்றுக்கு அடிமைகளாயிருப்பதினால் ஒரு மேலோட்டமான ஆவிக்குரிய ஜீவியம் செய்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களைப் போஷிப்பிக்கிற பரமபிதா மரித்துவிட்டது போல, ‘என்னத்தை உண்போம்? என்னத்தைக் குடிப்போம்?’ என்று தங்கள் சரீரத்துக்காகவே கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். “இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்” என திருவசனம் கூறுகிறது (மத். 6 : 31, 32). இரை தேடி மோவாப் தேசத்திற்குச் சென்ற எலிமெ லேக்கின் குடும்பத்தில், ஆண்மக்கள் யாவரும் மோவாபின் பிரேதக் குழிகளுக்கு இரையாயினர்!

பெத்லெகேமை விட்டுப்போன நகோமி முதலாவது தன் வீட்டுத் தலைவனாகிய எலிமெலேக்கையும், அதைத் தொடர்ந்து தன் குமாரர் இருவரையும் இழந்துபோனாள். எலிமெலேக்கு என்ற பதம், ‘தேவன் என் ராஜா’ என்று பொருள்படும். நாம் தேவ சித்தத்தை விட்டு விலகிப்போவோமாகில் நகோமி எலிமெ லேக்கை இழந்துபோனது போல தேவனுடைய ஆளுகை நம்மை விட்டு அகன்றுபோம்; அதுமுதல் அவருடைய வழிநடத்துதல் நமக்குக் கிடையாமற்போகும். நகோமி தன் குமாரரையும் இழந்துபோனது போல நம்முடைய ஆவிக்குரிய சந்ததியும் நம் நிமித்தமாகப் பேரிழப்பைச் சந்திக்க நேரிடலாம்!

யூதா தேசத்திலிருந்த பெத்லெகேமை விட்டுப் போகிற வர்கள் பெரும் நாசத்துக்குள்ளாவார்கள் என்பதற்கான மற்றொரு எடுத்துக்காட்டை நியாயாதிபதிகள் 17, 18 அதிகாரங்களில் நாம் காண்கிறோம். அங்கு யூதாவிலிருந்த பெத்லெகேமை விட்டுப் போன லேவியனான ஒரு வாலிபனைக் குறித்துக் கூறப்பட் டுள்ளது. “யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானும் லேவியனுமான

ஒரு வாலிபன் அங்கே தங்கியிருந்தான். அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த் தங்கும்படிக்கு, யூதா விலுள்ள பெத்லெகேம் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணம் போகையில், எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீட்டில் வந்து சேர்ந்தான்" (நியா. 17 : 7, 8). பெத்லெகேமை விட்டுப் போன அவன் நிமித்தமாக முடிவில் பெரும் குழப்பமும் உள் நாட்டுக் கலகமுமே உண்டாயின. லேவியனான அவ்வாலிபன், துதியின் அனுபவமும் அப்பத்தின் வீடுமாகிய யூதாவிலிருந்த பெத்லெகேமை அதாவது கர்த்தருடைய வீட்டை விட்டு வெளி யேறி, எப்பிராயீம் மலைத்தேசத்தில் ஒருவனுடைய வீட்டில் போய்த் தங்கினான். அவன் கானானை விட்டு குடிபெயர்ந்து மோவாப் தேசத்திற்குச் செல்லவில்லை என்பது உண்மையே. ஆயினும், தேவன் அவனுக்குக் குறித்திருந்த இடத்தில் அவன் இருக்கவில்லை. பெத்லெகேம் ஊரானான அவன் அங்கிருந்து விலகி, தனக்கென்று சுயமாக ஓரிடத்தைத் தெரிந்துகொண்டான். அது அவனுக்குக் கண்ணியாயிற்று! அவன் திசைகெட்டுப் போக அது காரணமாயிற்று! அங்கு அவன் விக்கிரகாராதனைக்காரனான ஒரு மனிதனுடைய வீட்டில், சம்பளத்திற்காக அவனுடைய விக்கிரகங்களைச் சேவிக்கும் ஓர் ஆசாரியனானான்! கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியர்களின் கீழிருந்து கர்த்தரைச் சேவிக்க வேண்டியவனான அந்த லேவியன் (எண். 3 : 6 – 9), தேவசித்தத் தின் மத்தியிலிருந்து விலகிப்போனபோது, விக்கிரகங்களைச் சேவிக்கிறவனானதுடன், அநேகர் நாசமடைவதற்கும், ஒரு கோத்திரத்தார் முழுவதுமாக விக்கிரகாராதனைக்காரராவதற்கும் காரணனானான் (நியா. 18 : 4, 27 – 31). கர்த்தரைச் சேவிக்கும் தேவ ஊழியருக்கு இங்கு ஓர் எச்சரிப்பு நல்கப்படுகிறது. தேவ ஊழியர் ஒவ்வொருவரும் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருந்து, தாங்கள் கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருக்க வேண்டும் (கொலோ. 4 : 17). தேவசித்தம் செய்யத் தவறி, தாங்கள் கர்த்தருக்காகச் செய்யும் ஏதோ ஒரு ஊழியத்தில் திருப்தியாயிருப்பவர்கள் முடிவில்



அவரால் அக்கிரமக்காரர் என்று கணிக்கப்பட்டு, பரலோக ராஜ்யத்திற்குப் புறம்பாக்கப்படுவர்! (மத். 7 : 21 – 23). மீகாவின் வீட்டிலிருந்த லேவியனான வாலிபனைப் போல பிறருக்கு இடற லாயிருந்து, அநேகருடைய அழிவுக்குக் காரணராகும் அவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குத் தப்புவதில்லை! நாமோ கர்த்தருடைய வீட்டில் நமக்காக வைத்துவைக்கப்பட்டுள்ள சம்பூரணமான ஆசீர்வாதங்களையும் நன்மையையும் கிருபையையும் பெற்றனு பவிக்கும்படி அவருடைய வீடாகிய சபையில் – ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் – நம்மை நடத்தும்படி தேவ னால் நியமிக்கப்பட்டுள்ள ஆசாரியரின் கீழ் – தேவசித்தத்தின் மத்தியில் நிலைத்திருப்போமாக. "உமது ஆலயத்திலுள்ள சம்பூர ணத்தினால் திருப்தியடைவார்கள்" (சங். 36 : 8) என்றும், "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங். 23 : 6) என்றும் நாம் வாசிக்கிறோமே!

'யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவரைக்' காணும்படி கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் பெத்லெகேமில் பாலகனாகிய இயேசு இருந்த வீட்டுக்கு வந்துசேரும் வரை ஒரு நட்சத்திரத் தினால் ஆச்சரியமான பிரகாரமாக வழிநடத்தப்பட்டு, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தனர் (மத். 2 : 6 – 10). ஆம்! பெத்லெ கேமுக்கு வருகிறவர்களுக்கு மிகுந்த ஆனந்த சந்தோஷம் உண்டாகும். ஏனெனில் எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோ ஷத்தை உண்டாக்கும் கிறிஸ்துவை அங்கே அவர்கள் காண் பார்கள் (லூக்கா 2 : 10 – 16). 'நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கையிலிருக்கிறார்கள்' என நாம் வாசிக்கிறோம் (பிர. 9 : 1 - Eng.). இவ்வசனத்தில் குறிப்பிடப்பட் டுள்ள ஞானிகள் தேவனுடைய கைகளில் தங்களை ஒப்புக் கொடுத்திருக்கும் தேவபிள்ளைகளேயாவர். அவர்களை அவர் சரியான வழியில் திட்டவட்டமாய் வழிநடத்துகிறார். ஆனால் அவர்கள் தேவனுடைய வழிநடத்துதலைக் கவனியாமல், தங்கள்

சுயபுத்தியைச் சார்ந்துகொள்வார்களாயின், பாலகனான இயேசுவைத் தேடி 'எருசலேமுக்குச்' சென்ற ஞானிகளைப் போல திசைமாறிப்போய், அங்குமிங்கும் அலைந்து திரிந்து, அநேகருக்குக் கலக்கமுண்டாக்கி, களங்கமற்ற பலர் நாசமடையக் காரணராயிருப்பார்கள் (மத். 2 : 1, 3, 16).

இவ்வாறு பெத்லெகேமை விட்டு விலகிப்போனவர்கள் ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டத்தைப் பிறருக்கு உண்டாக்கி, தாங்களும் மிகுந்த மன வேதனையை அடைந்திருக்க, பெத்லெகேமுக்கு வந்தவர்களோ மிகுந்த சந்தோஷத்தையும் ஆசீர்வாதங்களையும் பெற்றனுபவித்தனர் என்பதை மேற்கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் தெளிவிக்கின்றன. நகோமி பெத்லெகேமை விட்டுச் சென்றதினால் அனுபவித்த இன்னல்களையும், பெத்லெகேமுக்குத் திரும்பி வந்ததினால் அடைந்த ஆசீர்வாதங்களையும் ரூத்தின் சரித்திரம் தெளிவாகச் சித்திரிக்கிறது.

ஒரு தேவபிள்ளை தேவசித்தத்தை விட்டு விலகிச் செல்லுதல் மிகவும் அபாயகரமானதாகும். யோனா தேவசித்தத்திற்கு மாறாகச் செல்லத் திட்டமிட்டு, தேவனுடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போனபோது அவன் கொடிய சிக்கலுக்குள் அகப்பட்டுக்கொண்டது மாத்திரமல்ல, அவனோடு பயணம் செய்த அனைவரும் பெரும் ஆபத்திற்குள்ளாகிக் கலங்கக் காரணனானான்! கடலும், கப்பலும், அவனை விழுங்கிய மீனுங்கூட அவன் நிமித்தமாக அமைதியிழந்து, பெரிய கொந்தளிப்புக்குள்ளாயின! (யோனா அதி. 1, 2). அவ்வாறே எலிமெலேக்கும் நகோமியும் செய்த தவறு அவர்களது குடும்பத்தை மிக அதிகமாகப் பாதித்துவிட்டது! ***தேவபிள்ளையே, நீ தேவசித்தத்திற்கு மாறாக உன் சுய வழிகளில் செல்லும்போது நீ மாத்திரமல்ல, உன் குடும்பமும், உன்னோடு தொடர்புகொள்கிற அனைவரும் அதினிமித்தம் பாதிக்கப்பட வேண்டியதாகும்*** என்பதை நீ அறிவாயா? மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி



அழைக்கப்பட்டிருக்கிற நீ அவர்களுடைய கலக்கத்திற்குக் காரணமாகாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பாயாக!

ஒருமுறை கானான் தேசத்தில் பஞ்சம் உண்டானபோது ஆபிரகாம் ஒரு தவறிழைத்துவிட்டான். "அத்தேசத்திலே ... பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்" என நாம் வாசிக்கிறோம் (ஆதி. 12 : 10). 'ஆபிராம் எகிப்துக்கு இறங்கிப் போனான்' (went down into Egypt) என்று இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. அவன் சந்தித்த அச்சோதனை அவனை 'உலகமாகிய' எகிப்துக்கு இறங்கிப் போகச் செய்தது. தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியம் தாழ்ந்துபோன நிலையில், அவன் அங்கு ஒரு பொய் சொல்லவும் நேர்ந்தது (வச. 11 – 13); அவன் அங்கு சஞ்சரித்த நாட்களில்தான் எகிப்திய அடிமைப் பெண்ணாகிய ஆகாரும் அவனுக்குக் கிடைத்திருக்கக் கூடும் (ஆதி. 16 : 1). அவள் மூலமாக, வாக்குத்தத்த சந்ததிக்கு எப்போதுமே விரோதமாயிருக்கிற இஸ்மவேலின் சந்ததி அவனுக்கு உண்டாயிற்று. பாருங்கள்! நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் இடமளிக்கிற ஒரு தவறு சங்கிலித்தொடர் போலிருந்து, பல தவறுகள் உண்டாக வழிவகுத்துவிடக் கூடும்! ஆபிரகாமைப் பொறுத்த வரை தேவனின் இரக்கத்தினால் அவன் எகிப்தை விட்டு வெளியே வந்துவிட்டான். ஆனால் அவனுடன் சென்ற லோத்துக்குச் சம்பவித்தது என்ன? அவனுடைய இருதயம் எகிப்திலேயே தரித்திருந்தது. அவர்கள் இருவரும் எகிப்தினின்று வெளியே வந்துவிட்டபோதிலும், பின்னாட்களில் ஒரு சந்தர்ப்பத்தில் லோத்து எகிப்தைப் பார்க்கிலும் மோசமான ஆவிக்குரிய நிலையிலிருந்த ஓர் இடத்தை (சோதோம் கொமோரா) விரும்பித் தெரிந்துகொள்வதற்கு அது ஒரு காரணமாயிற்று (ஆதி. 13 : 10). நாம் நம்முடைய சோதனைகளில் தோல்வியடைவோமாயின், நாம் நஷ்டமடைவது மாத்திரமல்ல, நம்மோடிருக்கும் மற்றவர்களும் அதினிமித்தம் ஆழமாகப் பாதிக்கப்படக் கூடும் என்பதை இதிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம்.

நியாயாதிபதிகளின் நாட்களில் பெத்லெகேமில் உண்டான பஞ்சம், தேவபிள்ளைகளாகிய நாம் தேவசித்தத்தின் மத்தியில் இருக்கையில் சந்திக்கக்கூடிய பரீட்சைகளைக் குறிக்கிறது என நாம் கண்டோம். நாம் தேவசித்தத்தின் மத்தியில் இருப்பதால் நம் வாழ்க்கை எவ்வித பிரச்சினையும் அற்ற சுமூகமான ஒன்றாகவே அமையும் என நாம் எதிர்பார்க்கலாகாது. ஒருவேளை உலகத்தாரைக் காட்டிலும் அதிகமான சோதனைகள் நமக்கு வரக் கூடும். ஆனால் மனத்தாழ்மையுடன் கர்த்தரோடு நடக்கிறவர்களை அவர் அவை எல்லாவற்றிலுமிருந்து விடுவிப்பார் (சங். 34 : 17 - 19). நமக்கு நேரிடுகிற சோதனைகளை நாம் எதிர்கொள்ளும் விதத்திற்கேற்ப, அச்சோதனைகள் இருவிதங்களில் நம்மில் பலன் செய்யக் கூடும் - ஒன்று, அவை நம்மைத் தேவனோடு இன்னும் அதிகமாக நெருங்கிச் சேரப்பண்ணும்; அல்லது அவை தேவனை விட்டு நம்மை விலகிப்போகச் செய்யும். நகோமியின் குடும்பத்துக்குப் பெத்லெகேமில் உண்டான சோதனை அவர்களைத் தேவனை விட்டும் தேவஜனங்களை விட்டும் அகன்றுபோகச் செய்தது. நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருப்போமாக (எபி. 10 : 39). நாம் சந்திக்கிற சோதனைகள் நம்மை நம்முடைய தேவனோடு இன்னும் அதிகமாக நெருங்கிச் சேரப்பண்ணுவதாக!

### சிறப்பான சுதந்தரம்:

எலிமெலேக்குக்குப் பெத்லெகேமில் ஒரு சுதந்தரம் உண்டாயிருந்தது (ரூத் 4 : 3). அதுபோல, தேவன் நமக்கு ஒரு நித்தியமான சுதந்தரத்தைக் கொடுத்திருக்கிறார். புதிய எருசலேமும் சீயோனுமே நம்முடைய அச்சுதந்தரமாகும். “நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு” என தாவீது கூறுகிறான் (சங். 16 : 6). ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தேவன் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கியிருக்க (கொலோ. 1 : 12), நாமோ



அந்தச் சுதந்தரத்தை விட்டு வேறெங்கும் அலைந்து திரியலாகாது. தேவ ஊழியரே, தேவன் உம்மை மிக உன்னதமான ஊழியத்திற்கென்று அழைத்திருக்க, நீரோ பார்வைக்குக் கவர்ச்சிகரமாகத் தோன்றும் சுயாதீன ஊழியங்களை நாடிச் செல்வீராயின், அங்கு ஒருவேளை அற்புத அடையாளங்களும் பலத்த கிரியைகளும் நடைபெற்றாலும், உலகத்தின் பார்வையில் உமக்கு நன்மதிப்பும் ஆதரவும் பேரும் புகழும் உண்டாயிருப்பினும், தொலைக்காட்சி, வானொலி, மற்றும் சுவரொட்டிகளில் உம் பெயர் பிரபலமாயினும், தேவசித்தத்தை விட்டு விலகியதினிமித்தம் நீர் ஓர் ஆவிக்குரிய அபாயத்தை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறீர் என்பதை உம் நினைவிற்கொள்ளுவீராக. நாபோத் என்னும் யெஸ்ரயேலனுக்கு ராஜ அரமனையினருகில் ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது. ராஜாவாகிய ஆகாப் நாபோத்தோடே பேசி: “உன் திராட்சத்தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப்பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன்” என்றான் (I இராஜா. 21 : 2). அவனோ தன் பிதாக்களின் சுதந்தரத்தைக் காக்க மனவுறுதியாயிருந்ததினிமித்தம் தன் ஜீவனையே பணயம் வைக்க வேண்டியதாயிற்று! (வச. 3, 15). தேவன் நமக்கு சீயோன், புதிய எருசலேம், பிரதிஷ்டை, பரிசுத்தம், வேறுபிரிதலின் ஜீவியம் போன்றவற்றைக் குறித்த மேன்மையான வெளிப்படுத்தல்களைக் கொடுத்திருக்கிறார். பிசாசானவனோ உன்னதமான ஆவிக்குரிய நிலையினின்று நம்மைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவர விரும்புகிறான். நாபோத்திலிருந்தது போல, ‘இது என் பிதாக்களின் சுதந்தரம்; மேன்மையான என் சுதந்தரம் ஒரு கீரைக்கொல்லையைப் போன்ற தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கு நான் இடங்கொடுக்கமாட்டேன்’ என்ற வைராக்கியமுள்ள ஆவி நமக்கும் அத்தியாவசியமாயிருக்கிறது.

நகோமி என்பதற்கு 'இனிமை' அல்லது 'இன்பம்' (pleasant) என்று பொருள். பெத்லெகேம் என்னும் பதம் 'அப்பத்தின் வீடு' என்றும், யூதா என்பது 'துதி' என்றும், எலிமெலேக்கு என்னும் பதம் 'தேவன் என் ராஜா' என்றும் பொருள்படும் என நாம் ஏற்கனவே கண்டோம். எலிமெலேக்கின் குடும்பத்தார் எப்பிராத்தி யராயிருந்தனர். 'எப்பிராத்தா' என்பதற்குக் 'கனிகொடுத்தல்' என்று பொருள். இவையெல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும்போது, அக்குடும்பத்தார் பெத்லெகேமில் ஒரு இன்பமான ஆவிக்குரிய ஜீவியம் உள்ளவர்களாயிருந்துவந்தனர் என்றும், தேவன்தாமே அவர்களுடைய ராஜாவாயிருக்க, அவர்கள் துதியின் சத்தத்துடன் அவருடைய வீட்டின் நிறைவான ஆசீர்வாதங்களை அனுப வித்துக்கொண்டு, பலனுள்ளதொரு ஜீவியம் செய்துவந்தனர் என்றும் நாம் நிதானிக்கலாம். ஒருவன் வாழ்வதற்குச் சிறந்ததோர் இடம் இப்பூமியில் இதைப் பார்க்கிலும் வேறு ஏதேனும் உண்டோ! எலிமெலேக்கின் குடும்பத்தாரோ தங்கள் சோதனை வேளையில் இந்த மிகச் சிறந்த இடத்தை விட்டுக் குடிபெயர்ந்து மோவாப் தேசத்திற்குச் சென்றுவிட்டனர். தேவன் தங்களுக்களித்திருந்த இன்பமான வாழ்க்கையை விட்டுவிட்டு, அவர்கள் இன்னல் நிறைந்த வாழ்க்கையைத் தாங்களாகவே தெரிந்துகொண்டனர். நாம் தேவசித்தத்தை விட்டுப் போவோமாகில் நமக்குள்ள மேன்மை யான அனுபவங்களை இழந்து வெறுமையாவோம் என்பதற்கு இக்குடும்பம் நமக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது.

**தண்டனையின் பிரம்பு:**

தேவசித்தத்தை விட்டு விலகிச்சென்ற நகோமியின் வாழ்க்கையில் ஒன்றன் பின் ஒன்றாகப் பிரச்சினைகள் எழும்பின. முதலாவதாக அவளுடைய புருஷன் மரித்துப்போனான். அப்போதுதானே அவள், 'இது தேவனுடைய கரம்! நாங்கள் யூதா தேசத்தை விட்டு வந்திருக்கக் கூடாது' என்று உணர்ந்திருக்க வேண்டும். அப்போதாகிலும் தன் குடும்பத்தில் மீந்திருந்த தன் இரு பிள்ளைகளோடு கூட அவள் யூதா தேசத்திற்குத் திரும்பி



யிருந்திருக்கலாம். தாங்கள் ஓடிப்போனதற்கான கர்த்தரின் சிட்சையே அது என்று அவள் அறிந்துகொண்டபோதிலும், அம்மட்டில் அவள் தான் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய சிட்சையின் பிரம்பு அவர்களைச் சந்தித்த பின்னரும் கானானுக்குத் திரும்பிச் செல்ல அவளுக்கு மனதில்லை! இந்த முதல் சிட்சைக்குப் பின்னரும் அவள், 'பரவாயில்லை; என் குமாரருக்கு மோவாபியப் பெண்களைத் தெரிந்துகொண்டு, இங்கேயே தங்கிவிடலாம்' என்று தனக்குள் திட்டமிட்டாள்.

பெத்லெகேம் மோவாப் தேசத்திலிருந்து சுமார் 50 மைல்கள் தொலைவில்தான் இருந்தது. அவள் எளிதாகத் தன்னுடைய தேசத்திலிருந்தும் தன் ஜனங்களிலிருந்தும் தன் குமார ருக்குப் பெண்களைத் தெரிந்தெடுத்திருக்கலாம். ஆபிரகாமைப் பாருங்கள்! அவன் முதிர்வயதுள்ளவனாய்த் தன் ஜனங்களை விட்டு வெகுதூரத்தில் இருந்தபோதிலும், தன் குமாரனாகிய ஈசாக்குக்குத் தன் ஜனங்களிலிருந்தே பெண்கொள்ள வேண்டு மென தன் வீட்டு விசாரணைக்காரனுக்குக் கட்டளையிட்டான் (ஆதி. 24 : 4). ஆனால் நகோமியோ தன் குமாரருக்குப் புறஜாதி யாரான பெண்களைக் கொண்டாள். இவ்வாறு அவள், தேவ சித்தத்தை விட்டு விலகிப்போன தன் பாவத்தோடு மற்றுமொரு பாவத்தையும் கூட்டிக்கொண்டாள் (உபா. 7 : 3 ; எஸ்றா 9 : 1, 2). அவர்கள் அனைவருடனும் மோவாப் தேசத்திலேயே தரித்தி ருக்கவும் அவள் தீர்மானித்துவிட்டாள். சுமார் பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன! யூதா தேசத்திற்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணமே அவளுக்கு உண்டாகவில்லை. அப்போது தேவன் மீண்டும் தம்முடைய பிரம்பைக் கையாட வேண்டியதாயிற்று! அவளுடைய குமாரரில் ஒருவன் மரித்துப்போனான். (அவ ளுடைய இரு குமாரரும் ஒரே நேரத்தில் மரித்துவிட்டதாக நாம் வாசிப்பதில்லை.) தன் குமாரரில் ஒருவன் மரித்த பின்னரும் பெத்லெகேமுக்குத் திரும்பிச் செல்ல அவளுக்கு மனம்

வரவில்லை. அப்போது தேவன் மீண்டும் தம் பிரம்பை எடுக்க வேண்டியதாயிற்று! அவளுக்கு எஞ்சியிருந்த மற்ற குமாரனும் மரித்துப்போனான்!

சாறிபாத் ஊர் விதவையின் மகன் மரித்தபோது, அவள் அதைத் தன்னுடைய பாவத்திற்கான ஒரு தண்டனை என்று எடுத்துக்கொண்டதாக நாம் வாசிக்கிறோம் (I இராஜா. 17 : 18). ஆனால் நகோமியோ கர்த்தருடைய தண்டனையின் பிரம்பு மீண்டும் மீண்டும் தன்னைச் சந்தித்த பின்னரும் தன் குற்றத்தை உணர்ந்துகொள்ளவில்லை. நாம் பிரச்சினைகளுக்கு அஞ்சி தேவசித்தத்தை விட்டு விலகி ஓடும்போது, சில வேளைகளில் அதினிமித்தம் சிட்சிக்கப்பட்டாலும் நம்மைத் திருத்திக்கொள்ள நமக்கு மனமிராது. சிலர் எவ்வளவுதான் தண்டிக்கப்பட்டாலும், வியாதிகள், விபத்துகள், பிரச்சினைகள் போன்ற சிட்சைகளுக் குள்ளானாலும், தங்கள் இருதயத்தை மென்மேலும் கடினப்படுத்தி, முடிவில் நாசமடைகிறார்கள். ஆகவே பிரச்சினைகளுக்குத் தப்பிக்கொள்ளும்படி தேவசித்தத்தை விட்டு விலகிப்போவது ஒரு சிறிய தவறு போல தோன்றினாலும், அது மிக அபாயகரமான பாவமாகும். நாம் நம்முடைய இடத்தை மாற்றிக்கொள்வதினால் பிரச்சினையற்ற ஒரு வாழ்க்கை நமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. எங்கு சென்றாலும் நாம் நிச்சயமாகவே ஏதோ ஒரு பிரச்சினையைச் சந்திக்கத்தான் வேண்டும். ஆகவே தேவசித்தத்தின் மத்தியில் இருந்துகொண்டு, அங்கு வரும் பிரச்சினைகளைத் தேவ கிருபையினால் எதிர்கொள்ளுவதே நாம் செய்யத்தக்க ஞானமுள்ள செயலாகும். பிரச்சினைகளினின்று தப்பித்துக்கொள்ள வகைதேடுவதற்குப் பதிலாக, பரமபிதாவினால் அனுமதிக்கப்பட்டிருக்கும் அப்பிரச்சினைகளின் வாயிலாக நாம் அடைந்துகொள்ள வேண்டியதை அடைந்துகொள்ளவே நாடு வோமாக. தேவனுடைய சிட்சைக்குத் தப்பிக்கொள்ளும்படி நாம் உலகத்தை நோக்கி ஓடுவோமானால், அது 'பொரிக்குஞ்சட்டி யினின்று தப்பி, எரிகிற அடுப்புக்குள் விழுந்ததைப் போல்'



இருக்கும். அங்கு நிச்சயமாகவே நாம் அதிகமான பிரச்சினை களை எதிர்பார்க்கலாம். எனவே 'மோவாபில்' நிறைவுடன் இருப்பதை விட, 'யூதாவில்' குறைவுடனிருப்பதே நலம்! புறம்பே நிறைவுள்ளது போல் தோன்றினாலும், மெய்யான அன்பு, பரிசுத்தம், நீதி, மன்னித்தல், மனதுருக்கம் போன்றவை இன்றி, பெரும் பஞ்சத்தால் வாடும் ஓர் உலகில்தான் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே தேவபிள்ளையே, நீ உன் வாழ்வில் சோதனைகளைச் சந்திப்பாயாகில், அவற்றுக்குத் தீர்வு காணும்படி உலகத்தை நாடி ஓடாதே! மாறாக, உன்னைத் திருப்திப்படுத்தக் கூடியவரும் உன் குறைவுகளை நிவிர்த்தி செய்ய வல்லவரு மான தேவனிடத்திற்கே செல்வாயாக. மனவுறுதியற்றவர்களுக்கு எப்போதும் 'இக்கரைக்கு அக்கரையே பச்சையாகத்' தென்படும் – தங்கள் பிரச்சினைகளை விட்டு ஓடிப்போவதே அவற்றுக்கான தீர்வு என்று அவர்களுக்குத் தோன்றும். ஆனால் தங்கள் கண் களுக்குச் செழிப்பானதாகத் தோன்றிய 'அக்கரை' உண்மையில் வெறும் வனாந்தரமே என்பதை அவர்கள் அதிக தாமதமின்றியே கண்டுகொள்வார்கள்!

## மரணத்துக்கேதுவான பாவம்:

மோவாப் தேசத்திலிருந்த நகோமியின் குடும்பத்தில் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று மரணங்கள் சம்பவித்தன. மரணத் துக்கேதுவான பாவத்தைக் குறித்து நாம் I யோவான் 5 : 16 – இல் வாசிக்கிறோம். ஓர் ஆழமான அர்த்தத்தில் கூறின், ஒவ்வொரு தனிநபரின் விஷயத்திலும் அது வித்தியாசப்படக் கூடும். ஆதி நூற்றாண்டில் 'பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பொய் சொல்லுதல்' அனனியா, சப்பீராள் என்பவர்களின் விஷயத்தில் மரணத்துக்கேதுவான பாவமாயிற்று. தேவன் அன்று அவ்விரு வருடைய பாவத்தோடும் செயல்பட்டது போல அவ்வளவு கடூரமாக இன்று செயல்படுவாராயின், பெரும்பான்மையான நம்முடைய ஆராதனைக் கூடங்கள் எப்போதும் அடக்க ஆராதனை நிகழ்கிற இடங்களாகவே மாறிவிடும் என ஒரு தேவ

மனிதன் கூறுகிறார். தேவபிள்ளைகளே, ஒன்றை நினைவிற் கொள்ளுங்கள்! அனனியா, சப்பீராள் என்பவர்களைப் போல 'அது சிறியதுதானே, அது ஒரு பொருட்டல்லவே!' என்று எண்ணி நீங்கள் செய்ய முற்படும் ஒரு குறிப்பிட்ட பாவம் தேவனுடைய பார்வையில் மரணத்துக்கேதுவான பாவமாய் இருக்கக் கூடும்! ஆகவே உங்கள் பார்வையில் மிகச் சிறியதாய்த் தோன்றுகிற பாவத்தைக் குறித்தும் நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்! நகோமியைப் போல நீங்கள் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்பீர்களாயின், நீங்கள் தேவசித்தம் செய்வதற்குத் தடையாய் இருப்பவர்களைத் தேவன் உங்களை விட்டு அகற்றி விடவும் கூடும். நகோமியைப் பெத்லெகேமுக்குத் திரும்பப் பண்ணும்படி தேவன் அவளுடைய குடும்பத்திலிருந்த மூன்று ஆண்களையும் அவளை விட்டு அகற்ற வேண்டியதாயிற்றே!

எலிமெலேக்கின் மரணம் ஓர் இயற்கையான மரணம்தானே என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் ஒரு தேவபிள்ளை, தான் சுயமாகத் தெரிந்துகொண்ட 'மோவாப் தேசத்திலா' அல்லது தேவன் தன்னைக் கொண்டுவந்து நாட்டியிருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட 'கானான் தேசத்திலா' – எங்கு மரணமடைய வேண்டும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவன் தான் சுயமாகத் தெரிந்துகொண்ட இடத்தில் அல்ல, தேவசித்தத்தின் மத்தியிலேயே இருந்து மரிக்க வேண்டும். ஆபிரகாம் எபிரோனில் மரணமடைந்தான். 'எபிரோன்' தேவனோடுள்ள ஐக்கியத்தைக் குறிக்கிறது. ஆனால் லோத்தோ எபிரோனிலிருந்து வெகுதூரத்திலிருந்ததும், தான் சுயமாகத் தெரிந்துகொண்டதுமான சோவார் என்னும் ஊரைச் சேர்ந்த ஒரு குகையில்தான் மரித்திருக்க வேண்டும்! எலிமெலேக்கு, மக்லோன், கிலியோன், லோத்து ஆகியோரின் மரணம் நமக்கு ஓர் எச்சரிப்பாயிருப்பதாக!

### வழிதவறுவதின் காரணங்கள்:

தேவனை அறியாத உலக ஜனங்கள் தங்கள் பிரச்சினைகளினின்று தப்பியோட முயற்சிப்பது இயல்பே. ஆனால் தேவஜனங்கள் அப்படிச் செய்யலாகாது. தேவனுடைய பிள்ளைகள் சிலர் அப்படிச் செய்வதின் அடிப்படையான காரணங்கள் யாவை?



***1. தரிசித்து நடத்தல்*** – நகோமியின் குடும்பத்தார் மோவாப் தேசத்தைச் செழிப்புள்ளதாகவும், பெத்லெகேமையோ பஞ்சமுள்ளதாகவும் கண்டனர். அதாவது, அவர்கள் விசுவாசித்து நடக்கிறவர்களாயிராமல், தரிசித்து நடக்கிறவர்களாயிருந்தனர். யூதா தேசத்தில் இருந்த தேவஜனங்களில் வேறு ஒருவரும் பஞ்சகாலத்தில் இக்குடும்பத்தைப் போல அவ்விடத்தை விட்டு ஓடிப்போனதாக நாம் வாசிப்பதில்லையே! போவாஸ் பஞ்ச நாட்களிலெல்லாம் அங்கேயே தரித்திருந்தான் அன்றோ? எனவே, தேவனில் நம்பிக்கை வைத்து, விசுவாசத்தினால் ஜீவிக்கிறவர்களாயிராமற் போனதே அவர்கள் மோவாப் தேசத்திற்கு ஓடிப்போனதின் ஒரு காரணமாகும். ஆகவே பிரச்சினைகளைக் கண்டு, தேவசித்தத்தின்படி தாங்கள் வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து ஓடிப்போகிறவர்கள் – விசுவாசித்து அல்ல, தரிசித்து நடக்கிறவர்களாவர். 'நான் அங்கு சென்றுவிட்டால், இப்போதுள்ள இப்பிரச்சினை எனக்கு இராது' என அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் தேவபிள்ளையே, நீ தேவசித்தத்தை விட்டுத் தப்பியோடிப்போவாயாகில், இப்போதுள்ளதைப் பார்க்கிலும் பன்மடங்கான பிரச்சினைகள் அங்கே உனக்காகக் காத்துக்கொண்டிருக்கும் என்பதை நீ மறந்துவிடாதே. நீ தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்கக் கற்றுக்கொள் (II கொரி. 5 : 6). "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசாயா 28 : 16). 'விசுவாசிக்கிறவன் ஓடிப்போக மாட்டான்' என்று இவ்வேதபகுதியின் மலையாள மொழிபெயர்ப்பு கூறுகிறது. பிரச்சினைகளின் முன்னிலையில், "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? ... நான் போவதில்லை" (நெகே. 6 : 11) என்று உள்ளத்தில் உரங்கொண்டிருந்த நெகேமியாவைப் போல நீ தைரியமாகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தீர்மானிப்பாயாக. அப்போது உன் வாழ்வில் மலை போல் வரும் பிரச்சினைகள் பனி போல் நீங்கிவிடும். கர்த்தர்தாமே உன்னோடுகூட இருந்து உனக்காக

யுத்தம்பண்ணுவார்; உன் சத்துருக்கள் அதைக் கண்டு மிகவும் முனையற்றுப்போவார்கள் (வச. 16).

***2. சுயசித்தம் செய்தல் -*** தேவனுடைய சித்தத்தைச் செய்ய நாடாமல், தங்கள் சுயசித்தத்தைச் செய்ய முற்பட்டதே நகோமியின் குடும்பம் பஞ்சகாலத்தில் யூதாவிலிருந்து குடிபெயர்ந்ததின் மற்றொரு காரணமாகும். தேவபிள்ளையே, நீ பிரச்சினைகளைக் கண்டு அவற்றுக்குத் தப்பியோடுகிற ஒரு நபராயிருப்பாயானால், நீ தேவசித்தத்தின் மத்தியில் இருக்க மாட்டாய். பஞ்சம் என்னும் பிரச்சினையைச் சந்தித்தபோது, தங்களைக் குறித்த தேவசித்தம் என்னவென்று அறிந்துகொள்ளும்படியாகவோ, தாங்கள் மோவாப் தேசத்திற்குக் குடிபெயர்ந்து போவது தேவசித்தந்தானா என்று பகுத்தறிந்துகொள்ளும்படியாகவோ அக்குடும்பத்தார் தேவனை நோக்கி ஜெபித்ததாக நாம் வாசிப்பதில்லை. தேவசித்தம் மாத்திரமே செய்ய வேண்டுமென்று உறுதிகொண்டிராதவர்கள் எளிதாகத் திசைகெட்டுப்போவார்கள். நாமோ தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கும்படி எப்பொழுதும் ஜெபத்தில் போராடுவோமாக (கொலோ. 4 : 12). “உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்” என நாம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்வோமாக (சங். 143 : 10 ; 73 : 24).

***3. சுயநலன் கருதுதல் -*** நகோமியின் குடும்பம் மோவாப் தேசத்திற்கு ஓடிப்போனதற்கான மற்றுமொரு காரணம், அவர்கள் தேவனுக்காக அல்ல, தங்களுக்காகவே ஜீவிக்கிறவர்களாய் இருந்ததாகும். அவர்கள் தேவனுக்காக ஜீவிக்கிறவர்களாயிருந்திருந்தால் அச்சூழ்நிலையில் அப்படி ஓடிப்போயிருந்திருக்க முடியாது. “பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று” நாம் வாசிக்கிறோம் (II கொரி. 5 : 15). நாம் நம்முடைய சுய விருப்பத்தைத் தேவனுடைய விருப்பத்திற்கு முன்னாக வைத்திருப்போமாயின் - நம்மைப் பிரியப்படுத்தும்படியாகவே ஜீவித்துக்கொண்டிருப்போம்; அதன் விளைவாக நாம் எங்கும் பிரச்சினைகளையே சந்திக்க வேண்டியதாகும்; நகோமியைப் போல நாம் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம்பண்ணிக்கொண்டே இருப்போம். நாமோ அவ்விதமிராது, பிழைத்தாலும் கர்த்தருக்கென்றே பிழைப்போமாக; மரித்தாலும் அவருக்கென்றே மரிப்போமாக; பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாகவே இருக்க நாடுவோமாக (ரோமர் 14 : 7, 8).



***4. பெருமை -*** நகோமியின் குடும்பம் மோவாப் தேசத்திற்கு ஓடிப்போனதின் முடிவான, அடிப்படையான காரணம் அவர்களிலிருந்த பெருமையே ஆகும். அவர்களால் தேவனுக்கு முன்பாகவோ, மனுஷருக்கு முன்பாகவோ தங்களைத் தாழ்த்த முடியவில்லை - பஞ்சகாலத்தில் முதலாவதாக அவர்கள் தங்களைத் தாழ்த்தி, கர்த்தருக்காகக் காத்திருக்க விரும்பவில்லை. இரண்டாவதாக, எலிமெலேக்கின் இனத்தானும், நெருங்கின உறவின் முறையானும், மிகுந்த ஆஸ்திக்காரனும், அவர்களை ஆதரிக்க வேண்டியவனுமாயிருந்த போவாசின் உதவியையாகிலும் அவர்கள் நாடிச் சென்றிருந்திருக்கலாம் (ரூத் 2 : 1, 20); அப்படிச் செய்யவும் அவர்களுடைய பெருமை அவர்களுக்கு இடமளிக்கவில்லை! “அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்” (நீதி. 18 : 12) என்று கூறப்பட்டிருப்பது எவ்வளவு உண்மையானது!

## தீர்வு காணும் வழி:

கடந்த காலங்களில் தேவன் தம் ஜனங்களுக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளில் ஒன்றும் தவறிப்போகவில்லை (யோசுவா 23 : 14) என்பதை அறிந்திருந்தும், நகோமியின் குடும்பம் தேவன் தங்களை வைத்திருந்த இடத்தை விட்டுப் போனபோது, உண்மையில் அவர்கள் அவருடைய வாக்குத்

தத்தங்களையும் அவருடைய உண்மையையும் சந்தேகிக்கிற வர்களாகவே தங்களை வெளிப்படுத்தினர். நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரரிடையே இரத்தஞ்சிந்துதலும், கொடுமையும், ஒழுங்கற்ற நடக்கையும் பெருகி, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்துவந்தபடியினால் (நியா. 21 : 25), அவர்களை ஒழுங்குக்குட்படுத்தும்படியாக ஒருவேளை தேவன் தேசத்தில் பஞ்சத்தை அனுமதித்திருக்கக் கூடும். அப்பஞ்சகாலத்தில் நகோமியின் குடும்பம் என்ன செய்திருந் திருக்க வேண்டும்?

தேவஜனங்களுக்கு உண்டாகிற பஞ்சம் தேவனிடத்தி லிருந்து அவர்களுக்குக் கிடைக்கிற ஒரு சிட்சையாகும் (II சாமு. 24 : 13). அப்படிப்பட்ட வேளைகளில் அவர்கள் தங்களை முதலாவதாகத் தாழ்த்த வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். “நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலி ருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்” (II நாளா. 7 : 13, 14) என்று அவர் உரைத்திருக்கிறார். ‘தேசத்திலே பஞ்சம் உண்டாகிறபோது, இஸ்ரவேலாகிய உம்முடைய ஜனத்தில் எவனானாலும் தன் வியாகுலத்தை உணர்ந்து செய்யும் வேண்டுதலைத் தேவரீர் கேட்டு மன்னித்து, தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்பட்டு, உம்முடைய வழிகளில் நடக்கும்படிக்கு அவர் களுக்குப் பலன் அளிப்பீராக’ என்று ராஜாவாகிய சாலொமோன் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டருளினார் (II நாளா. 6 : 28 – 31 ; 7 : 12).



தேசத்தில் பஞ்சம் உண்டானபோது நகோமியின் குடும்பம் இதையே செய்திருந்திருக்க வேண்டும். பாலும் தேனும் ஓடுகிற தங்கள் தேசம் – வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தங்கள் தேசம் – வருஷத்தின் துவக்கமுதல் முடிவு மட்டும் எப்பொழுதும் கர்த்தரின் கண்கள் பதிக்கப்பட்டிருக்கும் தங்கள் தேசம் – இப்போது வறண்டுபோனது ஏன் என அவர்கள் தங்களைத் தாழ்த்தி, உய்த்து ஆராய்ந்து சோதித்துப்பார்த்து, கர்த்தரிடத்தில் திரும்பியிருந்திருக்க வேண்டும் (உபா. 11 : 9 – 17 ; 28 : 15, 47, 48). பஞ்சத்திற்குப் பரிகாரம் உண்டாகும்படி தேவன் தம் ஜனங்களுக்குக் கற்பித்திருந்த ஒரே வழிமுறை இதுவே. இக்குடும்பத்தாரோ அப்படிச் செய்ததாக நாம் வாசிப்பதில்லை. அவர்கள் சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமல் (ஏசாயா 31 : 1), தங்கள் பார்வைக்குச் செழிப்புள்ள தாகத் தோன்றிய மோவாபை நோக்கினார்கள். அவர்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, கர்த்தரின் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புவதற்குப் பதிலாக, பஞ்சத்தினின்று தப்பிக்கொள்ளும்படி இதற்கு மாறான, எளிதான ஒரு வழிமுறையைச் சுயமாகத் தெரிந்துகொண்டனர். தங்கள் சுயபுத்தியைச் சார்ந்துகொண்ட அவர்கள் முடிவில் வெட்கப்பட்டுப் போயினர். அவர்களுடைய நம்பிக்கை நிராசையில் முடிந்தது! தேவஜனங்களில் பலரும் தங்கள் பிரச்சினைகளில் இந்தத் தவற்றையே செய்து, அதினிமித்தம் தங்கள் வேதனையைக் கூட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களை அடித்தவருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்த மனமின்றி, அதிகமதிகமாக விலகிப்போய், அநேக அடிகளுக்குப் பாத்திரராகிறார்கள் (ஏசாயா 1 : 4, 5). கர்த்தருடைய கை தங்களுக்கு விரோதமாயிருப்பதாக உணர்ந்த நகோமியின் குடும்பம் செய்திருக்க வேண்டிய மிகச் சிறந்த செயல் – அக்கரத்தை விட்டு ஓடப் பிரயாசப்படுவது அல்ல, அவருடைய இரக்கத்தை நாடி அக்கரத்தினுள் சரணடை வதே ஆகும். ராஜாவாகிய தாவீது ஒரு சந்தர்ப்பத்தில் கர்த்த ருடைய சிட்சையை ஏற்றுக்கொள்ள வேண்டியவனாகக் கொடிய

இடுக்கணில் அகப்பட்டுக்கொண்டபோது, "இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது" என்றான் (II சாமு. 24 : 14). நகோமியின் குடும்பத் தாரிலிருந்த பெருமையே, பஞ்சகாலத்தில் தங்களைத் தாழ்த்தி கர்த்தரை நோக்கிக் கூப்பிடவொட்டாமல் அவர்களைத் தடுத்து விட்டது! அவர்கள் அந்தச் சூழ்நிலையில் தங்களைத் தாழ்த்தி கர்த்தரின் முகத்தைத் தேடியிருந்தால் அவர்களுக்குச் சர்வ வல்லவரின் சகாயம் கிடைத்திருந்திருக்குமே!

நகோமியின் குடும்பம் சந்தித்துக்கொண்டிருந்த அதே சூழ்நிலையினூடாகக் கடந்து சென்றுகொண்டிருந்தும் யூதா தேசத்திலேயே தரித்திருந்த மற்றவர்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் பஞ்சத்தில் இருந்தும் மடிந்துபோக வில்லையே! "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக் கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடு விக்கவும்; பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" (சங். 33 : 18, 19) என்றும், 'உத்தமர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப் பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்' (சங். 37 : 18, 19) என்றும், 'இதோ, தேவன் தண்டிக்கிற (Eng. correcteth - திருத்துகிற) மனுஷன் பாக்கியவான்; அவர் அடிக்கிறார், அவ ருடைய கை ஆற்றுகிறது. பஞ்சகாலத்திலே அவர் உம்மை மரணத்துக்கு விலக்கி மீட்பார். பாழாக்குதலையும் பஞ்சத்தையும் பார்த்து நகைப்பீர்' (யோபு 5 : 17 – 22) என்றும் கூறப்பட்டுள்ளபடி, பஞ்ச நாட்களில் கர்த்தர் தம் ஜனங்களைப் பாதுகாத்தார்! "தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு" (நீதி. 11 : 2) என்று எழுதப்பட்டுள்ளபடி, அவர்கள் தாங்கள் நெருக்கப்படுகிற நாட்களில், தங்களை அடித்தவரை விட்டு விலகிப் போகாமல், தங்களைத் தாழ்த்தி, அவர் தங்களுக்கு இரங்கும்படி காத்தி ருந்தனர்; அவர்களுடைய நம்பிக்கை வீண்போகவில்லை! (சங். 33 : 20 – 22). ஏற்றவேளையில் "கர்த்தர் தம்முடைய ஜனங்களைச்



சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார்" (ரூத் 1 : 6). தேசத்தில் மீண்டும் செழிப்பு உண்டாயிற்று!

ஆகவே பஞ்ச காலத்தில் நகோமியின் குடும்பத்தார், 'தேவசித்தத்திற்குப் புறம்பேயிருந்து நிறைவை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவசித்தத்தின் மத்தியில் பட்டினியாய் இருப்பதே நலம்' என தீர்மானித்திருந்திருக்க வேண்டும். தேவனின் ஒழுங் குக்குட்படுத்தும் முறைமைக்கு அவர்கள் தங்களை ஒப்புக் கொடுத்திருந்திருக்க வேண்டும். தேவன் நம்மைவிட மூத்தவர் களைக் கொண்டோ, இளையவர்களைக் கொண்டோ நம்மை ஒழுங்குக்குட்படுத்தக் கூடும். அவ்வேளைகளில் நாம் அவர்களை எதிர்க்கவோ, தேவனை விட்டுப் பின்வாங்கவோ கூடாது. சில தேவபிள்ளைகள் ஒருவராலும் திருத்தப்படக் கூடாதவர்களாயிருக் கின்றனர். தங்களுடைய விருப்பப்படி நடப்பதற்கு விட்டுவிடப் பட வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்களுடைய சுயசித்தம் குறுக்கிடப்பட்டால், சர்ப்பத்தைப் போல அவர்கள் தங்கள் தலையை உயர்த்துகின்றனர். தாவீதின் குமாரரில் ஒருவனான அதோனியா திறமை வாய்ந்த ஒருவனாயிருந்தான். தன் தகப்பனுக்குப் பிறகு தானே பட்டத்திற்குரியவன் என அவன் எண்ணிக்கொண்டிருந்தான். தாவீது அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை (I இராஜா. 1 : 5, 6). அதன் காரணம், அவன் ஒருவராலும் – தன் தகப்பனாலுங்கூட – திருத்தப்படக் கூடாத வனாயிருந்திருக்கக் கூடும். முடிவாக அவன் தன்னைத்தான் உயர்த்தி, தன் தகப்பனுக்கும் தேவனுக்கும் விரோதமாகக் கலகம் பண்ணி, கொலைசெய்யப்பட்டுப் பரிதாபமாக மாண்டுபோனான். நம்முடைய முடிவு பரிதபிக்கப்படத்தக்கதாய் இராதபடிக்கு, தேவ னுடைய சீர்திருத்தும் முறைமைகளுக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுப்போமாக!

நாம் ஒரு பிரச்சினையான சூழ்நிலையையோ அதற்குக் காரணமாயிருந்த ஒரு நபரையோ விட்டு ஓடிப்போகக் கூடும்; ஆயினும் அதற்குப் பின்னரும் நம் பழைய இருதயந்தானே

நம்மில் இருக்கும்! எனவே நாம் அவற்றுக்குத் தப்பியோட முற்படும்போது, அப்பிரச்சினைகளுக்கு மெய்யான காரண மாயிருப்பது எதுவோ, அதனோடு சரியான விதத்தில் செயல்படத் தவறிவிடுகிறோம் என்பதே உண்மையாகும். நம்மைச் சூழ இருப்பவர்களோ, நம் சூழ்நிலைகளோ, அல்லது நாம் வைக்கப் பட்டிருக்கும் இடமோ அல்ல, நம்முடைய இருதயமே நம் பிரச்சினைக்கான மூலகாரணமாகும். நம் பிரச்சினையின் மையம், நம் இருதயமே! எனவே, நாம் எங்கு போனாலும் 'நம் பிரச்சினை' நம்மோடு கூடவே வருகிறது. ஏனெனில் நம் இருதயமே நம்முடைய மெய்யான பிரச்சினையாயிருக்கிறது. ஆகவே விகற்ப மான சூழ்நிலைகளில் - நாம் அவற்றினின்று தப்பிக்கொள்ள முயற்சிப்பதற்குப் பதிலாக, 'கர்த்தாவே, இந்தச் சூழ்நிலையிலும் தேவசித்தத்தின் மத்தியில் தரித்திருக்க எனக்கு உதவி செய் தருளும்' என்று நாம் கர்த்தரிடத்தில் மன்றாடுவோமாக. நகோமி தன் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் தன் இருதயமே என்பதை உணரத் தவறிவிட்டாள். ஆகவே 'இனிமை' என்ற அர்த்தமுள்ள பெயருடைய அவள் 'கசப்பு' நிறைந்தவளானாள்! நம் இருதயம் கடினப்படும்போது நாம் தேவன் பேரிலும் மற்றவர்கள் பேரிலும் கசப்புள்ளவர்களாகி, நம் பிரச்சினைகளுக்கு மற்றவர்களைக் குறைகூற ஆரம்பிப்போம். ஆகவே நமக்குத் தேவையாயிருப்பது சூழ்நிலைகளின் மாற்றமோ அல்லது இட மாற்றமோ அல்ல, ஆனால் இருதய மாற்றமே ஆகும்!

**நகோமி இழைத்த தவறுகள்:**

எலிமெலேக்கின் குடும்பம் யூதா தேசத்தை விட்டுக் குடிபெயர்ந்து சென்றதினால் செய்த தவற்றிற்கு அக்குடும்பத் தலைவனாகிய எலிமெலேக்கு காரணமாயிருப்பினும், அவ னுடைய மனைவியாகிய நகோமி அதற்கு விதிவிலக்கானவள் அல்ல. அவளும் அவனுக்கு உடன்பட்டிருந்திருக்கிறாள். அப்படி யில்லாவிட்டால், எலிமெலேக்கு மரித்த பின்பாகிலும் அவள் தன் பிள்ளைகளுடன் யூதா தேசத்திற்குத் திரும்பியிருப்பாளே!



அவளோ மோவாப் தேசத்திலேயே தன் குமாரருக்குப் பெண் கொண்டு, அங்கேயே தங்கிவிட்டாள். இதிலிருந்து ஆரம்பத் திலேயே அவள் மோவாபை விரும்பித் தெரிந்துகொண்டாள் என நாம் நிதானிக்கலாம். தன் வாழ்க்கையை நிர்ப்பந்தமான நிலைக் குள்ளாக்கத் தக்கதாக நகோமி பல தவறுகளைச் செய்திருப்பினும், அவற்றுள் பிரதானமான மூன்றினை நாம் கீழே காண்போம். அப்படிப்பட்ட தவறுகளுக்கு நாம் நம்முடைய வாழ்வில் இடமளிப்போமாகில், அவை நம் ஜீவியத்தைச் சீர்குலைத்து, நம் ஊழியத்தை அழித்துவிடும்.

*1. பிரச்சினையுள்ள சூழ்நிலைகளையோ, அதற்குக் காரணமா யிருக்கும் நபர்களையோ விட்டு ஓடிவிட முற்படுதல்:*

பஞ்சத்தினிமித்தம் நகோமி தன் குடும்பத்துடன் மோவாப் தேசத்திற்கு ஓடிப்போனதே, அவள் செய்த முதல் தவறாகும். சில சமயங்களில் நம்மை நடத்துகிறவர்கள் நம்மிடத்தில் கடினமாய்ச் செயல்படக்கூடும். அதினிமித்தம் நாம் தேவசித்தத்தை விட்டு வழிவிலகவோ, கர்த்தர்தாமே நம்மைக் கொண்டுவந்து நாட்டி யிருக்கிற அப்போஸ்தலருடைய ஐக்கியத்தை விட்டுவிடவோ, அவர் நம் கரங்களில் ஒப்புவித்திருக்கும் ஊழியத்தை உதறித் தள்ளவோ கூடாது. சபையில் சிலர் கடினமானவர்களாயிருப்ப தாலோ, அல்லது சபையில் சில சோதனைக் கட்டங்கள் உண்டா கும்போதோ, நாம் நமக்கு நலமானவையாகத் தென்படும் மற்ற இடங்களுக்குச் செல்லத் துணியலாகாது. நம்மைத் தம்முடைய தொழுவத்தினுள் கொண்டுவந்து சேர்த்த கர்த்தர்தாமே முடிவு பரியந்தம் நம்மைப் பாதுகாத்து வழிநடத்த வல்லவரும் உண்மை யுள்ளவருமாயிருக்கிறார் என்ற விசுவாசத்துடன் அப்படிப்பட்ட வேளைகளில் நாம் அவருடைய முகத்தையே நோக்கிப் பார்க்க வேண்டும். சபையில் தேவனால் விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்கள் நிமித்தம் சபையை விட்டுப் போகிறவர்கள் முடிவில் ஆவிக்குரிய மரணத்தையே சந்திப்பார்கள். எலிமெலேக்கின் குடும்பத்திற்கு

நேரிட்டது. இன்று ஒரு சபையை விட்டு மற்றொரு சபைக்குத் தாவிச் சென்றுகொண்டிருக்கும் 'நவீன கிறிஸ்தவ நாடோடிகள்' அனைவருக்கும் ஓர் எச்சரிப்பாயிருக்கிறது!

ஒரு பிரச்சினையையோ, சோதனையையோ, கடினமான சூழ்நிலையையோ நாம் சந்திக்கும்போது அதினின்று தப்பித்துக் கொள்வது எப்படி என்ற ஓர் எண்ணம் நம் மனதில் எழக் கூடும். அந்தச் சூழ்நிலையை அல்லது அதற்குக் காரணமாயிருக்கும் குறிப்பிட்ட நபரைத் தவிர்த்துவிட்டால் நலமாயிருக்கும் என நாம் நினைக்கக் கூடும். ஆனால் நாம் அப்படிப்பட்ட எண்ணத்திற்கு இணங்கி அதற்குத் தப்பியோட முற்படுவோமாயின் - உண்மை யில் நம்முடைய சொந்த ஜீவியத்திற்கும் ஊழியத்திற்குமே நாம் அபாயம் விளைவித்துக்கொள்கிறோம்; அதுவே நம் அழிவின் ஆரம்பமாயிருக்கும்; படிப்படியாக நமக்குள் பின்மாற்றம் நேரிடும். பஞ்சத்திற்குத் தப்பிக்கொள்ளும்படி தேவசித்தத்தின் மத்தியிலிருந்து மோவாப் தேசத்திற்குத் தன் குடும்பத்துடன் ஓடிப்போன நகோமி சிறிது காலம் கழித்துத் தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தபோது, ஒரு காலத்தில் செழிப்புள்ளதும் கவர்ச்சி கரமானதுமாகத் தோன்றிய அந்த மோவாப் தேசம் இப்போது அவளது நினைவில் ஒரு கல்லறைத்தோட்டமாகக் காணப் பட்டது. எலிமெலேக்கின் கல்லறை, மக்லோனின் கல்லறை, கிலி யோனின் கல்லறை - மூன்று கல்லறைகள்! மக்லோன், கிலியோன் இருவருக்கும் பிள்ளைகள் இல்லை; நகோமி தன் புருஷனையும் பிள்ளைகளையும் இழந்து தனித்தவளானாள்!

நாம் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது அவற்றை விட்டு ஓட முற்படலாகாது; மாறாக, அவற்றை எடுத்துக்கொண்டு தேவ சமுகத்திற்கு ஓட வேண்டும். தேவ அன்பினாலும் தேவ கிருபை யினாலும் அவற்றை மேற்கொள்ள ஒத்தாசை அருளும்படி நாம் தேவனிடத்தில் மன்றாட வேண்டும். தேவபிள்ளையே, நீ சந்திக்கிற பிரச்சினைகளைத் தேவன் அறிவார். நீ அவற்றினின்று



ஓடித் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பாயாகில் அவற்றை எதிர் கொள்ளத்தக்கதாகத் தேவன் உனக்களிக்கும் கிருபையை நீ இழந்துபோவாய். உன் இருதயம் யாவரோடும் செம்மையானதாய் இருக்க வேண்டும். ஒரு தேவமனிதன் இவ்வாறு கூறியிருக்கிறார்: 'தேவன் நம்மை வைத்திருக்கிற இடத்தைக் குறித்து மனஞ் சலித்துப்போகுதல், நம்முடைய ஆவி திருப்தியற்றதும் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றதும், நிலையற்றதுமாயிருப்பதற்கான ஓர் அடையாளமாகும். ஒரு சூழ்நிலை நம் மனதிற்கு ஒவ்வாததாக, திருப்தியற்றதாக அல்லது நம் விருப்பத்திற்கு மாறானதாக இருக்கும்போது, உடனடியாக அதனை விட்டு விலகிப்போக முற்படுதல் புத்தியீனமான ஒரு செயலாகும். அது, நமக்கு நியமிக்கப்பட்டுள்ள சிலுவைக்கு நாம் தப்பிக்கொள்ள முயற்சிப்ப தாயிருக்கும். அதை ஏற்றுக்கொண்டு அதினின்று மிகச் சிறந்ததை அடைந்துகொள்வதே நாம் செய்யத்தக்க ஞானமுள்ள செயலாகும். ஏனெனில் நாம் வைக்கப்பட்டுள்ள இடத்தை மாற்றிக்கொள்ளுதல், எல்லாச் சமயங்களிலும் பிரச்சினையைப் பரிகரிப்பதாய் அமை யாது. நாம் நம்முடைய கடமையை விட்டு விலகிவிடுவோமாயின், அதற்குப் பின் நாம் செழித்தோங்கலாம் என எதிர்பார்க்க முடியாது. யாதொரு குறுக்கு வழியிலாயினும் தன் ஜீவனைக் காக்கப் பிரயாசப்படுகிறவன் அதை இழந்துபோவான்'. ஆகவே, நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு பிரச்சினையைச் சந்திக்கும் போது செய்ய வேண்டிய முதன்மையான காரியங்களில் ஒன்று, நம்முடைய பிரச்சினைக்குக் காரணமாயிருக்கும் நபரோ அல்லது நாமோ அந்த இடத்திலிருந்து மாற்றப்படுமுன்னதாகவே அப்பிரச்சினையில் நாம் ஜெயங்கொள்ள வேண்டும் என தேவனை நோக்கி மன்றாடுவதேயாகும். மாறாக, நாம் அந்நபரை விட்டு விலகி, அவரோடு பாதுகாப்பான ஓர் இடைவெளி வைத்துக்கொள்ள முற்படுவோமாயின், உண்மையில் அது ஒரு 'பாதுகாப்பற்ற இடைவெளியாகவே' இருக்கும். ஒரு நபர் மிகக் கடின குணமுள்ளவராக இருப்பாராயின், அவரோடு சகவாசம் வைத்துக்கொள்வது நமக்கு மிகவும் கடினமான ஒரு காரியமாகத்

தோன்றுமாயின், அவரோடு மிக நெருங்கி இருக்கத்தக்கதாகவும் அச்சூழ்நிலைகளை ஜெயித்து அவரை நேசிக்கத்தக்கதாகவும் கிருபை அருளும்படி நாம் கர்த்தரிடத்தில் மன்றாட வேண்டும். அந்நபரை விட்டு ஓடிப்போவது அல்ல, சகாயம் நாடி கர்த்தரிடத்தில் ஓடிப்போவதே நமக்கு அச்சூழ்நிலையில் ஜெய மளிக்கும். பஞ்ச நாட்களில் அதினின்று தப்பிக்கொள்ள வகை தேடி யூதா தேசத்தை விட்டுக் குடிபெயர்ந்த நகோமி, அங்கேயே தரித்திருந்த மற்ற யாவரையும் காட்டிலும் தான் ஞானமுள்ளவள் என ஆரம்பத்தில் எண்ணிக்கொண்டிருந்திருக்கக் கூடும். இப்போதோ அவள், தான் எதிர்பார்த்திராத பிரச்சினைகளைச் சந்தித்து, அவற்றில் அமிழ்ந்து தவிக்கிறாள்! ஒரே ஒரு பிரச்சினைக்குத் தப்பியோடி வந்த அவளை இப்போது பல பிரச்சினைகள் சூழ்ந்துகொண்டன! நாம் எச்சரிப்படையும்படி யாகவே இது வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

### *2. தன் பாவங்களை மறைக்கப் பிரயாசப்படுதல்:*

நகோமி இழைத்த இரண்டாவது தவறு, அவள் தான் செய்த தவற்றை மறைக்கப் பிரயாசப்பட்டதாகும். “என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள்” என்று அவள் தன் மருமக்களிடம் மீண்டும் மீண்டும் கூறுகிறாள் (ரூத் 1 : 8, 11, 12); “இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப்போய் விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ” என்று அவள் ரூத்திடம் கூறுகிறாள் (வச. 15). அவள் தன் மருமக்களைத் தங்கள் தாய் வீட்டிற்குத் திரும்பிப்போகும்படி வற்புறுத்தியது ஏன் என நாம் வியப்படையக் கூடும். வயது சென்றவளும் விதவையுமாயிருந்த அவள் தன் இரு குமாரரை யுங்கூட இழந்து தனித்தவளானாள். ஆகவே அவர்கள் அவ ளுடன்கூட வந்தால், தனித்து விடப்பட்டிருந்த அவளுக்கு உதவியாகத்தானே இருப்பார்கள்! இப்படியிருக்க, அவள் அவர்களைத் திரும்பிப் போகும்படி வற்புறுத்தியதின் காரணம் என்னவாயிருந்திருக்கக் கூடும்? அவர்கள் பேரில் அவளுக் கிருந்த மனதுருக்கமோ? அல்ல! அவளுக்கு அவர்கள் மேல் மனதுருக்கம் இருந்திருந்தால் அவர்களுடைய ‘தேவர்களிடத் திற்கும்’ திரும்பிப்போகும்படி அவள் கூறியிருந்திருப்பாளா? அவள் அப்படிச் செய்ததற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. அவள் அவர்களைத் தன்னுடைய தேசத்திற்குக் கொண்டு சென்றிருந்தால், அவள் தன் குமாரருக்குப் புறஜாதியாரான பெண் களைக் கொண்ட பெரிய தவற்றை அவளுடைய ஊராரெல்லாரும் அறியவந்திருப்பார்கள். அவள் பெத்லெகேமை விட்டு அந்நிய தேசத்திற்குச் சென்றதினால் செய்த முதல் தவற்றை அவர்கள் யாவரும் ஏற்கனவே அறிந்திருந்தனர். இப்போதோ தான் செய்த மற்ற தவறும் அறியப்பட்டு, தான் தேவசித்தத்தை விட்டு விலகிச் சென்று, புறஜாதியாரான பெண்களைத் தன் குமாரருக்குக் கொண்ட தினால் தன்மேல் வந்த தேவனுடைய தண்டனையைக் குறித்து அவர்கள் பேசிக்கொள்வதற்கு ஏதுவாகும் என அவள் எண்ணி னாள் போலும்! ஆகவே அவள் தன் தவற்றை மறைத்துவிட முயற்சித்தாள். நாம் நம்முடைய குற்றங்களை மறைக்க முற்படு வோமாகில், அது நம் ஆவிக்குரிய ஜீவியத்தையும் ஊழியத்தை யும் அழித்துவிடும்! “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ் வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிற வனோ இரக்கம் பெறுவான்” (நீதி. 28 : 13). நாம் ஒரு சிறு தவறிழைத் தாலும் அதைக் குறித்து உடனுக்குடன் மனஸ்தாபப்பட்டு, அதை அறிக்கை செய்து விட்டுவிடுவோமாயின் தேவனுடைய இரக்கத்தைப் பெறுவோம். அப்படிச் செய்வதற்கு மெய்யான தாழ்மை அவசியம்.



‘கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறது’ (ரூத் 1 : 13) என்று நகோமி இப்போது முறையிடுகிறாள். இதற்கான ஒரு காரணம் அவள் தன் குற்றத்தை மறைக்க முற்பட்டதேயாகும். வேறு வார்த்தைகளில் கூறின், கர்த்தருடைய கரம் அவள் மேல் பாரமாயிருந்தது! ஒரு சந்தர்ப்பத்தில் தாவீது தன் பாவத்தை அறிக்கையிடாமல் மறைத்து வைத்திருந்ததினிமித்தம், இரவும்

பகலும் தன்மேல் கர்த்தருடைய கை பாரமாயிருந்தது என்று கூறு கிறான் (சங். 32 : 3 – 5). நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை யிடுகிற விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். நம் முடைய தவறு மிகச் சிறியது போல் தென்பட்டாலும் அல்லது ஒரு காரியத்தைக் குறித்து உண்மையில் அது ஒரு தவறுதானா, இல்லையா என்ற ஒரு சந்தேகம் நமக்கிருந்தாலுங்கூட, அதனை யும் நாம் உடனடியாக அறிக்கை செய்து விட்டுவிடுவதே நல்லது.

மேலும் மற்றொரு சந்தர்ப்பத்தில் தாவீது, "உமது கை என்னை இருத்துகிறது" என்று கூறியிருக்கிறான் (சங். 38 : 2). "என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும், ... உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்துபோனேன்" (சங். 39 : 8 – 10) என அவன் தேவனை நோக்கி மன்றாடுகிறான். நாம் ஒளிவு மறைவற்றதும், பளிங்கைப் போல் துலாம்பரமானதுமான தெளிவுள்ள ஒரு தூய ஜீவியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம் சொப்பனங்களும் கற்பனைகளுங்கூட தேவனுக்கு முன்பாகச் சுத்தமானவையாயிருக்க வேண்டும். பாவத்தின் எந்தச் சுவடும் நம்மில் இருக்க நாம் இடமளிக்கலாகாது. அவ்வாறாயின், அவ ருடைய கை நம்மேல் பாரமானதாய் அல்ல, நம்மை அணைத்துக் கொள்வதாயிருக்கும்; "அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது; அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளு கிறது" என்பது நம் அறிக்கையாயிருக்கும் (உன். 2 : 6).

ஒரு சந்தர்ப்பத்தில் பெலிஸ்தரின் மேல் தேவனுடைய கை மகா பாரமாயிருந்தது; யூதா தேசத்தில் – கர்த்தருடைய ஆல யத்தில் – மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்க வேண்டிய கர்த்த ருடைய உடன்படிக்கைப் பெட்டி பெலிஸ்தரின் தேசத்தில் இருந்தது வரை அத்தேசத்தார்மேல் கர்த்தருடைய கை மகா உக்கிரமாய் இறங்கிற்று; அது திரும்ப யூதா தேசத்திற்கு அனுப்பப்படும்வரை அத்தேசமெங்கும் சாவு மும்முரமாயிருந்தது (I சாமு. 5 : 6, 9, 11). அவ்வாறே நகோமியின் குடும்பம் தேவ சித்தத்தின் மத்தியினின்று விலகி மோவாப் தேசத்திற்குச் சென்று



அங்கு தங்கியிருந்தது வரை அக்குடும்பத்திலும் சாவு மும்முர மாயிருந்தது – குறுகிய காலத்திற்குள் அக்குடும்பத்தின் ஆண்கள் மூவரும் மரணமடைந்தனர். நகோமி தன் தேசத்திற்குத் திரும்பி வந்துவிட்டபடியினால் உயிர் தப்பினாள்!

### *3. தேவன் பேரில் கசப்புள்ளவளாயிருத்தல்:*

பெத்லெகேமுக்குத் திரும்பிச் சென்ற நகோமி தன் ஊராரிடம், "நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப் படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன்" என்றாள் (ரூத் 1 : 20, 21). இது அவளிலிருந்த மூன்றாவது தவறாகும். உண்மையில், சர்வவல்லவர் நகோமியினிடத்தில் கசப்புள்ளவராகச் செயல்படவில்லை; அவள்தான் சர்வவல்லவரிடத்தில் மனக்கசப் புடன் நடந்துகொண்டாள். அவளுடைய தகுதிக்கும் எதிர்பார்ப் புக்கும் மேலாக, மிகவும் அதிகமாக அவளை ஆசீர்வதிக்கும் படியாகவும், அவள் இழந்துபோன ஆசீர்வாதங்களையெல்லாம் அவளுக்குத் திரும்பத் தரும்படியாகவும் திட்டமிட்டு, சர்வ வல்லவர் அவளைப் பெத்லெகேமுக்குத் திரும்பக் கொண்டு வந்தது, அவள்மேல் அவர் பாராட்டிய அளவு கடந்த இரக்கமே ஆகும். 'சர்வவல்லவர்' என்பதற்கு வேதாகமத்தில் உபயோகிக்கப் பட்டுள்ள மூலபதம் 'யெல்ஷதாய்' (Elshadai) என்பதாகும். இது, 'தாயைப் போன்ற தேவன்' என்று பொருள்படும். ஒரு தாய் தன் பிள்ளைக்குத் தீங்கு செய்யக் கூடுமோ? அப்படியிருக்க, தாயைப் போன்ற தேவன் தம் பிள்ளைகளுக்குத் தீமை செய்வது எப்படி? "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை" (ஏசாயா 49 : 15) என்று அவர் உரைத்திருக்கிறாரே! நகோமியின் உள்ளம் கசப்புள்ளதாயிருந்ததால், 'தாயைப் போன்ற

தேவன்’ அவளது நலன் கருதி அவளுடைய வாழ்வில் செயல்பட்ட விதங்கள் அவளுக்குத் தீமை போல் தோன்றின. ஆகவேதான் அவள், ‘சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்; சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தினார்’ என்றெல்லாம் முறையிடுகிறாள்.

நகோமியைப் போல தேவபிள்ளைகளில் சிலர் தங்களுக்கு நேரிடுகிற பிரச்சினைகளினிமித்தம் முதலாவதாகத் தேவசித்தத்தை விட்டு ஓட முயற்சிக்கின்றனர்; பின்பு அவர்கள் தேவனுக்குப் பிரியமில்லாத பல காரியங்களைச் செய்து, அவற்றை மறைக்கவும் முற்படுகின்றனர். இப்படிச் செய்யும்போது முடிவாக மிக மோசமான ஒரு கட்டத்திற்கு அவர்கள் வந்துசேருகின்றனர் - அதாவது தேவனுக்கு விரோதமாகவே அவர்கள் மனக்கசப்புள்ளவர்களாகிவிடுகின்றனர்! நாம் நம்முடைய தவறுகளை மறைக்கப் பிரயாசப்படும்போது, தேவனோடுள்ள நம்முடைய நல்லுறவு துண்டிக்கப்படுகிறது. அதற்குப் பின் நமக்கு நேரிடுகிற சகல பிரச்சினைகளுக்கும் நாம் தேவனையே குறைகூறுகிறவர்களாய் இருப்போம். இப்போது நகோமி, தன் வாழ்வில் நேரிட்ட சகல சோகமான சம்பவங்களுக்கும் தேவனையே குற்றஞ்சாட்டுகிறாள். சிலர் தங்கள் பிரச்சினைகளுக்கெல்லாம் தேவனையே குற்றஞ்சாட்டுவதின் காரணம், அவர்களுடைய ஜீவியத்தில் அறிக்கை செய்யப்படாத சில பாவங்கள் மறைந்திருப்பதேயாகும். தங்களுக்கு நேரிட்ட சோகமான சம்பவங்களெல்லாம் தங்கள் பாவத்தின் விளைவுகளே என்பதை ஒத்துக்கொள்ள அவர்கள் மனதற்றிருக்கிறார்கள். ஆனால் மெய்யான பரிசுத்தவான்களோ, சொல்லொண்ணா துன்பங்களின் மத்தியிலும் பிரச்சினைகளின் மத்தியிலும் தேவனைப் பாடித் துதிக்கிறவர்களாயிருப்பர். அப். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் கொடிய வேதனையின் மத்தியிலும் நடுராத்திரியிலே கர்த்தரைப் பாடித் துதித்துக்கொண்டிருந்ததை நாம் அறிவோமே! (அப். 16 : 23 - 25). அருமையானவர்களே, உங்கள் சோதனை வேளைகளில்தான் உங்கள் இருதயத்தின் உண்மையான நிலை புலப்படும். நீங்கள் உங்களில் பாவங்களை மறைத்து வைத்திருப்பீர்களாயின், தேவன் பேரில் மாத்திரமல்ல, உங்களை நடத்தும்படி அவரால் நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் பேரிலும் மனக்கசப்புள்ளவர்களாயிருப்பீர்கள். நாம் யாதொருவர் பேரிலும் மனக்கசப்புள்ளவர்களாயிருக்கலாகாது. ஒரு சந்தர்ப்பத்தில் யாக்கோபின் குமாரனான யூதா தன் மருமகள் முறைகேடான பாவஞ்செய்ததாகக் கேள்விப்பட்டபோது அவள் பேரில் மனக்கசப்பும் கோபமும் உள்ளவனானான் (ஆதி. 38 : 24). அவன் தன் தனிப்பட்ட ஜீவியத்தில் தேவனோடு செம்மையானவனாயிராததே அவனுடைய கடுங்கோபத்திற்கான மெய்யான காரணமாகும். நாம் பாவத்திற்கு விரோதமாக நீதியுள்ள வைராக்கியம் பாராட்ட வேண்டுமென்பது உண்மையே. ஆயினும் எந்தத் தனிநபர் பேரிலும் தனிப்பட்ட விதத்தில் நமக்கு யாதொரு பகையுணர்வும் கசப்பும் இருக்கக் கூடாது. நகோமியைப் போல தேவன் பேரில் கசப்புள்ளவர்களாயிருக்கும் பரிதாபமான நிலைக்குள்ளாகாதபடிக்கும் நாம் எச்சரிக்கையாயிருப்போமாக!



நாம் நம்முடைய வாழ்நாளெல்லாம் தேவனை நம் தாயைப் போன்றவராகவே ருசிக்கும்படி, நகோமியின் வாழ்க்கையில் வந்த மேற்கூறப்பட்டுள்ள மூன்று தவறுகளுக்கும் நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள எச்சரிக்கையாயிருப்போமாக!

**“*கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்களோடேகூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து, தன் இரண்டு மருமக்களோடுங்கூடத் தானிருந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டாள்*”** (ரூத் 1 : 6, 7).

## தேவ இரக்கம்:

தேவபிள்ளைகளை வஞ்சிக்கும் பிசாசின் தந்திரம் ஒன்றுண்டு. எலிமெலேக்கும் அவனுடைய குடும்பத்தாரும் சிறிது காலம் மோவாபில் இருந்துவிட்டு, பின்னர் பெத்லெகேமுக்குத்

திரும்பிவிடலாம் என்ற எண்ணத்துடனேயே ஒருவேளை ஆரம்பத்தில் அங்கு சென்றிருந்திருக்கக் கூடும். ஆனால் அங்கு சென்ற பின் அவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர். இது நமக்கு நல்லதொரு பாடமாயிருக்கிறது. பிற்பாடு திருத்திக்கொள்ளலாம் என்று எண்ணி, நாம் சில தவறுகளைப் புத்தியீனமாகச் செய்யக் கூடும். ஆனால் பிற்பாடு நாம் அவற்றைத் திருத்திக்கொள்ளவோ, முந்தின சீருக்குத் திரும்பி வரவோ கூடாமலே போய்விடக் கூடும்! 'தேவன் என் ராஜா' என்ற அர்த்தமுள்ள ஒரு பெயரைத்தான் எலிமெலேக்கின் பெற்றோர் அவனுக்குச் சூட்டியிருந்தனர். இதினின்று அவனுடைய பெற்றோர் தேவபக்தியுள்ளவர்களா யிருந்திருக்கின்றனர் என நாம் நிதானிக்கலாம். தேவன் நம் ராஜாவாக இருப்பாராயின், அவர் நம்மை வைத்திருக்கிற இடத்தி லேயே, அவரோடு கூடவே நாம் இருக்க வேண்டும். இல்லையேல் எலிமெலேக்கின் குடும்பத்தைப் போல நாம் பரிதபிக்கப்படத்தக்க நிலைக்குள்ளாக நேரிடும். தேவன் அவனுடைய குடும்பத்தை முற்றிலும் வேரறுத்துவிடாமல், பின்னாட்களில் அது மீண்டும் துளிர்க்கும்படி ஒரு வழி திறந்தது, அவர்கள் மேல் அவர் கொண்ட இரக்கம் மாத்திரமேயாகும். தேவசித்தத்தை விட்டு வழிதப்பிச் சென்றவர்களையும் மீண்டும் மனந்திரும்பச் செய்யும் படி அவர்களோடு அவர் இரக்கத்துடன் செயல்படுகிறார் என்பதை இதினின்று நாம் அறிகிறோம்.

நகோமி கடின உள்ளங்கொண்ட ஒரு ஸ்திரீயாய் இருந் திருக்கிறாள். சிட்சையின் மேல் சிட்சை அவளைச் சந்தித்துக் கொண்டிருந்த போதிலும், அவளது இருதயம் கடினமாகவே இருந்தது. தன்னுடைய இருதயமே தன் பிரச்சினைகள் யாவற் றுக்கும் காரணம் என்பதை அவள் உணரவில்லை. கர்த்தராகிய இயேசு கூறிய ஓர் உவமையில், தன் தகப்பனின் வீட்டை விட்டுத் தூரதேசத்திற்குச் சென்று பல இன்னல்களுக்குள்ளான இளைய குமாரன், தன் தகப்பனுடைய வீட்டில் பூர்த்தியான ஆகாரம் இருக்கிறது என்பதை உணர்ந்து, அவனிடத்திற்குத் திரும்பிச் சென்றான் (லூக்கா 15 : 17). நகோமியும், "கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார்" என்று மோவாப் தேசத்தில் கேள்விப்பட்டு, யூதா தேசத்திற்குத் திரும்பி வரும்படி புறப்பட்டாள் (ரூத் 1 : 6). ஆயினும் நகோமி ஒரு விதத்தில் அந்த இளைய குமாரனைப் பார்க்கிலும் மோச மானவளாயிருந்தாள் என நாம் கூறலாம். ஏனெனில், அவன் சில பிரச்சினைகளினூடாகக் கடந்துசென்ற பின்பு தன்னுடைய தவற்றை உணர்ந்துகொண்டான். அவனுக்குப் புத்தி தெளிந்த போது, அவன் தன் தகப்பனுடைய வீட்டுக்குத் திரும்பிச் சென்று, தன் தகப்பனிடம், "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல" (லூக்கா 15 : 17 – 21) என்று தன் பாவத்தை மெய் மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்தான். நகோமியோ, "இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர் களே" என திருவசனம் கூறுகிற பிரகாரமாக (ஏசாயா 1 : 5), அதிக மதிகமாக அடிக்கப்பட்டும் கர்த்தரை விட்டு விலகிச் செல்லுகிற வளாகவே இருந்தாள். கடைசியாக, அவள் தன் தவற்றை உணர்ந்த தினால் அல்ல, பெத்லெகேமில் ஆகாரம் உண்டென்று கேள்விப் பட்டதினால் மாத்திரமே அங்கு திரும்பிச் சென்றாள் (ரூத் 1 : 6). அங்கு சென்ற பின்னரும் அவள் தன் தவறுகளை ஒத்துக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தர்மேல் மனக்கசப்புள்ளவளாய் இருந்தாள் (வச. 20, 21).

மோவாப் தேசத்தில் நகோமியின் வாழ்க்கையில் தொடர்ச்சி யாகப் பல இன்னல்கள் புயல் போல மோதியடித்துக்கொண் டிருந்தன என இவ்வதிகாரத்தில் நாம் கண்டோம். 'எனக்கு ஏன் இந்த இன்னல்கள்?' என்று அவள் அங்கலாய்த்துக்கொண்டி ருந்தாள். கர்த்தருடைய கரம் தனக்கு விரோதமாயிருப்பதை அவளால் நன்றாக உணர முடிந்தது (ரூத் 1 : 13). ஆயினும் அவள் அதின் காரணங்களைக் கண்டுணர்ந்து தன்னைத் திருத்திக்

கொள்ள நீண்ட காலம் சென்றது. மேலே நாம் கண்டபடி கர்த்தருடைய கை அவளுக்கு விரோதமாயிருக்கத்தக்கதாக அவளில் பல தவறுகள் இருந்தபோதிலும், அவற்றுக்கெல்லாம் அடிப்படையான காரணம் அவளிலிருந்த பெருமையே ஆகும். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி. 16 : 18) என நாம் வாசிக்கிறபடி, அவளில் இருந்த மனமேட்டிமை அவளைக் கர்த்தரை விட்டு அதிகமதிகமாக வழிவிலகச் செய்து, அவளை நிர்ப்பந்தமான நிலைக்குள்ளாக்கிவிட்டது. ஆயினும் கர்த்தர் அவள்மேல் வைத்த இரக்கத்தினால் அவளைப் பல சிட்சைகளின் வாயிலாக மீண்டும் தம்மண்டை திரும்பச் செய்தார். தேவபிள்ளையே, நீ உன் வாழ்வில் சந்தித்துக் கொண்டிருக்கிற இன்னல்களின் உள்ளான காரணத்தை அறிவாயா? "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்" (யாக். 4 : 6). கர்த்தர்தாமே உனக்கு விரோதமாயிருக்கிறதாக நீ உணருவாயாகில், நீ பெரும் ஆபத்தை நோக்கியே விரைந்து கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்து, இன்றே உன்னைத் தாழ்த்தி அவருடைய கரத்தினுள் கடந்து வருவாயாக. உன் சுய வழிகளைத் தெரிந்துகொண்டதினிமித்தம் நீயே மாராவைப் போல் மாற்றிக்கொண்ட உன் வாழ்க்கையை மீண்டும் அவர் மதுரமானதாக மாற்றிவிடுவார்! "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். ... மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்" என்றுரைத்தவர் (எரே. 31 : 3, 4), மீண்டும் உன்னைத் தம்மண்டை இழுத்துக்கொள்ள வாஞ்சிக்கிறார். 'பூர்வ நாட்களில் நீ இருந்த நிலைமையில் நான் உன்னை ஸ்தாபித்து, உன் முந்தின சீரைப்பார்க்கிலும் உனக்கு நற்சீர் உண்டாகச்செய்வேன்' (எசே. 36 : 11) என்ற வாக்குத்தத்தத்துடன் அவர் உன்னை அழைக்கிறார். இனிமேலும் நீ தாமதித்துக்கொண்டிராமல், அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும்படி இன்றே அவர் பாதம் சரணடைவாயாக!

## அதிகாரம் 2

# நான் பின்வாங்குவதில்லை!

"*யூதா தேசத்திற்குத் திரும்பிப்போக, அவர்கள் வழிநடக்கையில், நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: ... மரித்துப் போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக ... என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள்*" (ரூத் 1 : 7 - 9).

**நற்சாட்சி:**

"மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயை செய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக" என்று நகோமி தன் மருமக்களை வாழ்த்துகிறாள் (ரூத் 1 : 8). நாகரீகமற்ற புறஜாதியாரின் பாரம்பரியங்களையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையுமுடைய குடும்பங்களிலிருந்து வந்த இந்த மோவாபியப் பெண்பிள்ளைகள் தங்கள் மாமியின்பேரில் கொண்டிருந்த அன்பையும் கரிசனையையும் பாருங்கள்! 'நீங்கள் எனக்குத் தயைசெய்ததுபோல' என்று கூறி, அவர்களுடைய மாமி அவர்களை மனதார வாழ்த்துகிறாள்! இந்நவீன யுகத்தில் தேவனுடைய அன்பையும் கரிசனையையும் நன்றாக அறிந்தி ருப்பவர்களும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களுமான

கிறிஸ்தவ மருமக்கள் சிலருக்கு இது ஒரு பாடமாக அமைகிறது. தேவபிள்ளையே! உன் மாமி உன்னை நோக்கி, 'நீ எனக்குத் தயைசெய்ததுபோல, கர்த்தர் உனக்கும் தயைசெய்வாராக' என்று கூறி, உன்னை மனதார வாழ்த்தக் கூடுமா? அல்லது 'நீ எனக்குச் செய்தது போல, கர்த்தர் உனக்குச் செய்யாதிருப்பாராக' என்று அவள் உன்னை நோக்கிச் சொல்ல வேண்டியதாகுமா? சற்று சிந்தித்துப் பார்! யூதா தேசத்திலும் ஸ்திரீகள் நகோமியினிடத்தில், "உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள்" என்று ரூத்தைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார்கள் (ரூத் 4 : 15). உன்னைப் பற்றி உன் அயலகத்தார் இவ்வாறு சாட்சி பகரக் கூடுமோ?

***"நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; ... கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுது, அவளைப் பார்த்து: உம்முடைய ஜனத் தண்டைக்கே உம்முடன்கூட வருவோம் என்றார்கள். ... ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப்போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள். அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களி டத்துக்கும் திரும்பிப்போய்விட்டாளே; நீயும் உன் சகோதரி யின் பிறகே திரும்பிப்போ என்றாள்"*** (ரூத் 1 : 8 - 10, 14, 15).

**அந்நிய சத்தங்கள்:**

தன் மருமக்கள் ஜீவனுள்ள மெய்த் தேவனண்டைக்குக் கானானை நோக்கி வரும்போது, நகோமியோ அவர்களைத் தடைசெய்து, தங்கள் அந்நிய தெய்வங்களிடத்திற்குப் போகும்படி அவர்களை வற்புறுத்துகிறாள்! ஆம்! பாவிகளைக் காட்டிலும் பின்மாற்றக்காரரே, ஆத்துமாக்களுக்கு அதிக தீமை செய்கிறார்கள்.



ரூத்தின் புத்தகத்தின் முதலாம் அதிகாரத்தில், 'திரும்பிப்போங்கள்' என்ற அர்த்தமுடைய வெவ்வேறு பதங்களை நகோமி சுமார் ஐந்து முறை உபயோகிப்பதை நாம் காண்கிறோம். கர்த்தரைப் பின் பற்றும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டிய அவளே அவர் களை அதைரியப்படுத்துகிறாள்! ஓர்பாள் அவளுடைய வார்த்தை களுக்குச் செவிசாய்த்துப் பின்திரும்பிவிட்டாள்! அதைரியப்பட்ட வர்களின் வார்த்தைகளும் செயல்களும் மற்றவர்களை அதைரியப் படுத்துபவையாகவே இருக்கும். மற்றவர்கள் நம்மை நம்முடைய நல்லுறுதியினின்று தளரப்பண்ண முயற்சிக்கும்போது நாமோ நம்மைக் கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொள்வோமாக. தாவீது மிகவும் மனமுடைந்துபோயிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், அவனோ டிருந்தவர்கள் அவனைத் தைரியப்படுத்துவதற்குப் பதிலாக அவனுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கல்லெறிய வேண்டுமென்று திட்டமிட்டார்கள். அப்போது அவன் செய்தது என்ன? அவன் "தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்" (I சாமு. 30 : 6). அருமையானவர்களே, நம்முடைய ஜீவிய பாதையில் நம்மைத் திடப்படுத்தவோ, ஊக்குவிக்கவோ யாருமில்லாத சந்தர்ப்பங்கள் நமக்கு உண்டாகக் கூடும். மற்றவர்களிடத்திலிருந்து ஆறுதலான, ஊக்குவிக்கிற வார்த்தைகளுக்குப் பதிலாக 'கல்லெறிதல்களே' நமக்குக் கிடைக்கக் கூடும். அவ்வேளைகளில் நாம் மனம் சோர்ந்துபோகாமல், நம்மை அழைத்து வழிநடத்திக்கொண்டிருக்கிற நம் தேவனுக் குள்ளே நம்மைத் திடப்படுத்திக்கொள்வோமாக.

ஓர்பாள் தன் தேவர்களிடத்திற்குத் திரும்பிப் போகத் தக்கதாக அவளில் உண்டான பின்மாற்றத்திற்கு ஒரு விதத்தில் நகோமியே உத்தரவாதியாவாள் என நாம் கூறலாம். 'ஒரு கப்பல் மூழ்கிக்கொண்டிருக்குமாயின், அதின் மாலுமிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் அதிலுள்ள கடைசிப் பயணியையும் பாதுகாக் கும்படி தங்களால் இயன்ற மிகச் சிறந்ததைச் செய்ய வேண்டும். அந்த இக்கட்டான கட்டத்தில் தன்னை மாத்திரம் தற்காத்துக்

கொள்ளும்படி கப்பலை விட்டுப் போக முற்படுகிறவன் தனக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதத்தில் உண்மையுள்ளவனல்ல' என ஒரு தேவமனிதன் கூறுகிறார். இக்கப்பலை நாம் சபைக்கு ஒப்பிடலாம். அது பரீட்சைகள், சோதனைகளினூடாகச் சென்று, மூழ்கிப்போகும் நிலையிலிருக்குமாயின், தேவ ஊழியர்கள் அதனைப் பாதுகாக்கும்படி தங்கள் ஜீவனையும் பணயம் வைக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் ஒன்று, பிறருக்கு ஆசீர்வாதமாகவோ, அல்லது அவர்களுக்குப் பிரச்சினையாகவோ இருப்போம். நாம் ஒன்று, ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்துகிறவர்களாகவோ, அல்லது அவர்களைக் கிறிஸ்துவை விட்டுப் பிரித்துவிடுகிறவர்களாகவோ இருப்போம். நாம் நம்முடைய பாவங்களை மறைத்து வைக்கிறவர்களாயிருப்போமாயின், நாம் செய்கிற ஊழியம் ஆத்துமாக்களை மீட்பதாயிராமல், அவர்களை அதைரியப்படுத்தி அழிப்பதாகவே இருக்கும். இங்கே நகோமியின் வார்த்தைகள் ஒர்பாளை அவளுடைய சொந்தத் தேவர்களண்டைக்கே அனுப்பி வைத்துவிட்டன!

ஒர்பாளைக் குறித்துக் கூறுவதற்குப் பல நல்ல விசேஷங்கள் உள்ளன: தனக்கு விவாகமானதுமுதல் அவள் தன் மாமிக்குத் தயை செய்துவந்தாள்; தன் மாமியோடு கானானுக்குச் செல்ல வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடனேயே அவள் தன் பயணத்தைத் துவக்கினாள்; அப்படியே அவள் சிறிது தூரம் நடந்துசென்றாள்; அவள் தான் அறிந்த சத்தியத்திற்கு உண்மையாயிருக்க விரும்பினாள்; ஆனால் அவளுடைய மாமியின் வார்த்தைகள் பின்நோக்கிச் செல்லும்படி அவளைச் சோதனைக்குள்ளாக்கியபோது, உறுதியாய் நிற்க அவளுக்குப் பெலனில்லாமற்போயிற்று!

"உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்" என்று ஒர்பாள், ரூத் ஆகிய இருவருக்குமே சொல்லப்பட்டது. '***நிச்சயமாகவே*** உம்முடன்கூட வருவோம்' (ரூத் 1 : 10 - Eng.) என்று கூறி



இருவரும் சத்தமிட்டு அழுதபோதிலும், 'தாய்வீடு', 'உங்களுக்கு வாய்க்கும் புருஷன்' ஆகிய பதங்கள் ஒர்பாளைக் கவர்ந்து கொண்டன போலும்! அவள் மனம் மாறி, தன் மாமியை முத்தமிட்டுத் திரும்பிப் போனாள். இங்கு, எல்லாவற்றையும் விட்டு அண்ணகர்களாகக் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி அவரைப் பின்பற்றும் தேவ ஊழியர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுண்டு. அவர்களது பரம கானானை நோக்கிய பயணத்தில் இவ்வித அந்நிய சத்தங்கள் அவர்களைச் சந்திக்கக் கூடும். சீயோனையே தங்கள் குறிக்கோளாகக்கொண்டு யாத்திரை செய்யும் அவர்களுக்குப் பிசாசானவன் வழியிலே கண்ணிகளை விரிப்பதுண்டு. ஒரு தேவ ஊழியன் அண்ணகனாக ஜீவிக்கும்படி தன்னை அர்ப்பணித்த பின், விவாக வாழ்க்கையைப் பற்றியோ, தன் வீட்டைப் பற்றியோ சிந்திப்பது, அவன் 'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்ப்பதற்குச்' சமமாகும். அப்படிப்பட்டவன் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்று கர்த்தராகிய இயேசுதாமே உரைத்திருக்கிறார் (லூக்கா 9 : 62). தேவபிள்ளையே, இத்தகைய மாயையான மாம்சீக உறவுகள் தேவன் உனக்கு அளித்திருக்கும் மகிமையான ஊழியத்தினின்று உன் மனதைத் திசைதிருப்பாதபடிக்கு நீ எச்சரிக்கையாயிருப்பாயாக. ஒர்பாள், தான் முதலில் செய்திருந்த தீர்மானத்தில் உறுதியாயிராததினால், அதற்குப் பின் அவளைப் பற்றி வேதாகமத்தில் ஒரு விவரமும் இல்லை. தேவன் அவளுக்காகச் செய்யும்படி திட்டமிட்டிருந்தவைகளை அவரால் நிறைவேற்றி முடிக்கக் கூடாமற்போயிற்று என நாம் கூறலாம். நீ ஆதியில் செய்த பிரதிஷ்டையைக் காத்துக்கொள்ளக் கவனமாயிராமற்போனால் இதுவே உன் முடிவாகவும் இருக்கும்; தேவ நோக்கம் உன்னில் பூரணமாய் நிறைவேறாது; தேவன் உனக்காகத் திட்டமிட்டிருக்கும் மேன்மையானவைகளை நீயே கெடுத்துக்கொள்ளுவாய். தேவன் உனக்காக மேன்மையான திட்டம் வகுத்திருக்கிறார். அதைப் பேணிக்கொள்வதோ, கெடுத்துவிடுவதோ உன்னையே சார்ந்ததாகும். ஒர்பாள் முழு தூரமும் நகோமியைப் பின்பற்றியிருந்

திருந்தால், ரூத் பெற்றுக்கொண்டதைப் போல சிறப்பான ஆசீர் வாதங்களையும் உன்னத ஸ்தானத்தையும் அவளும் பெற்றிருந் திருக்கக் கூடும். ஆனால் அந்தோ பரிதாபம்! அவள் தனக்கு வரவிருந்த அனைத்து சிலாக்கியங்களையும் கெடுத்துக்கொண் டாள். "என் ஓய்வுநாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவை களைத் தெரிந்துகொண்டு, என் உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும்பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்" (ஏசாயா 56 : 4, 5) என்று நாம் வாசிக்கிறோம். இது, கர்த்தர் தம் உத்தம ஊழியர்களுக்கு அருளிச் செய்திருக்கும் வாக்குத்தத்தமாகும். தேவ ஊழியனே, தேவன் உனக்கென்று வைத்திருக்கிற மேன்மையையும், சிறப்புரிமை களையும், ஒளிமயமான எதிர்காலத்தையும் பேணிக்கொள்ளும்படி நீ ஆதியில் செய்த தீர்மானத்தில் மனவுறுதியாயிருந்து, கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றுவாயாக.

***"அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேச வேண்டாம்"*** (ரூத் 1 : 16).

**மனந்தளராமை:**

ஓர்பாளும் ரூத்தும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே மத சம்பந்தமான பின்னணியினின்று வந்தவர்கள்; மண வாழ்வில் ஒரே வீட்டினுள் புகுந்தவர்கள்; இருவரும் தங்கள் மாமனையும் புருஷர்களையும் இழந்துபோயினர்; இருவருக்கும் பிள்ளை இல்லை; இருவரும் தங்கள் மாமியை நேசித்தனர்; இருவரும் தங்கள் மாமியோடு கானானை நோக்கிப் பயணம் புறப்பட்டனர்; இருவரும் திரும்பிச் செல்லும்படி தங்கள் மாமியினால்



வற்புறுத்தப்பட்டனர் - ஆயினும் ரூத் தன்னுடைய பரீட்சைகளில் உறுதியாய் நின்றாள்; ஓர்பாளோ தன் மனவுறுதியை இழந்து விட்டாள்! தேவபிள்ளையே, நீ யாரைச் சேவிப்பாய் என்பதை இன்று தெரிந்துகொள்! (யோசுவா 24 : 15). உன் தீர்மானத்தைப் பொறுத்தே உன்னுடைய எதிர்காலம் அமைந்திருக்கும். ஓர்பாள், நகோமி என்பவர்களின் தவறான மாதிரிகளின் மத்தியிலும் ரூத், தான் அறிந்திருந்த சத்தியத்திற்காக உறுதியாக நின்றாள். உன்னைச் சூழ நல்ல முன்மாதிரியாக ஒருவரும் இல்லாதிருக்கும்போதும், உன்னை ஊக்குவிக்க யாருமில்லாத நிலையிலும் நீ சத்தியத் திற்காக உறுதியாக நிற்பாயாகில், பரலோகத்தின் பார்வையில் அது விலைமதிப்பு மிக்கதாயிருக்கும்.

ரூத் தனக்கு முன்மாதிரியாக யாரும் இல்லாதிருந்தும் தேவனை உத்தமமாய்ப் பின்பற்றியதே, இங்கு நாம் அவளில் காண்கிற ஒரு விசேஷித்த பண்பாகும். வேதாகமத்தில், இவ்வித மான விகற்பமான சூழ்நிலைகளில் தனிமையாகத் தேவனைப் பின்பற்றிய பலரும் அவரால் மிக மேன்மையாக உயர்த்தப்பட்டி ருப்பதை நாம் காணலாம். தங்கள் நாட்களில் தாங்கள் பின்பற்றத் தகுந்த முன்மாதிரியாக வேறு யாரும் தேவனோடு சஞ்சரிக்கிற வர்களாய் இராதிருந்தும், ஏனோக்கு, நோவா போன்றோர் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்; அவர்கள் தேவனால் கனம்பண்ணப்பட்டனர். தேவன் ஆபிரகாமுக்குத் தன் தேசத்தை யும் இனத்தையும் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, தாம் காண்பிக்கும் தேசத்திற்குப் போகும்படி கட்டளையிட்டபோது, அவன் தான் போகுமிடம் இன்னதென்று அறியாதிருந்தும், அதற்கு முன்னதாக வேறு எவரும் இவ்விதம் தங்கள் வீட்டை விட்டுப் பரதேசியாய்ப் பிரயாணம் புறப்படாதிருந்தும், யாதொரு கேள்வியுமின்றி உடனடியாகப் புறப்பட்டான் (ஆதி. 12 : 1 - 4 ; எபி. 11 : 8). அதன் விளைவு என்னவாயிருக்கும், தன் வருங்காலம் என்னவாகும் என்றெல்லாம் அவன் சற்றேனும் சிந்திக்கவில்லை. ஆகவே தேவன் அவனை விசுவாசமுள்ளவர்களின் தகப்பனாகக்

கனம்பண்ணி, சகல விதத்திலும் அவனை மேன்மைப்படுத்தினார். மேலும், தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற பலரும் தாங்கள் வைக்கப்பட்டிருந்த விகற்பமான சூழ்நிலையில் மற்ற யூதர் யாவரும் தேவனை மறுதலித்துவிட்டபோதிலும் அவருக்காகத் தனிமையாக நின்றனர்; தாங்கள் பின்பற்றுவதற்கான ஒரு முன்மாதிரியும் அவர்கள் முன் இல்லாதிருந்தும், அவர்களே பிறருக்கு முன்மாதிரிகளாயினர். அவர்களைத் தேவன் சிறப்பான விதத்தில் கனப்படுத்தினார். தேவபிள்ளையே, நீ கர்த்தருக்காகத் தனிமையாய் நிற்க வேண்டிய சூழ்நிலை ஒரு நாள் உன்னைச் சந்திக்குமாயின், நீ உன் ஆண்டவருக்கு உண்மையுள்ளவனாய் நிற்பாயா?

நகோமி, ஒர்பாள், ரூத் ஆகிய மூவரும் மூன்று விதமான சுபாவங்களுக்கு அடையாளமாயிருக்கின்றனர். நாம் சோதனைகள் அல்லது பிரச்சினைகளைச் சந்திக்கும்போது, இம்மூவரில் யாரேனும் ஒருவரைப் போல செயல்படுகிறவர்களாயிருப்போம். பிரச்சினையின் முன்னிலையில் - நகோமி தன் குற்றத்தை மறைக்கப் பிரயாசப்படுகிறவளாயும், ஒர்பாள் தன் உறுதியினின்று விலகிவிடுகிறவளாயும், ரூத்தோ உறுதியாய் நிற்கிறவளாயும் தங்களை வெளிப்படுத்தினர். நாமும் ரூத்தைப் போல சத்தியத் திற்காக உறுதியாக நிற்போமாக. காற்றும் புயலும் மோதியடிக்கை யில் சில மரங்கள் தங்கள் வேர்களைப் பூமிக்குள் ஆழமாகச் செலுத்தி, உறுதியாய் நிற்கின்றன; ஆனால் வேறு சில மரங்களோ காற்றுக்கேற்ப அசைந்தாடி, பெருஞ்சத்தத்துடன் விழுந்துவிடு கின்றன. தேவபிள்ளையே, உனக்கு நேரிடுகிற பரீட்சைகளில் நீ எவ்வாறிருக்கிறாய்?

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இங்கிலாந்து மகத்தான வெற்றி பெற்றது. அதன் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill), அவ்வெற்றிக்குப் பின் ஆக்ஸ்ஃபர்டு பல்கலைக்கழக மாணவர்களின் பட்டமளிப்பு விழாவைத் தலைமைதாங்கி நடத்தும்படி அழைக்கப்பட்டார். இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரான அவர்தம் உரையைக் கேட்கும்படி ஆவலுடன் குழுமியிருந்த திரள் கூட்டத்தை நோக்கி அவர், 'மனம் தளராதீர்!' (Never give up!) என்னும் வார்த்தைகளை மாத்திரம் இரு முறை இடிமுழக்கம்போல் முழங்கிவிட்டு, தன் இருக்கையில் அமர்ந்துவிட்டார்! இரு வார்த்தைகளில் அடங்கிய ஆழ்ந்த கருத்து மிக்க இச்சொற்பொழிவே, அப்பல்கலைக் கழகத்தில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகள் அனைத்திலும் மிகுந்த பலனுள்ளதாயிருந்தது. நண்பனே, தேவன் உனக்களித்திருக்கும் மேன்மையான அழைப்பு, சத்தியம், நல்மனச்சாட்சி, பிரதிஷ்டை, தியாகம், நம்பிக்கை இவற்றை எக்காரணத்தைக் கொண்டும் நெகிழவிடாதே. மிருகங்களில் பெலம் வாய்ந்ததும் எதற்கும் பின்னிடையாததுமான சிங்கத்தைப் போல நீ தைரியமாயிரு (நீதி. 30 : 30). அது தன்னைப் பார்க்கிலும் உருவத்தில் மிகவும் பெரியதாயிருக்கும் யானையின் முன்பாகவும் தாழ்ந்துபோகாது; மாறாக, அது அதன் மேல் பாய்ந்து அதைக் கீழ்ப்படுத்திப் பீறிப்போடும். உன்னைப் பின்னோக்கி இழுக்கும்படி வரும் எந்த அதைரியப்படுத்தும் வார்த்தைக்கும், உன்னை வசீகரிக்கும்படி வரும் எந்தப் பிசாசின் தந்திரத்திற்கும் விரோதமாக நீ எதிர்த்துப் போராடுவாயாக. யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேரு மானவர் உனக்காக வெற்றிசிறந்திருக்கிறார். ஆகவே நீ திடன் கொண்டு போராடுவாயாக. நீ சோதனைகளைக் கண்டு பின்வாங்கு கிறவனாயிராமல், தேவனின் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத் தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேருவாயாக. உனக்கு உதவிசெய் யும்படி அவர் காத்துநிற்கிறார்.



"நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேச வேண்டாம்" என்ற ரூத்தின் ஆணித்தரமான வார்த்தைகள் நகோமியை அதற்குப் பின் அது குறித்துப் பேசவொட்டாமல் அவளது வாயை அடைத்துவிட்டன. அதற்குப் பின்னர் அவள் திரும்பிச் செல்லும்படி ரூத்தை வற்புறுத்தவில்லை.

ரூத்தைப் போல தங்கள் தீர்மானத்தில் மனவுறுதியாயிருந்து, அதினிமித்தம் சிறப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட சிலரை வேதாகமத்தில் நாம் காண்கிறோம். எலியா தான் எடுத்துக் கொள்ளப்படும் வேளை வந்தபோது எலிசாவைத் தன்னோடுகூட வரவொட்டாமல் தடைசெய்ய முயற்சித்தான். அவ்வாறு அவன் முயற்சித்த ஒவ்வொரு முறையும் எலிசாவோ, “நான் உம்மை விடுகிறதில்லை” என்று உறுதியாகக் கூறி, அவனைப் பின்தொடர் வதை நாம் காண்கிறோம் (II இராஜா. 2 : 2, 4, 6). கடைசி வரையில் அவன் தன் தீர்மானத்தில் உறுதியுள்ளவனாயிருந்தான். அது அவனுக்கு மிகுந்த பலனைக் கொடுத்தது. எலியாவிடத்திலிருந்த ஆவியின் வரம் அவனுக்கு இரட்டிப்பாகக் கிடைத்ததுமல்லாமல், அவன் மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் அது வழிவகுத்தது (வச. 9 – 14). எலியாவைப் பார்க்கிலும் அவன் தன் ஊழிய நாட்களில் இரட்டிப்பான அற்புதங்களைச் செய்தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் சூனேமியாளின் பிள்ளை மரித்துப் போனபோது அவள் மிகுந்த மனதுக்கத்துடன் தேவனுடைய மனுஷனாகிய எலிசாவினிடத்தில் சென்று, அவனுடைய காலைப் பிடித்துக்கொண்டு, அவனைத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்து, “நான் உம்மை விடுகிறதில்லை” (II இராஜா. 4 : 30) என்று கதறினாள். அவளுடைய விடாப்பிடியான மன்றாட்டினிமித்தம் அன்றே அவளுடைய மகன் உயிர்ப்பிக்கப்பட்டான். நம்முடைய உறுதியான தீர்மானமும், விடாப்பிடியான ஊக்கமான ஜெபமும் தேவனிடத்திலிருந்து திட்டவட்டமான பதிலைக் கொண்டுவரும் என்பதை இதினின்று நாம் அறிந்துகொள்கிறோம்.

*‘கர்த்தாவே, நான் என் நினைவு, விருப்பம், ஜீவியம் இவற்றில் உம்மைவிட்டு இமைப்பொழுதேனும் விலகிவிடாமல் எப்போதும் உம்மண்டை தங்கியிருக்க வாஞ்சிக்கிறேன்; உமக்கு மிகவும் சமீபமாக, உம்மோடு நெருங்கி ஜீவிக்க எனக்குத் தயை செய்தருளும். நான் எளிதில் உம்மை விட்டு விலகிவிடக்கூடிய*



*நிலையற்ற சுபாவமுள்ளவனாயிருக்கிறேன். ஆகவே நான் உம்மை விட்டு அலைந்து திரியாதபடிக்கு நீர் என்னை உம்முடைய அன்பின் கயிறுகளால் உம்மோடு இணைத்துக் கட்டிவிடும். நான் உம்மோடு நெருங்கி ஜீவிக்கத்தக்கதாக என்னை உம்முடைய சிறைக்கைதியாக்கிவிடும். நான் ஒரு இமைப்பொழுதாயினும் உம்மை மறந்து இப்பூமியில் வாழ நீர் அனுமதியாதேயும். உம்மைப் பிரிந்து வாழ்வதைப் பார்க்கிலும் மரித்துவிடுவதே எனக்கு நலமாயிருக்கும்!’* என்று நம்முடைய ஒவ்வொரு அணுவும் கர்த்தரை நோக்கிக் கதறுவதாக! தேவ பிள்ளையே, இந்த ஆவலும் ஏக்கமும் தவிப்பும் உன் உள்ளத்தில் இருக்குமாயின், அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இதுவே உன் உள்ளத்தின் மிகப் பெரிய வாஞ்சையும் நாட்டமுமாயிருக்க வேண்டும். தேவன் தாமே உன் எல்லா நினைவுகள், விருப்பங்கள், நோக்கங்கள் ஆகியவற்றின் மையமாயிருப்பாராக!

***“ நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடேகூட வர மன உறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை”*** (ரூத் 1 : 16 – 18).

புதிய ஏற்பாட்டின் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியருக்கு ரூத் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள். புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியரில் காணப்பட வேண்டிய பிரதிஷ்டையின் ஏழு அம்சங்களை ரூத்தின் வாழ்க்கையில் நாம் நிழலாட்டமாகக் காண்கிறோம். மறுபக்கத்தில், தங்கள் புருஷர் உயிரோ

டிருக்கும்போதே தங்கள் மாமிகளின்மேல் அன்பும் கரிசனையும் அற்றவர்களாயிருக்கும் மருமக்களுக்கும் ரூத் செய்த இத் தீர்மானங்கள் முன்மாதிரியாய் இருப்பதாக.

ரூத் எப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் இத்தீர்மானங் களைச் செய்தாள்? அவளுக்கு மோவாப் தேசத்தில் ஒரு தாய் வீடும், பெற்றோரும் இருந்தனர் (ரூத் 1 : 8 ; 2 : 11). அவளுடைய புருஷன் மரித்து, மாமியும் தன் சொந்தத் தேசத்துக்குத் திரும்பும் இக்கட்டத்தில் அவளுடைய பெற்றோர் அவளைத் தங்களிடத்தில் திரும்பவும் ஏற்றுக்கொள்ளவும், அவளை ஆதரிக்கவும், அவ ளுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்படி மற்றொரு புருஷனை அவளுக்காகத் தேடவும் மிகவும் ஆயத்தமாயிருந்திருப்பார்கள். ஆனால் கானான் தேசத்திலோ எந்த விதத்திலும் ஒளிமயமான ஓர் எதிர்காலம் அவளுக்கு வாக்குறுதிபண்ணப்பட்டிருக்கவில்லை. அவளுடைய மாமி அவள் தன்னோடு வர வேண்டாம் என்றே மீண்டும் மீண்டும் (சுமார் ஐந்து முறை) வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தாள் (ரூத் 1 : 8, 9, 11, 12, 15). அப்படிப்பட்ட ஒரு மாமியிடத்தினின்று அவள் என்ன நன்மையைத்தான் எதிர்பார்க்கக் கூடும்? அவளோடுகூட வழிநடந்துவந்த ஒர்பாளும், இதோ, திரும்பிப் போய்விட்டாள்! இவையெல்லாவற்றின் மத்தியிலும், அவள் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடிச் செல்லும்படி தீர்மானித்தாள்! இதினின்று அவள் நகோமியை அல்ல, ***நகோமியின் தேவனையே*** பின்பற்றிக்கொண்டிருந்தாள் என்பது தெளிவாகிறது.

## ஆவியில் எளிமை:

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பர லோகராஜ்யம் அவர்களுடையது" (மத். 5 : 3). இது நமதாண்ட வராகிய இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் தம் வாயைத் திறந்து முதலாவதாகச் சொன்ன வாக்கியமாகும் (வச. 2). 'ஆவியில் எளிமை' என்பது மனத்தாழ்மையைக் குறிக்கிறது. வேறு வார்த்தை



களில் கூறின், அது ஒருவன் தன்னைத்தான் வெறுமையாக்குகிற அனுபவமாகும். கர்த்தராகிய இயேசு தம்முடைய மேன்மைகளைத் துறந்து, தம்மைத்தாமே வெறுமையாக்கினார் (பிலி. 2 : 6, 7). இது அவர் தம்மைத்தாமே தாழ்த்தியதின் ஓர் அம்சமாகும். தம்முடைய மனத்தாழ்மையினிமித்தம் அவர் பரலோகத்தின் மிக உன்னத மான இடத்திற்குப் பிதாவானவரால் உயர்த்தப்பட்டார். 'ஆவியில் எளிமை' என்பது ஆங்கிலத்தில் 'ஆவியில் தரித்திரராயிருத்தல்' (poor in spirit) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேவ ஊழியர்கள் எழுத்தின்படி தங்களுக்குண்டான யாவற்றையும் விட்டு விட்டு, புறம்பாகத் தங்களை வெறுமையாக்கக் கூடும். ஆயினும் தாங்கள் விட்டுவிட்டவைகள் மேல் அவர்களுடைய மனதில் சற்றேனும் பற்றுதலும் ஆசையும் இருக்குமாயின், அவர்கள் தங்கள் ***ஆவியில்*** எளிமையுள்ளவர்கள் அல்லர். நமதாண்டவர் தங்களுக்குண்டான எல்லாவற்றையும் வெறுத்து விட்டுவிட்டவர்களாய்த் தம்மைப் பின்பற்றிய தம் சீஷர்களை நோக்கி, "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது" என்றார் (லூக்கா 6 : 20). ஆகவே மெய்யான பிரதிஷ்டையின் ஜீவியம் ஒரு தேவ ஊழியனை 'ஆவியில் எளிமை' உள்ளவனாக்குகிறது.

ரூத் தன் ஆவியில் எளிமையுள்ளவளாய் இருந்தபடியி னாலேயே தன் தகப்பனையும், தன் தாயையும், தன் ஜநம தேசத்தையும், தன் ஜனங்களையும் விட்டு, முன்னே தான் அறிந் திராத ஜனங்களிடத்திற்குச் செல்வது அவளுக்கு எளிதானதாய் இருந்தது (ரூத் 2 : 11). மெய்யான தேவனைப் பற்றி தனக்கிருந்த வெளிப்படுத்தலினிமித்தமாக அவள் ஏற்கனவே தன் ஆவியில் தன்னை வெறுமையாக்கியிருந்தாள். ஆகையினாலேயே தன் மாமியினால் அவளுக்கு எவ்வளவோ தடைகள் உண்டான போதிலும் அவளால் தன் தீர்மானத்தில் உறுதியாயிருக்க முடிந்தது. நாமும் கர்த்தரை உண்மையாய்ப் பின்பற்ற விரும்பினால், நம் மனதில் அவரைத் தவிர வேறொன்றிற்கும் இடமளிக்காமல், நம்மை நாமே வெறுமையாக்கிக்கொள்வோமாக.

## பிரதிஷ்டையின் ஏழு அம்சங்கள்:

கர்த்தரைப் பின்பற்றும்படி ரூத் செய்த தீர்மானங்களும் பிரதிஷ்டைகளும் தேவ ஊழியர்கள் தங்களை வெறுமையாக்கிக் கொண்டு, ஆவியில் எளிமையுள்ளவர்களாய், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, ஒரு மேன்மையான ஆவிக் குரிய ஜீவியம் செய்யும்படி அவர்களை ஊக்குவித்து, அனல் மூட்டி எழுப்பிவிடுகின்றன. அவளுடைய தீர்மானங்களைக் குறித்து நாம் கீழே காண்போம்:

### 1. "*நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்*":

"*நானும் வருவேன்*" என்னும் வார்த்தைகள், எதினாலும் மாற்ற முடியாத உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்துபவை யாகும். 'நான் ஒருவேளை வருவேன்' என்றோ, 'நான் வர முயற்சிக்கிறேன்' என்றோ, 'நான் வரலாம் என யோசிக்கிறேன்' என்றோ ரூத் கூறவில்லை; "நானும் வருவேன்" என்பதே அவளுடைய திட்டவட்டமான மறுமொழியாயிருந்தது. அவள் அதற்கு முன் ஒருபோதும் கானான் தேசத்திற்குச் சென்றதில்லை. தான் அங்கே என்னதான் எதிர்பார்க்கக் கூடும் என்றோ, அத்தேசம் எப்படிப்பட்டது என்றோ, மோவாபியப் பெண்ணாகிய தன்னை யூதர் ஏற்றுக்கொள்வார்களோ, மாட்டார்களோ என்றோ அவள் அறிந்திருக்கவில்லை. அப்படியிருக்க, அவள் ஏன் இவ்வாறு தன்னைத்தானே இன்னல்களுக்குள்ளாக்கிக்கொள்ளத் துணிய வேண்டும்? மோவாப் தேசத்தில் அவளை ஆதரிக்க அவளுக்குப் பெற்றோர், உற்றார், உறவினர் யாவரும் இருந்தார்களே! (ரூத் 1 : 8, 15 ; 2 : 11). அப்படியிருந்தும், அவள் தான் அறிந்திராத தேசமாகிய கானானுக்குச் செல்லத் தீர்மானித்தாளென்றால், அதன் காரணம், ஜீவனுள்ள தேவன்பேரில் அவளுக்கிருந்த பற்றும் அன்புமேயன்றி வேறொன்றுமல்ல. கானானுக்குச் சென்ற பின்னரும் அவள் ஒருபோதும் மீண்டும் மோவாப் தேசத்திற்குத் திரும்பி வந்ததாக நாம் வாசிப்பதில்லை.



"*நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்*" என்பது, 'ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்று கிறவர்களான' புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர்களின் பிரதிஷ்டையையே வெளிப்படுத்துகிறது (வெளி. 14 : 4). கர்த்தர் எங்கெங்கே நடத்திச்சென்றாலும் அங்கெல்லாம் அவரைப் பின் பற்ற அவர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். ரூத் சொன்னதைப் போலவே மற்றொரு பெண்பிள்ளையும் கூறியிருப்பதை நாம் வேதாகமத்தில் காணலாம். அவள் பெத்துவேலின் குமாரத்தி யாகிய ரெபெக்காள் ஆவாள். அவள் ஈசாக்குக்கு நியமிக்கப்பட்ட பின்பு, அவளுடைய பெற்றோர் ஆபிரகாமின் வீட்டு விசாரணைக் காரனாகிய எலியேசரின் முன்னிலையில் அவளை நோக்கி, "நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா" என்று கேட்டார்கள். உடனடியாக அவள், 'நான் போகிறேன்' என்றாள் (ஆதி. 24 : 58). அவள் சொன்னது சொன்னதாகவே இருந்தது. அவளுடைய மறுமொழியில் யாதொரு மாறுதலும் சந்தேகமும் தடுமாற்றமும் இருக்கவில்லை. அதற்கு முன்னர் அவளுடைய தாயும் சகோதரனும் அவளுடைய பிரயாணத்தைச் சற்று தாமதப்படுத்த விரும் பினர். ஆனால் பெண்ணின் வாய்ப்பிறப்போ, 'நான் போகிறேன்' என்பதாயிருந்தது; உடனடியாகப் போகும்படியாகவே அவள் தீர்மானித்திருந்தாள்! அவள் தன் மணவாளனைப் பற்றியும், அவனுடைய தேசத்தைப் பற்றியும் சற்று முன்பு தான் கேள்விப் பட்டதேயன்றி, ஈசாக்கை அது வரை கண்டதுமில்லை; அத்தேசத் திற்கு அதற்கு முன் போனதுமில்லை. ஆனால் தேவன் அவ ளுடைய உள்ளத்தில் ஒரு வெளிப்படுத்தலை அளித்திருந்தார். அவ்வெளிப்படுத்தலே உடனடியாகப் போகும்படி அவளைத் தீர்மானிக்கச் செய்தது. இல்லையேல், அந்நியனான ஒரு வேலைக்காரன் சொல்வதை நம்பி, ஓர் இளம் கன்னிப்பெண் எவ்வாறு அவனோடுகூட செல்ல முடியும்? அவள் பல நாட்கள் பிரயாணம் செய்து சென்றடையக்கூடிய ஒரு தூர தேசத்திற் கல்லவா போகிறாள்! அதற்குப் பின் அவள் திரும்ப வரக் கூடாமலும்போகக் கூடுமே! ஆம்! அவளில் இருந்த வெளிப்

படுத்தலே அங்கு செல்லும்படியான துணிவை அவளுக்குக் கொடுத்தது. பரத்திலிருந்து அருளப்படும் மெய்யான வெளிப் படுத்தல் இன்றி நாம் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்ற முடியாது. ஈசாக்கு கர்த்தராகிய இயேசுவுக்கும், ரெபெக்காள் புதிய ஏற்பாட்டுச் சபைக்கும், குறிப்பாக ஆவியானவருடைய சத்தத்திற் கிணங்கி, கர்த்தரைப் பின்பற்றும்படி தன் வீட்டையும் தேசத்தையும் விட்டுப் புறப்பட்டுச் செல்லும் புதிய ஏற்பாட்டின் தேவ ஊழியன் ஒருவனுக்கும், எலியேசர் பரிசுத்த ஆவியானவருக்கும் நிழலாட்ட மாயிருக்கின்றனர். தேவஜனங்களும், குறிப்பாக புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர்களும் ரெபெக்காளையும் ரூத்தையும் போல உறுதியான தீர்மானத்துடன் கர்த்தரைப் பின்பற்ற வேண்டும். நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறும் வரை, அல்லது அவரது பூரணத்தை அடைந்துகொள்ளும் வரை பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும்படி நம்மை மனப்பூர்வமாய் ஒப்படைப்போமாக. மேலும், ரெபெக்காளையும் ரூத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, மிகுந்த ஐசுவரியமுள்ளவனான ஒரு மணவாளன் தனக்காகக் காத்திருக்கிறான் என்பதை ரெபெக்காள் அறிந்திருந்தாள்; ஆனால் விதவையான ரூத்துக்கோ தான் பின்பற்றிக்கொண்டிருந்த ஏழை யான மாமியிடத்திலிருந்து எதிர்பார்ப்பதற்கு ஒரு நன்மையும் இருக்கவில்லை! ஆயினும் அவள் தன் மாமியைப் பின்பற்ற மனவுறுதியாயிருந்தாள். நாமும் எந்த ஆதாயத்தையும் எதிர் பார்த்து அல்ல, அன்பினால் ஏவப்பட்டு, விசுவாசத்துடன் கர்த்தரைப் பின்பற்றுவோமாக.

'உம்மோடுகூட நானும் வருவேன்' என்பதே தேவஜனங் களாகிய நாம் செய்ய வேண்டிய பிரதிஷ்டையின் முதல் அம்ச மாகும். கர்த்தரோடுகூட உள்ள நம் யாத்திரையில் நாம் தொடர்ந்து முன்னேறிச் சென்றுகொண்டேயிருக்க வேண்டும்; இடையில் நாம் சற்றும் தரித்து நின்றுவிடலாகாது. கிறிஸ்தவ ஜீவியம் என்பது, பறந்துகொண்டிருக்கும் ஒரு ஆகாய விமானம் போன்றது என ஒரு தேவமனிதன் கூறுகிறார். அதின் இயந்திரம் இயங்காமல், அது இடையில் நின்றுவிடுமாயின், கீழே விழுந்து சேதமடையும். அவ்வாறே, நாம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் இடையில் சற்றேனும் தரித்துநிற்க முற்பட்டால், விழுந்துவிடுவோம். ஆகவே நாம் அடைந்தாயிற்று, முற்றும் தேறினவர்களானோம் என்றெண் ணாமல் நம் இலக்கை நோக்கி ஆசையாய்த் தொடர்வோமாக; பூரணராகும்படி கடந்துபோவோமாக. பரிசுத்த ஜீவியம், தேவ வைராக்கியம், ஜெப ஜீவியம், தாழ்மை, தேவ அன்பு போன்ற வற்றில் நாம் முன்னேறிச் சென்றுகொண்டேயிருப்போமாக. வெற்றியுடன் நம் இலக்கைச் சென்றடையும் வரை முடிவுபரி யந்தம் நாம் முன்செல்வோமாக. தேவ ஊழியர்களுக்கு 'நான் இத்தனை வருடங்களாகத் தேவனுக்கு ஊழியம் செய்துவிட்டேன்; இனி நான் இளைப்பாறலாம்' என்ற எண்ணம் ஒருபோதும் வரலாகாது. தேவபிள்ளைகளாகிய நம்முடைய ஆவியில் முன்னேறிச் செல்லும்படியான ஓர் உந்துதல் எப்போதும் இருக்க வேண்டும். இல்லையேல் நாம் தோல்வியைச் சந்திக்க வேண்டிய தாகும்.



நாட்கள் செல்லச் செல்ல கர்த்தருக்காகக் கிரியை செய்வ தற்கான வைராக்கியமும், அவருக்காகப் பாடுபடுவதற்கான அன்பும் நம்மில் பெருகிக்கொண்டேயிருக்க வேண்டுமேயன்றி, அவை குன்றிப்போகலாகாது. "மாம்சமோ பலவீனமுள்ளது" என்பது உண்மையே. ஆயினும் நம் ஆவி எப்போதும் முன் னோக்கிச் செல்ல உற்சாகமுள்ளதாயிருக்க வேண்டும். சொகுசான ஒரு வாழ்க்கையை நாம் தெரிந்துகொள்வோமாயின், அது நமக்கு வரவிருக்கும் சகல நன்மைகளையும் கெடுத்துவிடக்கூடிய ஒரு சத்துருவாய் இருக்கும். நம் ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் அது கெடுத்துவிடும். நகோமி ரூத்தை நோக்கி, "என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் (rest - ஓய்வு) தேடாதிருப்பேனோ?" என்றாள். நமக்கு ஓய்வைத் தேட வேண்டியவர்கள் நாம் அல்ல; பரிசுத்த ஆவியானவரே நமக்கு ஓய்வைத் தேடித் தருகிறவர்

ஆவார். ஓய்வும் இளைப்பாறுதலும் ஒருவனுடைய நிழலைப் போன்றவை. ஒருவன் தன்னுடைய நிழல் தனக்கு முன்புறம் இருக்க, அதைப் பின் தொடர்ந்து ஓடினால், ஒருபோதும் அவன் அதனை வந்தெட்டக்கூடாதபடிக்கு அது அவனை விட்டு ஓடிக்கொண்டேயிருக்கும். ஆனால் தன் நிழல் தனக்குப் பின்புறம் இருக்க, அவன் அதை விட்டு ஓட முயன்றாலும் அது அவனைப் பின்தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். அவ்வாறே நாம் ஓய்வை நாடி ஓடினால் அது நம்மை விட்டு ஓடிப்போகும்; நாம் அதை விட்டு ஓடினால் அது நம்மைப் பின்தொடரும்.

புதிய ஏற்பாட்டின் தேவ ஊழியர்கள் ரூத்தைப் போல, "நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்" என்று கூறக்கூடியவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் தாங்கள் தங்கியிருப்பதற்கோ, ஊழியம் செய்வதற்கோ ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தங்கள் மனதில் விசேஷமாகக் கருதிவைத்திருக்கக் கூடாது. அவர்கள் குறிப்பிட்ட எந்தவொரு இடத்திற்கும் தேசத்திற்கும் உரியவர்களல்லர். ஒரு மெய்யான தேவ ஊழியனைப் பொறுத்த வரையில், அவன் ஊழியம் செய்ய வேண்டிய இடத்தைத் தெரிந்தெடுப்பது கர்த்தருடைய பகுதியாகும். "நீங்கள் புறப்பட்டுப் ***போய்,*** சகல ஜாதிகளையும் சீஷராக்கி, **...** அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (மத். 28 : 19, 20), "நீங்கள் உலகமெங்கும் ***போய், ...*** சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16 : 15) என்பதே கர்த்தராகிய இயேசு தாம் பரமேறிச் செல்லுமுன் தம் சீஷர்களுக்குக் கொடுத்த கடைசி கட்டளையாகும். இக்கடைசி கட்டளையே மிகப் பெரிதான கட்டளையுமாகும். இவ்விரு வேதவசனங்களிலும் ஆங்கிலத்தில் 'go' என்ற பதமே முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. சுவிசேஷம் என்பதற்கான ஆங்கில பதமாகிய 'gospel' என்பதின் முதல் இரு எழுத்துக்களுங்கூட 'go' என்பதே. நாம் நம்முடைய ஊழியத்திலும் ஜீவியத்திலும் முன் சென்றுகொண்டேயிருக்க வேண்டுமென்பதையே இவ்வேதபகுதிகள் நமக்கு உணர்த்துகின்றன.



## 2. *"நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்":*

"நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்" என்பது தேவசித்தத்தில் நிலைத்திருப்பதை அல்லது தேவனுடைய சமுகத்தில் ஜீவிப்பதைக் குறிக்கிறது. தேவ சமுகத்திலேயே ஜீவித்தல் என்பது ஒரு மேன்மையான ஜீவியமாகும். இப்பூமியில் ஒரு மெய்யான தேவ ஊழியனுடைய வாழ்க்கை இன்பமான ஒரு வனாந்தர ஜீவியமாகும். வனாந்தர ஜீவியம் எவ்வாறு இன்பமானதாயிருக்கக் கூடும்? அதில் தேவன் அவனைத் தூக்கிச் சுமந்துகொண்டு போவதினாலேயே அது இன்பமான ஒரு பிரயாணமாகிறது. வனாந்தரத்தினூடே நடப்பதோ அல்லது ஓடுவதோ ஒருவனுக்கு மிகவும் கடினமானதாயிருக்கும். ஆனால் நாமோ இவ்வனாந்தரப் பாதையில் கர்த்தரால் சுமந்து செல்லப்படுவதால் அது நமக்கு இனிமையான ஓர் அனுபவமாயிருக்கும். ஒரு தாய் தன் பிள்ளையைச் சுமந்து செல்வது போல, நம்மால் நடக்கவோ, ஓடவோ முடியாத இப்பாதையில், தேவன் தாமே நம்மைச் சுமந்து செல்கிறார்! கழுகு தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறது போல கர்த்தர் ஒருவரே நம்மை இப்பாதையில் வழிநடத்துகிறார் (உபா. 32 : 11, 12). "ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே" (உபா. 1 : 31) என நாம் வாசிக்கிறோமே! யாத்திராகமம் 33 : 14, 15 – இன் ஆங்கில மொழி பெயர்ப்பு எழுத்தின்படி இவ்விதமாகக் கூறுகிறது: 'அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார். அப்பொழுது அவன் (மோசே) அவரை நோக்கி: உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து சுமந்துகொண்டுபோகாதிரும் (carry us not up hence)' என்றான். இது இஸ்ரவேல் புத்திரரின் வனாந்தரப் பிரயாணத்தைக் குறிப்பிடும்

ஒரு வேதபகுதியாகும். 'உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து சுமந்து கொண்டு போகாதிரும்' என்பதிலிருந்து, தேவசமுகம் நம்மோடு கூடச் செல்லும்போது, அவர் நம்மைச் சுமந்துசெல்கிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்கிறோம். அப்போது நாம் சுயமாக நடக்கவோ, ஓடவோ அவசியமிராது; அவரது சமுகமே நம்மைச் சுமந்து செல்லும். நாம் வனாந்தரத்தினூடே வழிநடத்தப்பட்டாலும், நாம் தேவ சமுகத்தில் ஜீவிக்கிறவர்களாயிருந்தால் அதுவே எல்லா வித்தியாசத்தையும் உண்டாக்கிவிடும்! நாம் தேவசமு கத்தில் ஜீவிக்கும்போது, அந்த வனாந்தரப் பாதையில்தானே தேவன் நமக்கு இளைப்பாறுதலைத் தருகிறார். ஆகவே நாம் தேவசமுகத்தில் ஜீவிக்க விரும்புவோமாக! மிகுந்த ஆனந்தத் தையும், பேரின்பத்தையும், இளைப்பாறுதலையும் அங்கு நாம் கண்டடையலாம்! ***நமக்கு நேரிடுகிற பிரச்சினைகளும் கஷ்டங் களும் எவ்வளவு கடுமையானவையாயிருந்தாலும் நாம் அவ ருடைய சமுகத்தில் ஜீவிக்கும்போது நம்மால் ஆழ்ந்த இளைப் பாறுதலுடன் இருக்க முடியும்.***

நாம் தேவசித்தம் செய்யும்போது, அதாவது தேவ சமுகத்தில் ஜீவிக்கும்போது, தேவன் தாமே நம்மைச் சுமந்து செல்வார். மாறாக, நாம் நம்முடைய சுயசித்தம் செய்யும்போது நம் ஜீவியம் நமக்கு மிகக் கடினமானதாகத் தோன்றும். இதைக் குறித்தே உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு பேதுருவிடம், "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (யோவான் 21 : 18). இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு எழுத்தின்படி, 'நீ முதிர்வயதுள்ளவனாகும்போது, வேறொருவன் உன்னைச்



சுமந்துகொண்டுபோவான் (carry thee)' என்று பொருள்படுகிறது. இங்கு 'இளவயது' என்பது ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சி யடையாத நிலையையும், 'முதிர்வயது' என்பது ஆவிக்குரிய பிரகாரமாக முதிர்ச்சியடைந்த அல்லது தேறின நிலையையும் குறிக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சியடையாதவர்கள் சுயசித்தம் செய்கிறவர்களாயிருப்பர். அப்போது அவர்கள் 'நடந்து திரிய' வேண்டியதாயிருக்கும் - அதாவது அவர்கள் தங்கள் சுய பெலத்தினால் தாங்களாகவே பிரயாசப்பட்டு காரியங்களைச் செய்ய வேண்டியதாகும். ஆனால் நாம் ஆவிக்குரிய முதிர்ந்த நிலையை அடையும்போது, நாமாகவே நம்முடைய அரையைக் கட்டிக்கொள்ளவோ, நடந்து செல்லவோ அவசியமிராது. நம் கரங்களை நாம் ஆவியானவருக்கு நீட்டினால் மாத்திரம் போதும்; அவரே நம் அரையைக் கட்டி, அவரே இவ்வனாந்தரப் பாதை யினூடாக நம்மைச் சுமந்து செல்வார். இவ்வாறு தேவசமுகத்தில் ஜீவித்தல் என்பது கவலையற்றதும், இளைப்பாறுதலுள்ளதுமான ஒரு ஜீவியமாகும். தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் நாம் ஜீவித்துக்கொண்டிருப்போமாயின் - நாம் வேலைசெய்துகொண் டிருந்தாலும், பேசிக்கொண்டிருந்தாலும், நடந்துகொண்டிருந்தாலும், தூங்கிக்கொண்டிருந்தாலும் தேவ சமுகம் நம்மைச் சூழ்ந்திருக்கும்.

'நீர் எங்கே தங்குகிறீரோ, அதே இடத்தில்தான் நானும் தங்குவேன்' என்று ரூத் நகோமியிடம் கூறுகிறாள். அவ்விதமே அவள் கானான் தேசத்தில் "தன் மாமியினிடத்தில் தங்கினாள்" என நாம் வாசிக்கிறோம் (ரூத் 2 : 23). ஒரு நாள் கர்த்தராகிய இயேசு தாம் தங்கியிருக்கும் இடத்தைக் குறித்துத் தம் சீஷர்களிடத்தில், "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடு களும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இட மில்லை" என்று கூறினார் (மத். 8 : 20). அவருடைய பிரதிஷ்டை எவ்வளவு மேன்மையானது! அகிலாண்டத்தையும் படைத்த சிருஷ்டி கர்த்தர் இப்பூமிக்கு வந்தபோது தலைசாய்க்க இடமற்ற வராயிருந்தார்! ஓர் அங்குலம் நிலம் கூட அவருக்குச் சொந்தமாய்

இருக்கவில்லை! என்னே அவர்தம் ஒப்பற்ற தியாகம்! ஒரு நாள் இரு சீஷர்கள் அவரிடத்தில், "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ... அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள்" (யோவான் 1 : 38, 39). ஆவிக்குரிய பிரகாரமாகக் கூறின், அவர் அன்பிலே வாசம்பண்ணுகிறார். அதைக் காணக்கூடிய அகக் கண்கள் நமக்கிருக்குமாயின், நாமும் அவரோடுகூட அன்பில் வாசம்பண்ணுகிறவர்களாயிருப்போம். "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (I யோவான் 4 : 16). கர்த்தராகிய இயேசு, "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" என்று கூறியிருக்கிறார் (யோவான் 12 : 26). புதிய ஏற்பாட்டின் தேவ ஊழியர், நித்தியத்தில் தேவன் வாசம்பண்ணுகிற அதே இடத்தில் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர். "கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன்" என்று அவர் கூறியிருக்கிறார் (சங். 132 : 13, 14). தேவ ஊழியர்களும் சீயோனை விரும்ப வேண்டும். நீங்கள் ஒரு வாகனத்தில் ஏறி, அதை ஓட்டிச்செல்வீர்களாயின், நீங்கள் சென்றடைய வேண்டிய ஒரு இலக்கு உங்கள் மனதில் இருக்க வேண்டுமல்லவா? நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று தெரியாமலேயே போய்க்கொண்டிருப்பீர்களாயின், நாள் முழுதும் பிரயாணம் செய்தாலும் அது வீணும் வியர்த்தமுமாயிருக்குமே! தேவபிள்ளைகளே, நீங்கள் நிச்சயமற்றவர்களாக ஓடி, உங்கள் வாழ்க்கையை வீணாக்கிவிடாதீர்கள்; உங்கள் இலக்கைக் குறித்த நிச்சயமுள்ளவர்களாய் உங்கள் யாத்திரையைத் தொடருவீர்களாக. "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்" என்று அப். பவுல் கூறுகிறார் (I கொரி. 9 : 26).



தேவ ஊழியரே! சீயோனை நேசிக்கிறவர்கள் மாத்திரமே மெய்யான பூரண மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்க முடியும். ஏனெனில், மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர்களே சீயோனைச் சென்றடைவர். "கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார்; அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்கள்" என நாம் வாசிக்கிறோமே! (ஏசாயா 14 : 32). கர்த்தராகிய இயேசு உன்னதத்திற்கு ஏறுமுன்னதாக, பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் (எபே. 4 : 9, 10). எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு உயர்த்தப்படுமுன்னதாக, அவர் சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி. 2 : 6 – 11). எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திலுள்ள இடம் 'சீயோன்' ஆகும். ஆகவே ***சீயோனில் காணப்படும்படியாக - இப்பூமியில் ஜீவிக்கும்போது தேவ ஊழியர் கடைசியானதும் மிகத் தாழ்ந்ததுமான இடத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.*** அவர்கள் கர்த்தரின் சேவையில் எத்தனை வருட அனுபவமுள்ளவர்களாயிருப்பினும், ஒவ்வொரு நாளும் தாங்கள் அன்றுதான் புதிதாக ஊழியத்தில் சேர்ந்ததாக எண்ணிக் கொள்ள வேண்டும். அன்று புதிதாக ஊழியத்தில் சேர்ந்தவர்களைக் காட்டிலும் தாங்கள் ஒரு நாளாயினும் முந்தி வந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களில் இருக்குமாயின், தாங்கள் சற்றாகிலும் பெரியவர்கள் என்ற மனப்பான்மை அவர்களைச் சீயோனில் வாசம்பண்ணத் தகுதியற்றவர்களாக்கிவிடும்! தேவ ஊழியர்கள் சிலர், சபையில் சில குறிப்பிட்ட ஸ்தானங்களையும் பதவிகளையும் நாடுகின்றனர். ஒரு நபர் ஒரு பிரசங்கியாகவோ, பாடகராகவோ இருப்பதினால் அவருக்கு மேன்மை என்ன? அவை அவருக்குச் சீயோனை வாக்குறுதிபண்ணுவதில்லையே! இவ்விதமாகத் திகழ வேண்டுமென்ற தவறான ஆசைகளெல்லாம், அந்நபர் சீயோனை மெய்யாக நேசிக்காததினால் உண்டாகிறவையே! மெய்யாகவே சீயோன் மேல் பிரியங்கொள்ளும் தேவ ஊழியர்களுக்கு அவர்களுடைய ஜீவியம் முழுவதும் மிகவும் பரவசமளிப்பதாயிருக்கும். சில தேவ ஊழியர்கள் குழந்தைகளைப் போல இருக்

கின்றனர். ஒரு ஆயிர ரூபாய் நோட்டும், பல வண்ண நிறங்களுள்ள ஒரு பெரிய பலூனும் ஒரு குழந்தையின் முன் நீட்டப்பட்டால், அது அந்தப் பலூனையே பற்றிப் பிடித்துக்கொள்ளத் துடிக்கும். அது கிடைக்காவிடில், அதினிமித்தம் அப்பிள்ளை அதிகமாக அழுது தவிக்கும். ஆயிர ரூபாய் நோட்டு அதற்கு ஒரு பொருட்டல்ல! அவ்வாறே பதவி, பட்டம், ஸ்தானம், பேர், புகழ் போன்ற யாவும் அற்ப நேரம் மாத்திரமே நிலைத்திருக்கும் பலூன்களைப் போன்றவையே. சில நிமிடங்களுக்குப் பின் வெடித்து ஒன்றுமில்லாமற்போகும் பலூன்களைப் போல, பிரபலமான பிரசங்கியார், இனிய பாடகர் போன்ற பட்டங்களும், பெயர்களும், ஸ்தானங்களும், மற்றும் நாம் காண்கிற யாவும் மாயையே! அவை யாவும் கடந்து போய்விடும்! “காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்” (II கொரி. 4 : 18). ஆகவே காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நாம் நோக்கியிருப்போமாக! காணப்படுகிறவைகளாகிய மாயையானவைகளின் மேல் நம் கண்களைப் பதித்துவிடாமல், அவற்றை நாம் குப்பையாக எண்ணுவோமாக. அவைகளை நேசிப்பவர்களால் சீயோனை மெய்யாக நேசிக்க முடியாது. ஒரு நபருக்குக் கோடிக்கணக்கான பணம் வங்கியிலிருக்க, அவன் கையிலிருக்கும் ஒரு ரூபாய் நாணயத்தை ஒருவன் பறித்துக்கொள்வானாயின், அது அவனுக்குச் சற்றும் மனவேதனையை உண்டாக்காதல்லவா? அதனை விட்டுக் கொடுத்துவிடுவது அவனுக்குச் சிரமமாயிராதே! அது அவனுக்குத் திரும்ப அளிக்கப்பட்டாலும் அதில் அவன் பரவசமடைய மாட்டான். அவ்வாறே, நாம் மெய்யாகவே சீயோனை நேசிப்போமாயின், பெயர், ஸ்தானம், கனம், புகழ் போன்றவை நமக்கு ஒரு பொருட்டாயிரா. நாம் அவற்றைக் குப்பையைப் போல் உதறித் தள்ளிவிடுவோம்.

சீயோனை நேசித்து, அதின் சத்திய உபதேசங்களை நம்பி அணைத்துக்கொண்டு, வெற்றியுடன் மகிமைக்குள் பிரவேசித்த



தேவதாசனான பாஸ்டர் S.B. ஏர்னஸ்ட் அவர்கள் இவ்விதமாகக் கூறியிருக்கிறார்:

❊ ‘சீயோன் ஒரு மிகப் பெரிய பல்கலைக்கழகக் கல்வியாகும். இப்பூமியில் அதை நாம் படித்து, நித்தியத்திலும் அக்கல்வியைத் தொடர்வோம். தேவ ஊழியர்கள் இப்பூமியில் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை இங்கேயே கற்றுத்தீர்க்க வேண்டும். அப்படியானால் மாத்திரமே அவர்களால் சீயோனில் சென்று அதின் உயர் கல்வியைத் தொடர முடியும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய தேவனின் திரித்துவத்தில் காணப்படும் ஐக்கியமே கைவேலையில்லாத சீயோன் ஆகும். நித்தியத்தில் சீயோனைச் சுதந்தரிக்கும் தேவ ஊழியர்கள் அதின் ஆனந்தப் பரவசத்தில் அமிழ்ந்துவிடுவார்கள். ஆகவே தேவ ஊழியனே, நீ சீயோனைச் சுதந்தரிப்பதைத் தடை செய்யக்கூடிய மிகச் சிறியதொரு பாவம் உன் சிந்தையில் வருமாயினும், உடனடியாகவே நீ அதற்காக மனஸ்தாபப்பட்டு, அதை அறிக்கை செய்து உன்னைச் சுத்திகரித்துக்கொள்வாயாக. இவ்வுலகில் பிரசித்தி பெற்ற பிரசங்கிமார் ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். அவர்கள் சீயோனைக் குறித்துப் பிரசங்கிப்பதில்லை. அவர்களுடைய ஊழியம் இப்பூமியுடன் முற்றுப் பெற்றுவிடும். நாம் நம்முடைய மேன்மையான அழைப்பையும், நமக்குக் குறிக்கப்பட்டுள்ள இலக்கையும் அறிந்திருக்க வேண்டும். நாம் பூரணராகும்படி கடந்து போகுதலும், தேவஜனங்களைப் பூரணத்திற்கு வழிநடத்துதலும் இரு வெவ்வேறான காரியங்களாகும். ஒவ்வொரு நாளும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாத்திரமே இவை சாத்தியமாகும்.

நாம் ஏன் சீயோனைப் பற்றிப் படிக்க வேண்டும்? பிரதான மூலைக்கல்லாகிய நம் ஆண்டவராகிய இயேசு சீயோனில் இருக்கிறார் (I பேதுரு 2 : 6, 7). மூலைக்கல் இன்றி அஸ்திபாரம் போடப்பட முடியாது. மூலைக்கல்லாகிய கர்த்தராகிய இயேசுவும், அஸ்திபாரமாக அவரோடு சேர்ந்து நிற்கும் தேவ ஊழியர்களும் இன்றி, சபை கட்டியெழுப்பப்பட முடியாது. சவுல் ஒரே ஒரு

முறை மட்டுமே அபிஷேகம் பண்ணப்பட்டான். தாவீதோ மூன்று முறை அபிஷேகம் பண்ணப்பட்டான் (I சாமு. 16 : 13 ; II சாமு. 2 : 4 ; 5 : 3). அவன் மூன்றாம் முறை அபிஷேகம்பண்ணப்பட்ட பின்னரே சீயோன் கோட்டையைப் பிடித்தான் (II சாமு. 5 : 7). ஒவ்வொரு நாளும் ஒரு புதிய அபிஷேகம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், நாம் ஒவ்வொரு நாளும் புதிய புதிய சோதனைகளினூடாகக் கடந்து செல்ல வேண்டியது அவசியம். சீயோன் நம் உள்ளத்திற்குள் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே பெலத்தின்மேல் பெலனடைந்து, சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள் (சங். 84 : 5, 7). ஜனங்கள் சீயோனைக் குறித்து அறிந்துகொண்டு, தேவனைச் சேவிக்க முன்வரும்படி நாம் சீயோனைக் குறித்துப் போதிக்க வேண்டும். சீயோனில் ஞானம், அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் உண்டு! ஆகவே நாம் சீயோனை நேசிப்போமாக'. ✻

சீயோனை நேசிக்கிறவர்களால் மாத்திரமே மேன்மையானதொரு தூய ஜீவியம் செய்ய முடியும். “பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார்” (சங். 50 : 2). பரிசுத்தத்தின் அழகே சீயோனின் அழகாகும். அந்த மாசற்ற பரிசுத்தத்தை நாம் வாஞ்சிக்க வேண்டும். ‘சீயோனின் எழுப்புதலே கடைசி எழுப்புதலாயிருக்கும்’ என ஒரு தேவதாசன் கூறியிருக்கிறார். “தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சைவைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறபடி (சங். 102 : 13, 14), தேவன் சீயோனுக்குத் தயை செய்யும் காலம் ஒன்றுண்டு. தேவ ஊழியர்கள் அதின் உபதேசங்கள் மேல் வாஞ்சை வைத்து, அந்த உன்னத ஜீவியத்திற்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும்போது, தேவன் தாமே அவர்களுடைய ஜீவியங்களைச் சீயோனாகக் கட்டியெழுப்பி, தமது வேலையை அவர்களில் நிறைவேற்றுவார். அவர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார் (வச. 15).



சீயோனை நேசிக்கிறவர்கள் ஒருபோதும் பின்னிட்டுத் திரும்புவதில்லை. மாறாக, சீயோனைப் பகைக்கிறவர்களே பின்னிட்டுத் திரும்பி, வெட்கமடைவர் (சங். 129 : 5). தேவபிள்ளையே, நீ சீயோனை நேசிக்கிற ஒரு நபராயிருப்பாயானால், நீ ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. சீயோனைப் பகைக்கிறவர்களின் ஜீவியம் வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு ஒப்பாயிருக்கும் (வச. 6). அது சீக்கிரமாய்த் துளிர்த்து, அதிக தாமதமின்றியே உலர்ந்துபோகும்! அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் நிலையற்றதாயிருக்கும். அவர்கள் தங்கள் உள்ளான மனுஷனில் வறட்சியையே அனுபவிப்பார்கள்.

தேவ ஊழியர்களே, பரலோகத்தின் மிகவும் உன்னதமான இடமே சீயோன் ஆகும். அது பூமியில் மிகவும் தாழ்ந்த, எளிய இடத்தை மனமுவந்து எடுத்துக்கொள்பவர்களுக்கென்றே குறித்து வைக்கப்பட்டுள்ளது. இம்மையில் சீயோனை நேசிக்கிறவர்களால் மாத்திரமே நித்தியத்தில் தேவனை மிக மேன்மையான விதத்தில் துதிக்க இயலும். இம்மையில் தேவன் நமக்கு அருளிச்செய்திருக்கும் நன்மைகளுக்காகவும் உபகாரங்களுக்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்தி, அவரைத் துதிக்கிறோம். ஆனால் நித்தியத்திலோ தேவனுடைய பரிசுத்தத்திற்காகவே நாம் அவரைத் துதித்துக்கொண்டிருப்போம். “அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது ***பரிசுத்த பர்வதத்திலும்*** மிகவும் துதிக்கப்படத்தக்கவர்” (சங். 48 : 1 ; ஏசாயா 6 : 3). ஆகவே நம் ஜீவியத்தில் பரிசுத்தமானது பர்வதம் போல உயர்ந்தோங்கியிருக்க வேண்டும். நாம் மெய்யாகவே சீயோனை நேசிப்போமாயின் – நம் மனது முற்றிலும் மறுரூபமடைந்துவிடும்; மாயையான ஸ்தானங்களை அல்ல, விலைமதித்தற்கரிய சீயோனின் சிறப்பையே நாம் வாஞ்சித்துத் தழுவிக்கொள்வோம்!

சீயோனை நேசிக்கிறவர்கள் கிறிஸ்துவையே விவாகம் செய்துகொண்டவர்களாவர். “நான் உங்கள் நாயகர்” என்று சீயோனுக்கு அழைக்கப்பட்டவர்களை நோக்கிக் கர்த்தர் சொல்லுகிறார்

(எரே. 3 : 14). எவ்வளவு பரவசமளிக்கும் வாழ்க்கை அது! உதாரணமாக, மிக மோசமானதும் அசுத்தம் நிறைந்ததுமான ஒரு குப்பத்திலுள்ள குடில் ஒன்றில் ஒரு பெண் வசிக்கிறாள் என நாம் வைத்துக்கொள்வோம். அவள் ஊனமுற்றவள்; அருவருப்பான தோற்றமுடையவள்; அவளுக்குக் கல்வி அறிவும் அறவே இல்லை; அவள் மிகவும் ஏழையாகவும் இருக்கிறாள்; ஒரு நாள் முழு உலகிலுமுள்ள யாவரிலும் மிகவும் அழகு வாய்ந்தவனான அந்நாட்டு இளவரசன் அவ்வழியே வந்து, அவளது அவல நிலையைக் கண்டு, அவள் மேல் மனதுருகி, அவளை மணம் புரிந்துகொள்ளத் தீர்மானிக்கிறான்; அவர்களுடைய திருமணத்திற் கான நிச்சயமும் (engagement) முடிந்துவிட்டது. இப்போது அப் பெண் எவ்வளவாய்ப் பரவசமடைந்திருப்பாள்! அவள் தனக்கு அறிமுகமான யாவருக்கும் இந்நற்செய்தியைக் கூறத் துடிப்பாள் அல்லவா? இளவரசனுக்கு இல்லாளாகும் பேறு பெற்ற இந்த ஏழைப்பெண்ணைப் பார்க்கிலும் நாமே மிகுந்த ஆனந்தப் பரவசமடைய வேண்டியவர்களாவர்! ஏனெனில் நம் ராஜாதிராஜா, பதினாயிரம் பேர்களில் சிறந்தவர், சாரோனின் ரோஜா, பள்ளத் தாக்குகளின் லீலி, பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம், மகிமையில் நிகரற்றவர் – நம்மைத் தம் மணவாட்டியாக ஏற்றுக்கொள்ள மனமுவந்திருக்கிறார்! நம்மில் அன்பு பாராட்டவும், நம் பேரில் கரிசனைகொள்ளவும் யாரும் முன்வரக் கூடாத அளவுக்கு நாம் மிகவும் மோசமானவர்களாயிருந்தோம். ஆனால் பரலோக மாமன்னரின் புதல்வன் நம்மை விவாகம்பண்ணிக் கொள்ளத் தீர்மானித்தார்! சபையில் ஜெயங்கொண்ட பரிசுத்த வான்கள் யாவரும் கிறிஸ்துவின் மணவாட்டி என்னும் கூட்டத் திற்குட்படுகின்றனர்; எனினும் அவருடைய மெய்யான ஊழியரே இக்கூட்டத்தினரில் முதற்பலன்களாவர். ஏனெனில் அவர் களுடைய அன்பும் ஆசையும் பற்றும் முழுவதுமாய் அவர் மேலேயே இருக்கும். ஒரு ஸ்திரீ அருவருக்கப்படத்தக்க வளாயிருந்தும், அவள் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்படு வாளாயின் அதனைப் பூமி தாங்க மாட்டாது என ஞானி



கூறுகிறான் (நீதி. 30 : 21, 23 - Eng.). யாவராலும் வெறுக்கப்படத் தக்கவர்களும் ஒருவராலும் விரும்பப்படத்தகாதவர்களுமாயிருந்த நம்மை நம் ஆத்தும நேசர் மணந்துகொள்ள மனதிரங்கினாரே! எவ்வளவு பரவசமளிக்கும் செய்தி இது!

தேவ ஊழியர்களின் பரம அழைப்பு மகா விசேஷமானது. அவர்கள் சர்வ பூமிக்கும் மகிழ்ச்சி அளிக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறார்கள். முழு உலகத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற அவர்கள் தங்களில் எவ்வளவு மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்க வேண்டும்! அவர்கள் துக்கமுள்ளவர்களாயிருந்தால், அவர்களால் எவ்வாறு மற்றவர் களைச் சந்தோஷப்படுத்தக் கூடும்? சீயோனை நேசிக்கிறவர்களின் மனம் மறுரூபமடைந்திருப்பதால், அவர்கள் மற்றவர்களால் அசட்டைபண்ணப்பட்டு, அவமதிக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, தூஷிக்கப்பட்டாலும் அதினிமித்தம் மனமுறிவடையாமல், தங்கள் பிரதிபலனாகிய சீயோனை எண்ணி மகிழ்ந்துகொண்டிருப்பர். சீயோனை நேசிக்கிறவர்கள் ஒருபோதும் மாம்சீகமானவர்களாய் இருக்க முடியாது. மெய்யாகவே சீயோனை நேசிக்கிறவர்களின் சுபாவம் முற்றிலும் மாறிவிடும். மகிமையால் நிறைந்த சீயோனை நேசிக்கிற தேவ ஊழியர்கள் சர்வ பூமிக்கும் மாத்திரமல்ல, நித்தியம் முழுவதற்குங்கூட ஆசீர்வாதமாயிருப்பார்கள்.

### 3. ***“உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்”:***

மோவாபியர் தேவனுடைய ஜனங்களல்ல என்று ரூத் அறிந்திருந்தாள். தேவஜனங்களைக் குறித்து அவளுக்கு ஒரு வெளிப்படுத்தல் இருந்தது. அந்த வெளிப்படுத்தலே அவள் தன்னுடைய சொந்த ஜனங்களை விட்டுவிட அவளுக்கு உதவி செய்தது. தேவனுடைய ஜனங்களே தங்கள் சொந்த ஜனங்கள் என்ற வெளிப்படுத்தல் உண்டாகும்போது மாத்திரமே தேவ ஊழியர்களால் தங்கள் சொந்த ஜனங்களை விட்டு, கர்த்தரைப் பின்பற்ற இயலும். தேவனுடைய ஜனங்கள் எவ்வாறு அவர்

களுடைய ஜனங்களாக மாற முடியும்? அல்லது தேவனுடைய ஜனங்களை எவ்வாறு அவர்கள் தங்கள் சொந்த ஜனங்களாகக் காண முடியும்? அவர்கள் தாங்கள் அனுப்பப்படும் இடங் களிலுள்ளவர்களைத் தங்கள் சொந்த ஜனங்களாக எண்ண வேண்டுமாயின், அவர்கள் முதலாவதாகத் தங்கள் சொந்தக் குடும் பத்தாரை, மாம்ச சம்பந்தமான உறவினர்களைப் பிரதிஷ்டை செய்தவர்களாயிருக்க வேண்டும். ரூத் ஒரு மோவாபியப் பெண்பிள்ளையாயிருந்தபோதிலும், அத்தேசத்தில் அவளுக்குப் பெற்றோரும், உற்றாரும், உறவினரும் இருந்தபோதிலும், அவள் அவர்களிடம் திரும்பிச் செல்ல வகை தேடவில்லை. "குமாரத் தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப் பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்" என நாம் வாசிக்கிறோம் (சங். 45 : 10, 11). மொர்தெகாய் எஸ்தரிடத்தில் அவள் தன் குலத்தையும் பூர்வோத்தரத்தையும் பிறருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று கற்பித்திருந்தான் (எஸ்தர் 2 : 10). அவள் அப்படியே செய்தபோது, "ராஜா சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான்; சகல கன்னிகைகளைப்பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது" என நாம் காண்கிறோம் (வச. 17). மகா ராஜாவானவர் தேவ ஊழியரின் பிரதிஷ்டையாகிய அழகில் பிரியங்கொள் ளும்படி அவர்கள் தங்கள் மாம்ச சம்பந்தமானவர்களை வெறுத்து விட வேண்டியது அவசியமாகும் (லூக்கா 14 : 26, 33).

லூக்கா 14 : 26-இல் கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்பும் ஒருவன் எழுத்தின்படியே வெறுத்துவிட வேண்டிய ஏழு காரியங் களைக் குறித்துக் கர்த்தராகிய இயேசு கூறுகிறார்: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவி யையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்". இவ்வேழு காரியங்களைப் பிரதிஷ்டை செய்வதைச்



சிம்சோனின் தலையிலிருந்த ஏழு ஜடைகளுக்கு நாம் ஒப்பிடலாம். அந்த ஏழு ஜடைகளும் சிரைக்கப்பட்டபோது, அவன் தன்னிலிருந்த மகா பெலத்தை இழந்துபோனான் (நியா. 16 : 17, 19). அவன் தன் தலையில் சவரகன் கத்தி பட இடமளித்த பின்னர் அவனால் வல்லமையுள்ள மனுஷனாய் இருக்க முடியவில்லை. தேவ ஊழியர்கள் இந்த ஏழு பகுதிகளில் எதிலா யினும் தங்கள் பிரதிஷ்டையை இழந்துபோவார்களாயின், தங்கள் ஆவிக்குரிய பெலத்தை இழந்து, மற்ற சாதாரண மனுஷரைப் போல மாறிவிடுவர். இவ்வசனங்களிலுள்ள 'சவரகன் கத்தி' என்பது பாவத்தையும், 'தலை' என்பது சிந்தை அல்லது மனதை யும் குறிக்கும். தேவ ஊழியர்கள் தங்கள் மனதில் பாவம் பிரவேசிக்க ஒருக்காலும் இடமளிக்கலாகாது. அவர்கள் கர்த்தருக் கென்று வேறுபிரிக்கப்பட்ட ஆவிக்குரிய நசரேயராயிருக் கிறார்கள். அவர்கள் தங்கள் தலையில் சவரகன் கத்தி படுவதற்கு, அதாவது தங்கள் மனதில் பாவம் பிரவேசிப்பதற்கு இடமளிப் பார்களாயின், அவர்களுடைய 'நசரேய விரதம்' நஷ்டமடையும். பழைய ஏற்பாட்டில் நசரேய விரதங்காக்கிறவர்கள் தாங்கள் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தனர் (எண். 6 : 8). புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர்களோ அவர்களைப் போல ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மாத்திரம் விரதங்காக்க வேண்டியவர்கள் அல்லர். இவர்களுடைய அழைப்பு மகா உன்னதமானது. சிம்சோனைக் குறித்து, "அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள்மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயி ருப்பான்" (நியா. 13 : 7) என்று அவன் பிறப்பதற்கு முன்னதாகவே முன்னுரைக்கப்பட்டிருந்தது போல, இவர்கள் தாங்கள் ஜலத்தி னாலும் ஆவியினாலும் பிறந்தது முதல் தங்கள் ஜீவிய காலம் முழுவதும் தேவனுக்கென்று ஆவிக்குரிய பிரகாரமாக நசரேயரா யிருக்க வேண்டியவர்களாவர். இவர்கள் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே - தாயின் கர்ப்பத்தில் உருவாகுமுன்னதாகவே -

இந்த உன்னதமான ஜீவியத்திற்கென்று தேவனால் முன்குறிக்கப் படுகின்றனர். இவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்துவரும் நாட்களெல்லாம் இவர்களுடைய ஆவி தூய்மையானதாகக் காக்கப்பட்டிருக்க வேண்டும். இடையில் இவர்களுடைய ஆவி யில் அசுசிகள் உண்டாக இவர்கள் இடமளிப்பார்களாயின், இவர்களுடைய 'நசரேய விரதம்' தீட்டுப்படுவதினால், அந்நிலை யில் இவர்கள் செய்யும் ஊழியம் கர்த்தருக்குப் பரிசுத்தமானதாக அவரால் அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஆகவே இவர்கள் ஆழ்ந்த மனஸ்தாபத்துடன் தங்கள் ஆவியில் உண்டாகிற அசுசிகள் நீங்க தங்களைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத் தோடே பூரணப்படுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (II கொரி. 7 : 1). இக்கிருபையின் காலத்தில் கிறிஸ்துவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்யும்படி நம் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9 : 14). "நீங்கள் ... ***உயிரோடிருக்கும் நாளெல்லாம்*** ... எனக்கு முன்பாகப் பரிசுத்தத் தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளை யிடுவேன்" என்பது தேவன் தம்முடைய ஊழியர்களோடு செய்தி ருக்கும் 'பரிசுத்த உடன்படிக்கை'யாகும் (லூக்கா 1 : 70, 71). இந்த உடன்படிக்கையில் இவர்கள் தங்கள் மரணபரியந்தம் உண்மை யுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய கிருபையினால் நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும்போதுதானே மெய்யாகவே நம் சிந்தையிலும் பாவமற்றவர்களாய் ஜீவிக்க இயலும்.

புதிய ஏற்பாட்டின் தேவ ஊழியனே, நீ எல்லா ஜாதி களுக்கும் எல்லா மொழியினருக்கும் தகப்பனாய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறாய் என்பதை நினைவிற்கொள்வாயாக. நீ உன் தேசம், மொழி, ஜனம் போன்ற அனைத்தையும் உன் மனதில் பிரதிஷ்டைபண்ணியிருந்தால் மாத்திரமே தேவஜனங்களை உன் சொந்த ஜனங்களாக உன்னால் காணக் கூடும். உன் குடும்பத்தின் மீதோ, உன் மொழியினர் மீதோ சற்றாகிலும் தனிப்பற்றுதல் உன்னில் இருக்கிறதா என்று நீ அடிக்கடி உன் இருதயத்தையும் மனதையும் ஆராய்ந்து பார்த்துக்கொள்வாயாக.



பின் நாட்களில் ரூத் தன் பிரதிஷ்டையைக் குறித்துப் போவாசிடத்திலிருந்தும் நற்சாட்சி பெற்றுக்கொள்ளுமளவிற்குத் தன் தேசத்தையும் இனத்தையும் மெய்யாகவே பிரதிஷ்டை செய்திருந்தாள்! "உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரி விக்கப்பட்டது" (ரூத் 2 : 11) என போவாஸ் அவளிடத்தில் கூறு கிறான்! அருமையான தேவ ஊழியனே, நம்முடைய போவாசா யிருக்கிற கர்த்தராகிய இயேசுவும் உன்னுடைய பிரதிஷ்டையைக் குறித்து இவ்விதமாகச் சாட்சி பகரக்கூடியதாய் இருக்க வேண்டும். "எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது" என்று இவ்வசனத்தில் கூறப்பட்டிருப்பது ஆங்கிலத்தில், 'எனக்கு முழுவதுமாகக் காண்பிக்கப்பட்டது' (It hath fully been shewed me) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'உன்னுடைய பிரதிஷ்டை யைக் குறித்து எனக்கு நூறு சதவீதம் முழு நிச்சயம் உண்டு' என்பதே இதன் கருத்தாகும். இங்கு போவாசின் வார்த்தைகள் மிகுந்த உறுதியுடன் தொனிக்கின்றன! 'நீ உன் தகப்பனையும், உன் தாயையும், உன் சொந்த ஜனங்களையும், உன் தேசத்தையும் மெய்யாகவே வெறுத்துவிட்டாய் என்று நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்' என்று உன் ஆண்டவர் உன்னைக் குறித்துக் கூற இயலுமோ?

"முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது" என்று போவாஸ் ரூத்திடம் கூறுகிறான். முன்னே அவள் அறிந்திராத ஜனங்கள், அவள் தன் தேசத்தையும் ஜனத்தையும் வெறுத்துவிட்டபோதோ அவளுடைய சொந்த ஜனங்களாயினர்! நம் மாம்ச சம்பந்த மானவர்களை நாம் வெறுத்துவிடுவது எப்படி? இயற்கையாக அது சாத்தியமானதன்று. ஆனால் அப்படிச் செய்யும்படி தேவனுடைய வார்த்தை நம்மைப் பெலப்படுத்துகிறது. கர்த்தர் சர்வத்தையும்

தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார் (எபி. 1 : 3). அண்ட சராசரங்களையும் தாங்கி நிற்கத்தக்கதாகத் தேவ னுடைய வசனம் அபரிமிதமான வல்லமையுள்ளதாயிருக்கிறது. அந்த வார்த்தை நம் உள்ளத்திற்குள் வரும்போது, நம்முடைய மாம்ச சம்பந்தமானவர்களை வெறுத்துவிடுவது நமக்கு மிகமிக எளிதாயிருக்கும். அவர்களை வெறுத்துவிடுதல் என்பது, அவர் களை முற்றிலுமாகத் தேவனுடைய கரங்களில் அர்ப்பணித்து விடுதலாகும். தேவன் தம்முடைய கரங்களில் ஒப்புவிக்கப்பட்ட வர்களை - நாம் பாதுகாப்பதைப் பார்க்கிலும் - மிகச் சிறப்பான விதத்தில் பாதுகாத்துக்கொள்வார்! கர்த்தருடைய வீட்டிலிருந்து கொண்டு தங்கள் சொந்தக் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் தேவ ஊழியர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாத மாக அல்ல, பாரமாகவே இருப்பார்கள். அவர்களால் ஒரு வெற்றிகரமான ஊழியம் செய்ய இயலாது. அவர்கள் ஏதோ ஒரு ஊழியம் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் தேவநோக்கம் அவர்களில் நிறைவேறாது. ஒரு பெரிய மாளிகை கட்டப் படும்போது, அதன் கட்டுமானப் பணிக்கென்று சாரங்கட்டு வதற்காகப் பல உபகரணங்களும் தட்டுமுட்டுகளும் உபயோ கிக்கப்படும். ஆயினும் அவை அக்கட்டடத்தின் ஒரு பாகமாய் மாறுவதில்லை. கட்டட வேலை முடிவுறும்போது, அவை யாவும் அங்கிருந்து நீக்கப்படுமன்றோ? அவ்வாறே தங்கள் மனதில் மெய்யான பிரதிஷ்டை இல்லாதவர்களாய்க் கர்த்தருடைய வீட்டில் ஜீவிக்கும் தேவ ஊழியர்கள், பிரசங்கித்தல், பாடுதல், சமைத்தல் போன்ற பலவிதமான ஊழியங்களில் சிறப்பான விதத்தில் உபயோகிக்கப்படலாம்; ஆயினும் அவர்கள் கிறிஸ்துவின் சரீரத் திலோ அல்லது சீயோனிலோ ஒரு பாகமாக மாறுவதில்லை; தேவ னுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவரும் மாளிகை யாகிய பரிசுத்த ஆலயத்தில் அவர்கள் இடம் பெறுவதில்லை என்பது நம்மை நடுங்கச் செய்யும் ஓர் உண்மையாகும்.

புதிய ஏற்பாட்டு ஊழியம் மகிமையான ஓர் ஊழியமாகும் (II கொரி. 3 : 8). ஆயினும் மெய்யான பிரதிஷ்டையுள்ளவர்



களுக்கே அது மகிமையான ஊழியமாயிருக்கும். பிரதிஷ்டை இல்லாதவர்களோ கர்த்தருடைய வீட்டில் வசித்தாலும் மகிமை யிழந்தவர்களாயிருப்பர். அவர்களைக் கர்த்தர் 'இக்கபோத்' என்றே அழைப்பார் (I சாமு. 4 : 21). அவர்கள் தங்கள் சொந்தக் குடும் பத்தைக் குறித்த பாரமும் சிந்தையும் உள்ளவர்களாயிருப்பதால் மகிமை அவர்களை விட்டு எடுபட்டுப்போம். மெய்யான பிரதிஷ்டையுள்ளவர்களாய்க் கர்த்தருடைய வீட்டில் இருப்ப வர்களோ பரலோகத்தை இப்பூமியில் அனுபவித்துக்கொண் டிருப்பார்கள்!

ரூத்தும் ஒர்பாளும் கானான் தேசத்துக்குச் செல்லும்படி தங்கள் மாமியோடு வழிநடக்கையில், "உம்முடைய ஜனத் தண்டைக்கே உம்முடன்கூட வருவோம்" என்றார்கள் (ரூத் 1 : 10). இங்கு கானான் தேசம் என்பது தேவனுடைய சமுகத்தைக் குறிக் கிறது. நாம் தேவ சமுகத்தை நம் ஜீவியத்தில் அனுபவிக்க வேண்டுமானால், தேவனையும் அவருடைய ஜனங்களையும் நேசிக்கிறவர்களாயிருக்க வேண்டும். தேவன் தனிப்பட்ட விதத்தில் நம்முடைய தேவனாகும்போது, அவருடைய ஜனங்களும் நமக்கு மிகவும் விலையேறப்பெற்றவர்களாகிறார்கள். ஆகவேதான் "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்று ரூத் நகோமியினிடத்தில் கூறுகிறாள் (வச. 16). அப். பவுல் சபைகளுக்கு எழுதிய தன் நிருபங்களில், 'பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு, உங்களுக்காக எப்பொழுதும் ஸ்தோத் திரஞ்செலுத்தி வேண்டிக்கொள்கிறோம்' என்றும் (கொலோ. 1 : 3, 5), 'நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், உங்களுக்காக எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்' என்றும் குறிப்பிடுகிறார் (II தெச. 1 : 3).

விலையேறப்பெற்ற சுபாவங்களுள்ள பரிசுத்தவான்களை நேசிப்பது எவருக்கும் எளிது; ஆனால் எரிச்சல், முரட்டாட்டம், கோபம் போன்ற பரிசுத்தமாக்கப்படாத சுபாவங்களுள்ள வேறு சிலரை நேசிப்பது அவ்வளவு எளிதான காரியமன்று. நாம் தேவ

பிள்ளைகள் அனைவரையும் ஒன்றுபோல் நேசிப்பதில் ஒரு பெரிய ஆசீர்வாதம் தங்கியுள்ளது. அது எவ்வாறு சாத்தியமாகும்? நாம் தேவசமுகத்தில் ஜீவிக்கும்போது நம்மில் ஒரு உள்ளான இளைப்பாறுதல் உண்டாயிருக்கும். அப்போது நாம் அவருடைய அன்பிலே இளைப்பாறிக்கொண்டிருப்போம் (செப். 3 : 17 - Eng.) ; அப்போது தேவபிள்ளைகள் அனைவரையும் ஒன்றுபோல் நேசிக்க நமக்குக் கிருபை உண்டாயிருக்கும்; நேசிக்கப்பட முடியாத சில சுபாவங்களுள்ளவர்கள் மீதுங்கூட நமக்கு அதிகமான அன்பும் மனதுருக்கமும் உண்டாயிருக்கும். இவ்வித இளைப்பாறுதலை உடையவர்கள் மாத்திரமே புதிய ஏற்பாட்டுத் தேவஜனங்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டுவரும் நித்திய இளைப் பாறுதலிலும் பிரவேசிக்கக் கூடும் (எபி. 4 : 9). யாராவது ஒரு நபரையேனும் நாம் உளமாற நேசிக்கக் கூடாதவர்களாயிருப்போ மாயின், நாம் உள்ளான இளைப்பாறுதல் அற்றவர்களாகவே இருப்போம். ஒரு தகப்பனுக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்க, அவர்களில் ஒருவன் ஊனமுற்றவனாயிருப்பானாகில், அந்தத் தகப்பன் இயற்கையாகவே மற்ற எல்லாப் பிள்ளைகளையும் நேசிப்பதைக் காட்டிலும் அவன் மேல் அதிகமான அன்பும், பரிவிரக்கமும், கரிசனையும், மனதுருக்கமும் உள்ளவனாய் இருப்பான் அல்லவா? நன்மை ஏதும் செய்ய இயலாதவர்களும், தங்கள் சுபாவத்தில் பல குறைபாடுகள் உள்ளவர்களுமான ‘ஆவிக்குரிய பிரகாரமாக ஊனமுற்றோர்’ சிலர் ஆவிக்குரிய உலகில் உள்ளனர். அவர்கள் தங்கள் கிரியைகளினால் பிறருக்குத் தீங்கிழைக்காவிடினும் தங்கள் நாவினால் பிறரைப் புண்படுத்துகிற வர்களாயிருக்கக் கூடும். ஆனால் தேவ ஊழியனே, உனக்கு ஒரு தகப்பனின் உள்ளம் இருக்குமாயின், நீ மற்றவர்களை நேசிப் பதைப் பார்க்கிலும் அப்படிப்பட்டவர்களை அதிகமாக நேசித்து, கரிசனையோடும் மனதுருக்கத்தோடும் அவர்களுக்காக ஜெபம் பண்ணுவாய். ஏனெனில் ஆவிக்குரியவர்களான மற்றவர்களைப் பார்க்கிலும் இவர்களுக்கே உன்னுடைய உதவியும் அன்பும் அதிகமாகத் தேவைப்படுகிறது!



கடந்த நாட்களில் உன்னைத் துன்புறுத்தியவர்களையும், உன் மனதைப் புண்படுத்தியவர்களையும் விசேஷமான விதத்தில் உன்னால் நேசிக்க முடிகிறதா? அல்லது நீ நேசிப்பதற்கென்று ஒருசிலரை மாத்திரம் பிரத்தியேகமாக உன் மனதில் வைத்தி ருக்கிறாயா? உன்னை நேசித்து, உனக்கு ஏதோ ஒருசில நன்மை களைச் செய்பவர்களை மாத்திரம் நீ நேசிப்பாயானால் அது மாம்சீக அன்பாகும்; அது தெய்வீக அன்பு (agape) அல்ல. உன்னைத் துக்கப்படுத்திய யாரிடமிருந்தாவது நீ உன் அன்பை விலக்கி, அந்நபரை விட்டு உன் மனதில் பிரிந்துபோயிருப்பா யானால் உனக்குள் இளைப்பாறுதல் இராது. மெய்யான தெய்வீக அன்பு உள்ளவர்களால் மாத்திரமே தேவ சமுகத்தில் ஜீவிக்க முடியும். நாம் தேவனுடைய உள்ளத்தோடு மிக நெருங்கி ஜீவிக்கும் அனுபவம் ஒன்றுண்டு. அதில், நாம் நித்திரைபண்ணிக் கொண்டிருந்தாலும், உணவருந்திக்கொண்டிருந்தாலும், நடந்து கொண்டிருந்தாலும் – எந்த நிலையிலும் மெய்யாகவே தேவ சமுகத்தில் ஜீவித்துக்கொண்டிருப்போம். அதுவே இளைப்பாறு தலும் சமாதானமும் நிறைந்த ஒரு ஜீவியமாகும். இந்த அனு பவத்தைக் காத்துக்கொள்ளும்படி நீ தேவபிள்ளைகள் அனை வரையும் ஒன்றுபோல் நேசிக்கக் கற்றுக்கொள்வாயாக.

எகிப்தில் போராட்டம் மிகுந்த ஒரு ஜீவியம் செய்து கொண்டிருந்த இஸ்ரவேல் புத்திரரைத் தேவன் இளைப்பாறு தலின் தேசமாகிய கானானுக்குக் கொண்டுசெல்ல விரும்பி, அவர் களை வனாந்தரப் பாதையினூடே வழிநடத்தினார். அவர்களோ தேவனுடைய மனதை விளங்கிக்கொள்ளாதவர்களாய் எல்லா வற்றிலும் அவருக்கு விரோதமாக முறுமுறுத்தனர். தேனிட்ட பணிகாரம் போல் இனிமையாயிருந்த தூதர்களின் ஆகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது, அதற்காகவுங்கூட அவர்கள் முறுமுறுத்தனர்! இதினிமித்தம் அவர்களில் பெரும் பான்மையினரால் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று; அவர்கள் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள்!

***வனாந்தர ஜீவியத்தில் இளைப்பாறக் கற்றுக்கொள்ளத் தவறி யவர்களால் இளைப்பாறுதலின் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை.*** நாம் எச்சரிப்படையும்படியாகவே இது எழுதப் பட்டுள்ளது. எந்தச் சூழ்நிலையிலும், எப்படிப்பட்டவர்களோடு வைக்கப்பட்டிருப்பினும் நாம் கர்த்தருக்குள் இளைப்பாறிக் கொண்டிருந்தால் மாத்திரமே நித்திய இளைப்பாறுதலிலும் நாம் பங்கடைய முடியும்.

தாவீது பூமியிலிருந்த பரிசுத்தவான்கள் மேல் தன் முழுப் பிரியத்தையும் வைத்திருந்தான் (சங். 16 : 3). தீர்க்கதரிசிகளையும் ஆசாரியர்களையும் அவன் நேசித்துக் கனப்படுத்தினான். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் பாவஞ்செய்து, அதினிமித்தம் தீர்க்கதரிசி யாகிய நாத்தானால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டான். ஆயினும் அவன் அந்தத் தேவமனுஷனை அதிகமாக நேசித்தான். இந்தச் சம்பவத்திற்குப் பின் தனக்குப் பிறந்த ஒரு பிள்ளைக்கு அவன் நாத்தான் என்று பேரிட்டான் (I நாளா. 3 : 5). ஒருவேளை தீர்க்கதரிசியாகிய நாத்தான் மேல் தான் கொண்டிருந்த அன்பை யும் நன்மதிப்பையும் காண்பிக்கும்படியாகவே அவன் தன் பிள்ளைக்கு அப்பெயரைச் சூட்டியிருக்கக் கூடும்! பின்னாட்களில் அவனுடைய குமாரனாகிய சாலொமோன் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிள்ளைகளுக்கு மேன்மையான உத்தரவாதங்களைக் கொடுத்தான் (I இராஜா. 4 : 5). ரூத் நகோமியைப் பின்பற்றியதின் ஒரு காரணம், அவள் தேவஜனங்களில் பிரியம் வைத்திருந்த தாகும். நாம் கர்த்தரிலும் (சங். 37 : 4 - Eng.), அவருடைய வேதத் திலும் (சங். 1 : 2), அவருடைய பரிசுத்தவான்களிலும் (சங். 16 : 3) பிரியமாயிருக்க வேண்டும் என வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது.

### 4. "*உம்முடைய தேவன் என்னுடைய தேவன்*":

மோவாபியர் பல தெய்வங்களை வழிபட்டுவந்தனர். ஒர்பாள் தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாள் என நாம் வாசிக்கிறோம் (ரூத் 1 : 15).



ஒர்பாளைப் போல தேவபிள்ளைகள் சிலருங்கூட தங்களுக்கென பல தேவர்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய தேவனைப் பார்க்கிலும் வேறு எதையாகிலும், யாரையாகிலும் நாம் அதிகமாக நேசிப்போமாயின், அதுவே, அந்நபரே நாம் வழிபட்டுக் கொண்டிருக்கும் ***அந்நிய தெய்வம்*** ஆகும். ஒரு தேவ ஊழியன் தன் சொந்த ஜனங்கள் பேரில் பற்றுதல் உள்ளவனாயிருந்தால், இவ்வசனத்தின்படி அவன் ஜீவனுள்ள மெய்த்தேவனைத் தவிர தனக்கென்று சுயமாக வேறே அந்நிய தேவர்களை உடைய வனாயிருப்பான். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்பதே முதலாம் கற்பனையாகும் (யாத். 20 : 3). தேவபிள்ளையே, உன் ஜீவியத்தில் அந்நிய தெய்வங் களுக்கு நீ இடமளித்திருப்பாயாகில், இன்றே அவைகளை யெல்லாம் உன்னை விட்டகற்றி (ஆதி. 35 : 4), உன்னைச் சுத்திகரித்துக்கொண்டு, "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்மை யல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள்; இனி உம்மைமாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்துவோம்" (ஏசாயா 26 : 13) என்று அறிக்கை செய்வாயாக. அப்போது மாத்திரமே நீ பரம கானானை நோக்கிய உன் பயணத்தைத் தொடரக் கூடும் (ஆதி. 35 : 4, 5).

தேவஜனங்கள் தங்கள் வாழ்க்கையிலுள்ள 'அந்நிய தெய்வங்களை' இனங்கண்டுகொள்வதெப்படி? நாம் நம்முடைய இருதயத்தை அலசி ஆராய்ந்துபார்த்தாலொழிய அதன் அடித் தளத்தில் மறைந்துகிடக்கும் தெய்வங்களை நம்மால் கண்டு கொள்ள முடியாது. தொலைக்காட்சி, வீடியோ, கார்ட்டூன் போன்ற வற்றைப் பார்த்து ரசிக்க வேண்டுமென்ற ஆவல் தேவபிள்ளைகள் சிலருடைய ஜீவியத்தில் காணப்படும் அந்நிய தெய்வமாய் இருக்கிறது. நீங்கள் தேவனைப் பார்க்கிலும் வேறெதிலாகிலும் அதிக ஆவல்கொண்டு, அதில் அதிக நேரம் செலவழித்துக் கொண்டிருப்பீர்களாயின், அதுவே உங்கள் வாழ்க்கையிலுள்ள 'அந்நிய தெய்வம்' ஆகும். நம்முடைய தேவன் நம்மைப் பற்றி

கடும் வைராக்கியமுள்ளவராயிருக்கிறார் (சக. 1 : 14 ; 8 : 2). நாம் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறோம் (II கொரி. 11 : 2). நம்முடைய நாயகராகிய அவர் நம்முடைய ஜீவிய காலத்தின் ஒவ்வொரு நிமிடமும் அவருக்கே அர்ப்பணிக்கப் பட்டதாயிருக்க வேண்டுமென நம்மைப் பற்றி வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார். "தகப்பனையாவது தாயையாவது என்னி லும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக் கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்று அவர் தம்முடைய ஜனங்களை நோக்கிக் கூறுகிறார் (மத். 10 : 37). நம்மில் வாசமா யிருக்கிற ஆவியானவரும் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையா யிருக்கிறார் (யாக். 4 : 5). நம்மை நடத்தும்படி தேவனால் நியமிக் கப்பட்டுள்ள பரிசுத்தவான்களும் நமக்காகத் தேவ வைராக்கிய மான வைராக்கியங்கொண்டிருக்கிறார்கள் (II கொரி. 11 : 2). ஓர் இளம் பெண் ஒரு வாலிபனுக்கு நியமிக்கப்பட்டிருக்க, அவள் வேறொருவனோடு பத்து நிமிடங்களாகிலும் செலவழிப்பதை அவனால் சகித்துக்கொள்ளக் கூடுமோ? அப்படியே நம் மண வாளனும் ***நாம் அவருக்கே சொந்தம்*** என்கிற விஷயத்தில் நம்மைப் பற்றி மிகுந்த வைராக்கியங்கொண்டிருக்கிறார். ஆகவே அருமையானவர்களே, நாமும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மை யினின்று சற்றும் விலகாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக. அந்நிய காரியங்களில் வீணாகச் செலவழிப்பதற்கு நமக்கு நேரமில்லை. நாம் அவருக்காகச் செய்ய வேண்டிய ஊழியங்கள் எவ்வளவோ இருக்கின்றன! குறுகிய காலம் மாத்திரமே நமக்கு முன்பாக இருக்கிறது. கிறிஸ்துவின் சுபாவத்தைப் பற்றி நாம் கற்றறிந்துகொள்வதற்கு ஏராளம் உண்டு! மேலும் அவருடைய சாயலுக்கு ஒப்பாக நாம் மாற்றப்படும்படி அவருடைய சமுகத்தில் நாம் அதிகமான நேரத்தைச் செலவழிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இப்படியிருக்க, 'அந்நிய தெய்வங்களோடு' செலவழிக்க நமக்கு நேரமேது?



இவ்வேதபகுதியில் ரூத் 'உம்முடைய தேவன் எங்க ளுடைய தேவன்' என்று அல்ல, "உம்முடைய தேவன் ***என் னுடைய*** தேவன்" என்று கூறுவதைக் கவனிக்கவும். தனிப்பட்ட விதத்தில் அவர் தன்னுடைய தேவன் என அவள் குறிப்பிடு கிறாள். தேவனைப் பற்றி அவளுக்கு மேன்மையானதொரு வெளிப்படுத்தல் இருந்தது. ஆனால் நகோமிக்கோ அந்த அளவுக்குத் தன் தேவனைப் பற்றிய வெளிப்படுத்தல் இருக்க வில்லை என்பது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். ரூத்தைப் பார்க்கிலும் நகோமியே தேவனைப் பற்றி அதிகமான வெளிப் படுத்தல் உள்ளவளாயிருந்திருக்க வேண்டும். ஆனால் மெய்யான தேவனைப் பற்றி தன் மாமியினிடத்திலிருந்து சிறிதளவு கற்றுக் கொண்ட ரூத் தன் 'ஆசிரியையைப்' பார்க்கிலும் அதிகமாக அவரை அறிந்திருப்பதாகத் தோன்றுகிறது!

கெட்ட குமாரனைப் பற்றிய உவமையில், தன் தகப்பனின் வீட்டில் தகப்பனோடுகூடவே வசித்துவந்த மூத்த குமாரனே இளையவனைப் பார்க்கிலும் தகப்பனின் சுபாவத்தை நன்றாக அறிந்திருப்பான் என நாம் நினைக்கக் கூடும். ஆனால் அவனோ தன் தகப்பனின் உள்ளத்தை உள்ளபடி விளங்கிக்கொள்ளவில்லை. உண்மையில் இளையகுமாரனே அவனைப் பார்க்கிலும் தன் தகப்பனின் சுபாவத்தை நன்கு அறிந்திருந்தான். தன் தகப்பன் மிகவும் அன்புள்ளவர், வெகுவாய் மன்னிக்கிறவர், இரக்கமும் மனவுருக்கமுமுள்ளவர், கிருபையுள்ளவர், தயவுள்ளவர் என அவன் அறிந்திருந்தான். மூத்த குமாரனோ, 'துன்மார்க்கனான இவனை எவ்வாறு அவர் மன்னித்து அவனுக்குத் தயவு பாராட்டலாம்?' என எண்ணினான். தேவ ஊழியனே, நீ உன் தகப்பனின் வீடாகிய கர்த்தருடைய வீட்டில் இருபது அல்லது முப்பது வருடங்கள் ஜீவித்துக்கொண்டிருக்கக் கூடும். ஆயினும் நேற்றைய தினந்தான் புதிதாக வந்த ஒரு தேவ ஊழியன் உன்னைப் பார்க்கிலும் கர்த்தருடைய அன்பு, பரிசுத்தம், கிருபை போன்றவற்றை அதிகமாக அறிந்திருக்கக் கூடும். கர்த்தருடைய

வீட்டில் பல வருடங்கள் ஜீவிப்பதினால் ஒருவன் கர்த்தரை நன்றாக அறிந்திருக்கிறான் என்று கூறுவதற்கில்லை.

நகோமியைப் பார்க்கிலும் ரூத்துக்குத் தேவனைப் பற்றிய மேன்மையான வெளிப்படுத்தலும், அவரோடு தனிப்பட்ட உறவும் இருந்தது. நகோமி தன் தேவனைக் குறித்து, சர்வவல்லவர் தனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டதாகவும், தன்னை வெறுமை யாக்கி, சிறுமைப்படுத்தி, கிலேசப்படுத்தியதாகவும் முறையிடுகிறாள் (ரூத் 1 : 20, 21). சர்வவல்லவர் என்பதற்கு, 'தாயைப் போன்ற தேவன்' (Elshadai) என்று பொருள். ஒரு தாய் தன் பிள்ளைக்கு மிகுந்த கசப்பை வருவிக்கக் கூடுமோ? இது எவ்வளவு புதுமையா யிருக்கிறது! நகோமிக்கு, 'தாயைப் போன்றவராகிய' தேவன் ஒரு 'மாமியாரைப்' பார்க்கிலும் மோசமானவராகத் தென்பட்டார்! ஆனால் ரூத்தைப் பாருங்கள்! அவளுக்குத் தேவனைப் பற்றி ஒரு மேன்மையான வெளிப்படுத்தல் இருந்தபடியினால், அவ ளால் தன் மாமியான நகோமியைத் தன் சொந்தத் தாயைப் பார்க்கிலும் அதிகமாக நேசிக்க முடிந்தது! அவளுக்கு மோவாப் தேசத்தில் ஒரு தாய்வீடும் பெற்றோரும் இருந்தபோதிலும், அவள் தன் மாமியோடு செல்லத் தீர்மானித்துவிட்டாள்!

'நீ தேவனைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் உன் மனதில் உடனடியாக என்ன தோன்றுகிறதோ அப்படிப்பட்டவராகவே தேவன் உனக்கு இருக்கிறார்' என ஒரு தேவமனிதன் கூறுகிறார். நீ தேவனைப் பற்றி நினைக்கும்போது, அவர் பயங்கரமானவர் என்றும், அச்சுறுத்தக் கூடியவர் என்றும் உனக்குத் தோன்றுமாயின், உன் வாழ்க்கையில் ஏதோ தவறு இருக்கிறது என்றும், தேவ னோடுள்ள உன் உறவு சரியான நிலையில் இல்லை என்றும் பொருள். மாறாக, தேவனைப் பற்றிச் சடுதியாக நினைக்கும்போது, அவருடைய அன்பும் மனதுருக்கமுமே உனக்கு முன்பாக வருமாயின், அது தேவனோடு உனக்குள்ள நல்லுறவையும் ஐக்கியத்தையும் புலப்படுத்தும். தேவனைப் பற்றிய உன் அபிப் பிராயம் உன் ஜீவியத்தின் பிரதிபலிப்பாகவே இருக்கும். பரிசுத்த



மாக்கப்பட்ட தேவமனுஷனாயிருந்த மோசேக்குத் தேவன் இரக்க மும், உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவராக வெளிப்பட்டார். அவன் நேரடியாகத் தேவனுடைய சத்தத்தைக் கேட்டான். உள்ளாகப் பரிசுத்தமாக்கப்படாதவர்களாயிருந்த இஸ்ர வேல் புத்திரரோ தேவ சத்தத்தைக் கேட்க விருப்பமற்றவர்களாய், தாங்கள் சாகாதபடிக்குத் தேவன் தங்களோடு நேரடியாகப் பேச வேண்டாம் என்று வேண்டிக்கொண்டார்கள் (யாத். 20 : 19).

நகோமியும் ரூத்தும் ஒரே தேவனையே பின்பற்றினர். ரூத் தேவனைப் பற்றி அறியவந்து சிறிதுகாலமே ஆகியிருந்தது. ஆயினும் அக்குறுகிய காலத்திற்குள் அவள் அடைந்திருந்ததான தேவனைப் பற்றிய சிறிதளவு அறிவு, தேவனுக்குத் திறக்கப் பட்டதாயிருந்த அவளுடைய இருதயத்தில் ஒரு மாபெரும் மாறுதலை உண்டாக்கிவிட்டது! நாம் எவ்வளவு நீண்ட காலம் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்பது அல்ல, எவ்வளவு சீக்கிரமாக நம்முடைய சுபாவம் அவருடைய சுபாவத்திற்கு ஒப்பாக மறுரூபமடைகிறது என்பதே முக்கியமான விஷயமாகும். நீங்கள் ஒருவேளை முப்பது அல்லது நாற்பது வருடங்கள் தேவ னுக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கக் கூடும்; ஆயினும் உங்களி லுள்ள கோபம், எரிச்சல், பகையுணர்வு, தப்பெண்ணங்கொள்ளுதல், மன்னியாதிருத்தல் போன்றவற்றின் மேல் நீங்கள் இன்னும் வெற்றி பெறாதவர்களாயிருக்கக் கூடும். ஆனால் வேறொரு நபருக்குள் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே தேவன் தமது வேலைகள் யாவற்றையும் நேர்த்தியாகச் செய்து முடித்துவிடக் கூடும். இது நம் நீண்டகால அனுபவத்தை அல்ல, ஒப்புக்கொடுத்தலையே சார்ந்தது.

தேவன் எவ்வாறு தனிப்பட்ட விதத்தில் ஒரு நபரின் சொந்தத் தேவனாகக் கூடும்? ஒருவன் தேவனை எவ்விதம் அவர் தனக்கு மாத்திரமே உரியவர் என்பது போல, 'என் தேவன்' என்று உரிமைபாராட்ட இயலும்? தேவன் தனிப்பட்ட விதத்தில் உன்னுடைய தேவனாக வேண்டுமாயின், "என் தேவனே, உமக்குப்

பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" (சங். 40 : 8) என்பது உன் அறிக்கையாயிருக்க வேண்டும். தேவனுக்குப் பிரியமானதை அல்லது தேவனுடைய சித்தம் செய்தலை நாம் விரும்பித் தெரிந்துகொள்ளும்போது - தேவசித்தம் செய்வதே நம்முடைய பிரியமாகவும் மகிழ்ச்சியாகவும் மாறும்போது - தேவன் தனிப்பட்ட விதத்தில் நமக்குச் சொந்தமாகிறார். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும்போது அல்ல, ***பிரியத்துடன்*** தேவசித்தம் செய்யும்போது மாத்திரமே அவரைத் தனிப்பட்ட விதத்தில் நம்முடைய சொந்தத் தேவனாக அனுபவிக்க இயலும். நாம் தேவனுக்காகச் செய்யும் சில கிரியைகளை மனமுவந்து, விருப்பத் தோடு அல்ல, நமக்குச் சொல்லப்பட்டபடியினால் கட்டாயத்தின் பேரில் மாத்திரம் கீழ்ப்படிந்து செய்யக் கூடும். ஒரு தேவ ஊழியன் தான் இடமாற்றம் செய்யப்படும் இடத்திற்கு மனப்பூர்வமாக, விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் அல்ல, தனக்குச் சொல்லப் பட்டதற்குக் கீழ்ப்படிந்தாக வேண்டுமே என்ற கட்டாயத்தின் பேரில் மாத்திரம் செல்லக் கூடும். அவன் அங்கு செல்ல மறுக்க வில்லை என்பது உண்மையே; ஆயினும் அவன் சந்தோஷத் துடன் அங்கு செல்லவில்லை. இப்படிப்பட்டவர்கள் தேவனை 'என் தேவனே' என்று உரிமையுடன் அழைக்க முடியாது. சில தேவ ஊழியர்கள் தாங்கள் பாடுதல், பிரசங்கித்தல் போன்ற ஊழியங்களைச் செய்வதற்காகவே கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக எண்ணி, பணிவிடை செய்தல், வியாதியஸ்தருக்கு உதவி செய்தல், மற்றும் விசுவாச வீட்டிலுள்ள சரீரப்பிரகாரமான வேலைகளைச் செய்தல் போன்றவற்றைத் தவிர்க்க விரும்புகின்றனர். கர்த்தரைச் சேவிக்கும் தேவபிள்ளையே, உன் வாழ்நாட்கள் முழுவதும் கர்த்தருடைய வீட்டில் மிக எளிமையான ஒரு ஊழியமே உனக்குக் கொடுக்கப்பட்டாலும், நீ அதைப் ***பிரியத்துடன்,*** மனமகிழ்ச்சியோடு செய்வாயாகில், நித்தியம் முழுவதிலும் உன்னுடைய ஜீவியம் நற்கந்தம் வீசும். ***உன் ஊழியத்தைப் பார்க்கிலும் உன் ஜீவியமே மிகவும் முக்கிய மானது.*** பாடுதல், பிரசங்கித்தல், ஆத்தும ஆதாயம் செய்தல்



போன்றவை உன் ஜீவியத்தைப் போல அவ்வளவு முக்கிய மானவை அல்ல. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத் திக்கொண்டாலும் தன் சொந்த ஜீவியத்தை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? ஆகவே நீ உன் ஊழியத்தைப் பார்க்கிலும் உன் ஜீவியத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிப்பா யாக. நம்முடைய முன்னாள் தலைமைப் பாஸ்டராயிருந்த பாஸ்டர் A.C. தாமஸ் அவர்கள் தன் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், சுகவீனமாயிருந்த ஒரு விசுவாசியின் வீட்டில் ஆறு மாதங்கள் தங்கியிருந்து அவருக்குப் பணிவிடை செய்யும்படி யாக அனுப்பப்பட்டார். அவர் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து சென்றார்; தேவன் பின்னாட்களில் அவரை எவ்வளவாகக் கனம் பண்ணினார் என்பதை நாம் அறிவோம்! கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகளில் பிரியப்படுகிறவராயும், கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றுவதையே தன் விருப்பமாகக் கொண்ட வராயும் இருந்த அப். பவுல் (II கொரி. 12 : 10 ; அப். 20 : 24), 'என் தேவன்', 'என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிற வருமான தேவன்', 'என் சுவிசேஷம்' என்றெல்லாம் உரிமை யுடன் குறிப்பிடுகிறார். நாமும் தேவனைத் தனிப்பட்ட விதத்தில் நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும்படி தேவசித்தத்தைப் ***பிரியத் துடன்*** செய்வோமாக.

### 5. '*நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன்*':

'நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன்' என்பது, ஒரு தேவ ஊழியன் கர்த்தரோடு செய்திருக்க வேண்டிய உடன்படிக்கைக்கு நிழலாட்டமானதாகும். ஒரு மணவாளனும் மணவாட்டியும் தங்கள் விவாகத்தின்போது ஒருவரோடொருவர் செய்துகொள்ளும் உடன்படிக்கையைப் போல, ஒரு மெய்யான தேவ ஊழியன் கர்த்தரோடு ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசிக் கிறான். விவாக உடன்படிக்கையில் அத்தம்பதிகள், 'மரணம் நம்மைப் பிரிக்குமட்டும்' என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு

தேவ ஊழியனைப் பொறுத்த வரையிலோ, மரணமும் அவனைக் கர்த்தரை விட்டுப் பிரிப்பதில்லை. மாறாக, அது உண்மையில் தன் பரலோக மணவாளனோடு அவனை ஒரு நிலையான நித்தியமான விவாக உறவுக்குள்தான் கொண்டுவருகிறது! (ஓசியா 2 : 19).

மேலும், 'நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரண மடைவேன்' என்பது ஒரு தேவபிள்ளை தேவனுடைய சித்தத்தின் மத்தியில் இருப்பதையும் குறிக்கும். நாம் ஒருவேளை நம் வாழ்க்கைப் பயணத்தின் பாதி தூரம் வரை தேவசித்தத்தின் மத்தியில் இருந்திருக்கக் கூடும். ஆனால் நாம் நம்முடைய ஜீவியத்தின் முடிவுபரியந்தமும் தேவனுடைய சித்தத்தின் மத்தி யிலேயே இருக்கக் கவனமாயிருக்க வேண்டியது அவசியமாகும். ரூத்தின் ஜீவியத்தில் காணப்பட்ட ஒரு விசேஷம் யாதெனில், அவள் பல பிரதிஷ்டைகளைச் செய்தது மாத்திரமல்ல, முடிவு பரியந்தம் அவற்றில் உண்மையுள்ளவளாகவும் இருந்தாள். தேவ பிள்ளைகள் சிலர் பல வருடங்களாகத் தேவனுக்கு உண்மையுள்ள வர்களாயிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் ஜீவியத்தின் முடிவை நெருங்கும்போது, அது வரை தாங்கள் கர்த்தர் மேல் கொண்டிருந்த நம்பிக்கையையும் தெய்வீக சுக சத்தியத்தின் மேலுள்ள விசுவாசத்தையும் இழந்துபோகிறார்கள். நம்முடைய ஜீவியத்தின் கடைசி க்ஷணப்பொழுது வரையிலும் நாம் தேவ சித்தத்தின் மத்தியிலேயே இருக்க வேண்டும் என்பதே, 'நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன்' என்பதின் ஆவிக்குரிய அர்த்தமாகும். குறிப்பாக நாம் நம்முடைய ஓட்டத்தின் முடிவை நெருங்குகையில்தான் முன்னிலும் அதிக கவனமாயிருக்க வேண்டும். மெய்யாகவே நாம் கடைசிக் காலத்தின் கடைமுனையில் நின்றுகொண்டிருக்கிறோம். இப்போது நாம் பதி னோராம் மணி நேரத்தில் அல்ல, பன்னிரண்டாம் மணி நேரத் திற்கு மிக அருகாமையில் வந்து சேர்ந்திருக்கிறோம். ஆகவே ***இப்போது*** மெய்யாகவே தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொள்ளு



கிறவர்கள் பாக்கியவான்கள். ***இப்போது*** மெய்யான பரிசுத்த ஜீவியம் செய்கிறவர்கள் பாக்கியவான்கள். தேவபிள்ளையே, கடந்த காலத்தில் உன் ஜீவியத்தில் சில தவறுகள் வந்திருக்கக் கூடும்; ஆனால் ***இப்போது*** நீ அப்படிப்பட்ட தவறுகளுக்கு இடமளிக்கலாகாது; ஏனெனில் கர்த்தர் வெகு சீக்கிரமாய் வரப் போகிறார். அவர் எப்போது வருவார் என்று நாம் அறியா திருப்பதால், 'அவர் ***இப்போது*** வந்துவிடுவார்' என்ற உணர் வுடனேயே நாம் எப்போதும் ஜீவிக்க வேண்டும். 'அவர் *இன்று* வருவார்' என்ற உணர்வோடு அல்ல, அவர் *இப்போது* வருவார் என்ற உணர்வுடனேயே நாம் ஜீவிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.

'நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன்' என்பதின் மற்றொரு ஆவிக்குரிய அர்த்தம், 'என் ஜீவியத்தில் நான் மரிக்க வேண்டிய சகலத்திற்கும் மரிக்க நான் ஆயத்த மாயிருக்கிறேன்' என்பதாகும். "நான் அநுதினமும் சாகிறேன்" என அப். பவுல் கூறுகிறார் (I கொரி. 15 : 31). நம்முடைய சுய விருப் பங்கள், அபிப்பிராயங்கள், குறிக்கோள்கள், திட்டங்கள், சுயசித்தம் போன்ற யாவற்றிற்கும் நாம் அனுதினமும் மரிக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு மரணத்துக்கேதுவாகக் கீழ்ப்படிந்தார் (obedi-ent unto death) என நாம் வாசிக்கிறோம் (பிலி. 2 : 8 – Eng.). மரண பரியந்தம் (until death) கீழ்ப்படிவதற்கும், மரணத்துக்கேதுவாகக் (unto death) கீழ்ப்படிவதற்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக, ஒரு கூலியாள் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை விரும்பாவிட்டாலும், அதைச் செய்து முடிக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின் பேரில் அவ்வேலையைச் செய்வான். அவ்வாறே ஓர் அடிமையும் தனக்கு நியமிக்கப்படும் வேலைகளை, வேறு வழியில்லையே என்ற எண்ணத்துடன், கடமைக்காக மாத்திரம் தன் மரணபரியந்தம் செய்துகொண் டிருப்பான். இது மெய்யான கீழ்ப்படிதல் ஆகாது. இப்படி மனதின்றிக் கீழ்ப்படிவதின் மூலம் அவர்களுடைய சுபாவம்

மாற்றப்படுவதில்லை. இதுவே ***மரண பரியந்தம் கீழ்ப்படிதல்*** ஆகும். நாமோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போல மரணத்திற்கேதுவாகக் கீழ்ப்படிய வேண்டும். மரணத்திற்கேதுவான கீழ்ப்படிதல் என்பது, நாம் விரும்பாத ஒரு வேலையைச் செய்யும்படி நம்மிடம் ஒப்புவிக்கப்படும்போது நம் உள்ளத்தில் எரிச்சலோ, கோபமோ, முறுமுறுப்போ இன்றி, அத்தீய சுபாவங் களுக்கெல்லாம் மரித்தவர்களாய், அவ்வேலையை விருப்பத் துடன் செய்து நிறைவேற்றுதலாகும். நாம் இவ்விதம் கீழ்ப்படியும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நம் பழைய மனுஷனின் சுபாவத் திற்கு ஒரு மரணம் உண்டாகிறது. பழைய சுபாவங்களுக்கு மரிக்கும்படியான உறுதியான தீர்மானத்துடன், பிரியத்தோடே தேவசித்தம் செய்தலே ***மரணத்திற்கேதுவாகக் கீழ்ப்படிதல்*** ஆகும். நாம் அவ்விதம் தேவசித்தத்தைப் பிரியத்தோடே செய்யும்போது நம் சுயசித்தம், சுய விருப்பங்கள், சுயநலம், சுயமான திட்டங்கள் போன்ற யாவற்றுக்கும் மரணம் உண்டாகிறது. கர்த்தராகிய இயேசுவின் சிலுவை மரணம், அவர் தேவசித்தத்தைப் பிரியத்தோடே செய்து நிறைவேற்றிய இடமாகும். அவர் மரணத்துக்கேதுவாகக் கீழ்ப்படிந்தார். நாமுங்கூட அவரைப் போல தேவசித்தத்தின் மத்தியிலேயே மரிக்கத் தீர்மானிப்போமாக!

'கிறிஸ்துவுடனே கூட மரித்தல்' என்றால் என்ன? "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கர்த்தராகிய இயேசு உரைத்திருக்கிறார் (லூக்கா 9 : 23). ஒருவன் சிலுவையிலறையப்பட வேண்டுமாயின் அதற்குச் சிலுவை மாத்திரம் போதாதே; ஆணிகளும் சுத்திய லுங்கூட அவசியமன்றோ? கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையை மாத்திரம் சுமந்துகொண்டு போனார்; அவரைச் சிலுவையிலறையும்படி சென்றவர்கள் ஆணிகள், சுத்தியல் போன்ற மற்றவைகளை எடுத்துக்கொண்டு சென்றிருந்திருப்பர். நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு தம்மைப் பின்பற்றும்படி கர்த்தர்



நம்மை அழைத்திருப்பாராயின், நமக்காகச் சுத்தியலையும் ஆணிகளையும் சுமந்துகொண்டு வரும்படி வேறு யாரையாகிலும் அவர் தமது உண்மையின்படியே திட்டமிட்டு ஆயத்தமாக்கி யிருப்பாரன்றோ! வேறெதையும் சேர்த்து அல்ல, நம் சிலுவையை மாத்திரமே எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றும்படி அவர் நமக்குச் சொல்லியிருக்கிறபடியினால், சகோதரன் சுத்தியல்களும், சகோதரி ஆணிகளுமெல்லாம் (Bro. Hammers & Sis. Nails) ஏற்கனவே முன்னேற்பாடாக நமக்காகத் திட்டமிடப்பட்டு ஆயத்தமாயிருக்கின்றனர். நம்மைச் சிலுவையிலறைவதற்கு அவசியமான மற்ற அனைத்தையும் சுமந்துகொண்டுவரும்படி அவ்வேலையைச் செய்யத் தகுந்தவர்கள் அதற்காக முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். சபையிலும் அப்படிப்பட்டவர்கள் இருப் பார்கள். நாம் அவர்களை வெறுக்காமல், அவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. ஏனெனில், நம் பழைய சுபாவங்கள் எல்லாவற்றிற்கும் நாம் மரிக்கும்படியாகவே நம்மைக் குத்தவும், நொறுக்கவும், தகர்க்கவும், உருவக்குத்தவும் தேவன் அவர்களை ஏற்படுத்தியிருக்கிறார்

### *6. 'அங்கே நான் அடக்கம்பண்ணப்படுவேன்':*

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவஜனங்கள் தங்கள் சொந்தத் தேசத்திலேயே அடக்கம்பண்ணப்படுவது வழக்கமா யிருந்தது. ஆபிரகாமும் சாராளும், ஈசாக்கும் ரெபெக்காளும், யாக்கோபும் லேயாளும், யோசேப்பும் தங்கள் சொந்தத் தேச மாகிய கானானில் அடக்கம் பண்ணப்பட்டார்கள். யாக்கோபும் யோசேப்பும் எகிப்தில் மரணமடைந்தபோதிலும் தாங்கள் கானா னில்தான் அடக்கம்பண்ணப்பட வேண்டுமென்று தங்கள் மரணத் தருவாயில் ஆணையிடுவித்துக்கொண்டனர். அவ்வண்ணமே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

தேவ ஊழியர்களின் சொந்தத் தேசம் எது? அவர்கள் தாங்கள் எங்கே ஊழியம் செய்கிறார்களோ அதையே இப்பூமியில்

தங்களுடைய சொந்தத் தேசமாகக் கொள்ள வேண்டும். தேவ ஊழியர் ஒருவர் தூரமான ஒரு தேசத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டபோது, *'நான் எங்கே மரிக்கிறேனோ, அங்கேயே அடக்கம் செய்யப்பட வேண்டும்'* என்று ஒரு உயில் எழுதி விட்டுச் சென்றார். இதுவே தேவ ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய சரியான மனப்பான்மையாகும். புதிய ஏற்பாட்டுத் தேவ ஊழியர் களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய அடக்கம் ஒரு பொருட்டல்ல. ஊழியம் செய்யும்படி தாங்கள் எங்கே வைக்கப் பட்டிருக்கிறார்களோ அந்த இடத்தையே தங்கள் சொந்தத் தேசமாக எடுத்துக்கொள்பவர்களுக்கு அங்கு ஊழியம் செய்வ தற்குத் தேவையான ஏராளமான கிருபையைக் கர்த்தர் தந்தரு ளுவார். உதாரணமாக, நீங்கள் ஸ்பானிய மொழி (Spanish) பேசப் படும் ஓர் இடத்திற்கு ஊழியம் செய்யும்படி அனுப்பப்படு கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். நீங்கள் அம்மொழியை அறியாதவர்களாயிருந்தும், அந்த இடத்தை மெய்யாகவே உங்கள் சொந்தத் தேசமாக ஏற்றுக்கொண்டு 'இவர்கள் என்னுடைய ஜனங்கள்' என்ற மனப்பான்மையுடன் அங்கு ஊழியம் செய்வீர்க ளாயின், உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களைக் கனம்பண்ணு வார். மருத்துவராய்ப் பணியாற்றிக்கொண்டிருந்த ஒரு சகோதரி (Sis. M.N. ஜாய்ஸ்) தன் மேன்மைகளையெல்லாம் உதறித் தள்ளி விட்டு, கர்த்தரைச் சேவிக்க முன்வந்தார்கள். அவர்கள் அமெரிக்கா வில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, அங்கிருந்து வெகு தொலைவிலுள்ள பப்புவா நியூகினி என்னும் தீவுகளில் புதிதாக ஊழியத்தை ஆரம்பிக்கும்படியாக அனுப்பப்பட்டார்கள். அத் தீவுகளின் குடிகளான மலைவாசிகளின் வாழ்க்கைத் தரம் மிகத் தாழ்வானதாக, வருந்தத்தக்க நிலையில் இருந்தது. அன்றாட வாழ்க்கை முறைமை அங்கு மிகக் கடினமானதாயிருந்தது. கீழே தளமோ, சுற்றிலும் செங்கற்சுவர்களோ இல்லாத குடில்கள்; சாலைகளே இல்லாத கரடுமுரடான வழிகளையுடைய கிராமங்கள்; மின்சாரம், எரிபொருள், வடிகால்திட்டம் போன்ற அடிப்படை வசதிகளும் இல்லாத மலைப்பிரதேசங்கள்; நாற்காலி, மேசை



இவற்றைக் கண்டிராத பழங்குடிகள்! இதுவே அத்தீவுகளின் நிலை! ஆனால் அவர்கள் மத்தியில் தங்கியிருந்து அவர்களுக்கு ஊழியம் செய்வது அச்சகோதரிக்கு மிகவும் பிரியமாயிருந்தது. *'கர்த்தராகிய இயேசு அவர்களோடுகூட ஜீவிப்பதை நான் காண்கிறேன்; அவரே அவர்களோடுகூட ஜீவிப்பாரென்றால், நான் ஏன் அவர்களோடு வசிக்க முடியாது?'* என்பது அச்சகோதரியின் சவாலாயிருந்தது. அவர்கள் அவ்விடத்தாரைத் தன் சொந்த ஜனங்களாகவே கண்டார்கள்; அம்மக்களும் அச்சகோதரியைத் தங்கள் சொந்தத் தாயாகவே கண்டார்கள். அச்சகோதரி கர்த்தரின் சேவையில் தன் ஜீவனைப் பானபலியாக வார்த்துவிட்டு, வெற்றியுடன் ஆண்டவரின் பாதத்தைச் சென்றடைந்துவிட்டார்கள். நாமும் இப்படிப்பட்டவர்களை மாதிரியாகக் கொண்டு அவர் களைப் பின்பற்றுவோமாக.

கானானுக்குச் சென்ற ரூத் ஒருக்காலும் மோவாப் தேசத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை. தான் கானானிலேயே ஜீவித்து, மரித்து, அடக்கம்பண்ணப்பட வேண்டுமென அவள் தீர்மானித்துவிட்டாள்! மெய்யான தேவ ஊழியன் ஒருவனுக்கு, அவன் திரும்பிச் செல்வதற்கென ஓர் இடம் இராது. அவன் எங்கே ஊழியம் செய்துகொண்டிருக்கிறானோ, அதுவே அவனுடைய சொந்தத் தேசமாயிருக்கும். அவ்விடத்தின் மொழி, ஆகாரம், தட்பவெப்பநிலை போன்ற யாவுமே முற்றிலும் வித்தியாசமா யிருப்பினும், அவற்றைப் பழக்கிக்கொண்டு அவற்றின் மத்தியில் வெற்றிகரமான ஓர் ஊழியம் செய்ய கர்த்தர் அவனுக்குக் கிருபை அருளுவார். அது கடுங்குளிர்ப் பிரதேசமாகவோ, அல்லது அதிக வெப்பமான இடமாகவோ இருப்பினும், அவ்விடத்துத் தட்ப வெப்ப நிலை அவனைப் பாதிக்க மாட்டாது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற தேவதாசர்கள் போடப்பட்ட அக்கினிச் சூளை, சாதாரணமாகச் சூடாக்கப்படுவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாகச் சூடாக்கப்பட்டிருந்தது. அதினின்று வெளி வந்த ஜுவாலையின் அனல், அவர்களைச் சூளைக்குள்

போடும்படி தூக்கிக்கொண்டுபோன பராக்கிரமசாலிகளையே கொன்றுபோடுமளவிற்கு அவ்வளவு கடுமையாயிருந்தது! சற்று தொலைவில் நின்றுகொண்டுதான் அவர்கள் தேவதாசர்களை அதினுள் வீசியெறிந்திருப்பர்; ஆயினும் அவர்கள் தீயினால் தகிக்கப்பட்டுப்போயினர். ஆனால் அச்சூளையின் நடுவில் போய் விழுந்த அத்தேவதாசர்களுக்கோ ஒரு சேதமும் உண்டாக வில்லை! அவர்களுடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ் செய்யவில்லை! அவர்களுடைய தலைமயிர்கூட கருகவில்லை! அவர்கள் வெளியே வந்தபோது அக்கினியின் மணம்கூட அவர் கள்மேல் வீசவில்லை! (தானி. 3 : 27). அருமையான தேவ ஊழியனே! தேவன் உன்னை எந்த இடத்திற்கு அனுப்புகிறாரோ அந்த இடத்தையே உன் சொந்தத் தேசமாக நீ ஏற்றுக்கொள்வா யாகில், அங்குள்ள எல்லாச் சூழ்நிலைகளையும் மேற்கொள்ள அவர் உனக்குக் கிருபை அருளுவார். நீ தேவனையே நோக்கிப் பார்த்தால் அவர் அவ்விடத்தின் மொழி, ஆகாரம், தட்பவெப்பம், ஜனசமூகம், மற்றும் அனைத்தையும் உனக்கு உகந்தவையாக்கி விடுவார். ஒருவனுடைய சொந்தத் தேசம் எல்லா விதங்களிலும் அவனுக்கு உகந்ததாய் இருக்குமன்றோ? அப்படியே மெய்யான பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர் எங்கு சென்றாலும் அது அவர்களுடைய சொந்தத் தேசமாயிருப்பதால், அங்குள்ள யாவும் அவர்களுக்கு உகந்தவையாய் இருக்கும்.

மெய்யான தேவ ஊழியன் ஒருவன் எங்கே அனுப்பப் பட்டாலும், அவனுக்குத் தன் தாயகம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் ஒருபோதும் வராது. தேவ ஊழியர் ஒருவர் 1980 – ஆம் ஆண்டு மேற்கத்திய நாடுகளில் ஊழியம் செய்யும்படி இந்தியா விலிருந்து அனுப்பப்பட்டார். போகிற வழியில் கர்த்தர் அவரிடம், ‘நீ இந்தியாவை மறந்துவிடு; இந்தியாவுக்குத் திரும்பிவரும் நினைவையே விட்டுவிடு’ என்று பேசினார். தேவ கிருபை யினால் அப்போதே அவர் அந்தத் தீர்மானத்தைச் செய்தார். அவர் பிரான்ஸ் தேசத்திலுள்ள பாரீஸ் நகரத்தை அடைந்தார். அங்கு



யாவரும் பிரெஞ்சு மொழியிலேயே பேசினர். எங்கும் உறை பனியும் கடுங்குளிருமாயிருந்தது. ஆனாலும் அவர் தன் சொந்த வீட்டில் இருப்பதைப் போன்றே உணர்ந்தார். அவருக்கு அங் கிருந்த சூழ்நிலைகள் எதுவுமே வித்தியாசமாகத் தோன்றவில்லை. பிரெஞ்சு மக்களைத் தன் சொந்த மக்களாகவே அவர் கண்டார்! பிரதிஷ்டையின் ஜீவியம் ஒரு இரகசியமாகும். கல்வாரி அன்பு நம் உள்ளத்தை நிறைத்திருக்குமாயின், நம்மால் யாவரையும் நம் தகப்பனாகவோ, தாயாகவோ அல்லது பிள்ளையாகவோ காண இயலும். நாம் தூய்மையான தெய்வீக அன்பாகிய கல்வாரி அன்பினால் நிறைந்திருப்போமாயின், நம் ஜீவியமும் ஊழியமும் பரலோகம் போலவே காணப்படும். ஒருவன் கல்வாரி அன்பி னால் மாத்திரமே மெய்யான பிரதிஷ்டையுள்ள ஊழியத்தைச் செய்யக் கூடும்.

**ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தரும், தேவாதி தேவனுமாகிய நமதருமை ஆண்டவர் இயேசுவுக்கு - இப்பூமியில் மாத்திரமல்ல, நித்தியம் முழுவதிலும் - ஊழியம் செய்தலைப் பார்க்கிலும் அதிக இனிமையானதும், சிறப்பானதும், உயர்வானதும், மேன்மையானதும் வேறொன்றில்லை!** ஆகவே அன்பார்ந்த வாலிபனே, உனக்களிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு வாழ்க்கையில் நீ மிகச் சிறந்ததைத் தெரிந்துகொள்வாயாக! “யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்” என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தை நீ கேட்பாயாகில், “இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” என்று நீ கூறுவாயா? (ஏசாயா 6 : 8).

❊ உலகிலேயே மிகச் சிறந்த நபர், பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஒரு தேவ ஊழியனே! (சங். 16 : 3 ; 84 : 4).

பரலோகத்தில் பரிசுத்தவான்கள் யாவரிலும் மிகச் சிறந்த நபராயிருக்கப் போவதும் பிரதிஷ்டையுள்ள ஒரு தேவஊழியனே! (வெளி. 22 : 4).

உலகில் நாம் வாழ்வதற்கு மிகச் சிறந்த இடம் கர்த்தருடைய வீடே! (சங். 84 : 1 , 10).

முடிவில் நாம் மரிப்பதற்கான மிகச் சிறந்த இடமும் கர்த்தருடைய வீடே! (சங். 27 : 4 ; 84 : 1 , 3).

நாம் கூடி வாழ்வதற்கேற்ற மிகச் சிறந்த ஜனங்கள் தேவ ஊழியர்களே! (சங். 133 : 1 – 3).

வாழச் சிறந்ததொரு வாழ்க்கை, கர்த்தரின் சேவையில் செலவிடப் படும் ஒரு வாழ்க்கையே! (யோவான் 12 : 26).

கர்த்தருக்குச் சேவை புரிவதற்கான மிகச் சிறந்த பருவம், உன் வாலிபப் பருவமே! (பிர. 12 : 1 ; புல. 3 : 27).

மிகச் சிறந்த அழைப்பு, ஒரு தேவ ஊழியனாயிருக்கும்படியான அழைப்பே! (மத். 19 : 21 ; எபி. 5 : 4).

மிகச் சிறந்த பிரதிஷ்டை, தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் அண்ண கராய் ஜீவிப்பதற்கான பிரதிஷ்டையே! (ஏசாயா 56 : 3 – 7).

மிகச் சிறந்த வெளிப்படுத்தல்கள் தேவ ஊழியருக்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன! (மத். 13 : 11).

மிகச் சிறந்த விசுவாசம் தேவ ஊழியருக்கென்றே வைக்கப்பட்டுள்ளது! (லூக்கா 22 : 35 ; கலா. 2 : 20)

மிகச் சிறந்த ஆரோக்கியம் தேவ ஊழியருக்கே வாக்குப்பண்ணப் பட்டுள்ளது! (யாத். 23 : 25 ; சங். 35 : 27 ; 92 : 13 – 15).

மிகச் சிறந்த திருப்தி தேவ ஊழியருக்கே உரியது! (சங். 65 : 4).

கர்த்தர் பிரியப்படுகிற மிகச் சிறந்த அழகு தேவ ஊழியரிலேயே உள்ளது! (சங். 45 : 10, 11 ; 90 : 16, 17 - Eng.)

மிகச் சிறந்த மகிழ்ச்சி தேவ ஊழியருக்கே உரியது! (ஏசாயா 65 : 14 ; 56 : 7).

தேவனின் மிகச் சிறந்த விசாரிப்பு தேவ ஊழியருக்கே உரியது! (ஏசாயா 49 : 14 – 16 ; 54 : 17).

தேவனின் மிகச் சிறந்த திட்டம் தேவ ஊழியருக்கே உரியது! (சங். 102 : 15).

தேவனின் மிகச் சிறந்த வாக்குத்தத்தங்கள் தேவ ஊழியருக்கே உரியவை! (ஏசாயா 56 :4 , 5).

மிகச் சிறந்த அபிஷேகம் தேவ ஊழியருக்கே உரியது! (ஏசாயா 42 : 1 ; சங். 45 : 7).

மிகச் சிறந்த எதிர்காலம் தேவ ஊழியருக்கே உரியது! (சங். 102 : 13).



கிறிஸ்து இயேசுவோடு மிகச் சிறந்த உறவு தேவ ஊழியருக்கே உரியது! (ஆமோஸ் 3 : 7 ; மாற்கு 3 : 14 ; யோவான் 15 : 15).

தேவனின் மிகச் சிறந்த அன்பு தேவ ஊழியருக்கே உரியது! (யோவான் 17 : 23).

மிகச் சிறந்த சமாதானம் தேவ ஊழியருக்கே உரியது! (யோவான் 14 : 27).

மிகச் சிறந்த கிருபை தேவ ஊழியருக்கே உரியது! (I கொரி. 15 : 10).

மிகச் சிறந்த வரம் தேவ ஊழியருக்கே உரியது! (II கொரி. 9 : 15 ; எபே. 3 : 7)

மிகச் சிறந்த தூய்மையும் தாழ்மையும் திவ்ய சுபாவங்களும் தேவ ஊழியருக்கே உரியவை! (I தீமோ. 4 : 12 ; அப். 20 : 19).

பரலோகத்தின் மிகச் சிறந்த ஞானமும் அறிவும் தேவ ஊழியருக்கே உரியவை! (எபே. 3 : 5 , 6 ; I கொரி. 2 : 16).

மிகச் சிறந்த ஆவிக்குரிய ஐசுவரியங்கள் தேவ ஊழியருக்கே உரியவை! (எபே. 3 : 8).

மிகச் சிறந்த மரணம் தேவ ஊழியரின் மரணமே! (சங். 116 : 15 , 16).

பரலோகத்தில் மிகச் சிறந்த வரவேற்பு தேவ ஊழியருக்கே உரியது! (மத். 25 : 21).

பரலோகத்தில் மிகச் சிறந்த இடம் (சீயோன்) தேவ ஊழியருக்கே உரியது! (வெளி. 14 : 1).

மிகச் சிறந்த கனம் தேவ ஊழியருக்கே உரியது! (லூக்கா 12 : 37 ; யோவான் 12 : 26).

மிகச் சிறந்த மகிமை தேவ ஊழியருக்கே உரியது! (யோவான் 17 : 22 ; II கொரி. 4 : 17 ; I பேதுரு 5 : 4).

மிகச் சிறந்த பிரதிபலன் தேவ ஊழியருக்கே உரியது! (மத். 24 : 46 , 47 ; லூக்கா 22 : 28 , 29).

பரலோகத்தில் மிகச் சிறந்த இசை வல்லுநர்கள் தேவ ஊழியரே! (வெளி. 14 : 2).

பரலோகத்தில் மிகச் சிறந்த பாடகர்கள் தேவ ஊழியரே! (வெளி. 14 : 3).

இகத்திலும் பரத்திலும் மிகச் சிறந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் தேவ ஊழியருக்கே உரியவை! (லூக்கா 15 : 29, 31). ❊

### 7. *மன உறுதியாயிருத்தல்:*

'ரூத் தன்னோடேகூட வர ***மன உறுதியாயிருக்கிறதைக்*** கண்டு, நகோமி அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை' (ரூத் 1 : 18). 'நான் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டு, தன் தீர்மானங்களை ஒவ்வொன்றாக எடுத்துரைத்த ரூத், முடிவுபரியந்தம் நகோமியோடு செல்லும்படி மன உறுதியாயிருந்தாள். மேற்கூறப்பட்டுள்ள ரூத்தினுடைய பிரதிஷ்டையின் ஆறு அம்சங்களும் அவள் தன் வாயினால் கூறியவையாகும். ஆனால் அவளுடைய ஆவியில் இருந்த அவளுடைய பிரதிஷ்டையின் இந்த ஏழாவது அம்சம், அவளது கூற்றில் மறைந்திருந்தது. முடிவு பரியந்தம் நகோமியைப் பின்செல்ல வேண்டும் என அவள் மன உறுதி கொண்டிருந்தாள். இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிஷ்டையின் முதல் ஆறு அம்சங்களும் நம்மில் இருக்குமாயின், அவற்றில் நாம் மன உறுதியுள்ளவர்களாயும் இருப்போம். "அவைகளில் ஒன்றையுங் (கட்டுகளையும் உபத்திரவங்களையும்) குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்" என அப். பவுல் கூறுகிறார் (அப். 20 : 23, 24). ஆங்கிலத்தில் இவ்வேதபகுதி, 'இவைகளில் ஒன்றினாலும் நான் அசைக்கப்படுவதில்லை' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நம்முடைய ஆவி (மனது) யாதொன்றினாலும் அசைக்கப்படாததாயிருக்க வேண்டும். தேவ ஊழியர்கள் ஒரு அம்சத்தில் மிகவும் கடினமாயிருக்க வேண்டும். தங்கள் பிரதிஷ்டை, பரிசுத்தம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் அவர்கள் மன உறுதி படைத்தவர்களாக, எக்காரணத்தைக் கொண்டும் அசைக்கப்படாதவர்களாக இருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசுவைக் குறித்துள்ள ஒரு தீர்க்கதரிசன வாக்கியம், "என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்" என்று கூறுகிறது (ஏசாயா 50 : 7). இவ்வசனத்தில் 'முகம்' இருதயத்தைக் குறிக்கிறது. இவ்வசனத்திலுள்ள 'கற்பாறை' என்பது ஆங்கில மொழிபெயர்ப்பின்படி, பண்டைக்காலங்களில் நெருப்பு உண்டாக்கப் பயன்படுத்தப்பட்டுவந்த மிகக் கடினமான ஒரு வகை பாறை (flint – சக்கிமுக்கிக் கல்) ஆகும். தேவ ஊழியனே, சோதனைகளின் முன்னிலையில் இக்கற்பாறையைப் போன்ற ஓர் உள்ளம் உனக்கு உண்டா? 'எல்லாவற்றையும் துறந்து கர்த்தரைப் பின்பற்றிவந்த நான் இனி ஒருக்காலும் பின்னிட்டுத் திரும்புவதில்லை; யாதொன்றும் என்னைத் திசைதிருப்பவோ, என் கவனத்தை ஈர்க்கவோ நான் சம்மதிப்பதில்லை' என்று உள்ளத்தில் உரங்கொண்டிருப்பதே இந்தக் கடின உள்ளமாகும். முன்னொரு காலத்தில் உன்னுடைய சொந்தக் குடும்பத்தார் மீது உனக்குத் தனி அன்பும் பற்றுதலும் இருந்திருக்கக் கூடும்; ஆனால் தேவனைச் சேவிக்கும்படி நீ உன்னை முழுமையாகப் பிரதிஷ்டை செய்யும்போது, தேவனுடைய அன்பானது அந்த மாம்சீக அன்பு, பற்றுதல் யாவற்றையும் பட்சித்துவிடுகிறது.



ஓர்பாள், ரூத் ஆகிய இருவரும் ஒரே விதமான சோதனையையே சந்தித்தனர். அதில் ஓர்பாள் தன் மன உறுதியை இழந்துவிட்டாள்; ரூத்தோ தன் மாமியைப் பின்பற்றும் தீர்மானத்தை விடாமல் பற்றிக்கொண்டாள்; அவள் தன் சோதனையில் மன உறுதியாய் நின்றாள்; கர்த்தரை முற்றுமுடிய, முழு தூரமும் பின்பற்றுவதினின்று எதுவும் அவளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தேவனிடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட வெளிப்படுத்தலே ரூத்தைத் தன் தீர்மானத்தில் அசையாமல் நிலைநிற்கச் செய்தது. கர்த்தரைச் சேவிக்கத் தீர்மானித்த நாளில் 'இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்; பின்னோக்கேன் நான்!' என்று தீர்மானித்த நண்பனே! அத்தீர்மானத்தில் இன்று நீ உறுதியாய் இருக்கிறாயா? அதில் நீ என்றும் உறுதியாய் நிற்பாயா?

சீயோன், தங்கள் பிரதிஷ்டையில் மன உறுதியுள்ளவர்களுக்கே உரியது. "கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல்

இருப்பார்கள்" (சங். 125 : 1). "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரி. 15 : 58) என அப். பவுல் எழுதுகிறார். நகோமி ரூத்தின் மன உறுதியைக் கண்டு, "அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை". அவளுடைய மன உறுதி, தனக்கு எதிரிட்டு வந்த சோதனையைச் செயலிழக்கச் செய்துவிட்டது! ரூத்தைத் தன் தீர்மானத்தினின்று பின்வாங்கச்செய்யும்படி அவளைத் திரும்பத் திரும்பச் சந்தித்துக் கொண்டிருந்த இப்போராட்டத்தில் முடிவாக அவளுடைய மன உறுதியே வென்றது! பழைய ஏற்பாட்டுக் காலத்தில் விதிக்கப்பட்டிருந்த நியாயப்பிரமாணத்தின்படி மோவாபியப் பெண்ணாகிய ரூத் ஒருக்காலும் தேவனுடைய சபைக்கு உட்படலாகாது. "அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் ***என்றைக்கும்*** அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது" (உபா. 23 : 3). ஆனால் ரூத்தின் விஷயத்திலோ தேவன் தாமே அவளுக்காகத் தம்முடைய அந்தச் சட்டத்தையே மாற்றிக்கொண்டது போல் தோன்றுகிறது! தேவபிள்ளையே, நீ உறுதியான தீர்மானத்துடன் கர்த்தருக்கு உன்னை அர்ப்பணித்திருப்பாயென்றால், உன்னை ஆசீர்வதிக்கும்படியாக அவர் சட்டதிட்டங்களைக் கூட உன் நிமித்தமாக மாற்றிவிடுவார்! (தானி. 6 : 15 ; எஸ்தர் 3 : 12, 13 ; 9 : 1)

தேவபிள்ளையே, நீ சோதனைகளின் முன்னிலையில் ரூத்தைப் போலன்றி, இருமனமுள்ள ஒரு நபராயிருப்பாயானால் அதற்குப் பரிகாரம் யாது? நீ எவ்வாறு ஒரே மனமுள்ளவனாக அதாவது மன உறுதியுள்ளவனாக மாற்றப்படக் கூடும்? "இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" என திருவசனம் கூறுகிறது (யாக். 4 : 8). நீ உன் இருதயத்தைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளும்படி நேரம் எடுத்துக்கொள்வாயானால்,



இருமனம் அதாவது மன உறுதியின்மை உன்னை விட்டு நீங்கும். தூய்மையான ஓர் உள்ளத்தில் இரு நினைவுகள் தங்கியிருக்க முடியாது. தேவ அன்பினால் நிறைந்த ஓர் உள்ளம் தூய்மையானதாகவும், உறுதியுள்ளதாகவும் இருக்கும். உன்னில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார் என்ற உறுதியான நிச்சயத்துடன் நீ அவரைப் பின்பற்றுவாயாக. உன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார் (பிலி. 1 : 5 ; I தெச. 5 : 24).

***"அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்"*** (ரூத் 1 : 20, 21).

## ஓர் எச்சரிப்பு!

"நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்" என்று இங்கு நகோமி கூறுகிறாள். இவ்வசனத்தின் அடிப்படையில், யூதா தேசத்தில் பஞ்சம் உண்டாயிருந்த காலத்திலும், நகோமி நிறைவுள்ளவளாகத்தான் அங்கு இருந்திருக்கிறாள் என நாம் நிதானிக்கலாம். ஆகவே அவள் தன் குடும்பத்துடன் கானானை விட்டுச் செல்ல வேண்டிய ஒரு அவசியமும் இருந்திருக்கவில்லை. அத்தேசத்திலிருந்த மற்ற ஒருவரும் அங்கிருந்து போனதாக நாம் வாசிப்பதில்லையே! நாம் ஏற்கனவே கண்டபடி, அவளிலிருந்த பெருமையே அவளைப் படிப்படியாகப் பின்மாற்றத்திற்குள் வழிநடத்திற்று. நகோமியின் பின்மாற்றம் அவளை வெறுமையாக்கி, ஓர் அவல நிலைக்குள்ளாக்கிற்று! கர்த்தராகிய இயேசு கூறிய ஓர் உவமையில், இளைய குமாரனும் நிறைவுள்ளவனாகவே தன் தகப்பனுடைய வீட்டை விட்டுப் போனான்;

ஆனால் வெறுமையாக்கப்பட்டவனாய்த் திரும்பி வந்தான் என நாம் காண்கிறோம் (லூக்கா 15 : 13, 17). மேற்கூறப்பட்டுள்ள இவ்விருவரும் எப்பக்கத்திலும் முற்றிலும் தாழ்த்தப்பட்டுப் போயினர். "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்" என நாம் வாசிக்கிறோமே! (நீதி. 29 : 23).

இப்போது நகோமி, 'கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தினார்' என முறையிடுகிறாள். ஆங்கிலத்தில் இது 'கர்த்தர் எனக்கு விரோதமாகச் சாட்சியிட்டிருக்கிறார்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆம்! கர்த்தர் நகோமிக்கு விரோதமாகச் சாட்சியிட்டார். ஆனால் ரூத்தைக் குறித்தோ போவாஸ் நற்சாட்சி சொன்னதாக நாம் முன்பு கண்டோம் (ரூத் 2 : 11). போவாஸ் கர்த்தராகிய இயேசுவுக்கு அடையாளமாயிருக்கிறான். கர்த்தர் எவ்வாறு நகோமிக்கு விரோதமாகச் சாட்சி பகர்ந்தார்? ரூத்தின் நற்சாட்சியுள்ள ஜீவியத்தைக் கொண்டே! ரூத்தின் ஜீவியம் கர்த்தருக்குச் சாட்சியாயிருந்தது; அதுவே நகோமிக்கு எதிரான ஒரு சாட்சியாய் அமைந்தது! 'கர்த்தர் எனக்கு விரோதமாகச் சாட்சியிட்டிருக்கிறார்' என்று அவள் கூறியதின் உட்கருத்து என்ன? 'தேவனைப் பல வருடங்களாக அறிந்திருந்த நான் அவருக்குக் கீழ்ப்படியவில்லை; ஆனால் இந்த மோவாபியப் பெண்பிள்ளையோ அவருக்குக் கீழ்ப்படிகிறாள்! நான் யூத குலத்தைச் சேர்ந்தவளாயிருந்தும் அவிசுவாசத்தால் நிறைந்திருக்கிறேன்; ஆனால் புறஜாதியைச் சேர்ந்த இப்பெண்பிள்ளையோ விசுவாசத்தால் நிறைந்திருக்கிறாள்! தேவஜனங்களைச் சேர்ந்தவளாகிய நான் தேவன்மேல் நம்பிக்கை வைக்காமல் அவரைக் கனவீனம்பண்ணிக்கொண்டிருக்கிறேன்; ஆனால் இளம் விதவையாகிய இந்த மோவாபியப் பிள்ளையோ தேவனில் நம்பிக்கை வைத்து, அவரைக் கனம்பண்ணுகிறாள்! நான் என்னுடைய சுயசித்தம் செய்ய விரும்பி, தேவசித்தத்தையும், தேவசித்தத்தின் மத்தியில் இருக்கும்போது உண்டாகும் பிரச்சினைகளையும், தேவனுடைய ஜனங்களையும் விட்டு ஓட முற்பட்டேன்; ஆனால்



இப்பெண்பிள்ளையோ தேவன் பின்னாலே ஓடுகிறாள்! அதினும் அவர் பின்னால் செல்வதற்கென்று இவள் எதையும், எல்லாவற்றையும் தியாகம் செய்யவும் மனமுவந்திருக்கிறாள்! ஆகவே ரூத்தைக் கொண்டு தேவன்தாமே எனக்கு விரோதமாகச் சாட்சி பகர்ந்துவிட்டார்' என்பதே!

ரூத்தின் ஜீவியமானது தேவனுக்கு முன்பாக ஒரு நற்சாட்சியாகவும், அதே சமயத்தில் நகோமிக்கு விரோதமான ஒரு சாட்சியாகவும் அமைந்திருந்தது. மூத்தவர்களான தேவ ஊழியரே! தேவன் தமக்குக் கீழ்ப்படியும்படி முதலாவதாக உங்களுக்குத் தருணம் தருவார். நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய மறுப்பீர்களாயின், அவர் பின் தலைமுறையினரான கீழ்ப்படிதலுள்ள தேவ ஊழியர்களைத் தமக்கென்று எழுப்புவார். அவர்களுடைய ஜீவியமே உங்களை நியாயந்தீர்ப்பதாயிருக்கும்! அவர்களுடைய நற்சாட்சி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியிடும்! அப்படி ஒருவருக்கும் சம்பவியாதிருப்பதாக! கர்த்தரின் ஊழியம் எவ்விதத்திலும் பாதிக்கப்பட முடியாது. ஒரு தேவ ஊழியன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போவதினிமித்தம் தம்முடைய ஊழியம் நஷ்டமடைய அவர் இடங்கொடார். நீங்கள் தேவனோடு நடக்காவிட்டால், அவரில் அன்புகூராவிட்டால், உங்கள் ஊழியத்தை நிறைவேற்றத் தவறினால், உங்கள் கண்களுக்கு முன்பாகவே தேவன் ஒரு இளைய தலைமுறையை எழுப்புவார். அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றுவார்கள்! அவர்களுடைய ஜீவியத்தைக் கொண்டு அவர் உங்களை நியாயந்தீர்ப்பார். ஆகவே அவருக்கு முன்பாக உத்தமராய் நடக்கும்படி நீங்கள் எச்சரிக்கையாயிருப்பீர்களாக.

நகோமியின் வாழ்க்கையானது, கர்த்தர்தாமே அதற்கு விரோதமாகச் சாட்சியிடக்கூடியதாயிருக்க, அவளோ இப்போது அவர் மீது கசப்புள்ளவளாயிருக்கிறாள். தேவபிள்ளையே, உன் இருதயம் கசப்புள்ளதாயிருந்தால், வேறு யாரும் அல்ல, நீயே அதற்கு உத்தரவாதி.

***"இப்படி நகோமி மோவாபிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவந்தாள்; வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெ கேமுக்கு வந்தார்கள்"*** (ரூத் 1 : 22).

## எழுப்புதலின் ஆரம்பம்!

நகோமி யூதாவிலிருந்த பெத்லெகேமுக்குத் திரும்பி வந்தாள். அவள் திரும்பி வந்தபோது அங்கு என்ன காலமா யிருந்தது? அது வாற்கோதுமை அறுப்பின் துவக்கமாயிருந்தது! நாம் தேவனிடத்திற்குத் திரும்பும் ஒவ்வொரு திருப்பமும் 'ஒரு வாற்கோதுமை அறுப்பின் துவக்கமாக' இருக்கும். அது நமக்கு மெய்யான ஓர் ஆவிக்குரிய அறுவடையாகவே இருக்கும்! இளைய குமாரன் புத்தி தெளிந்தவனாய்த் தன் தகப்பனின் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, அதுமுதல் அவனுடைய ஜீவியத்தில் பெரிய மாறுதல்கள் உண்டாயின! அவனது வாழ்வில் இருந்த வெறுமையும் வறட்சியும் மாறி, விருந்தும், மெய்யான அன்பும், அரவணைப்பும் அவனுக்குக் கிடைத்தன. அவ்வாறே நகோமி தேவஜனங்களிடத்திற்கும் தேவனுடைய வீட்டிற்கும் திரும்பி வந்தபோது, அந்நாட்கள் வாற்கோதுமை அறுப்பின் முடிவாக அல்ல, அதின் துவக்கமாகவே இருந்தன! அதுமுதல் மெய்யான செழிப்பும் ஆசீர்வாதமும் நிறைவும் அங்கு அவளுக்காகக் காத்திருந்தன!

அருமையானவர்களே, நாம் ஏற்கனவே கண்டபடி, தேவ னுடைய ஜனங்களில் சிறுமையானவர்கள் அதாவது ஆவியில் எளிமையுள்ளவர்களே திடன்கொண்டு சீயோனில் வாசம்பண்ணு வார்கள் (ஏசாயா 14 : 32). ரூத் கர்த்தரைப் பின்பற்றும்படி தன்னைத் தான் முற்றிலும் வெறுமையாக்கி, தனக்குண்டாயிருந்த எல்லாவற்றையும் மனப்பூர்வமாகத் துறந்து, தன் உள்ளத்திலும் அவற்றில் யாதொன்றுக்கும் இடமளிக்காதிருக்க மன உறுதி கொண்டிருந்தபடியினால் அவள் பின்னாட்களில் தன் ஜீவியத்தின்



முடிவு பரியந்தமும் யூதா தேசத்தில் தங்கியிருக்கும் சிலாக்கியம் பெற்றாள். பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி ஓடிக்கொண்டிருந்த ரூத்தின் ஆரம்பத்தைப் பார்க்கிலும் முடிவைத் தேவன் மேன்மையுள்ளதாக்கினார். "தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்" (நீதி. 22 : 4) என்ற திருவசனம் அவளில் எவ்விதம் நிறைவேறியது என்பதை இனி வரும் அதிகாரங்களில் நாம் விவரமாகப் படிக்கலாம்.

மறுபக்கத்தில் தன் பெருமையினிமித்தம் தன்னைத் தாழ்த்தக்கூடாதிருந்த நகோமியோ, பஞ்சகாலத்தில் யூதாதேசத்தை விட்டுச் சென்று, பல இன்னல்களுக்குள்ளானாள். என்றாலும் கர்த்தருடைய தயவு அவளை மீண்டும் மீண்டும் சந்திக்கவே, அவருடைய இரக்கத்தினால் அவள் யூதா தேசத்திற்குத் திரும்ப வந்து சேர்ந்தாள். பல இன்னல்களுக்குள்ளான பின்னரே அவளால் யூதா தேசத்திற்குத் திரும்பும்படி தன்னைத் தாழ்த்த முடிந்தது. அவள் மெய்யாகத் தன் பெருமையினின்று இறங்குகிற வரையில், தனக்கென்று கர்த்தர் யூதா தேசத்தில் வைத்திருந்த ஆசீர்வாதங் களை அவளால் பெற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது. அவளுடைய பெருமையே கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்கக் கூடாதபடிக்கு அவளைத் தடுத்துக்கொண்டிருந்தது. "கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" (சங். 138 : 6). "சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" என்று அவர் உரைத்திருக்கிறார் (ஏசாயா 66 : 2). நம் ஆரம்பத்தைப் பார்க்கிலும் முடிவு மேன்மையுள்ளதாகவும் மகிமையுள்ளதாகவும் இருக்கும்படி, ரூத்தைப் போல நாமும் மனத்தாழ்மையைத் தரித்துக்கொண்டு, பிரதிஷ்டையின் மூலம் ஆவியில் எளிமை யுள்ளவர்களாவோமாக!

**அதிகாரம்** 3

# மெய்யான மனத்தாழ்மை

***"நகோமிக்கு அவளுடைய புருஷனாகிய எலிமெலேக்கின் உறவின்முறையில் போவாஸ் என்னும் பேருள்ள மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இனத்தான் ஒருவன் இருந்தான்"*** (ரூத் 2 : 1).

**எளியவர்களின் சகாயர்:**

போவாசை நாம் கர்த்தராகிய இயேசுவுக்கு ஒப்பிடலாம். போவாஸ் என்னும் பதத்திற்குப் 'பெலன்' (strength) என்று பொருள். அவன் மிகுந்த ஆஸ்திக்காரனாயிருந்தான். நம்முடைய கர்த்தராகிய இயேசு சர்வவல்லமையுள்ள தேவன் மாத்திரமல்ல, அவர் ஐசுவரியசம்பன்னராயும் இருக்கிறார். நம்முடைய போவாசாகிய அவரிடத்தில் சகல ஐசுவரியங்களும் உள்ளன. "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ. 2 : 3). ஒரு ஐசுவரியவானிடத்திலிருந்து யார் நன்மைகளைப் பெற்றனுபவிக்க முடியும்? தரித்திரர் மாத்திரமே அன்றோ அவனிடத்திலிருந்து நன்மைகளையும் உதவிகளையும் பெற முடியும்! ரூத் மிகவும் ஏழையான ஒரு ஸ்திரீயாக இருந்தாள். ஆகவே மிகுந்த ஐசுவரியவானான போவாஸ், தன்னை நாடி வந்த அவளுக்கு மிகவும் உதவியாக இருந்தான். நாம் எந்த அளவுக்குத் தரித்திரராய், எளிமையான

வர்களாய் இருக்கிறோமோ, அந்த அளவுக்கு மட்டுமே சர்வ வல்லவரும் ஐசுவரியசம்பன்னருமான நம் தேவனிடத்திலிருந்து நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்க முடியும். நாம் ஆவி யில் எளிமையுள்ளவர்களாய் இருந்தால் அவர் நமக்குப் பேருதவி யாக, சமயசகாயராக இருப்பார். "அவர் ஐசுவரியமுள்ளவராயி ருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரிய வான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே" (II கொரி. 8 : 9) என்று திருவசனம் கூறுகிறது. பிரதிஷ்டையின் மூலமாக அதாவது நம்மை நாமே வெறுமையாக்கிக்கொள்வதின் மூலமாக நாம் ஆவியில் எளிமையுள்ளவர்களாகிறோம் என்று சென்ற அதிகாரத்தில் நாம் கண்டோம். தேவபிள்ளைகளாகிய நமக்கு இவ்வுலகில் சரீரப்பிரகாரமான சில உடைமைகள் இருப்பினும், நாம் நம்முடைய ஆவியில் அவற்றின்மேல் பற்றுதல் அற்ற வர்களாயிருப்பதே ஆவியில் எளிமையுள்ளவர்களாயிருக்கும் அனுபவமாகும். தேவ ஊழியர்களோ எழுத்தின்படியே தங் களுக்குண்டான யாவற்றையும் வெறுத்து விட்டுவிடுவதுடன், தங்கள் ஆவியிலும் அவற்றின்மேல் பற்றுதல் அற்றவர்களா யிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு நம்முடைய ஐசுவரியசம்பன்னராகிய கிறிஸ்து எப்போதும் சகாயம் செய்கிற வராயிருப்பார். 'என் தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத் தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார்' என அப். பவுல் தேவஜனங்களுக்கு எழுதுகிறார் (பிலி. 4 : 19 - Eng.).

போவாசையும் கர்த்தராகிய இயேசுவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவ்விருவருக்குமிடையே உள்ள சில ஒற்றுமை களை நாம் காணலாம்: (i) இருவரும் யூதேயாவிலுள்ள பெத்லெ கேமைச் சேர்ந்தவர்கள் (ரூத் 2 : 4 ; லூக்கா 2 : 4 – 7); (ii) இருவரும் மீட்கிறவர்களானார்கள் (ரூத் 4 : 4 ; I கொரி. 1 : 31 ; எபே. 1 : 7); (iii) இருவரும் ஐசுவரியசம்பன்னராவர் (ரூத் 2 : 1 ; ரோமர் 10 : 12); (iv) இருவரும் இரக்கமும் தயவுமுள்ளவர்கள் (ரூத் 2 : 10 ; தீத்து 3 : 5);



(v) போவாஸ் ரூத்தை மீட்டுக்கொண்டு அவளைத் தனக்கு மனைவியாக்கும்படி பட்டண வாசலுக்குப் போனான்; கர்த்தராகிய இயேசு நம்மை மீட்டெடுத்துத் தமக்கு மணவாட்டியாக்கும்படி நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் (ரூத் 4 : 1 ; எபே. 5 : 27 ; எபி. 13 : 12). (vi) போவாஸ் ரூத்தை ஆதரிக்க வேண்டிய சுதந்தர வாளியும் அவளுக்கு நெருங்கின உறவின்முறையானுமாயிருந் தான். கர்த்தராகிய இயேசு நமக்காகத் தம்முடைய முழு இரத்தத்தையும் சிந்தி நம்மை மீட்டுக்கொண்டபடியினால் நம்மேல் முழு உரிமையும் உள்ளவரும் நம் ஆத்தும நேசருமாயிருக்கிறார் (ரூத் 2 : 20 ; உன். 6 : 3 ; அப். 20 : 28 ; எபே. 1 : 18).

***"மோவாபிய ஸ்திரீயான ரூத் என்பவள் நகோமியைப் பார்த்து: நான் வயல்வெளிக்குப் போய், யாருடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக் கொண்டுவருகிறேன் என்றாள்; அதற்கு இவள்: என் மகளே, போ என்றாள்"*** (ரூத் 2 : 2).

### தாழ்மையின் பலன்:

இப்போது ரூத், தான் முன்னே அறிந்திராத ஜனங்களிடத் திற்கு, ஓர் அந்நிய தேசத்திற்கு வந்துசேர்ந்திருக்கிறாள். அத் தேசத்தின் மொழி, பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்ற அனைத்துமே அவளுக்குப் புதிதாயிருந்தன. மோவாபியர் இஸ்ர வேலரால் வெறுக்கப்பட்டவர்களும், அவர்களுடைய சத்துருக்களு மாயிருந்தனர். ஆயினும், இளம் விதவையாயிருந்த இந்த மோவா பியப் பெண்பிள்ளை அங்கு சென்றவுடன்தானே, வயல் வெளிக்குப் போய், ஏதாவது ஒரு வயல்நிலத்தில் கதிர்களைப் பொறுக்கிக்கொண்டுவர விரும்பினாள். இப்படிச் செய்யும்படி யாரும் அவளுக்குச் சொல்லவில்லை. அவள் தானாகவே இவ் வேலையைத் தெரிந்துகொண்டாள். அப்படியே அவள் வேலை செய்து, அன்று மாலை ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற் கோதுமையுடன் வீடு திரும்பினாள் (ரூத் 2 : 17).

ரூத் என்பவள் மோவாபிய ராஜாவாகிய எக்லோனின் குமாரத்தி என்று பாரம்பரியம் கூறுகிறது. ஆயினும் அவள் ராஜகுடும்பத்தைச் சார்ந்தவள் என்பதற்கான ஆதாரம் எதுவும் பரிசுத்த வேதாகமத்தில் இல்லை. எப்படியிருப்பினும், அவளுக்குத் தன் சொந்தத் தேசத்தில் ஒரு தாய் வீடும், பெற்றோரும், உற்றாரும் இருக்க, அவளோ இந்த அந்நிய தேசத்திற்கு வந்து, தாழ்வான இவ்வேலையைத் தெரிந்தெடுத்தாள். அந்நிய தேசத்திலிருந்து வந்த இளம்பெண்ணாகிய அவள் அங்கு வந்து மிகவும் தாழ்வான ஒரு வேலையைத் தெரிந்துகொண்டு, அதைச் செய்ய வேண்டுமாயின், அதற்கு அவளுக்கு ஏராளமான தாழ்மை தேவையாயிருந்தது. வயல்வெளிகளில் கீழே விழுந்துகிடக்கும் கதிர்களைப் பொறுக்குதல் என்பது பாமரரான சிலரால் மாத்திரமே செய்யப்படும் கீழ்த்தரமான, தாழ்வான ஒரு வேலையாகும். "நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக" என்று கர்த்தர் தம் ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் (லேவி. 19 : 9, 10). எளியவர்களும் பரதேசிகளும் வயல்களில் கதிர்களைப் பொறுக்கிக்கொள்ளும்படி நியாயப்பிரமாணத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மிகவும் தரித்திரரான அவர்கள் மட்டுமே இவ்வாறு வயல்களில் சிந்திக் கிடக்கிறவைகளைப் பொறுக்கிக்கொள்வார்கள். இது நடைமுறையில், பிச்சையெடுத்தலுக்குச் சமமாகும். இந்த அற்பமான, இழிவான, தாழ்வான வேலையையே ரூத் மனமுவந்து தெரிந்துகொண்டாள்! இது ஒரு தேவ ஊழியன் தன் ஊழியத்தை எல்லா மனத்தாழ்மையுடனும் துவங்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நாட்கள் செல்லச்செல்ல அவன் இன்னும் அதிக மதிகமாக மனத்தாழ்மையில் பெருகிவர வேண்டும். ரூத் அந்த அற்பமான வேலையைச் செய்யப் புறப்பட்டபோது, அதுமுதல் தன் வாழ்நாளெல்லாம் இனி அந்த வேலையையே தான் செய்ய



வேண்டியதாயிருக்கும் என்றே எண்ணியிருந்திருப்பாள். 'நான் ஒரு நல்ல குடும்பத்தைச் சார்ந்தவள்; இரப்பதற்குச் சமமான இந்தத் தாழ்வான வேலையை நான் செய்வதெப்படி? அறிமுகமில்லாத ஒருவரின் வயலில் - நாள் முழுவதும் அறுக்கிறவர்களின் கோபத்திற்கும் எரிச்சலுக்கும் ஆளாகி - நில உரிமையாளரின் வெறுப்பையும் கடின வார்த்தைகளையும் சகித்துக்கொண்டு - இந்தத் தாழ்வான வேலையை நான் ஏன் செய்ய வேண்டும்?' என்று அவள் ஒருக்காலும் நினைக்கவில்லை. இங்கே அவளிலிருந்த மெய்யான மனத்தாழ்மையை நாம் காண்கிறோம். அதன் பலன் என்ன? "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என்று எழுதப்பட்டிருக்கிறபடி (நீதி. 15 : 33), அவள் கதிர் பொறுக்கும்படி சென்ற அதே வயல்நிலம் அவளுக்குச் சொந்தமாயிற்று; அந்த நிலத்தின் உரிமையாளன் அவளுடைய புருஷனானான்! அவள் அந்நிலத்தில் அறுப்பு அறுத்துக்கொண்டிருந்த வேலையாட்களைக் காட்டிலும் மிகவும் ஈனமான ஒரு வேலையைச் செய்கிறவளாக அங்கு போனாள்; ஆயினும் முடிவில் அவர்கள் யாவரும் அவளுடைய வேலைக்காரர்களாயினர்! அவளுடைய மனத்தாழ்மைக்குக் கிடைத்த பிரதிபலனைப் பாருங்கள்! 'மனத் தாழ்மையுள்ளவன் கனமடைவான்' (நீதி. 29 : 23) என்பது எவ்வளவு உண்மையானது!

## 'இதோ, போகிறேன்!'

'நான் ***இப்போது*** வயல்வெளிக்குப் போகிறேன்' என்று ரூத் சொல்லுகிறாள் (ரூத் 2 : 2 - Eng.). "இதோ, வயல்நிலங்கள் ***இப்பொழுதே*** அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்" என நமதாண்டவர் கூறுகிறார் (யோவான் 4 : 35). 'நிலம்' என்பது சுவிசேஷம் அறிவிக்கப்படும் இப்பரந்த உலகினைக் குறிக்கிறது (மத். 13 : 38). பகற்காலமிருக்கும் வரை மாத்திரமே நம்மை அனுப்பினவருடைய கிரியைகளை நம்மால் செய்யக்கூடும்; ஏனெனில் ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது! (யோவான் 9 : 4). அழிந்துபோகும்

மனுக்குலத்திற்குச் சுவிசேஷம் அறிவிக்கும் பணியைக் குறித்த தரிசனமும் வைராக்கியமும் நம்மில் இருக்க வேண்டும். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" என்று அப். பவுல் கூறுகிறார் (II கொரி. 5 : 14). இந்த வைராக்கியம் நம்மில் இல்லாவிடில், மாம்சீகம், பாவம், உலகம் போன்ற மற்ற வயல்நிலங்கள் நம்மை வசீகரித்துவிடும்! நம்முடைய அனுதின வாழ்வில் நம்மோடு தொடர்புகொள்ளும் ஒவ்வொரு நபரின் ஆத்துமாவுக்காகவும் நாம் தேவனுக்கு முன்பாக உத்தரவாதம் பண்ண வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர்களில் ஒருவரும் தற்செயலாக நம்மோடு தொடர்புகொள்வதில்லை; அவர்கள் ஒவ்வொருவரும் தேவசெயலாகவே நம்மோடு தொடர்புகொள் கின்றனர். தெய்வீக முன்நிர்ணயத்தின்படியே ஒவ்வொரு நபரையும் நாம் சந்திக்கிறோம். சரீரப்பிரகாரமான ஓர் அலுவலி னிமித்தம் ஒரு நபர் நம்மைச் சந்தித்தாலும், அல்லது சம்பந்தமற்ற ஒரு நபர் தவறுதலாகத் தொலைபேசியில் நம்மோடு தொடர்பு கொண்டாலும், அச்சந்தர்ப்பங்களையுங்கூட சுவிசேஷம் அறிவிக் கும்படி தேவனால் நமக்கு அளிக்கப்பட்ட தருணங்களாக நாம் எடுத்துக்கொள்வோமாக. தேவபிள்ளையே, நீ கர்த்தருக்காகச் செய்யும் மிகச் சிறியதொரு வேலையின் மூலமாகவுங்கூட தேவனால் மிகப் பெரிய காரியங்களைச் செய்யக் கூடும்! நீ சந்திக்கும் ஒரு சாதாரண ஆத்துமா பிற்காலத்தில் வல்லமையுள்ள ஒரு பரிசுத்தவானாக உருப்பெறக் கூடும்! ஆகவே தேவன் உனக்குத் தரும் சிறிய தருணங்களையும் தவறவிட்டுவிடாதே! தன் தகப்பனின் அழைப்பிற்கிணங்கி, "இதோ, போகிறேன்" என்று கூறிப் புறப்பட்ட இளைஞனான யோசேப்பைப் போல நீயும் பரமபிதாவானவரால் உனக்கு நல்கப்பட்டுள்ள பரம தரிசனத் துக்குத் தாமதமின்றிக் கீழ்ப்படிவாயாக (ஆதி. 37 : 13 ; அப். 26 : 18, 19).

"யாருடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டுவருகிறேன்" என்று ரூத் தன் மாமியிடம் கூறி விடைபெற்றாள். இவ்வேதபகுதியி லுள்ள 'தயை' என்னும் பதம் ஆங்கிலத்தில் 'கிருபை' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரூத்தைப் போல 'கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி நான் ***இப்போதே*** வருகிறேன்' என்று கூறக்கூடிய மனப்பூர்வமும் ஆயத்தமும் வாஞ்சையும் நம்மில் இருக்குமாயின், அவருக்கு ஊழியம் செய்யும்படி நாம் அவ ருடைய கண்களில் கிருபையைக் கண்டடைவோம். புண்படுத்து கிறவர்களாலும் புண்பட்டவர்களாலுமே நிறைந்த நிர்ப்பந்தமான இவ்வுலகில் ஆறுதல் தேடி அலையும் ஆத்துமாக்கள் பல! மெய்யான அன்பை நாடித் தவிக்கும் தகர்ந்துபோன உள்ளங்கள் பல! இளைப்பாறுதலையும், மன அமைதியையும், சமாதானத் தையும் நாடி வாடும் தொய்ந்துபோன உள்ளங்கள் பல! இவர்கள் யாவரும் யாராகிலும் வந்து விடுதலையின் வழியை, தேவனுடைய வார்த்தையைத் தங்களுக்குத் தெரிவிக்கமாட்டார்களா என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர்! இப்படிப்பட்ட 'தேவைகள் நிறைந்த ஓர் உலகினில்' நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். தேவபிள்ளையே, அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கும்படி ***'இதோ போகிறேன்'*** என்று நீ கூறமாட்டாயா?



அருமையானவர்களே, சுவிசேஷ ஊழியம் செய்யும்படி நாம் தாமதமின்றிப் புறப்படுவோமாயின், நாம் சொல்ல வேண்டிய சரியான, தகுந்த வார்த்தைகளைக் கர்த்தர் நம் வாயில் அருளுவார்; நாம் ஒரு நபரிடத்தில் பேசும்போது, நாம் என்ன சொல்லு கிறோமோ அதுவே அந்நபருக்கு அந்நேரத்தில் தேவையான, ஏற்ற ஆலோசனையாய் இருக்கத்தக்கதாக நாம் கர்த்தரிடத்தில் கிருபை பெற்றிருப்போம். நம்மிலிருந்து புறப்படுகிற கர்த்தரின் வார்த்தை அந்நபரின் உள்ளத்திற்குள் பாய்ந்து, அவர் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்! மனப்பூர்வமாகத் தன்னைத் தாழ்த்தி, தனிமையாக வயல்நிலங்களுக்குச் செல்லப் புறப்பட்ட ரூத் 'கிருபையைக்' கண்டடைந்தாள். அவள் பெற்ற கிருபை, முடிவாக உலக மீட்பரை உலகிற்கு வழங்கிய வம்சத்தின்

தாயாகவே அவளை மாற்றிவிட்டது! தங்களைத் தாழ்த்துகிற வர்களைச் சந்திக்கும்படி தேவகிருபையானது காத்துக்கொண் டிருக்கிறது! நகோமி 'கிருபை' என்ற பதத்தை உபயோகித்ததாக ரூத்தின் சரித்திரத்தில் எங்கும் நாம் காண்பதில்லை. ஆனால் ரூத்துக்கோ கர்த்தரின் கிருபையைப் பற்றிய சிறந்ததொரு வெளிப் படுத்தல் இருந்தது. தனக்குக் கிருபை பாராட்டக்கூடிய ஒரு நபரிடத்தில் போகும்படி விரும்பிய அவள், முடிவாக அந்நபரைக் கண்டுகொண்டாள். ஆம்! போவாசின் கண்களில் அவளுக்குக் கிருபை கிடைத்தது. "அப்பொழுது அவள் தரையிலே முகங் குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள்" (ரூத் 2 : 10). இவ்வசனத் திலும் 'தயை' என்பதற்கு ஆங்கிலத்தில் 'கிருபை' என்ற பதமே உபயோகிக்கப்பட்டுள்ளது. நாம் நம்மைத் தாழ்த்துவோமாயின் கிருபையின் பூரணராகிய ஆண்டவர் இயேசுவின் கண்களில் நாம் கிருபையைக் கண்டடைவோம்.

## பெருமை என்னும் நச்சுவேர்!

ரூத் தனக்கு எதிர்ப்படும் ஏதாயினும் ஒரு வயல்நிலத்தில் போய்க் கதிர் பொறுக்கிக்கொண்டு வரத் தீர்மானித்து, தன் மாமியிடம் உத்தரவு கேட்டபோது அவள், "என் மகளே, போ" என்றாள். தன்னை உண்மையாய் நேசித்து உத்தமமாய்ப் பின்பற்றிவந்தவளும், இப்போது தன்னைப் பராமரிக்கும் வகை தேடி மனப்பூர்வமாய்த் தன்னைத்தானே தாழ்த்த முன்வந்திருப்ப வளுமான ரூத்திடம் நகோமி என்ன சொல்லியிருந்திருக்க வேண்டும்? 'என் மகளே, நமக்கு நெருங்கின உறவின்முறை யானும் நம்மை ஆதரிக்க வேண்டியவனுமான போவாஸ் என்னும் பெயருள்ள மிகுந்த ஆஸ்திக்காரன் ஒருவன் நமக்கு இருக்கிறான்; ஆகவே நீ வேறெங்கும் அலைந்து திரியாமல், அவனுடைய வயல்நிலத்திற்கே செல்' என்று அவள் ரூத்துக்கு



ஆலோசனை கூறியிருந்திருக்க வேண்டும் அல்லவா? அத்துடன் இளம் விதவையாகிய அவளைத் தனித்து விடாமல், தானே அவளைப் போவாசின் வயல்நிலத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய், அவனுக்கு அவளை அறிமுகம் செய்து, அவனுடைய வயலில் தயக்கமின்றி கதிர் பொறுக்கிக்கொள்ள அவளுக்கு அவனிடத்திலி ருந்து அனுமதியும் பெற்றுத் தந்திருக்க வேண்டும் அல்லவா? ஆம்! இது, தனக்காக யாவற்றையும் தியாகம் செய்து, தன்னைப் பின்பற்றிவந்த தன் மருமகளுக்கு அவள் செய்திருக்க வேண்டிய இன்றியமையாத ஒரு கடமையாயிருந்தது. அவளோ அப்படிச் செய்யவில்லை. ஏன்? அவளுடைய பெருமை அப்படிச் செய்ய அவளுக்கு இடங்கொடுக்கவில்லை! தன்னுடைய கௌரவம் பாதிக்கப்படுவதை அவள் விரும்பவில்லை போலும்!

***நமக்கு நேரிடுகிற சோதனைகளில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு தோல்விக்கும் காரணம் நம் இருதயத்தின் அடித் தளத்தில் மறைந்திருக்கும் பெருமையே ஆகும்.*** இந்த வேர் எளிதில் நம் கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தில் இருந்தது என்ன என்பதைத் தேவன் அறிந்திருந்தார்; ஆனால் அவர்களோ அதை அறியாதிருந்தார்கள்! ஆகவே அவர்கள் அதைக் கண்டுகொள்ளும்படியாகத் தேவன் அவர்களை நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தினூடே வழிநடத்த வேண்டியதாயிற்று. "உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப் படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள் வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" (உபா. 8 : 2) என்று பின்னாட்களில் இதைக் குறித்துத் தேவதாசனாகிய மோசே அவர்களுக்கு நினை வூட்டுகிறான். நாம் நம்முடைய சோதனை வேளைகளில் மெய்யாகவே நம்மைத் தாழ்த்தக் கற்றுக்கொள்வோமாயின், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாழ்ந்துபோக மாட்டோம்.

***"அவள் போய், வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள்; தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல்நிலம் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடைய தாயிருந்தது"*** (ரூத் 2 : 3).

## தெய்வீக வழிநடத்துதல்:

வயல்வெளிகளுக்குப் போகப் புறப்பட்ட ரூத்துக்குக் குறிப்பாக எந்த வயல்நிலத்திற்குச் செல்வது என்று தெரியவில்லை. அவள் நகோமியின் பேரில் எவ்வளவு பட்சமும் அன்பும் பரிவும் கரிசனையும் உடையவளாயிருந்தாள்! அப்படியிருந்தும் இப்போது இளம் விதவையாகிய அவள் தனியே நடந்து சென்றுகொண்டிருக்கிறாள்! நகோமி எவ்வளவு கடின குணமுள்ளவளாய் இருந்திருக்கிறாள்! அவள் தேவனோடுகூட நடக்கிற ஒரு ஸ்திரீயாயிருந்திருப்பாளாயின், இவ்வாறு அவளைத் தனியே செல்ல விட்டிருந்திருக்க மாட்டாளே! ஆயினும் ரூத்தின் பேரில் தேவன் பாராட்டிய தயவைப் பாருங்கள்! அந்தத் தேசத்தின் வயல்வெளிகளில் நூற்றுக்கணக்கான வயல்நிலங்கள் இருந்திருக்கக் கூடும். ஆயினும் தேவனோ நேரடியாக அவளைப் போவாசின் வயல்நிலத்திற்கே கொண்டுசென்றார்! தேவபிள்ளையே! நீ தேவனோடு செம்மையானவனாயிருந்து, உன்னை நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிகிறவனாகவும், மெய்யான மனத்தாழ்மையுள்ளவனாகவும் இருப்பாயாகில், தேவன் உன்னைச் சரியான இடத்திற்கு, சரியான ஜனங்களண்டைக்கு, சரியான சூழ்நிலைக்கே கொண்டுசெல்வார். ரூத் தற்செயலாக அல்ல, தேவசெயலாகவே போவாசின் வயல்நிலத்தைச் சென்றடைந்தாள். தேவபிள்ளைகளைப் பொறுத்த வரையில் அவர்களுடைய ஜீவியத்தில் எதுவுமே தற்செயலாய்ச் சம்பவிப்பதில்லை. தேவனுடைய முன்நிர்ணயத்தின்படியே சகலமும் அவர்களுக்குச் சம்பவிக்கிறது (ரோமர் 8 : 28). ரூத் குறிப்பாகத் தேவ ஊழியருக்கும், நகோமி அவர்களுக்கு மேல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாய் அவர்களை நடத்துகிறவர்களுக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர்.



சில வேளைகளில் நமக்கு மேலாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் நகோமியைப் போல, தேவனோடு செம்மையானவர்களாய் இராமற்போகக் கூடும்; அல்லது அவர்கள் சிற்சில குறைகளுள்ளவர்களாயிருக்கக் கூடும். அவர்கள் நமக்குத் தகுந்த ஆலோசனைகளைக் கொடுத்து, சரியான வழியில் நம்மை வழி நடத்தாமற்போகவும் கூடும். ஆயினும், ரூத்தைப் போல நாம் தாழ்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாயிருந்தால், தேவன் நம்மைக் கொண்டுசெல்லுகிற இடம் எதுவோ அதுவே நாம் இருக்க வேண்டிய சரியான இடமாக இருக்கும்! நாம் மனத்தாழ்மையுடன் நம்மை நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்போமாயின், தேவன் எப்போதும் சரியான வழியிலேயே நம்மை நடத்திச் செல்வார். சாந்தகுணமுள்ளவர்களைக் கர்த்தர் வழிநடத்துகிறார் (சங். 25 : 9). "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30 : 21). மறுபக்கத்தில், நாம் தேவனோடு செம்மையானவர்களாயிராவிட்டால், நம்மை நடத்துகிறவர்கள் நம்மைச் சரியான இடத்திற்கு அனுப்பப் பிரயாசப்பட்டாலும், நாம் சென்றடைவதோ தவறான இடமாயிருக்கும்! ஆகவே தேவன் நம்மைச் சரியான இடத்திற்கு, 'போவாசின் வயல்நிலத்திற்கே' கொண்டு செல்லும்படி நாம் மெய்யான மனத்தாழ்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாயிருப்போமாக.

ரூத் 2 : 3 - இல் உள்ள "தற்செயலாய்" என்னும் பதத்திற்கு ஆங்கிலத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் (hap) அதிர்ஷ்டம் அல்லது யோகம் என்று பொருள்படும். ரூத் வேறு யாருடைய வயல்நிலத்திலும் இருப்பது அல்ல, போவாசின் வயல்நிலத்தில் இருப்பதே அவளுக்கு மிகுந்த நன்மை பயப்பதாயிருக்கும் என்பதே இதன் கருத்து. தேவன் நம்மைக் கர்த்தராகிய இயேசுவின் வயல்நிலத்திற்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். அவர் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபையானது,

“தேவனுடைய பண்ணை” (I கொரி. 3 : 9) என்றும், ‘ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரம்’ அல்லது ‘அன்பின் குமாரனுடைய ராஜ்யம்’ (கொலோ. 1 : 12, 13) என்றும் அழைக்கப்படுகிறது. தேவன் சரியான இடத்திற்கு நம்மைக் கொண்டுவந்து சேர்த்திருப்பது அவர் நம்பேரில் பாராட்டிய தயவே ஆகும். தேவ ஊழியனே, தேவன் உன்னைச் சரியான இடத்திற்கு - ‘போவாசின் வயல் நிலத்திற்கே’ - கொண்டுவந்து சேர்த்திருப்பதைக் குறித்த நன்றி யுணர்வு உனக்கு உண்டா? நீ வேறு ஏதாயினும் ஒரு வயல் நிலத்திற்குச் சென்றிருந்திருக்கலாமே! அநேகரைக் கவர்ந்திழுத்துக் கொண்ட வேறு பல வயல்நிலங்கள் இப்பூமியில் உள்ளனவே! ஆனால் நீ கர்த்தரையே முழு நேரமும் உத்தமமாய்ச் சேவிக்கக் கூடியதும், அவருடைய நேரடியான கண்காணிப்பில் உள்ளது மான ‘சரியான வயல்நிலத்திற்கு’ அவர் உன்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்! தேவனுடைய வீடாகிய மிகச் சிறந்த இடத்திற்கு உன்னைக் கொண்டுவந்து சேர்த்திருப்பது அவருடைய கிருபையே ஆகும். இங்கு தேவன் உனக்குச் சீயோனைச் சுதந் தரிப்பதற்கேதுவான பிரதிஷ்டையின் ஜீவியம், பரிசுத்த ஜீவியம் போன்றவற்றைப் பற்றிய தமது துப்புரவான உபதேசத்தைத் தந்திருக்கிறார்! உனக்கு முன்மாதிரிகளாக இப்படிப்பட்ட ஜீவியம் செய்த அநேக பரிசுத்தவான்கள் உனக்கு முன்னோடிகளாகச் சென்றிருக்கின்றனர். அதே அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பரிசுத்த வான்களையும் உன் கண்களுக்கு முன்பாகவே இப்பூமியில் தேவன் வைத்திருக்கிறார். ஆயினும் கர்த்தருடைய வீட்டில் இருந்தாலும் சிலர் இந்த மேன்மையான ஜீவியம் செய்கிறதில்லை என்பது வருந்தத்தக்க விஷயமாகும். நீயோ உனக்குக் கிடைத்தி ருக்கிற பாக்கியத்தை எண்ணி, நன்றியுடன் உத்தமமாய் அவரைச் சேவிப்பாயாக. மாம்ச ஆசை இச்சைகள், பண ஆசை, பேர், புகழ் இவற்றின் மேலுள்ள ஆசை போன்ற இவ்வுலகின் ‘அந்நியமான வயல்நிலங்களுக்கு’ உன் கண்கள் திசைதிருப்பப்படாதவாறு, உன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவருக்கு ஏற்றவனாயிருக் கும்படி நீ மனத்தாழ்மையுடன் அவரையே சேவிப்பாயாக (II தீமோ. 2 : 4).



சில சமயங்களில் சத்தியத்தை அறிந்தவர்களும் அனுபவம் வாய்ந்தவர்களுங்கூட நமக்குச் சரியான வழியைக் காண்பிக்கத் தவறிவிடக் கூடும். மனுஷர் நமக்கு உதவி செய்யாமற்போனாலும், நாம் மெய்யாகவே நம்மைத் தாழ்த்துவோமாயின், கர்த்தரின் வழிநடத்துதல் நமக்குக் கிடைக்கும். “பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே” என்று கர்த்தர் உரைத்திருக்கிறாரே! (ஏசாயா 48 : 17). *அவரால் வழிநடத்தப்படும் போது* - நாம் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவ தில்லை; நம்மோடு வைக்கப்பட்டிருக்கும் நபர்களும், நாம் வைக்கப்பட்டிருக்கும் இடமும் சூழ்நிலைகளும் அவருடைய சித்தத்தின்படியும் மனதின்படியுமே அமைந்திருக்கும். நாம் மெய்யான மனத்தாழ்மையுடன் அவரோடு நடக்கிறவர்களா யிருந்தால் (மீகா 6 : 8 - Eng.), அவர் நமக்கு மிகவும் விலை யேறப்பெற்ற ஆத்துமாக்களைத் தந்தருளுவார். அவர் நமக்கு ஒரே ஒரு ஆத்துமாவைத் தந்தாலும் அதன் மூலம் இலட்சக் கணக்கான ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்படக் கூடும்! இவை யாவும் நாம் எந்த அளவுக்கு நம்மைத் தாழ்த்துகிறோம் என் பதையும், எந்த அளவுக்குத் தேவனுக்கும், நம்மை நடத்துகிறவர் களுக்கும் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்பதையும், ஒரு தூய உள்ளத் தோடு கர்த்தரைச் சேவிக்கும்படி எந்த அளவுக்கு மனவுறுதி யுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதையுமே சார்ந்திருக்கின்றன. போவாசின் வயல்நிலத்திற்கு வந்துசேர்ந்த ரூத், தான் அப்படிப் பட்ட மிகச் சிறந்ததொரு இடத்திற்கு வழிநடத்தப்படுவாள் என்று சற்றும் நினைத்திருக்கவில்லை! நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம் எவ்வளவு பெரியது! கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாகிய நம் தேவனைச் சேவிக்கும்படி அவர் நம்மைத் தம்முடைய வீட்டிற்குக் கொண்டுவந்திருக்கிறபடியால் நாம் அவருக்கு மிகுந்த நன்றியுள்ளவர்களாயிருப்போமாக.

***“அப்பொழுது போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள்”*** (ரூத் 2 : 4).

## நீ ஆசீர்வாதமாயிருப்பாய்!

போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்தது போல, நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் பெத்லெகேமில் பிறந்து அங்கிருந்து வந்தவராவார். போவாசின் வயல்நிலத்தில் அறுவடை செய்துகொண்டிருந்தவர்களைக் கர்த்தருடைய ஊழியர்களுக்கு நாம் ஒப்பிடலாம். போவாஸ் அவர்களை, “கர்த்தர் உங்களோடே இருப்பாராக” என்று கூறி வாழ்த்தினான். இது, நாம் எப்போதும் கர்த்தருடைய மிக நெருங்கிய சமுகத்தில் ஜீவிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நாம் எங்கிருந்தாலும், என்ன செய்துகொண்டிருந்தாலும் தேவ சமுகத்தை உணரக்கூடியவர்களாயிருக்க வேண்டும். மேலும் அறுக்கிறவர்கள் போவாசை, “கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக” என்று கூறி வாழ்த்தினார்கள். தேவ ஊழியர்கள் கர்த்தருக்கு ஆசீர்வாதமாக அதாவது அவருடைய உள்ளத்தைக் குளிரப்பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். போவாசையும் அறுக்கிறவர்களையும் நாம் முறையே தேவ ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்குமிடையே இருக்க வேண்டிய சம்பந்தத்திற்கும், மூத்த ஊழியர்களுக்கும் இளைய ஊழியர்களுக்குமிடையே இருக்க வேண்டிய சம்பந்தத்திற்கும், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் (எஜமான்களுக்கும் வேலைக்காரருக்கும்) இடையே இருக்க வேண்டிய சம்பந்தத்திற்குங்கூட ஒப்பிடலாம். போவாசும் அறுக்கிறவர்களும் ஒருவரையொருவர் கர்த்தரின் நாமத்தில் வாழ்த்தினர். அவ்வாறே மேற்கூறப்பட்டுள்ள வகுப்புகளில் இரு சாராரும் தங்களுக்கிடையே கர்த்தருக்குள்ளான நல்லுறவைப் பேணிக் காத்துக்கொள்ள வேண்டும். மேலும், இங்கு முதலாவதாக அறுக்கிறவர்களை வாழ்த்தினவன் போவாஸ்தான் என்பதைக் கவனிக்கவும். போவாஸ் வாழ்த்துவதில் முந்திக்



கொண்டது போல, மேற்கூறப்பட்டுள்ள நிலைகளிலும் பெரியவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களும், மூத்தவர்களுமாயிருப்பவர்களே தங்களுக்குக் கீழ் உள்ளவர்களைக் கனம்பண்ண முந்திக்கொள்ள வேண்டும். “கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்” என திருவசனம் கூறுகிறதே! (ரோமர் 12 : 10). அதுமாத்திரமல்ல, விசுவாசிகளோடு கர்த்தர் இருக்க வேண்டும் என்பதே தேவ ஊழியரின் வாஞ்சையும் ஜெபமுமாயிருக்க வேண்டும். அவ்விதம் அவர்களுடன் கர்த்தர் இருப்பதைக் காண வேண்டுமாயின், முதலாவதாக தேவ ஊழியர் தங்களுடன் கர்த்தர் இருப்பதை வெளிப்படுத்த வேண்டும். தேவ ஊழியர்கள் முதலாவதாக விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாயிருப்பார்களாயின், விசுவாசிகளும் தேவ ஊழியர்களுக்கு ஆசீர்வாதமாய் மாறுவார்கள். தங்களைக் கண்காணிக்கும்படி கர்த்தரால் நியமிக்கப்பட்டுள்ள தேவ ஊழியர்களின் ஜீவியமும் ஊழியமும் அவரால் ஆசீர்வதிக்கப்படுவதை விசுவாசிகள் காணக்கூடியதாய் இருக்க வேண்டும். இல்லையேல், அத்தேவ ஊழியர்கள் இவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க முடியாது. இவ்விதமாக நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆசீர்வாதமாயிருக்கும்படியாகவே தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம்.

***“பின்பு போவாஸ் அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக்காரனை நோக்கி: இந்தப் பெண்பிள்ளை யாருடையவள் என்று கேட்டான்”*** (ரூத் 2 : 5).

## கர்த்தரின் நினைவில் உள்ளவர்கள்:

பொதுவாக ஒரு நிலத்தின் உரிமையாளன் தன் வயலுக்கு வரும்போது, குறிப்பாக அறுவடை சமயங்களில் அவன் தன் வயலைப் பார்வையிட வரும்போது, அவனுடைய கண்கள் அங்கு வேலைசெய்கிறவர்கள் மேலேயே கவனமாயிருக்கும். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர செய்கிறார்களா என்று அவர்களையே அவன் கவனித்துக்கொண்டிருப்பான். எந்தவொரு

எஜமானும் கீழே சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் எளியவர்கள் மேல் தன் கவனத்தைச் செலுத்த மாட்டான். ஏனெனில் அவர்கள் எந்த விதத்திலும் அவனுக்கு உபயோகமானவர்களல்லர்; அவர்கள் தங்களுக்காகவே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டிருப்பார்கள்; உண்மையில் அவர்கள் அங்கு தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் வேலைக்கு இடையூறாகவே இருப்பார்கள். ஆனால் இங்கேயோ போவாஸ் தன் வயலுக்கு வந்தபோது கதிர் பொறுக்கிக்கொண்டிருந்த இப்பெண்பிள்ளையின் மேல் அவனுடைய கண்கள் பட்டன. அவன் இந்த ஏழையான இளம் விதவையின் மேல் மிகுந்த பரிவும் கரிசனையும் உள்ளவ னானான். ரூத் சிறுமையும் எளிமையுமானவளாய் இருந்தாள்; போவாஸ் அவள்மேல் மனதுருகினான். “நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்” என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 40 : 17). நாம் எளிமையும் மனத்தாழ்மையுமுள்ளவர்களாயிருந்தால், கர்த்தர் எப்போதும் நம்மேல் நினைவுள்ளவராயிருந்து, நம்மைப் பொறுப்பெடுப்பார். எப்போதுமே அவர் தாழ்மையுள்ளவர்கள் மேல் கரிசனையுள்ளவ ராயிருந்து, அவர்களை மிகுந்த அக்கறையுடன் விசாரிக்கிறார். ‘அவருடைய பலத்த கரத்தின் கீழ் தாழ்ந்திருங்கள்’ (I பேதுரு 5 : 6 - Eng.) என்றும், அதைத் தொடர்ந்து, “அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்” (வச. 7) என்றும் நாம் வாசிக்கிறோம். இதினின்று *தாழ்மையுள்ளவர்களை* அவர் சிறப்பான விதத்தில் விசாரிக்கிறார் என நாம் அறிந்துகொள்ளலாம். அவர் தாழ்மை யுள்ளவர்களின் மேல் எப்போதும் நினைவாயிருக்கிறார். ஆகவே நாம் கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொள்ள நாடுவோமாக. “மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்” என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது (வச. 5). நாம் ஒவ்வொரு நாளும் புதிதாக வஸ்திரம் அணிந்துகொள்வது போல, அனுதினமும் புதிதாக மனத்தாழ்மையைத் தரித்துக்கொள்ள வேண்டும். நாம் நேற்று அணிந்துகொண்ட தாழ்மை, நம்முடைய இன்றைய ஜீவியத்



திற்குப் போதுமானதாயிராது; இன்று நாம் மீண்டும் புதிதாக மனத்தாழ்மையை அணிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு நாம் கிறிஸ்துவின் தாழ்மையை வந்தெட்டும் வரை நாளுக்கு நாள் தாழ்மையில் வளர்ந்தேற வேண்டும். நாம் நம்மைத் தாழ்த்தும் போது – நம்மை மறைத்துப் பாதுகாத்துக்கொள்ளும்படியாகவும், நம்மை அரவணைத்துப் பராமரிக்கும்படியாகவும் கர்த்தரின் பலத்த கரம் நம் மேல் இருக்கும். தாழ்மையுள்ளவர்களுக்கு எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டிய அவசியமிராது; அவர்கள் மாத்திரமே தங்கள் கவலைகளையெல்லாம் கர்த்தர் மேல் வைத்துவிட முடியும். நாம் மனத்தாழ்மையை அணிந்து கொள்ளும்போது, கர்த்தரின் பலத்த கரம் நமக்காகப் பலத்த கிரியைகளைச் செய்யும்!

***“அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட அந்த வேலைக்காரன் பிரதியுத்தரமாக: இவள் மோவாப் தேசத்திலி ருந்து நகோமியோடேகூட வந்த மோவாபிய பெண்பிள்ளை. அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக்கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக்கொண்டாள்; காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள்; இப்பொழுது அவள் குடிசைக்கு வந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று என்றான்”*** (ரூத் 2 : 6, 7).

## அயராது சேவிப்போம்!

போவாசின் வயல்நிலத்தில் அறுக்கிறவர்களின்மேல் கண் காணியாக வைக்கப்பட்டவன், கதிர் பொறுக்கிக்கொண்டிருந்த பெண்பிள்ளையைக் கவனித்துக்கொண்டிருந்திருக்கிறான். அவ் வயல்நிலத்தில் அவள் நடந்துகொண்ட விதம் அவளிலிருந்த கிருபையை வெளிப்படுத்திற்று. ரூத்தைப் போல நாம் தேவ னுடைய கிருபையை நாடித் தேடுகிறவர்களாயிருந்தால், நம் செய்கைகள் யாவற்றிலும் கிருபை விளங்கும்; நம்மில் வெளிப் படுகிற கிருபையை மற்றவர்களும் கண்டுகொள்வார்கள்; பிற ருக்கு நாம் ஆசீர்வாதமாகவும் இருப்போம்.

அறுக்கிறவர்களின் மேல் கண்காணியாக வைக்கப்பட் டிருந்த போவாசின் வேலைக்காரன், சபையைக் கண்காணிக் கும்படி உத்தரவாதமுள்ளவர்களாய் நியமிக்கப்பட்டுள்ள கர்த்த ருடைய ஊழியருக்கு நிழலாட்டமாயிருக்கிறான். தேவ ஊழியர் தங்கள் ஆடுகளின் நிலைமையை நன்றாக அறிந்திருக்க வேண்டும். "உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து கொள்; உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு" (நீதி. 27 : 23) என நாம் வாசிக்கிறோமே! அவர்கள் தங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்டதும், தங்கள் கண்காணிப்பில் உள்ளதுமான மந்தை முழுவதையுங்குறித்தும் கவனமாயிருக்க வேண்டும் (அப். 20 : 28). கதிர் பொறுக்கிக் கொள்ளும்படி போவாசின் வயல்நிலத்துக்குப் புதிதாக வந்திருந்த பெண்பிள்ளையைக் குறித்துப் போவாஸ் தன் வேலைக்காரனான கண்காணியினிடத்தில் விசாரித்தபோது, அவனால் அவளைக் குறித்துத் தெளிவாகச் சொல்லக்கூடியதாயிருந்தது போல, தேவ ஊழியர்கள் தங்கள் மந்தையைக் குறித்துப் பிரதான மேய்ப்பராகிய கிறிஸ்து இயேசுவினிடத்தில் கணக்கொப்புவிக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். அவ்வாறே, அனுபவம் வாய்ந்தவர்களான தேவ ஊழியர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள இளம் ஊழியர்களின் நிலைமையை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

கண்காணியானவன் ரூத்தைக் குறித்துப் போவாசினிடத்தில் நற்சாட்சி கொடுக்கிறான். ரூத்தின் தாழ்மை அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்துகொண்டது. அவள் அவ்வயல்நிலத்துக்கு வந்தபோது அவனிடத்தில் சென்று, 'அறுக்கிறவர்களின் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக்கொள்ள என்னை அனுமதிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (I pray you)' என்று பணிவுடன் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள் என ரூத் 2 : 7 - இன் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. இவ்வார்த்தைகள் அவளில் இருந்த ஆழ்ந்த மனத்தாழ்மையை வெளிப்படுத்துகின்றன. ரூத் தன்னுடைய ஜீவியத்தில் வெளிப்படுத்திக்கொண்டிருந்த ஆழ்ந்த



தாழ்மையை இச்சரித்திரத்தில் எங்கும் நாம் காண்கிறோம். 'கதிர் பொறுக்குதல்' என்பதே ஒரு தாழ்வான வேலை; அதுவுமல்லாமல், ஆங்காங்கே சிந்திக்கிடக்கிற கதிர்களை ஒவ்வொன்றாகப் பொறுக்குகிறவர்கள் அறுக்கிறவர்களைக் காட்டிலும் அதிகமாகக் குனிந்துதான் வேலைசெய்ய வேண்டியதாயிருக்கும். அவ்விதம் குனிவதும் ஆவிக்குரிய பிரகாரமாக மனத்தாழ்மையைக் குறிக் கிறது. மேலும் வயல்வெளியின் சேற்றிலும் சதுப்பு நிலத்திலும் விழுந்துகிடக்கும் கதிர்கள் சுத்தமாயிரா. அவற்றைப் பொறுக்கி, சுத்தப்படுத்தியெடுப்பதற்கும் தாழ்மை அவசியம். இவ்வளவு பாடுபட்டுச் சேகரித்த கதிர்களைத் தட்டி அடித்துத் தீர்க்கும்போது, முடிவாக மிகக் குறைந்த அளவு தானியம் மாத்திரமே கிடைக்கும். இப்படிப்பட்ட அற்பமான வேலையைச் செய்யும்படி அவள் கண்காணியிடம் ஆழ்ந்த மனத்தாழ்மையுடனும் பணிவுடனும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்! 'கர்த்தருடைய வயல்நிலத்தில்' ஊழியம் செய்யும்படி தேவ ஊழியர்களுக்கு ஆழ்ந்த மனத் தாழ்மை அவசியமாகும்.

"*காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள்*" என்று கண்காணி ரூத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறான். நம்மை நடத்தும்படி தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுக்கத்தக்க நிலையில் நம் ஜீவியம் இருக்க வேண்டும் (II கொரி. 8 : 22, 23). ரூத்தைக் குறித்து அக்கண்காணி மாத்திரமல்ல, போவாசும் (ரூத் 2 : 11), பெத்லெகேம் ஊரார் அனைவருங்கூட (ரூத் 3 : 11 : 4 : 14, 15) நற்சாட்சி கொடுத்தனர். நாமும் எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும் (III யோவான் 12). ரூத் தன் வேலையைக் காலையிலேயே துவக்கி னாள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் காலைதோறும் புதியவையாயிருக்கின்றன. "*இதுவரைக்கும்*" அதாவது போவாஸ் அங்கு வரும் வரை அவள் அங்கே கதிர் பொறுக்கிக்கொண் டிருந்ததாக அவளைக் குறித்துச் சொல்லப்பட்டது. போவாஸ் கர்த்தராகிய இயேசுவுக்கு நிழலாட்டமானவன் என்று முன்பு நாம்

கண்டோம். நம்மைச் சந்திக்கும்படி கர்த்தராகிய இயேசு மகிமையில் வெளிப்படும் வரை, தேவ ஊழியராகிய நாம் மனத்தாழ்மையுடன் அவருடைய சேவையைத் தொடர வேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்தல் உலகத்தாரின் பார்வையில் அற்பமான வேலையாய்த் தோன்றினும், உண்மையில் அது மிக உன்னதமானதும், கனத்துக்குரியதுமான சேவையாகும். ***நாம் மெய்யான பரிசுத்த ஜீவியம் உள்ளவர்களாய் நம்மைக் காத்துக் கொண்டு கர்த்தருடைய வீட்டில் செய்யும் எந்த வேலையும் அற்பமானதன்று; அது மகிமையானதாகும்.*** நாம் மெய்யான பரிசுத்தமுள்ளவர்களாய், கர்த்தருடைய வீட்டில் ஒருவேளை கழிவறையிலோ, அச்சகத்திலோ, சமையலறையிலோ அல்லது கம்ப்யூட்டரிலோ நம் வாழ்நாளெல்லாம் வேலை செய்துகொண்டிருப்பினும், அது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய நம் தேவனுக்குச் செய்யும் சேவையாகையால் அது அற்பமான வேலையன்று; அது மிக மேன்மையான ஊழியமாகும். இந்த வெளிப்படுத்தல் உள்ளவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊழியத்தில் ஒருபோதும் மனம் சலித்துப்போகமாட்டார்கள். ‘கர்த்தாவே, எனக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள வேலை எதுவாயிருப்பினும், நீர் என்னைச் சந்திக்க வரும் வரை அதில் நான் உம்மை உண்மையுடன் சேவித்துக்கொண்டிருக்க எனக்குக் கிருபை தாரும்’ என நாம் வேண்டிக்கொள்வோமாக.

ரூத்தும் அவளுடைய மாமியும் உயிர் பிழைக்க வேண்டுமாயின், ரூத் தன் ஜீவிய காலமெல்லாம் கதிர் பொறுக்குகிறவளாகவே இருக்க வேண்டும் என்பது போல் தான் அப்போதைய சூழ்நிலை காணப்பட்டது. போவாஸ் தன் பேரில் தயவு பாராட்டுவான் என்றோ, தான் கதிர் பொறுக்கும் நாட்கள் முடிவுறும் என்றோ அவள் சற்றும் கற்பனை செய்திருக்க முடியாது. எனினும், அவள் தன் வாழ்நாளெல்லாம் போவாசின் வயல்நிலத்தில் அந்தத் தாழ்வான வேலையையே செய்துகொண்டிருக்க மனமுவந்திருந்தாள். இவ்விதமாகத் தன்னைத் தாழ்த்திய மற்றொரு



பெண்ணைக் குறித்து I சாமுவேல் 25 : 41 – இல் நாம் காண்கிறோம்: அபிகாயில் எழுந்திருந்து, தரைமட்டும் முகங்குனிந்து, “இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்” என்றாள். தாவீதின் வேலைக்காரருடைய கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாக, அடிமைக்கு அடிமையாகத் தன்னைத் தாழ்த்திய அவள் தாவீதின் மனைவியாக உயர்த்தப்பட்டாள்! *‘கர்த்தாவே, உம்முடைய வீட்டில் மிகத் தாழ்வான ஒரு வேலையையாகிலும் என் வாழ்நாளெல்லாம் செய்துகொண்டிருக்க எனக்கு அருள் புரிந்தருளும்; உம்முடைய வீட்டில் ஏதாவது ஒரு வேலை எனக்குக் கிடைத்தால் போதும்; அதை நான் என் ஜீவிய காலம் முழுவதும் உண்மையாய்ச் செய்துகொண்டிருப்பேன்’* என்பதே தேவ ஊழியரின் இருதயத்தில் இருக்க வேண்டிய வாஞ்சையும் தீர்மானமுமாகும். கர்த்தர் நம்மைச் சந்திக்க வரும் வரை நாம் அவ்வேலையை நமக்குக் கிடைத்த பெரும் சிலாக்கியமாகக் கருதி, உற்சாகத்துடனும் மனநிறைவுடனும் செய்துகொண்டிருப்போமாக.

கர்த்தருக்கு ஊழியம் செய்வது நமக்குச் சந்தோஷமளிப்பதாயிருக்க வேண்டும். சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள், ஆனாலும் அவர்கள் சந்தோஷத்துடன் அப்படிச் செய்வதில்லை. “கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்” என திருவசனம் கூறுகிறது (எரே. 48 : 10). நாம் என்ன வேலை செய்கிறோம் என்பதல்ல, அவ்வேலையை யாருக்காகச் செய்கிறோம் என்பதே நாம் நம்முடைய கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாகும். இதுவே நம் சேவையில் முழு வித்தியாசத்தையும் ஏற்படுத்திவிடும். நாம் ஒரு வேலையைக் ***கர்த்தருக்காகச்*** செய்கிறோம் என்று உணருவோமாயின், அதைச் செய்வதில் நமக்கு மிகுந்த சந்தோஷம் இருக்கும். இரு வித்தியாசமான அலுவல்களுடன் பூமிக்கு அனுப்பப்பட்ட இரு தேவ தூதர்களைப் பற்றிய சிறு

கதை ஒன்றுண்டு. அத்தேவ தூதர்களில் ஒருவன் அமெரிக்கா விலுள்ள வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியாக வீற்றிருக்கவும், மற்றவன் மிக மோசமான கழிவுநீர்த்தேக்கம் ஒன்றினைச் சுத்தம்பண்ணவும் தேவனிடத்திலிருந்து கட்டளை பெற்றிருந்தனர். அவ்விருவரும் சமமான சந்தோஷமுள்ளவர்களாகவே தங்க ளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலைகளைச் செய்து நிறை வேற்றினர். ஒருவன், தான் அமெரிக்க ஜனாதிபதியாயிருக்கும் சிலாக்கியம் பெற்றதில் ஆனந்தப் பரவசமடையவும் இல்லை; மற்றவன் தனக்கு மிக இழிவானதொரு வேலை கொடுக்கப் பட்டதே என்று மனம் வருந்தவும் இல்லை. இருவரும் தங்க ளுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைத் தாங்கள் ***'கர்த்தருக்காகச்'*** செய்வதாக அறிந்திருந்ததால், ஒன்றுபோல் சந்தோஷமுள்ள வர்களாய் அவைகளைச் செய்து நிறைவேற்றினர். "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக் கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ. 3 : 23, 24). தேவ ஊழியரே, நீங்கள் ***'கர்த்தருக்கு'*** ஊழியம் செய்கிறீர்கள் என்ற சந்தோஷம் உங்கள் உள்ளங்களை நிரப்புவதாக.

காலை முதல் போவாஸ் வரும் வரை ரூத் அவனுடைய வயல்நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் சற்றும் ஓய்வெடுக்கவில்லை. வாற்கோதுமை வயல்கள் நெல்வயல்களைப் போன்றவையே. அவற்றில் ஆங்காங்கே நிழல் தரும் மரங்கள் காணப்பட மாட்டா. பகலின் உஷ்ண வேளையில் அவள் ஓய்வின்றிக் கதிர் பொறுக்கிக்கொண்டிருந்தாள். அது கடினமான ஒரு வேலையாகவே இருந்தது. நாமும் நம்முடைய ஆண்ட வராகிய இயேசு வரும் வரை அவருடைய பண்ணையில் ஓய்வின்றி அயராது உழைப்போமாக. கர்த்தரின் வருகை வரை அல்லது நம் மரண நாள் வரை நாம் அயராது அவரது சேவை யில் தொடர்ந்து ஈடுபட்டிருக்க வேண்டுமென்ற வாஞ்சையும்



வைராக்கியமும் நம்மில் இருக்க வேண்டும். போவாஸ் வரும் வரை ரூத் அந்தத் தாழ்வான வேலையை ஓய்வின்றி உற்சாகத் துடன் செய்துகொண்டேயிருந்தது போல, நாமும் கர்த்தரின் இரகசிய வருகை வரை யாதொரு ஓய்வையும் சொகுசையும் நாடித் தேடாமல், மனத்தாழ்மையுடன் அவருக்கு ஊழியம் செய்துகொண்டிருப்போமாக. இது குணசாலியான ஒரு ஸ்திரீயின் அடையாளங்களுள் ஒன்றாகும். அவள் "தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள்" (நீதி. 31 : 13). இப்படிப்பட்ட கிருபையை நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோமாக. நாம் ஓய்வை நாடினால் கர்த்தரின் ஊழியம் பாதிக்கப்படும். ஆனால் நாம் கர்த்தருக்கு மனப்பூர்வமாய் ஊழியஞ்செய்வோ மாயின், நாம் முன்பு கண்டது போல பரிசுத்த ஆவியானவரே நமக்கு இளைப்பாறுதலைத் தேடித் தருவார் (ரூத் 3 : 1). 'சோம் பேறியின் மனது பிசாசின் தொழிற்சாலை' என்பது முதுமொழி. சோம்பலுள்ளவர்களைக் கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காகத் தெரிந்துகொள்வதில்லை. நாமோ கர்த்தரின் கிரியையில் எப் பொழுதும் பெருகுகிறவர்களாய் இருப்போமாக.

சுய அனுதாபமும் மனக்கசப்பும் உள்ளவளாயிருந்த தன் மாமியையும் பிழைப்பூட்டும்படி கடினமாக உழைக்க ரூத் ஆயத்தமாயிருந்தாள். மிகவும் மோசமானவர்கள் போல தோன்றுகிறவர்களுக்கும், திருந்துவார்கள் என்பதற்கான யாதொரு நம்பிக்கைக்கும் இடமில்லாதவர்களுக்கும் கரிசனையுடன் உதவி செய்யவும், அவர்களுக்காகச் சந்தோஷமாகவும் மனப்பூர்வ மாகவும் வேலை செய்யவும் நாம் முன்வருவோமாயின் நிச்சய மாகவே அதற்கான பிரதிபலனைக் கண்டடைவோம். சுய அனு தாபத்தினாலும் மனக் கசப்பினாலும் நிறைந்திருந்தவளும், தேவ னுக்கு விரோதமாய் முறையிட்டுக்கொண்டிருந்தவளும், வெறுமை யான நிலையில் இருந்தவளுமான நகோமி, ரூத்தின் அன்பு, தியாகம், தயவு இவற்றின் பலனாக நாளடைவில் முற்றிலும் மாறுதலடைந்தாள்! தேவ ஊழியரே, சில வேளைகளில் விசுவாசிகள்

நகோமியைப் போல கசப்பினால் நிறைந்தவர்களாயும், நம்பிக்கை யற்ற நிலையிலும் இருக்கக் கூடும். வேறு சிலர் நகோமியைப் பார்க்கிலும் நிர்ப்பந்தமான நிலையிலும் இருக்கக் கூடும். என்றாலும், நீங்கள் அவர்கள் பேரில் அன்பும் தயவும் பாராட்டி, அவர்கள் நிமித்தமாகப் பல பாடுகள் பட்டு, அவர்களுக்காகப் பிரயாசப்படுவீர்களாயின், முடிவில் அது நிறைவான பலனைத் தரும். அவ்வாறே, பல வருட அனுபவமுள்ள விசுவாசிகளில் யாரேனும் இந்நிலையில் இருப்பார்களாயின், புதிய விசுவாசிகள் தங்கள் நடக்கையினால் அந்நபரை ஆதாயப்படுத்திக்கொள்ள லாம். மெய்யான தேவபிள்ளைகள் தங்களோடு வைக்கப்பட்டுள்ள எவரையும் இவ்விதமாக ஆதாயப்படுத்திக்கொள்ளக் கூடும்.

***"அப்பொழுது போவாஸ் ரூத்தைப்பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ் விடத்தைவிட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு. அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து, அவர்கள் பிறகே போ; ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளையிட்டிருக் கிறேன்; உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க்குடங் களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்கலாம் என்றான்"*** (ரூத் 2 : 8, 9).

போவாஸ் ரூத்தைச் சந்தித்த தன் முதல் சந்திப்பில் அவளோடு பேசும் வார்த்தைகளை இவ்வேதபகுதியில் நாம் காண்கிறோம். அவ்வார்த்தைகளில் பல விலையேறப்பெற்ற ஆவிக்குரிய சத்தியங்கள் அடங்கியுள்ளன. அவற்றை நாம் கீழே காண்போம்.

(i) ***"மகளே, கேள்":***

இவ்வேதபகுதி ஆங்கிலத்தில், '**என்** மகளே, கேள்' என இன்னும் தெளிவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவையே போவாஸ் ரூத்தினிடத்தில் பேசிய முதல் வார்த்தைகளாகும்.



ரூத்தைப் பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு அவள் பேரில் மிகுந்த மனதுருக்கம் உண்டாயிற்று.

போவாசின் வயல்நிலமே ரூத் போவாசைச் சந்தித்த முதல் இடமாயிருந்தது; அங்கு அவள் தன்னை 'என் மகளே' என்றழைத்து தன்னோடு பட்சமாய்ப் பேசும் ஒரு அன்பின் சத்தத்தைக் கேட்டாள். தேவபிள்ளைகளாகிய நம் ஒவ்வொரு வரையும் தேவன்தாமே 'நம்முடைய போவாசின் வயல்நிலத் திற்குக்' கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். இங்கு நாம் நம்முடைய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கக்கூடியவர்களாகிறோம். 'அவர் தம்முடைய ஜனங்களுக்குச் சமாதானம் கூறுவார்' என நாம் வாசிக்கிறோம் (சங். 85 : 8). தான் கதிர் பொறுக்கிக்கொள்ளும்படி வந்த வயல்நிலத்தின் உரிமையாளனே தன்னை 'என் மகளே' என்று அழைப்பதைக் கேட்டபோது, அது ரூத்துக்கு எவ்வளவு சமாதானமும் ஆறுதலும் அளிப்பதாய் இருந்திருக்கும்! பொது வாக, கதிர் பொறுக்குகிறவர்கள் நில உரிமையாளனிடத்திலிருந்து கடிந்துகொள்ளுதலையும் வெறுப்பையுமே எதிர்பார்க்கக் கூடிய வர்களாயிருந்தனர். தன் மாமியினிடத்திலிருந்து யாதொரு ஊக்கு விக்கும் வார்த்தையும், ஆறுதலளிக்கும் வார்த்தையும் ரூத்துக்குக் கிடைக்காவிடினும், அவளுடைய சுயநலமற்ற அன்புக்கும் தியாகத்துக்கும் தக்க நிறைவான பலனைத் தேவன் ***போவாசின் வயலில்*** அவளுக்குக் கட்டளையிட்டார். போவாஸ் அவளோடு பட்சமாய்ப் பேசினான். சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய வீட்டில்தான் முதல் முறையாகக் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டான். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத் திற்குள் இருந்த வரை மட்டுமே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டனர். தேவபிள்ளையே, நீயும் தேவ சத்தத்தைக் கேட்கும்படி அவருடைய வீட்டிற்கு வருவாயாக. "தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்" (சங். 82 : 1).

*"மகளே, கேள்"* என்பதற்கு இணையான ஒரு வாக்கி யத்தைச் சங்கீதம் 45 – இல் நாம் காண்கிறோம்: "குமாரத்தியே

கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" (வச. 10, 11). தன் ஜனத்தையும் தன் தகப்பன் வீட்டையும் விட்டுவிட்டு, தமக்கு ஊழியஞ்செய்யும்படி தம்மைப் பின்பற்றும் ஒரு தேவபிள்ளையைக் கர்த்தர் தம்முடைய குமாரத்தி என உரிமைபாராட்டுகிறார். அவர் அவளுடைய ராஜாவாயிருந்து, அவளுடைய அழகில் பிரியப்படும்படி, அவள் தான் விட்டுவிட்டவைகளை மறந்துவிடவும் வேண்டும் என்பதை அவர் அவளுக்கு வலியுறுத்துகிறார். இங்கே ரூத் தன் தகப்பனையும் தாயையும் மற்றெல்லாரையும் விட்டு ஓர் அந்நிய தேசத்திற்கு வந்திருக்கிறாள். அவளுக்கு அறிமுகமானோர் எவருமில்லாத இந்த அந்நிய தேசத்தில், ஐசுவரியவானான ஒரு பெரிய மனிதன் அவளை 'என் மகளே' என அழைக்கிறான்! நம்முடைய கர்த்தராகிய இயேசு போவாசைப் பார்க்கிலும் பெரியவரும் ஐசுவரியசம்பன்னருமாயிருக்கிறார். நாம் நம்முடைய தகப்பனையும் தாயையும் விட்டு கர்த்தரைச் சேவிக்கும்படி அவருடைய வீட்டிற்கு வருவோமாயின் - அவரே நமக்குத் தகப்பனும் தாயுமாயிருப்பார்; அவரை நாம் மிகச் சிறப்பான விதத்தில் நம்முடைய சொந்தத் தகப்பனாக அனுபவிக்கலாம். பின்னாட்களில் போவாஸ் மெய்யாகவே ரூத்தைப் பொறுப்பெடுத்துப் பாதுகாத்துப் பராமரிக்கிறவனாகவும், அவள் மேல் மனதுருக்கமுள்ளவனாய் அவளை ஆதரிக்கிறவனாகவும் மாறிவிட்டான். நாம் மெய்யாகவே நம்முடைய குடும்பத்தையும் நமக்குண்டான யாவற்றையும் வெறுத்து விட்டுவிட்டு கர்த்தரைச் சேவிக்க முன்வருவோமாகில், அதுமுதல் அவர் நம்மைத் தனிப்பட்ட விதத்தில் முற்றிலும் பொறுப்பெடுத்துக்கொள்வார். அத்துடன், அவர் நமக்குத் தகப்பனைப் போலவும் தாயைப் போலவும் இருக்கிற அநேகரை எழுப்புவார். இந்த அதிகாரத்தில் இருவர் ரூத்தை 'என் மகளே' என்று அழைக்கின்றனர் (ரூத் 2 : 2, 8). அவள் தன் தகப்பன், தாய், வீடு, தேசம் போன்ற



அனைத்தையும் விட்டுவிட்டபோது அவளை 'என் மகளே' என்று அழைக்கக்கூடிய ஒரு ஸ்திரீயையும் ஒரு மனுஷனையும் தேவன் அவளுக்குக் கொடுத்தார். வேறு வார்த்தைகளில் கூறின், அவளுக்குத் தாயாகவும் தகப்பனாகவும் விளங்கக்கூடியவர்களைத் தேவன் அவளுக்குத் தந்தார். தேவ ஊழியரே! கர்த்தர் உங்களை எவ்வளவு பெரிய குடும்பத்திற்குள் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்! இது ஒரு பரிசுத்த குடும்பம்! இந்த ஐக்கியம் நித்தியத்திலும் தொடரும்! இந்தப் பரலோகக் குடும்பத்திற்குள் கொண்டுவரப்பட்டிருந்தும் மாம்சீகமான பற்றுதல்கள் உள்ளவர்களாயிருப்பவர்களுக்கு ஐயோ! அப்படிப்பட்டவர்கள் முடிவுபரியந்தம் இப்பரிசுத்த குடும்பத்தில் நிலைத்திருக்க முடியாது. கர்த்தருடைய வீட்டில் இருந்துகொண்டு தங்கள் சொந்தக் குடும்பத்தினர் பேரில் பற்றுதல் உள்ளவர்களாயிருக்கும் பிரதிஷ்டையில்லாத தேவ ஊழியர்கள், தண்ணீரில் கலக்கப்பட்ட எண்ணெயைப் போல் இருப்பார்கள். அவர்களால் மற்ற தேவ ஊழியர்களோடு இசைந்து போக முடியாது.

### (ii) *"பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும் ... இரு"*:

பிரதிஷ்டையுடன் கர்த்தரைச் சேவித்துவரும் தேவ ஊழியரே! தேவன் தாமே நம்மைப் 'போவாசின் வயல்நிலத்துக்கு' - சரியான இடத்துக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். நாம் எவ்வளவு பாக்கியவான்கள்! 'வேறே வயலுக்குப் போகாமல் இரு' என்பதே போவாஸ் ரூத்தைச் சந்தித்த முதலாவது சந்திப்பில் அவளுக்குக் கற்பித்த முதல் விஷயமாகும். கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டிருக்கிற தேவ ஊழியர்களுக்கும் அவர் அருளும் முதல் ஆலோசனை இதுவே! நாம் பாவம், உலகம், பேர், புகழ் போன்ற அந்நிய வயல்நிலங்களை நாடிப் போகக் கூடாது. இவ்வுலகில் எத்தனையோ 'வயல்நிலங்கள்' இருப்பினும், நாம் சரியான இடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பது நம் மேலுள்ள தேவனுடைய மா தயவே! பண ஆதாயத்திற்காகவும்

சொகுசான வாழ்க்கையுடனும் ஊழியம் செய்தல், 'செழிப்பின் சுவிசேஷம்' (gospel of prosperity) அறிவித்தல், டி. வி., மற்றும் வானொலி மூலம் பிரபலமான ஊழியம் செய்தல் போன்ற பலதரப்பட்ட பிரசித்தி பெற்ற ஊழியங்கள் இன்று இவ்வுலகில் உள்ளன. ஆனால் தேவன் பிரதிஷ்டையுள்ள தமது ஊழியர்களை மிக மேன்மையானதும் உன்னதமானதுமான ஒரு சேவைக்கென்று அழைத்திருக்கிறார். அவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருந்து கர்த்தரைச் சேவிக்க வேண்டும். "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9 : 62) என கர்த்தராகிய இயேசு கூறுகிறார். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" ; "ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" என சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 27 : 4 ; 84 : 10). கர்த்தருடைய வீட்டில் தங்கியிருக்கும் ஒரு நாள், புறம்பே நாம் செலவழிக்கக்கூடிய ஆயிரம் நாட்களைப் பார்க்கிலும் மேலானது. வேறு வார்த்தைகளில் கூறின், நாம் ஊழியத்தினிமித்தமேயன்றி, கர்த்தருடைய வீட்டை விட்டு வேறெங்கேயாகிலும் ஒரு நாள் தங்கினாலும் அது அவருடைய வீட்டில் நாம் செலவழிக்கக்கூடிய ஆயிரம் நாட்களை இழந்துபோனதற்குச் சமமாகும். உன்னதமான தேவனுடைய ஊழியர்கள் இந்த வெளிப்படுத்தல் உள்ளவர்களாயிருக்க வேண்டும். லூக்கா 14 : 26 – இல் கூறப்பட்டுள்ளபடி தங்களுக்குண்டான எல்லாவற்றையும் பிரதிஷ்டை செய்த பின், தங்கள் தகப்பனையோ, தாயையோ, மற்றும் மாம்சீக சம்பந்தமான உறவினரையோ காண வேண்டுமென்ற ஒரு ஆசை அவர்களுக்கு



உண்டாகுமாயின், அவர்கள் 'கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிறவனுக்கு' ஒப்பானவர்களே! இப்படிப்பட்ட எண்ணங்களும் விருப்பங்களும் தேவனிடத்திலிருந்து வருபவை அல்ல. அவை பிரதிஷ்டைபண்ணப்பட வேண்டும். அப்படிப்பட்ட மாம்சீகப் பற்றுதல்களோடு கர்த்தருடைய வீட்டில் இருக்கும் தேவ ஊழியர்கள் ஒருக்காலும் சந்தோஷமுள்ளவர்களாயிருக்க முடியாது; அவர்களுடைய ஜீவியமும் ஊழியமும் வெற்றிகரமாயிருக்கவும் முடியாது. நாம் இப்பூமியில் ஜீவிக்கும் நாட்களில் எப்படிப்பட்ட ஓர் ஊழியம் செய்திருக்கிறோம் என்பதை நம்முடைய முடிவு விளங்கப் பண்ணும். "அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்" (மல். 3 : 18). எளிமையும் தாழ்மையுமுள்ள ஒரு ஜீவியமும் ஊழியமும் செய்யும்படியாகவே தேவன் நம்மைப் 'போவாசின் வயல்நிலமாகிய' தம்முடைய பண்ணைக்குக் கொண்டுவந்திருக்கிறார். அப்படிப்பட்ட ஓர் ஊழியம் செய்யும்படி நமக்கு வெளிப்படுத்தல் தேவை!

### (iii) *"இவ்விடத்தைவிட்டுப் போகாமலும் ... இரு":*

நம்முடைய இருதயம் 'கர்த்தருடைய வயல்நிலத்தை' விட்டு வேறெங்கும் அலைந்து திரியாமல், அவர் நம்மைக் கொண்டுவந்து வைத்திருக்கிற இடத்திலேயே நிலைத்திருக்க வேண்டும். அவ்விடத்தை விட்டு வேறெங்கும் போகாதிருக்க வேண்டுமாயின், அவர் நம்மை வைத்திருக்கிற இடத்தில் நாம் மனநிறைவுடனும் பூரண திருப்தியுடனும் இருக்க வேண்டும். தேவபிள்ளையே, நீ மெய்யாகவே கர்த்தராகிய இயேசுவில் திருப்தியடைந்திருக்கிறாயா? தேவ ஊழியனே, தேவன் தாமே உனக்களித்திருக்கும் பிரதிஷ்டையுள்ள, மகிமையான இவ்வூழியத்தில் நீ மெய்யாகவே திருப்தியடைந்திருக்கிறாயா? தேவன்

உனக்கு ஒரு மகிமையான சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார். அது உலகத்திலுள்ள ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டு, பாலகருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (லூக்கா 10 : 21). ஆவியில் எளிமையுள்ளவர்களும் மனத்தாழ்மை யுள்ளவர்களுமான *பாலகருக்கே* இந்த மறைபொருள் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்வது பரமபிதாவின் திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. ***இம்மகிமையான சேவையில் ஒருவரது ஊழியத்திற்கு அல்ல, அவரது ஜீவியத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.*** கர்த்தருடைய மகிமையான ஊழியத்தைச் செய்யும்படி உன் ஜீவியம் தேவனோடு செம்மை யானதாக இருக்க வேண்டும். 'தேவன் உனக்குள் கிரியை செய்துகொண்டிருப்பாரானால் உன் மூலமாகவும் கிரியை செய்து கொண்டிருப்பார்' என ஒரு தேவமனிதன் கூறுகிறார். தேவன் *உனக்குள்* கிரியை செய்யாதிருக்கும்பட்சத்தில், அவரது சேவையில் நீ உபயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாயென்றால், நீ ஆபத்தான நிலையில் இருக்கிறாய் என்பதை நினைவிற் கொள்வாயாக. நீ 'எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற் கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திர மாக' என்றும் அவரது கரத்தில் இருக்க விரும்பினால், முதலாவ தாக உனக்குள் தூய்மை, தாழ்மை, தெய்வீக அன்பு, சாந்தம் போன்ற விலையேறப்பெற்ற திவ்ய சுபாவங்களை உருவாக்கும் படி அவருக்கு நீ இடமளிப்பாயாக (II தீமோ. 2 : 21). இவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதற்குப் பதிலாக, அவர் உன்னைத் தமது ஊழியத்தில் பிரயோஜனப்படுத்த வேண்டும் என்றே ஜெபத்தில் போராடிக்கொண்டிராதே. சிம்சோன் ஒரு கழுதையின் தாடை யெலும்பை எடுத்து, அதைக் கொண்டு சத்துருக்களான ஆயிரம் பேரைக் கொன்று குவித்தான். தன் வேலை முடிந்த பின்பு அவன் தன் கையிலிருந்த அந்தத் தாடையெலும்பை எறிந்துவிட்டான் என நாம் வாசிக்கிறோம் (நியா. 15 : 15 - 17). ஆயிரக்கணக்கானவர் களைத் தம் பக்கமாகக் கொண்டுவரும்படியாகக் கர்த்தர் உன்னை உபயோகித்து விட்டு, அதற்குப் பின் உன்னை வீசி எறிந்து



விடுவாராயின் நீ மிகவும் பிரயோஜனமுள்ள ஒரு நபராய் அவரது கரத்திலிருந்ததினால் பயன் என்ன? ஒரு நபர் கர்த்தரின் சேவையில் பிரயோஜனமுள்ளவராய் இருத்தல் நல்லதுதான்; ஆயினும் அதைப் பார்க்கிலும் அவர் கர்த்தருக்கு உண்மை யுள்ளவராயிருப்பதே முக்கியமானதும் பிரதானமானதுமாகும். அவர் உன்னை அழைத்த அழைப்புக்கு நீ உண்மையுள்ளவனா யிருப்பாயாக. குறிப்பாக, நீ மனத்தாழ்மையுடன் கர்த்தரோடுகூட நடப்பாயாக. கோபம், எரிச்சல், கசப்பு, ஆத்திரம் போன்ற சுபாவங்கள் உன்னில் இருக்குமாயின், அவற்றிற்கான அடிப்படைக் காரணம், நீ உன்னில் இடமளித்திருக்கும் பெருமையே ஆகும். '*நீ எந்த அளவுக்குச் சிறியவனாகிறாயோ, அந்த அளவுக்கு உன்னில் கிரியை செய்யும்படி தேவனுக்கு விசாலமான இடம் உண்டாகும்*' என ஒரு பக்தன் கூறுகிறார். இது முற்றிலும் உண்மையே! ரூத்தின் சரித்திரம் இதற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். அவள் தன்னை மென்மேலும் தாழ்த்தியபோது, தேவன் அவளில் கிரியை நடப்பித்ததுடன், அவள் மூலமாகவும் மகத்தான கிரியை செய்தார். தமக்கு உண்மையுள்ளவளாய் இருந்த அவளைச் சிறப்பான விதத்தில் உபயோகிக்கத் தேவன் உண்மையுள்ளவரா யிருந்தார்!

### (iv) ***"இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு":***

'என் ஊழியக்காரப் பெண்களுடன் மிக நெருங்கித் தங்கி யிரு (stay close)' என இவ்வேதபகுதியின் மற்றொரு மொழி பெயர்ப்பு கூறுகிறது. ஒரு தேவ ஊழியன் மற்ற தேவ ஊழியர்கள் யாவருடனும் ஐக்கியமுள்ளவனாயிருக்க வேண்டும். அப்படியே தேவபிள்ளைகள் அனைவரும் ஒருவரோடொருவர் ஐக்கியமுள்ள வர்களாயிருக்க வேண்டும். நாம் தேவஜனங்களோடு ஐக்கியமாயிரா விட்டால் தேவனோடு ஐக்கியமாயிருக்க முடியாது; நாம் பிறரோடு ஒப்புரவாகாவிட்டால் தேவனோடு ஒப்புரவாக முடியாது. நாம் மற்றவர்களோடு ஒன்றாக்கப்படுவது எப்படி? மெய்யான மனத்

தாழ்மையினால் மாத்திரமே நாம் மற்ற தேவபிள்ளைகளுடன் ஐக்கியமாயிருக்க முடியும். அந்த இடத்தில்தான் தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்படும். "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவான் 17 : 22) என்று கர்த்தராகிய இயேசு பரமபிதாவிடம் கூறுகிறார்.

### (v) *"அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து"*:

'அவர்கள் அறுப்பறுக்கும் வயலின்மேலேயே உன் கண்கள் இருப்பதாக' என இவ்வேதபகுதியின் ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகிறது. தேவ ஊழியனே, கர்த்தரின் சேவையில் அடியெடுத்து வைத்த பின், நீ உன் கண்களை அந்த 'அறுவடை வயலின்' மேலேயே பதித்திருக்க வேண்டும். உன் இருதயமும் கண்களும் அவர் உன்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிற வயலின் மேலேயே இருக்க வேண்டும். ரூத் வந்து சேர்ந்தது விதைப்பின் நிலம் அல்ல, அறுவடை நிலமாகும். பிரதிஷ்டை யுள்ள ஒரு தேவ ஊழியனின் பிரதானமான ஊழியம் விதைப்பின் ஊழியமல்ல, அறுப்பின் ஊழியமாகும். "விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப் பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்" என்று எல்லாவற்றையும் விட்டு தம்மைப் பின்பற்றிய தம் சீஷர்களிடம் கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான் 4 : 37, 38). விடுதலையின் சுவிசேஷத்தை அறிவிப்பதே விதைப் பின் ஊழியமாகும். அதுவும் பிரதிஷ்டைபண்ணப்பட்ட தேவ ஊழியர்களுடைய ஊழியத்தின் ஒரு பகுதியாயிருப்பினும், அவர்களுடைய பிரதானமானதும் முக்கியமானதுமான ஊழியம் 'அறுவடை' அதாவது பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்துதல் ஆகும். 'நாம் அனைவரும் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,



பரிசுத்தவான்கள் பூரணமாக்கப்படும் பொருட்டு (Eng.) சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை யானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்' (எபே. 4 : 11 – 13). 'பரிசுத்தவான்கள் பூரணமாக்கப் படுதல்' என்பது கர்த்தரின் இரகசிய வருகைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துதல் ஆகும். 'விதைப்பின் நிலத்தில்' பணிபுரிந்து வரும் எண்ணற்ற தேவ ஊழியர்கள் இப்பூவில் இருக்கிறார்கள். அவர்கள் பாராட்டத்தக்க நல்லதொரு சேவையைச் செய்துவரு கிறார்கள். அவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஆயினும் நம்மைத் தமது 'அறுப்பின் நிலத்தில்' பணிபுரியும்படி சேர்த்துக்கொண்டதற்காக நாம் அவ ருக்கு அதிக நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவஜனங் களைப் பூரணத்திற்கு அதாவது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குக் கொண்டுவரும் உத்தரவாதம் நம் முடைய கரங்களில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நாம் மேன்மைபாராட்டுகிறவர்களாக அல்ல, நம்முடைய தகுதி யின்மையை உணர்ந்தவர்களாய் நன்றியுடன் நம்மைத் தாழ்த்து கிறவர்களாகவே இருக்க வேண்டும். நாம் கர்த்தரின் ஆலயத்தில் நாட்டப்பட்டிருக்கிறோம் (சங். 92 : 13). அவர் நம்மை உண்மை யுள்ளவர்களென்று நம்பி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தியிருக் கிறார். இதற்கு நாம் எம்மாத்திரம்!

மேலும், நம் கண்கள் நம்முடைய சரீர அவயவங்களில் முக்கியமானவையாகும். ஆகவே 'உன் கண்கள் இவ்வயல் நிலத்தின்மேலேயே இருப்பதாக' என்பது, இதையே நம் முக்கிய மான தொழிலாக நாம் எண்ண வேண்டும் என்று பொருள்படும்.

### (vi) *"அவர்கள் பிறகே போ"*:

"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கை

யின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" என திருவசனம் கூறுகிறது (எபி. 13 : 7). நமக்கு முன் சென்று அக்கரையை அடைந்திருக்கும் பரிசுத்தவான்களின் ஜீவியமும், அவர்களுடைய விசுவாசத்தின் முடிவும் நாம் பின்பற்றத்தக்க முன்மாதிரிகளாய் நம் முன் நிற்கின்றன. நம்மை நடத்துகிறவர்களாக நம் முன் சென்றுகொண்டிருக்கும் பரிசுத்தவான்களுடைய அடிச்சுவடுகளும் நாம் பின்பற்றும்படியாக நமக்கு முன்பாக உள்ளன. "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (I கொரி. 11 : 1) என்பது அவர்களுடைய அறிக்கையாயிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, கிறிஸ்துவும் நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார் (I பேதுரு 2 : 21). இம்மாதிரிகளைப் பின்பற்றி, நாமும் பிறருக்கு மாதிரிகளாவோமாக (I தீமோ. 1 : 16 ; 4 : 12).

### (vii) *"ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்":*

'உன்னைத் தொடாதபடிக்கு நான் **வாலிபருக்குக்** கட்டளையிடவில்லையா?' என இவ்வேதபகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. 'ஒருவரும் உன்னைத் தொடக்கூடாது என்று நான் ஏற்கனவே வாலிபருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்' என்று போவாஸ் ரூத்திடம் கூறுகிறான். நாம் தமக்கே சொந்தமானவர்கள் என்றும், ஆகையால் ஒருவரும் நம்மைத் தொடக் கூடாது என்றும் கர்த்தர் ஏற்கனவே மற்றவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்! அவர் நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்திருக்கிறார். "உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்" என்று அவர் உரைத்திருக்கிறாரே! (சக. 2 : 8). ஆம்! அவர் நம்மைப் பற்றி மிகுந்த வைராக்கியமுள்ளவராயிருக்கிறார். நாம் கர்த்தரோடுகூட நடக்கிறவர்களாயிருந்தால் சத்துருவின் எந்த வல்லமையும் நம்மைத் தொட முடியாது. கர்த்தராகிய இயேசுவின்



இரத்தத்தினால் கழுவப்பட்டு, மெய்யாய்த் தேவனோடு நடக்கிற பரிசுத்தவான்களைப் பிசாசானவன் இனங்கண்டுகொள்கிறான். திரித்துவ தேவனும் பரிசுத்த தூதர்களும் அவர்களுடைய பட்சத்திலிருப்பதால், தான் அவர்களைத் தொட முற்பட்டால் தனக்கே ஆபத்து உண்டாகும் என்பதை அவன் நன்கறிவான். ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் நிமித்தம் தேவன் ஒரு ராஜாவைக் கண்டிப்பாக எச்சரித்து, "நீ அழைப்பித்த ஸ்திரீயின்நிமித்தம் நீ செத்தாய்; ... நீ அவளைத் தொட நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை" என்றார் (ஆதி. 20 : 3 – 6). யாக்கோபுக்குப் பொல்லாப்பு செய்ய நினைத்து அவனைப் பின்தொடர்ந்து வந்த லாபானுக்குத் தேவன் சொப்பனத்தில் தோன்றி, அவனை எச்சரித்தார் என்றும் நாம் வாசிக்கிறோமே! (ஆதி. 31 : 23, 24). "உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்" என்று அவன் யாக்கோபிடம் கூறுகிறான்! (வச. 29). தேவனுடைய பரிசுத்தவான்கள் யாவரும் அவருடைய கரத்தில் இருக்கிறார்கள் (உபா. 33 : 3). அவர்களைச் சுற்றிலும் அவர் அக்கினி மதிலாயிருக்கிறார் (சக. 2 : 5). அவர்களை ஒடுக்கும்படி அவர் ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு: "நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்" என்கிறார் (சங். 105 : 14, 15).

மேலும் தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பரிசுத்தத்தில் பாதுகாப்பதில் மிகவும் வைராக்கியமுள்ளவராயிருக்கிறார். அவ்வாறே நாமும் நம்முடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளும்படி எச்சரிக்கையாயிருப்போமாக. "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (I கொரி. 7 : 1) என்றும், 'பிறனுடைய மனைவியைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத்

தப்பான்' (நீதி. 6 : 29) என்றும் திருவசனம் கூறுகிறது. "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்" என்று நாம் வாசிக்கிறோமே! (I யோவான் 5 : 18). இங்கே நாம் நினைவிற்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் உண்டு. நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளக் கவனமாயிருக்கும் வரை மாத்திரமே பொல்லாங்கனால் நம்மைத் தொட முடியாது. நாம் நம்மைக் காத்துக்கொள்ளாவிடில் பாவம் நம்மைத் தொடும். நம்முடைய மனதில் அதாவது சிந்தையில் அசுசியான யாதொன் றையும் நாம் தொடலாகாது. கர்த்தருடைய வீடு மகா பரிசுத்த மானது. ஆலயத்தின் பிரமாணமும் மகா பரிசுத்தமாயிருக்கிறது (சங். 93 : 5 ; எசே. 43 : 12). ஆகவே நம் பரிசுத்தத்தின் பரிமாணம், சரீரப்பிரகாரமாக ஒரு நபரைத் தவறான நோக்கத்தோடு தொடா திருப்பது மாத்திரம் அல்ல, நம் மனதிலுங்கூட தவறானதொரு ஆசை அல்லது உள்ளுணர்வு உண்டாக இடமளிக்காதிருப்பதே யாகும். நம் ஜீவிய காலம் முழுவதும் நாம் இதைக் குறித்துக் கவனமாயிருக்க வேண்டும். தவறான எண்ணத்துடன் நாம் பிறரையோ, பிறர் நம்மையோ தொடவில்லை என்ற நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும். நாம் நம்முடைய சொந்தச் சரீரத்தைக் கூட தவறான நோக்கத்துடன் தொடலாகாது. உங்கள் கடந்த கால ஜீவியத்தில் நீங்கள் அறிந்தோ, அறியாமலோ இவைகளில் ஏதேனும் ஒன்றினால் தீட்டுப்பட்டிருப்பீர்களாயின், உடனடியாக உங்கள்மேல் உத்தரவாதமுள்ளவர்களாய் தேவனால் நியமிக்கப் பட்டுள்ள தேவ ஊழியரிடத்தில் அதை அறிக்கை செய்து உங்களைச் சுத்திகரித்துக்கொள்வீர்களாக (I யோவான் 1 : 7 - 9). அசுத்தமான யாதொன்றைத் தொட்டதினால் தீட்டுப்பட்டிருக் கிறவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்; ஏனெனில் அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என நாம் வாசிக்கிறோம் (எண். 19 : 20). பிசாசானவன் நம்மைக் குற்றஞ் சாட்டத்தக்கதாக, எந்த அசுசியும் நம்மில் இருக்கலாகாது.



அவனுக்குரியது ஏதாகிலும் நம்மிடத்தில் இருக்குமாயின் அவன் நம்மைத் தொட உரிமையுள்ளவனாயிருப்பான். கர்த்தராகிய இயேசுவைப் போல நாமும், "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14 : 30) என்று சாட்சி பகரக்கூடியவர்களாயிருப்போமாக. நம் முடைய சரீரம் தேவனுடைய பரிசுத்த ஆலயமாயிருக்கிறது. ஒருவன் அதைத் தீட்டுப்படுத்தினால் தேவன் அவனை அழித்துப் போடுவார் (I கொரி. 3 : 17 - Eng.). ***நாம் நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்தத்தை இழந்துபோவோமாயின், நம் ஆவிக்குரிய ஜீவி யத்தில் முதுகெலும்பற்றவர்களாயிருப்போம்.*** ஆகவே பரிசுத் தத்திற்கு அந்நியமான சூழ்நிலைகளைத் தவிர்த்துவிடும்படி நாம் மிகவும் கவனமாயிருப்போமாக. "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்" (II கொரி. 6 : 17) என்றும், 'மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள்' என்றும் திருவசனம் நம்மை எச்சரிக்கிறது (I தீமோ. 5 : 22).

(viii) ***"உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க்குடங்களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்கலாம்":***

அமோக விளைச்சல் உள்ளதாயிருந்த போவாசின் வயல் நிலங்களில் தண்ணீர்த் துரவுகள் அல்லது நீரூற்றுகள் நிச்சய மாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவனுடைய வேலைக்காரர் அவற்றினின்று எப்போதும் தண்ணீர் மொண்டு கொள்வது வழக்கமாயிருந்தது. பகல் முழுவதும் தன் வயல் நிலத்தில் அலுவலாயிருந்த ரூத்தின் அடிப்படைத் தேவையைப் போவாஸ் விளங்கிக்கொண்டவனாய், அங்கு நிரப்பி வைக்கப் பட்டிருந்த தண்ணீர்க்குடங்களண்டைக்குப் போய், தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி அவளிடம் கூறுகிறான். தனக்கு அறிமுக மானவர்கள் யாருமற்ற அந்த அந்நிய தேசத்தில், தனக்கு எதிர்ப்பட்ட ஏதோ ஒரு வயல்நிலத்தில் தன் பிழைப்புக்காகக் கதிர்

பொறுக்கிக்கொள்ளச் சென்றிருந்த அவள், அவ்வயல்நிலத்தின் உரிமையாளனிடத்திலிருந்தே இவ்வளவு கனிவான வார்த்தைகளைத் தான் கேட்கக் கூடும் என சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. அன்றைய தினத்தின் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும்படியாகவே அங்கு சென்றவள், அறுப்பின் நாட்கள் முடியுமளவும் அங்கே வந்து கதிர் பொறுக்கிக் கொள்ளும்படி அனுமதிக்கப்படுகிறாள்! (ரூத் 2 : 21). அத்துடன், தன் வாழ்வில் இனியுள்ள காலமெல்லாம் தன் தேவைகள் யாவும் பூர்த்தி செய்யப்படக்கூடிய நல்லதொரு புகலிடத்தையும் அங்கே அவள் கண்டுகொள்கிறாள்!

நம்முடைய ஜீவிய காலமெல்லாம் நாம் தாகந்தீர்க்கப் படும்படி இரட்சிப்பின் ஊற்றுகள் பலவற்றைத் தேவன் நமக்காகத் திறந்து வைத்திருக்கிறார் (ஏசாயா 12 : 3). ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய அவரிடத்தில் நாம் வந்தபோது (எரே. 2 : 13), முதலாவதாக, ***இரட்சிப்பின்*** அனுபவத்தை அவர் நமக்குத் தந்து, அன்று நமக்கிருந்த தாகத்தைத் தீர்த்தார் (யோவான் 4 : 14). இரண்டாவதாக, ***பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால்*** அனுதினமும் நாம் தாகந்தீர்க்கப்படுகிறோம் (ஏசாயா 44 : 3 ; 55 : 1) – "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்" என்று அவர் நம்மைக் கனிவுடன் அழைக்கிறார் (யோவான் 7 : 37 – 39). மூன்றாவதாக, ***ஜெயஜீவியத்தையும்*** அவர் நமக்கு இலவசமாய் அளிக்கிறார்: "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (வெளி. 21 : 6, 7). இம்மூன்று அனுபவங்களும் அவருடைய தோட்டமாகிய சபையில் நமக்காக ஆயத்தமாக்கி வைக்கப்பட்டுள்ளன. அவரை நாடி வரும் எவருடைய தாகத்தையும் தீர்க்கும் நீரூற்றும், ஜீவத்தண்ணீரின் துரவும், தெளிந்த சுத்தமான தண்ணீர் ஓடிவரும் வாய்க்கால்களும் அவருடைய தோட்டமாகிய சபையில் உள்ளன (உன். 4 : 15 ; ஆதி. 2 : 10 – 14).



எழுத்தின்படியான தாகத்தைக் காட்டிலும் ஆழ்ந்த ஒரு தாகம் அல்லது ஏக்கம் ரூத்தின் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்தது. தன் புருஷனை இழந்து, தன் வீட்டாரைத் துறந்து, பிள்ளையும் அற்றவளாய், தன்னிடத்தில் அன்புபாராட்ட யாருமின்றி, தனிமை உணர்வுடன் வயல்வெளிக்கு நடந்துசென்ற அந்த மோவாபியப் பெண்பிள்ளையின் அந்த உள்ளான தாகத்தைத் தீர்க்கும்படி தேவன் அவளுக்காகப் ***போவாசின் வயல்நிலத்தில்*** சகலத்தையும் முன்கூட்டியே ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். "சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் ... உண்டுபண்ணுவேன்" (ஏசாயா 41 : 17 – 19) என வாக்குரைத்தவர் எவ்வளவு உண்மையுள்ளவர்! இங்கு "சிறுமையும் எளிமையுமானவர்கள்" என்பது ஆவியில் எளிமை அல்லது மனத்தாழ்மை உள்ளவர்களையும், 'பள்ளத்தாக்குகளின் நடுவே திறக்கப்படும் ஊற்றுகள்' என்பது தாழ்த்தப்படுகிற பாதைகளில் தேவன் நமக்கு அருளும் ஆசீர்வாதங்களையும் குறிக்கின்றன (மத். 5 : 3 ; சங். 84 : 6). மிகுந்த மனத்தாழ்மையுடன் போவாசின் வயல்நிலத்தில் எளிமையான ஒரு வேலையைத் தெரிந்துகொண்ட ரூத்தைத் தேவன் கைவிடாமல், அங்கே அவளது தாகத்தைத் தீர்த்தார். இஸ்ரவேலின் தேவன் தம்முடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் ஓடிவந்த அவளது உள்ளான தாகத்தைத் தீர்க்கும்படியாகவே அவளை அங்கு கொண்டுசென்றார்! "அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய்விடுவார்" (ஏசாயா 49 : 10) என நாம் வாசிக்கிறோமே!

மேலும், இவ்வேதபகுதியிலுள்ள 'தண்ணீர்' (ரூத். 2 : 9) அன்பைக் குறிக்கிறது. "எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ

அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" என திருவசனம் கூறுகிறது (நீதி. 11 : 25). அன்பும் இரக்கமுமற்று, மனக் கசப்புள்ளவளாயிருந்த நகோமியின் பேரில் ரூத் மிகுந்த அன்பும் கரிசனையும் பரிவுமுள்ளவளாய் இருந்தமையால், போவாசின் வயல்நிலத்தில் இவ்வளவாக அன்பும் பட்சமும் தயையும் அவள் மேல் பொழிந் தருளப்பட்டன! போவாஸ் அவளுடைய வறண்டுபோயிருந்த ஜீவியத்தைச் செழிப்பாக்கும் நீரூற்றாக மாறினான்! "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; ... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா 6 : 38) என்று நமதாண்டவர் உரைத் திருப்பது எவ்வளவு உண்மையானது! அது மாத்திரமல்ல, போவாசின் வேலைக்காரர் மொண்டுகொண்டுவந்த தண்ணீரில் ரூத்துக்கும் பங்கு கிடைத்தது போல, தேவனுடைய சபையில் நாம் சகல பரிசுத்தவான்களோடுங்கூட சேர்ந்து கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத அன்பின் அகலத்தையும் நீளத்தையும் ஆழத்தையும் உயரத்தையும் ருசித்தறியும் சிலாக்கியம் பெற்றிருக் கிறோம் (எபே. 3 : 18, 19). அங்கே நம் தாகம் தீர்க்கப்படுவது மட்டுமல்ல, நம்மைக் குறித்த தேவனின் மகத்தான திட்டமும் நம்மில் நிறைவேற ஆரம்பிக்கிறது.

**" *அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக் கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள்*"** (ரூத் 2 : 10).

## தாழ்மையின் மேன்மை:

ரூத்தின் தாழ்மையைப் பாருங்கள்! போவாசின் தயவுள்ள வார்த்தைகளைக் கேட்டபோது, தான் அதற்கு எவ்வளவேனும் தகுதியுள்ளவளல்ல என்பதை உணர்ந்தவளாய், அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினாள். இது மிகுந்த மனத் தாழ்மையின் ஓர் அடையாளமாகும். வேதாகமத்தில் இவ்விதமாகத்



தரைமட்டும் தங்களைத் தாழ்த்தின யாவரும் மிகவும் மேன்மை யாய் உயர்த்தப்பட்டிருப்பதை நாம் காணலாம். தன்னை வெகுவாய்த் தாழ்த்திய ரூத் போவாசுக்கு மனைவியானாள்; அபிகாயில் தாவீதுக்கு முன்பாக இவ்விதமாகத் தன்னைத் தாழ்த்தி, தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து, அவனுடைய பாதத்தில் விழுந்தாள் (I சாமு. 25 : 23, 24). அவள் தாவீதுக்கு மனைவியானாள். ரூத்தும் அபிகாயிலும் - கிறிஸ்துவின் சபைக்கும், போவாசும் தாவீதும் - கர்த்தராகிய இயேசுவுக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர். நாம் கிறிஸ்துவின் மனத்தாழ்மை யைத் தரித்துக்கொண்டவர்களாகத் தரைமட்டும் நம்மைத் தாழ்த்த முன்வருவோமாக. தேவனாகிய கர்த்தர் மண்ணினாலே மனு ஷனை உருவாக்கினார். இன்றும் அவர் அதற்கொப்பானதொரு வேலையையே செய்துகொண்டிருக்கிறார். தாங்கள் மண்ணென்று நினைவுகூர்ந்து, தூசியைப் போல தங்களைத் தாழ்த்துகிறவர்களை அவர் ***பூரண மனிதராக*** உருவாக்குகிறார்! மண்ணினால் உருவாக்கப்பட்ட மனுஷராகிய நாம் பூரணராய் உருவாக்கப் படும்படியாக, நம்மைத் தரைமட்டும் தாழ்த்தி, நம் சிருஷ்டிகரின் கரங்களில் அர்ப்பணிப்போமாக. "நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை" என்ற அறிக்கையுடன் நம்மை உரு வாக்கும் கர்த்தரின் பலத்த கரத்தினுள் நாம் அடங்கியிருப்போமாக (ஏசாயா 64 : 8 ; I பேதுரு 5 : 6).

போவாஸ் கனிவுடன் ரூத்திடம் பேசியபோது அவள் அதற்குத் தான் எவ்வளவும் தகுதியற்றவள் என்பதை உணர்ந்த வளாய், 'எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது!' என்று வியப்புடன் கேட்டாள். அவ்வயல்நிலத்திற்கு வருமுன்னதாக, "நான் வயல்வெளிக்குப் போய், யாருடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டுவருகிறேன்" என்று கூறிப் புறப் பட்ட அவள், இதோ, தனக்குத் தயை செய்யும் நபரை இப்போது

கண்டுகொண்டாள்! அவளுடைய வாஞ்சை அல்லது இருதயத்தின் வேண்டுதல் அவளுக்கு அருள்செய்யப்பட்டது. பெரியவனும் பலவானும் ஐசுவரியசம்பன்னனுமான போவாசின் கண்களில் அவள் தயை பெற்றாள்!

கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையைப் பெற்றுக்கொள்ளும்படி, அனுதினமும் நாம் அவருடைய பாதத்தில் விழுந்து போதனையடைவோமாக (உபா. 33 : 3). மரியாளைப் போல நாம் அவருடைய பாதத்தண்டை அமர்ந்திருந்து, அவரது தாழ்மையைக் கற்றுக்கொள்வோமாக (லூக்கா 10 : 39). கர்த்தராகிய இயேசுவின் தாயாகிய மரியாள், "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை (தாழ்ந்த நிலையை - Eng.) நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி (ஆசீர்வதிக்கப்பட்டவள் - Eng.) என்பார்கள்" (லூக்கா 1 : 48) என்று கூறுகிறாள். அவள் மிகவும் தாழ்ந்த நிலைக்குத் தன்னைத் தானே தாழ்த்தினாள். அதினிமித்தமாகவே கர்த்தராகிய இயேசு அவளில் அவதரித்தார். அவ்வாறே நாமும் எல்லாரிலும் மிகத் தாழ்வானதும் எளிமையானதுமான நிலையைத் தெரிந்துகொள்ளும்போது மாத்திரமே கிறிஸ்துவைப் போன்ற மெய்யான தாழ்மையை அடைந்துகொள்ள முடியும்; அப்போதுதான் கிறிஸ்து நம் ஜீவியத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படுவார் (கலா. 1 : 16); நாமும் 'தேவன் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்து, தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்தினார்' என்று கூறக்கூடியவர்களாயிருப்போம். 'இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னை ***ஆசீர்வதிக்கப்பட்டவள்*** என்பார்கள்' என்று மரியாள் கூறியபடியே, கர்த்தராகிய இயேசுவின் தாயாராயிருந்த அவளது ஜீவியம் யாவருக்கும் பெரிய ஆசீர்வாதமாயிற்று. நாமும் பிறருக்கு ஆசீர்வாதமாக மாறும்படி, 'ஆண்டவரே, நாளுக்கு நாள் என்னை மென்மேலும் சிறியவனாக்கும், நான் குறைந்து குறைந்து, கடைசியாகப் பிறர் கண்களுக்குக் காணப்படாமற்போகத்தக்கதாக உமக்குள் மறைந்திருப்பேனாக' என்று வேண்டிக்கொள்வோமாக.



இப்படிப்பட்ட மகிமையான ஜீவியம் செய்யும்படியாகவே கர்த்தர் நம்மைத் தம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். நம்மை விட இளையவர்கள் நம் மேல் அதிகாரம் செலுத்தி, நம்மை ஆண்டு நடத்த முற்படும்போது மாத்திரமே நாம் மெய்யான மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்கிறோமா என்பது புலப்படும். நாம் வெளிப்படையாகக் கோபப்படாவிட்டாலும் 'என்மேல் அதிகாரம் செலுத்த இவன் யார்?' என்ற ஒரு எண்ணமாகிலும் அச்சந்தர்ப்பத்தில் நமக்குள் வருமாயின், அல்லது மனதில் அதைக் குறித்து எரிச்சலடைவோமாயின், அது மெய்யான மனத்தாழ்மையின் அடையாளமன்று. மாறாக, அச்சந்தர்ப்பத்தில், "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்" என்று கூறி நம்மால் களிகூரக் கூடுமாயின் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்போம். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11 : 29) என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார்.

தாவீதிலிருந்த மனத்தாழ்மையைப் பாருங்கள்! அவன் சவுலை நோக்கி, 'நான் எம்மாத்திரம்? என் ஜீவன் எம்மாத்திரம்? என் தகப்பனின் வம்சமும் எம்மாத்திரம்?' என்கிறான் (I சாமு. 18 : 18). மகா பெரிய வீரனும், ராஜாவினாலும் வெல்ல முடியாதவனுமாயிருந்த கோலியாத்தைத் தான் கொன்றது பற்றிய ஒரு மேட்டிமையான எண்ணங்கூட அவனில் இருக்கவில்லை! தான் ஒன்றுமில்லை என்றே அவன் எப்போதும் உணர்ந்தான். நாம் ஒன்றுமில்லை என்பதை உணராமல், நம்மை ஒரு பொருட்டாக எண்ணும்போது மாத்திரமே, நாம் இடறலடைகிறவர்களாயும், மனதில் புண்படுகிறவர்களாயும், மனமடிவடைந்து கோபமடைகிறவர்களாயும் இருப்போம். நம்மிலுள்ள பெருமையே நம் கோபத்திற்குக் காரணமாகும். நமக்கு அபாயம் விளைவிக்கும் இக்கோபத்தின் ஆவியினின்று அதிக தாமதமாகும் முன்பாகவே நாம் விடுதலை பெற்றுக்கொள்ளுவோமாக.

மேலும் தாவீது, தான் ராஜாவான பின்னரும் தேவ சமுகத்தில் பிரவேசித்து, "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?" என்றான் (II சாமு. 7 : 18). இந்நாள் வரை நாம் கர்த்தருடைய வீட்டில் பாதுகாக்கப்பட்டிருப்பதற்கும், அவரால் நடத்தப்பட்டிருப்பதற்கும் எவ்வளவேனும் பாத்திரரல்ல என்பதை உணர்ந்தவர்களாய் நாமும், 'நான் எம்மாத்திரம்?' என்று அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோமாக. 'என்னைப் பார்க்கிலும் மிகவும் நல்லவர்களும், திறமையுள்ளவர்களுமான பலரும் உம்முடைய வீட்டில் நிலைத்திருக்கக் கூடாமல் தள்ளப் பட்டிருக்க, பல குறைகளும் பரிசுத்தமாக்கப்படாத சுபாவங்களும் உள்ள என்னிடத்தில் தேவரீர் இவ்வளவு கிருபையுள்ள வராயிருந்து, என்னை இம்மட்டும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?' என்பது நம்முடைய உள்ளத்தின் அடித்தளத்தி னின்று பிறக்கும் உத்தம அறிக்கையாயிருக்கட்டும்! 'எதினால் எனக்கு உம்முடைய கண்களில் தயை கிடைத்தது!' என்ற நன்றியுணர்வுடன் நாமும் ரூத்தைப் போல தரைமட்டும் நம்மைத் தாழ்த்துவோமாக!

தகுதியற்றவளாயிருந்த ரூத்தைப் போவாசின் வயல்நிலத் திற்குக் கொண்டுவந்து சேர்த்தது தேவனுடைய கிருபையே. "முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, ... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பான வர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர் களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் ... சமீபமானீர்கள்" (எபே. 2 : 11 - 13) என்ற வேதவாக்கியங்கள் நமக்கு மாத்திரமல்ல, ஒருவிதத்தில் ரூத்துக்கும் பொருந்தும்.

ரூத்துக்குப் போவாசின் கண்களில் கிருபை கிடைத்தது. அவ்வாறே நோவாவுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபை



கிடைத்தது (ஆதி. 6 : 8). தனக்குக் கிருபை கிடைக்கும்படி, நோவா கர்த்தருடைய கண்களையே நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான் என நாம் கூறலாம். தன்னைச் சூழ இருந்த பாவம் நிறைந்த ஜனங்களின் மேல் அல்ல, கர்த்தரின் மேலேயே அவனுடைய கண்கள் பதிக்கப்பட்டிருந்தன. நாமும் கர்த்தரின் கண்களில் கிருபையைக் கண்டடையும்படி அவர்மேலேயே நம் கண்களைப் பதித்திருப்போமாக. நாம் மனுஷரை நோக்கிப் பார்ப்பதி னிமித்தமாகவே பல சந்தர்ப்பங்களிலும் இடறலடைகிறோம். மனுஷரை நோக்கிப்பார்ப்பவர்கள் மனுஷரைப் போல மாம்சீக மானவர்களும் பூமிக்குரியவர்களுமாய் மாறுவார்கள். தேவனை நோக்கிப் பார்ப்பவர்களோ தேவனைப் போல தெய்வீகமான வர்களாக மாறுவார்கள். தேவபிள்ளையே, உன் பார்வை யார் மேல் இருக்கிறதோ, அதைப் பொறுத்தே உன் ஜீவியமும் இருக்கும். ஆகவே விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவையே நோக்கிக்கொண்டு நீ உன் ஓட்டத்தைத் தொடருவாயாக (எபி. 12 : 1). நீ அவரையே நோக்கிக்கொண் டிருப்பாயாகில், அவருடைய கண்களிலிருந்து உனக்குக் கிருபை கிடைத்துக்கொண்டே இருக்கும்.

நோவா கண்டுபிடித்திருந்த இந்த இரகசியத்தை ரூத்தும் கண்டுபிடித்தாள். அவள் ஒத்தாசை நாடி போவாசை நோக்கிப் பார்த்தபோது, அவனுடைய கண்களில் கிருபையைக் கண்டடைந் தாள் (ரூத் 2 : 10 - Eng.). ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு தண்ணீரின் மேல் நடந்தபோது, அவனுடைய கண்கள் கர்த்தராகிய இயேசுவின் மேலேயே பதிக்கப்பட்டிருந்த வரையில் அவன் தண்ணீரில் அமிழ்ந்துபோகவில்லை. அவன் தன் பார்வையை ஆண்டவராகிய இயேசுவை விட்டுத் திசைதிருப்பி, காற்று பலமாயிருக்கிறதைக் கண்டபோதோ அமிழ்ந்துபோகத் தொடங் கினான் என நாம் வாசிக்கிறோம் (மத். 14 : 29, 30). விசுவாச ஜீவியம் என்பது சாதாரணமான ஒரு ஜீவியம் அல்ல, அது தண்ணீரின் மேல் நடப்பதைப் போன்ற ஒரு ஜீவியமாகும்.

இப்பூமியில் நாம் பரிசுத்த ஜீவியம் செய்வதும் கடலின் மேல் நடப்பதைப் போன்றதே. ஆனால் இத்தண்ணீரின் மேல் முதன் முதலாவதாக நடப்பவர்கள் நாம் அல்ல; நமக்கு முன்னதாக நம் முடைய அருமை இரட்சகர் இயேசு இத்தண்ணீரின்மேல் நடந்து சென்றிருக்கிறார்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அவர் நடந்ததைப் பார்த்து நாம் அவரைப் பின்பற்றிவந்தோம். அவர் இப்பூமியில் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்தார். 'தண்ணீர்' என்பது பாவத்தையும் குறிக்கும் (யோபு 15 : 16). நாம் தண்ணீருக்குள் அல்ல, தண்ணீரின் மேலே நடக்கும்படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் நம்முடைய கண்களைக் கர்த்தரின் மேலேயே பதித்திருக்கும் வரை பாவத்தில் அமிழ்ந்துபோக மாட்டோம்; அதாவது பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது. தேவபிள்ளையே, நீ கர்த்தரை விட்டு உன் கண்களைத் திருப்பி, அதினிமித்தம் பாவத்தில் அமிழ்ந்துபோகும் நிலையில் இருப்பாயாகில், இப்போதே மீண்டும் அவரிடத்திற்கு உன் கண்களை ஏறெடுத்து, அவரை நோக்கிக் கூப்பிடுவாயாக. அவர் உன்னைத் தூக்கியெடுப்பார்!

பல விசேஷமான குணநலன்களை உடையவளாயிருந்த ரூத் அவற்றுள் ஒன்றையும் சுட்டிக்காட்ட விரும்பாமல், தன் தகுதியின்மையை மாத்திரமே போவாசிடம் குறிப்பிடுகிறாள். தான் எவ்வாறு தன் தகப்பனையும் தாயையும் ஜந்ம தேசத்தையும் விட்டு, தன் மாமியைப் பின்பற்றி வந்தாள் என்று தான் செய்த தியாகத்தைக் குறித்தும், தன் மாமியின் பேரில் தான் எவ்வளவு கரிசனையுள்ளவளாக அவளுக்கு உதவியாயிருக்கிறாள் என் பதைக் குறித்தும் அவள் போவாசிடம் உரைத்திருந்திருக்கலாம். ஆனால் அவளோ தன் தகுதியின்மையை மாத்திரம் குறிப் பிட்டு, 'நான் ஒரு அந்நிய தேசத்தாளாயிருக்க, என்னையும் நீர் நினைப்பதற்கு நான் எம்மாத்திரம்?' என்று அவனிடம் கூறுகிறாள். "கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்?" (சங். 144 : 3) என நாம் வாசிக்கிறோம். "மனுஷனை நீர் ஒரு பொருட்டாக எண்ணுகிற



தற்கும், அவன்மேல் சிந்தை வைக்கிறதற்கும், காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும் ... அவன் எம்மாத்திரம்?" என யோபு கர்த்தரிடத்தில் கூறுகிறான் (யோபு 7 : 17, 18). நம்மைப் பற்றி அவர் தம் மனதில் கொண்டிருக்கும் நினைவுகள் உயர்ந்தவை என்றும், அவருடைய யோசனைகள் அநேகமாயிருக்கின்றன என்றும் நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 55 : 9 ; சங். 40 : 5). 'நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவானவைகளே' என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 29 : 11). நாம் எவ்வளவதிகமாக நம்முடைய தகுதி யின்மையை உணருகிறோமோ, அவ்வளவதிகமாகக் கர்த்தர் நம்மேல் நினைவுள்ளவராயிருந்து, நம்மைக் கரிசனையுடன் விசாரிப்பார். நாம் எந்த அளவுக்கு நம்மைத் தாழ்த்துகிறோமோ, அந்த அளவுக்கு அவருடைய நினைவில் நாம் இடம் பெறுவோம்.

ரூத் தன்னை எவ்வளவாகத் தாழ்த்தினாளோ அவ் வளவாகக் கர்த்தரால் கனம்பண்ணப்பட்டாள். "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்றும், "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என்றும் நாம் வாசிக்கிறோம் (லூக்கா 14 : 11 ; நீதி. 18 : 12). நம் தேவன் தாமே நம்மைப் பொறுப்பெடுத்து விசாரித்துப் பாதுகாத்துக்கொள்ளும்படி நாம் நம்மைத் தாழ்த்து வோமாக. "கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி (ஒவ்வொரு இமைப்பொழுதும் - Eng.) அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக்கொள்வேன்" (ஏசாயா 27 : 3) என்று தம்முடைய நேரடியான விசாரிப்பிலிருக்கும் தம்முடைய ஜனங்களைக் குறித்து அவர் கூறுகிறார். காலைதோறும் நம்மை விசாரிப்பவர், நாம் இரவில் உறங்கும்போதும் நமதருகிலிருந்து நம்மைக் காக்கிறார்! அண்டசராசரங்களையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தரு மாகிய நமதருமை ஆண்டவர் இவ்வாறு ஒரு மெய்க்காவலனைப் போல இரவும் பகலும் நம்மைப் பொறுப்பெடுத்துப் பாதுகாக்க

நாம் எம்மாத்திரம்? அவரிடத்தில் ஏராளமான தேவ தூதர்கள் உண்டே! அவர்களில் யாரையாகிலும் அனுப்பி அவர் நம்மை விசாரிக்கலாமே! ஒருபுறத்தில் தேவ தூதர்கள் நமக்கு உதவி செய்யும் பணிவிடை ஆவிகளாய் இருப்பினும், அவர் தாமே நம்மை நேரடியாகச் சந்தித்து விசாரிக்கிறார் (I பேதுரு 5 : 7). அவர் நம்மேல் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு பெரியது! நாம் கர்த்தரின் தோட்டத்தில் அவரால் நாட்டப்பட்டிருக்கிறோம். “கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதி யில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வய திலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்” என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 92 : 13 – 15). நம் மேல் கிருபை யுள்ளவரான கர்த்தர்தாமே ஒவ்வொரு இமைப்பொழுதும் நமக்குத் ‘தண்ணீர்’ பாய்ச்சுகிறார். ஒவ்வொரு நிமிஷமும் நமக்குக் கிருபை அருளும்படி அவர் நம்மேல் மிகவும் பட்சமுள்ளவராயிருக்கிறார். அவருடைய தோட்டத்தில் நாட்டப்பட்டிருக்கிற நாம் செழித் தோங்கி புஷ்டியாயிருந்து கனிகொடுக்கத்தக்கதாக அவர் கிருபையின் மேல் கிருபையை நம்மில் பொழிந்தருளுகிறார்.

அருமையான தேவபிள்ளையே, நிமிஷந்தோறும் தேவன் உன்னை விசாரிக்கிறார் என்பதை நீ விசுவாசிக்கிறாயா? அது அவரால் உரைக்கப்பட்ட அவருடைய பரிசுத்த வார்த்தையாய் இருக்கிறதே! அவர் ரூத்தின் மேல் பாராட்டிய தயவைப் பார்க்கிலும் உன் மேல் அதிக தயவும் கரிசனையும் உள்ளவரா யிருந்து உன்னைத் ‘தம்முடைய அறுவடை நிலத்திற்கே’ கொண்டு வந்து சேர்த்திருக்கிறாரே! உன்னை விசாரித்து, உனக்காக யாவற்றையும் செய்து முடிக்கிறவர் அவரே! அவர் உன் தேவைகள் எல்லாவற்றையும் உனக்கு அருளிச் செய்வார். நீ தற்செயலாகவோ அல்லது சுயமாகவோ அவருடைய தோட்டத் திற்கு வரவில்லை. அவர் தாமே தம்முடைய அளவற்ற



கிருபையினாலே உன்னைச் சரியான இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். இனி உன் வாழ்நாளெல்லாம் நீ மனத்தாழ்மை யுடன் அவரோடுகூட நடப்பாயாக. அப்படியானால் பின்வரும் தலைமுறைகளுக்கெல்லாம் நீ ஆசீர்வாதமாயிருப்பாய்! சென்ற நாட்களில் பல வருடங்களை வீணான மாயையிலும் பெருமை யிலும் நீ செலவழித்தது போதும். எஞ்சியுள்ள கொஞ்சக் கால மாகிலும் நீ உன் கண்களைக் கர்த்தர்மேல் பதித்து, அவரிடத்தி லிருந்து அவரது தாழ்மையைக் கற்றுக்கொள்வாயாக. கர்த்தரைச் சேவிக்கும் நண்பனே, அவரே உன்னைத் தம்முடைய வனப்பு மிக்க தோட்டத்திற்குள் கொண்டுவந்திருக்கிறார் என்பதை உணர்ந்து, அவர் மேலும், அவருடைய தோட்டத்தின் மேலும் மாத்திரமே உன் கண்களைப் பதித்திருப்பாயாக. மெய்யான மனத்தாழ்மையுள்ளவர்களால் மாத்திரமே உன்னதமான ஜீவியம் செய்யக்கூடும். அப்படிப்பட்டவர்களை யாதொரு பிசாசும் யாதொரு அசுசியான சிந்தையும் தொடலாகாது என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார். தாழ்மையும் தூய்மையுமான ஒரு ஜீவியம் செய்வதற்கென்றே உன்னைத் தம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்தவர், அவ்வாறே ஜீவிக்க உனக்குக் கிருபையும் அருளுவார். அவர் நடுவானில் உன்னைச் சந்திக்க வரும் வரை அவருடைய ‘வயல்நிலத்தில்’ நீ உண்மையோடும் வைராக்கியத்தோடும் ஊழியம் செய்துகொண்டிருப்பாயாக! அவர் வரும்வேளையில், தமக்கு ஊழியஞ்செய்துகொண்டிருப்பவனா கவே அவர் உன்னைக் காணட்டும். ஓய்வை நாடாமல், இறுதி மூச்சு வரை மனத்தாழ்மையோடும் மனத்தூய்மையோடும் அவரைச் சேவித்துக்கொண்டிருக்கக் கர்த்தர் தாமே உனக்குக் கிருபை புரிவாராக.

தன் தகுதியின்மையைப் பற்றிய உணர்வு ரூத்துக்கு எப்போதும் இருந்தது போல, நாம் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்துகொள்ளும்படியாக நமக்கும் நம் தகுதியின்மையைப் பற்றிய உணர்வு அவசியமாகும். நம்மை

நாமே குற்றப்படுத்திக்கொள்ளும்படியாக அல்ல, நம்மை நாமே தாழ்த்தும்படியாகவே இவ்வுணர்வை நாம் நம்மில் பேணிக் கொள்வோமாக. ரூத் தன்னைத் தரைமட்டும் தாழ்த்தினபோது தேவன் அவளை உயர்த்தினார்! நாம் நம்மைப் பற்றி மேன்மை யாகப் பேசும்படி - பட்டம், பதவி, திறமை, அந்தஸ்து போன்ற எத்தனையோ காரியங்கள் நமக்கிருக்கக் கூடும். நாம் நம்முடைய பிரதிஷ்டையைக் குறித்தும், கர்த்தரின் சேவையில் எவ்வளவு பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதைக் குறித்தும், நம் அரும்பெரும் சாதனைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டிக் கொண்டிருக்கக் கூடும். ஆகிலும் அவைகளிலொன்றும் தேவ னால் அங்கீகரிக்கப்படாமற்போகக் கூடும்! ஆனால் நாம் மெய்யான மனத்தாழ்மையுடன் நம்முடைய தகுதியின்மையை அவர் முன்பாகக் கொண்டுவருவோமாயின் அவர் நம்மைச் சிறப்பான விதத்தில் கனப்படுத்துவார். ரூத் தன்னைத் தாழ்த்திய போது போவாஸ் அவளைப் பாராட்டியதுடன், பின்னாட்களில் அவளை மேன்மைப்படுத்தினான். தேவ ஊழியனே, நீ கர்த்த ருக்காக விட்டு வந்தவைகளைக் குறித்து மேன்மைபாராட்டிக் கொண்டிராமல், அப். பவுலைப் போல அவற்றை நஷ்டமும் குப்பையுமாக எண்ணிக்கொண்டு, கிறிஸ்துவின் தாழ்மையையே நாடித் தேடுவாயாகில் அவரால் கனம்பண்ணப்படுவாய்!

அதிகாரம் 4

# தாழ்மையும் தயையும்

***"அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரண மடைந்தபின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது"*** (ரூத் 2 : 11).

ரூத் தரைமட்டும் தன்னைத் தாழ்த்தி, போவாசின் கண்களில் தனக்குத் தயை கிடைத்ததற்குத் தான் எவ்விதத்திலும் தகுதியற்றவள் என்பதை வெளிப்படுத்தியபோது (ரூத் 2 : 10), அவன் அவளுக்களித்த மறுமொழியை நாம் இவ்வேதபகுதியில் காண்கிறோம். அவள் எவ்வளவதிகமாகத் தன் தகுதியின்மையை அறிக்கை செய்தாளோ, அவ்வளவதிகமாக அவனால் பாராட்டப் பட்டாள். இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் யாதெனில், எவ்வளவதிகமாக நாம் நம்முடைய தகுதியின்மையை உணர்ந்துகொள்கிறோமோ, அவ்வளவதிகமாகத் தேவன் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குவார்.

**தன்னலமற்ற அன்பு:**

"உன் புருஷன் மரணமடைந்தபின்பு, நீ உன் மாமியா ருக்காகச் செய்தது ... எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்

பட்டது" என்று போவாஸ் ரூத்தை நோக்கிக் கூறினான். ஒரு பெண் தன் புருஷன் உயிரோடிருக்கையில் தன் மாமிக்குச் செய்யும் நன்மைக்கும், அவன் மரணமடைந்த பின் அவளுக்குச் செய்யும் நன்மைக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? ஒரு பெண்ணின் புருஷன் மரணமடைந்து, அவளுக்குப் பிள்ளையும் இல்லாதபட்சத்தில், அதற்குப் பின் அவளுக்குத் தன் மாமியோடு நடைமுறையில் யாதொரு சம்பந்தமோ, உறவுமுறையோ இருக்க வேண்டிய அவசியமில்லை. சட்டப்படி தன் மாமியைத் தன்னோடு வைத்துப் பராமரிக்க வேண்டுமென்ற நிபந்தனை அவளுக்கு எவ்விதத்திலும் இராது. தன் புருஷன் உயிரோடிருக்கையில் அவள் தன் மாமிக்குச் செய்யும் உபகாரங்களெல்லாம் பெரும் பாலும் அவனைப் பிரியப்படுத்துவதற்காகவே இருக்கும்; தான் அப்படிச் செய்யாத பட்சத்தில் அவன் தன்னைக் கடிந்து கொள்வான் என்ற பயத்தினால் அவள் தன் மாமிக்கு உதவி செய்வாள். ஆனால் அவன் மரித்த பின் அவள் தன் மாமியைப் பொறுப்பெடுத்துப் பராமரிக்கிறாளென்றால், அது அவளிலுள்ள தன்னலமற்ற, மெய்யான, தூய அன்பையே வெளிப்படுத்தும்.

தன் புருஷனின் மரணத்திற்குப் பின்பு ரூத் தன் மாமிக்காகச் செய்த தியாகங்கள் அநேகம்! அவளுக்குப் பிள்ளைகள் இருந்திருந்தாலாவது, அவர்களைப் பராமரித்துக் கண்காணிக்கும் உதவியை எதிர்பார்த்து அவள் தன் மாமியி னிடத்தில் அன்புபாராட்டினாள் என்று நாம் கூற இயலும். ஆனால் அவளோ யாதொரு காரணமுமின்றி, தனக்கு ஒரு பாரமாக மாத்திரமே இருக்கக்கூடியவளாயிருந்த தன் மாமியின் பேரில் மிகவும் அதிகமான அன்பும் கரிசனையுமுள்ளவளாய் அவளைப் பராமரித்துவந்தாள். இது அவளிலிருந்த தெய்வீகமான அன்பையே வெளிப்படுத்துகிறது. அவள் தன் மாமியின்பேரில் தப்பெண்ணமும் மனவருத்தமும் கொள்ளக்கூடிய பல நியாயமான காரணங்கள் இருந்தன: (i) அவள் தன் மாமியைப் பின்பற்ற விரும்பியபோது, தன் தேவர்களிடத்திற்கும் தன் ஜனங்களிடத்திற்கும் செல்லும்படி



தவறான ஆலோசனையையே அவளுடைய மாமி அவளுக்கு அளித்தாள்; (ii) அவள் யூதா தேசத்தில் கதிர் பொறுக்கிக்கொண்டு வரும்படி வயல்வெளிக்குச் செல்லப் புறப்பட்டபோது, தங்கள் நெருங்கின உறவின்முறையானும், மிகுந்த இரக்க குணமுள்ளவனு மாயிருந்த போவாசின் வயல்நிலத்திற்குச் செல்வது அவளுக்குப் பாதுகாப்பானதாயிருக்கும் என்ற நல்ல ஆலோசனையை நகோமி அவளுக்கு அளிக்கவில்லை; (iii) தன் புருஷனை இழந்து, பிள்ளையுமற்று, தனிமையாக்கப்பட்டிருந்த அவள் மனம்நொந்து போன நிலையில் இருந்திருக்கக் கூடும்; ஆயினும் அவளுடைய மாமியினிடத்திலிருந்து அவளை ஊக்குவித்து ஆறுதல்படுத்தக் கூடிய வார்த்தைகள் பிறக்கவில்லை.

இங்கு நகோமியை, நமக்கு மூத்தவர்களாயிருந்தும், சிற்சில வேளைகளில் நமக்கு ஆறுதலாய் இராமற்போகக்கூடியவர்களுக்கு நாம் ஒப்பிடலாம். நம் மேல் உத்தரவாதமுள்ளவர்களாக நியமிக்கப் பட்டிருக்கும் சிலர் நமக்கு முன்மாதிரியாய் இராமற்போகக் கூடும். என்றாலும் நாம் அவர்களையும் நேசித்துக் கனம்பண்ண வேண்டும். அவர்களிடத்திலிருந்து ஏதோ சில உபகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அல்ல, சுயநலன் கருதாமலே நாம் அவர்களை நேசிக்க வேண்டும்.

"நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜநம தேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது" என போவாஸ் தொடர்ந்து கூறுகிறான். ரூத் மோவாப் தேசத்தை விட்டு நகோமியோடுகூட கானானுக்கு அதாவது யூதா தேசத்திற்குச் செல்லப் புறப்பட்டபோது, அவளுடைய தகப்பனும் தாயும் உயிரோடு இருந்தார்கள். அவளுடைய பெற்றோர் மரித்திருந்து, அவளுக்கு ஒரு தாய்வீடும் இல்லாதிருந்திருந்தால், 'எனக்குப் போக்கிடம் வேறில்லையே; நான் என் மாமியோடு செல்வதைத் தவிர வேறு வழி இல்லையே' என்றெண்ணி, அவள் தன்

மாமியைப் பின்பற்றியிருந்திருக்கலாம். ஆனால் அவளுடைய விஷயமோ அதுவல்ல என்பதைப் போவாசின் கூற்றிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். மேலும், நகோமி அவளைத் தன் தாய்வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி கூறுவதும் இதனை உறுதிப் படுத்துகிறது. அவளுடைய பெற்றோர் அவளைப் பொறுப் பெடுத்து அவளுடைய வருங்காலத்திற்காக ஏதாகிலும் ஏற்பாடு செய்வார்கள் என்று நினைத்து அவள் அப்படிக் கூறியிருந் திருக்கக் கூடும். "நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; ... கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக" (ரூத் 1 : 8, 9) என்று அவள் தன் மருமக்களிடம் கூறியதாக நாம் வாசிக்கிறோமே! தன் தாய்வீட்டில் தனக்குக் கிடைக்கக் கூடியவையாயிருந்த இவை அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, ரூத் நகோமியைப் பின்பற்றினாள். ஆகவே அவள் செய்த தியாகம் தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

**ஆபிரகாமும் ரூத்தும்:**

முற்பிதாவாகிய ஆபிரகாம் தன் தேசத்தையும் இனத்தையும் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, தேவனைப் பின் பற்றினான் என வேதாகமம் கூறுகிறது. ஆயினும், ஆபிரகாமைப் பார்க்கிலும் ரூத் அவரைப் பின்பற்றுவதில் உண்மையுள்ள வளாயிருந்தாள் என நாம் கூறலாம். ஆழ்ந்து சிந்திக்குங்கால், ஆபிரகாம் தேவனைப் பின்பற்றியதைக் காட்டிலும் ரூத் அவரைப் பின்பற்றியது பல அம்சங்களில் சிறப்பு மிக்கதாய்க் காணப் படுகிறது. அவையாவன:

(i) ஆபிரகாம் வயதுசென்ற பின் தன் தேசத்தையும் ஜனங்களையும் விட்டுப் புறப்பட்டான். ஆனால் ரூத் ஒரு வாலிபப் பெண்ணாகத் தன் தேசத்தையும் ஜனங்களையும் விட்டுப் புறப்பட்டாள்.



(ii) ஆபிரகாம் மகிமையின் தேவனைத் தரிசித்து, அவர் தன்னோடு நேரடியாகப் பேசிய வார்த்தைகளைக் கேட்டபடி யினால் தன் தேசத்தை விட்டுப் புறப்பட்டான் (அப். 7 : 2 – 4). ஆனால் ரூத்துக்கோ தேவனிடத்திலிருந்து யாதொரு நேரடியான வழிநடத்துதலும் உண்டாகவில்லை. தேவனைப் பற்றி தன் மாமியிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிறிதளவு அறிவு மாத்திரமே அவளுக்கு இருந்தபோதிலும், அவள் அவரைப் பின்பற்றும்படி தன் தேசத்தை விட்டுப் புறப்பட்டாள்.

(iii) ஆபிரகாம் கானானுக்குப் போகும் வழியில் ஆரானில் பல வருடங்கள் தங்கிவிட்டான். தேவன் தாமே அவனோடு நேரடியாய்ப் பேசி, அவன் தன் யாத்திரையைத் துவங்கி யிருந்தபோதிலும், தன் தகப்பன் மரிக்கும் வரை அவன் பல ஆண்டுகளை இடையில் வீணாக்கி, கானானுக்குச் செல்ல தாமதித்துக்கொண்டிருந்தான். அவனது பயணத்திற்குத் தடையாய் இருந்த நபரைத் தேவன் அகற்றிய பின்னரே அவனால் கானானுக்குச் செல்ல முடிந்தது. ஆனால் ரூத்தின் விஷயத்திலோ, அவள் தன் மாமியைப் பின்பற்றாதபடிக்கு யாதொன்றும் அவளைத் தடுத்து நிறுத்தவோ, அவளது பயணத்தைத் தாமதப் படுத்தவோ இயலவில்லை. தன் புருஷனின் மரணத்திற்குப் பின் தன் வருங்காலத்தைக் குறித்துத் தன் வீட்டாரோடு கலந்தா லோசிக்கவும் அவள் முற்படவில்லை. நகோமி புறப்பட்டபோது அவள் தானும் உடனடியாகவே அவளோடு கூட புறப்பட்டாள். கானானை நோக்கிய பயணத்திலும் – வழியில் அவள் தாமதித்துக் கொண்டிருக்கவுமில்லை; இடையில் நின்றுவிடவுமில்லை.

(iv) கானானைச் சென்றடைந்த பின் ஆபிரகாம் தான் எகிப்துக்குப் போன விஷயத்தில் ஒரு முறை தவறிழைத்து விட்டான் (ஆதி. 12 : 10). ஆனால் ரூத் கானானைச் சென்றடைந்த பின் ஒருக்காலும் பின்னிட்டுத் திரும்பவில்லை.

(v) ஆபிரகாமோடு கூட பிரயாணம் செய்யும்படி அவனுடைய மனைவியும், சகோதரனின் மகனும், மற்றும் பலரும் அவனோடிருந்தார்கள். ஆனால் ரூத்துக்கோ பயணத்தில் அவளோடு கூட வரும்படி அவளுடைய 'முன்னாள் மாமி' மாத்திரமே இருந்தாள். (அவளுடைய புருஷன் இறந்துவிட்டபடியினாலும், அவளுக்குப் பிள்ளையும் இல்லாததாலும், அதற்குப் பின் அவளுக்குத் தன் மாமியோடு நடைமுறையில் எந்த உறவுமுறையும் இருக்கவில்லை.) ஆயினும் அவள் தன் தீர்மானத்தில் முடிவுபரியந்தம் உறுதியாய் நின்றாள்.

(vi) ஆபிரகாம் தேவனிடத்திலிருந்து பல மேன்மையான வாக்குத்தத்தங்களைப் பெற்று, தன் தேசத்தை விட்டுப் புறப்பட்டான். ஆனால் ரூத் தேவனிடத்திலிருந்து குறிப்பான வாக்குத்தத்தம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாதிருந்தும் அவரைப் பின்பற்றினாள்.

(vii) ஆபிரகாம் கர்த்தரைப் பின்பற்றியது முதற்கொண்டு சகல சம்பத்தும் அவனுக்குப் பெருகி, அவன் சீமானானான் (ஆதி. 12 : 5 ; 13 : 2). ஆனால் ரூத்தோ தன் பழைய தெய்வங்களை விட்டு கர்த்தரைச் சேவிக்கத் துவங்கியது முதல் தன் வாழ்க்கையில் பல இழப்புகளையே சந்திக்க நேர்ந்தது. எனினும் அவள் அவரைப் பின்பற்றுவதினின்று பின்வாங்கவுமில்லை; அவருக்கு உண்மையாயிருக்கும்படியான தன் தீர்மானத்தினின்று மனந்தளரவுமில்லை!

இவ்வாறு ரூத் கர்த்தரைப் பின்பற்றிய விதம் நாமும் அவளுடைய மாதிரியைப் பின்பற்றும்படி நம்மை ஊக்குவிப்பதாய் உள்ளது.

ரூத் தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டு தேவனைச் சேவிக்கும்படி நகோமியைப் பின்பற்றி வந்தபோது, அவளுடைய பிரதிஷ்டையைப் போவாஸ் பாராட்டுகிறான். தேவ ஊழியர் தங்கள் தகப்பன், தாய், தேசம், மற்றும் அனைத்தையும் விட்டு



கர்த்தரைப் பின்பற்ற முன்வரும்போது, அவர்கள் அவருடைய பாராட்டுதலுக்குரியவர்களாகிறார்கள். ஒருவன் சரியான விதத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி, தனக்குள்ள எல்லாவற்றையும் பிரதிஷ்டை செய்ய வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. நாம் பரலோகத்திற்குச் செல்லும்போது, பூலோகத்தில் ஜீவித்த காலத்தில் தேவபிள்ளைகளாயிருந்த நம் உறவினர் யாவரையும் 'பரிசுத்தவான்களாகவே' அங்கு காண்போமேயன்றி, மாம்ச சம்பந்தமான உறவுமுறைகள் ஏதும் அங்கு இரா.

ஒரு முறை பேதுரு கர்த்தராகிய இயேசுவினிடத்தில், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத். 19 : 27, 28). ஒரு நியாயாதிபதியில் காணப்பட வேண்டிய முக்கியமான பண்புகளுள் ஒன்று 'பட்சபாதமின்மை' ஆகும். லேவியர் ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் தகப்பன் என்றும் தாய் என்றும் பாராமல், பட்சபாதமின்றி இஸ்ரவேலில் நியாயஞ்செய்தபடியால், தேவனுடைய நியாயங்களையும் பிரமாணத்தையும் தேவஜனங்களுக்குப் போதிக்கும் உத்தரவாதம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (உபா. 33 : 9 , 10). தன் தகப்பன் குற்றம் செய்திருக்க, தன்னுடைய தகப்பன் என்று முகம்பார்த்து, அவனைத் தப்புவிக்கும்படி பிரயாசப்படுகிறவன் ஓர் உண்மையான நியாயாதிபதி அல்ல. நாம் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஆயிர வருட அரசாட்சியிலும் நித்தியத்திலும் நீதியுடன் ஆளுகை செய்கிறவர்களாய் இருக்கும்படி, தேவ ஊழியர்கள் தங்கள் குடும்பத்தினரைப் பிரதிஷ்டை செய்தவர்களாயிருக்க வேண்டும்.

***“உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்”*** (ரூத் 2 : 12).

**பிரதிஷ்டையும் அதன் பலனும்:**

‘இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரில் நம்பிக்கை வைத்து, அவருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே ***முழுமையான*** பலன் கிடைப்பதாக’ என இவ்வேத பகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. ரூத் செய்திருந்த எல்லாத் தியாகத்திற்கும் தக்கதான முழுமையானதொரு பிரதி பலனைத் தன்னால் அளிக்க முடியாது என போவாஸ் உணர்ந்தான். தான் இப்பூமியில் அவளுக்குத் தன்னால் இயன்றதொரு பலனை மாத்திரமே அளிக்கக் கூடும் என்பதும், தேவனோ அவளுடைய செய்கைக்குத்தக்க ‘முழுமையான’ பலனைப் பரலோகத்தில் அவளுக்கு அருளுவார் என்பதுமே அவன் இவ்வாறு கூறியதின் உட்கருத்தாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அவளுடைய ‘செய்கை’ யாது? அவளது தியாகமும் பிரதிஷ்டையுமே போவாசினால் பாராட்டப்படத்தக்கதாயிருந்த அவளுடைய செய்கையாகும். மெய்யான பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர்கள் இம்மையிலும் மறுமையிலும் கர்த்தரிடத்திலிருந்து பிரதிபலனைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுக்குரிய முழுமையான பிரதிபலன் ‘சீயோன்’ அல்லது ‘கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளுதல்’ ஆகும். கிறிஸ்துவே அவர்களது முழுமையான பிரதிபலனாக இருப்பார். “நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்” என்று அப். பவுல் எழுதுகிறார் (பிலி. 3 : 9, 11). ஒரு தேவ ஊழியன் பெற்றுக்கொள்ளக் கூடிய மிகப் பெரிய பிரதிபலன் அதுவே! ‘கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளுதல்’ என்பது அவரது சாயலை அடைந்துகொள்ளுதல்



ஆகும். அவரைப் போல மாற வேண்டும் என்பதே நம் உள்ளத்தின் ஏக்கமாயிருக்க வேண்டும். அவர் தம்முடைய பரிபூரணத்தால் நம்மை நிறைக்க விரும்புகிறார். தற்போது நாம் பெற்றிருக்கிற அனுபவங்களில் நாம் திருப்தியடைந்துவிடக் கூடாது; நமக்கு அருளும்படி இன்னும் ஏராளமானவை அவரிடத்தில் உண்டு.

ஒருவன் தேவனில் மாத்திரம் முழுமையான நம்பிக்கை வைத்து, அவருடைய செட்டைகளின் கீழ் தஞ்சம் புகுந்துகொள்ள வேண்டுமாயின், தன் தகப்பன், தாய், தேசம் போன்றவற்றின் மேல் அவனுக்குள்ள நம்பிக்கை அறவே அகற்றப்பட வேண்டும். தேவ ஊழியர்களால் மாத்திரமே இவ்வாறு முற்றிலுமாக தேவன்பேரில் நம்பிக்கை வைக்க இயலும். அவர்கள் தங்கள் வீட்டாரிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய யாதொரு உதவியையும் சார்ந்து கொள்ளாமல், அவரையே நம்பிச் சார்ந்திருப்பார்கள். இவ்வாறு அவரையே தங்கள் நம்பிக்கையாகக் கொண்டிருப்பவர்களுக்கு அவர் தெய்வீக சுகத்தையும் வாக்குப்பண்ணியிருக்கிறார். அவருடைய செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் உண்டு என்று கூறப்பட்டுள்ளதே! (மல். 4 : 2). தெய்வீக சுகமும் பிரதிஷ்டையும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாகும். ஆகவே தேவ ஊழியர் தங்கள் பிரதிஷ்டையின் ஜீவியத்தில் குறைவுபடும்போது வியாதிப்பட நேரிடலாம். மெய்யான வெளிப்படுத்தலே அவர்களைச் சரியான பிரதிஷ்டையுள்ளவர்களாக்குகிறது. அந்த வெளிப்படுத்தல் இல்லாவிடில், குடும்ப உறவுகளும் கட்டுகளும் அவர்களுடைய இருதயத்தினின்று நீங்க மாட்டா.

தேவ ஊழியரே! உங்கள் பிரதிஷ்டைக்கு இடையூறாக வழியில் நிற்பது எதுவாயினும், யாராயினும் – உங்கள் ஆவிக்குரிய யாத்திரை தடைபடாதபடிக்கு – தேவன் அதை, அந்நபரை உங்களை விட்டு அகற்றிவிடக் கூடும்! தன் தகப்பனாகிய தேராகு மரித்த பின்னரே ஆபிரகாம் கானானை நோக்கிய தன் பயணத்தைத் தொடர முடிந்தது (அப். 7 : 2 – 4). அவன் தன்

தகப்பன் பேரில் மிகுந்த பற்றுதல் உள்ளவனாயிருந்தான் போலும்! ஆகையினாலேயே தேவன் அவனுடைய தகப்பனை அவனை விட்டு எடுக்க வேண்டியதாயிற்று. உங்கள் குடும்பத்தைச் சார்ந்த யாரையாகிலும் நீங்கள் பிரதிஷ்டை செய்யாதிருப்பீர்களாயின், அந்நபர் உங்கள் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தடையாயிராதபடிக்கு, தேவன் தமது இரக்கத்தினால் அந்நபரை இவ்வுலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளக் கூடும். தேராகு என்பதற்கு 'தாமதம்' என்று பொருள். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தாமதப்படுத்துவது எதுவாயிருப்பினும் அது உங்களை விட்டு அகற்றப்படும்.

பிரதிஷ்டையுள்ள ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்டு, கர்த்தருக்குச் சேவை செய்துகொண்டிருந்த ஒரு தேவபிள்ளைக்குத் தன் தாயாரின் பேரில் சற்று பற்றுதல் இருந்தது. ஒரு நாள் அவள் ஒரு தரிசனம் கண்டாள். அதில் ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில், வெண்கலப் பலிபீடத்தினருகே அவள் நின்றுகொண்டிருந்தாள். அவள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போக வேண்டிய ஒரு நபராயிருந்தும், அவளால் பலிபீடத்தைக் கடந்து, உள்ளே செல்ல இயலவில்லை. இதன் காரணம் என்ன என்று அவள் திகைத்துக்கொண்டிருந்தபோது, அவள் தன் தாயாரைப் பலிபீடத்தின் மேல் அர்ப்பணிக்க வேண்டுமென்று அவளுக்குச் சொல்லப்பட்டது. இது, அவள் செய்யக்கூடிய மிகக் கடினமான ஒரு காரியமாயிருந்தபோதிலும், அவள் அப்படிச் செய்தபோது அவளால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போக முடிந்தது. இத்தரிசனத்தின் வாயிலாகத் தேவன் அவளுக்கு உணர்த்த விரும்பியதை உணர்ந்துகொண்டு, அவள் தன் தாயாரை மெய்யாகவே தன் இருதயத்தினின்று பிரதிஷ்டை செய்தாள். தேவ ஊழியனே, நீ வெளிப்பிராகாரத்திலேயே சுற்றிக்கொண்டிருக்க வேண்டியவனல்ல; உன்னுடைய ஊழியம் மகா பரிசுத்தமானது. நீ மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்யத் தக்கவனாகும்படி, அதற்குத் தடையாயிருக்கும் அனைத்தையும், அனைவரையும் பலிபீடத்தின்



மேல் வைத்துவிடுவாயாக. நீ மெய்யாகவே உனக்கு அருமையானவர்களைப் பலிபீடத்தின் மேல் அர்ப்பணித்திருப்பாயாகில், உன் ஊழியம் மகா பரிசுத்தமானதாயும், மகிமையுள்ளதாயும் இருக்கும்.

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" என கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான் 12 : 24). இவ்வேத வசனத்திற்கான பொதுவான வியாக்கியானமாவது: 'ஒரு தேவ ஊழியன் தனக்குண்டான யாவற்றையும் பிரதிஷ்டை செய்து, தன் சுய சித்தத்திற்கும் மரித்தவனாயிருக்க வேண்டும்; கர்த்தர் நிமித்தமாக எழுத்தின்படியே மரிக்கவும் அவன் ஆயத்தமாயிருக்க வேண்டும்; அவ்வாறாயின், அவனது சேவை மிகுந்த பலனுள்ளதாயிருக்கும்' என்பதே. ஆயினும் இவ்வசனத்திற்கு இதனைப் பார்க்கிலும் ஆழ்ந்த அர்த்தம் ஒன்றுண்டு. ஒரு தேவ ஊழியனின் வீட்டார் கோதுமை மணிக்கு ஒப்பாயிருக்கிறார்கள். ஒரு கோதுமை விதையை விதைப்பதற்குப் பதிலாக, அதை நம் சட்டைப்பைக்குள் வைத்திருப்போமாகில், அது ஒருவருக்கும் பயனற்றதாயிருந்து, உலர்ந்துபோம்; மாறாக, அதை நிலத்தில் போட்டுவிடுவோமாயின், அது விதைக்கப்பட்டு செத்துப்போன இடத்திலிருந்து நூற்றுக்கணக்கான கோதுமை மணிகள் எழும்பும். அவ்வாறே ஒரு தேவ ஊழியன் தன் மனதிலே தன் வீட்டாருக்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருப்பானாயின், அல்லது அவனுடைய வீட்டார் அவனுக்கு மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருப்பார்களாயின், அது மிகுந்த பலனைக் கொடுக்கும் – அவனது மனதிலே மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற, அதாவது பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிற ஒரு தாயாருக்குப் பதிலாக நூற்றுக்கணக்கான தாய்மாரைத் தேவன் அவனுக்குத் தந்தருளுவார். மெய்யான பிரதிஷ்டையுள்ள ஒரு தேவ ஊழியனுக்கு இப்பொழுது இம்மையிலே நூற்றுக்கணக்கான தாய்மாரையும், சகோதரரையும்,

சகோதரிகளையும், பிள்ளைகளையும், நிலங்களையும், வீடுகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் தேவன் தந்தருளுவார் (மாற்கு 10 : 29, 30). தங்கள் வீட்டாரை மெய்யாகப் பிரதிஷ்டை செய்திராத தேவ ஊழியர்களோ தங்கள் மனதில் அவர்களைத் தங்களுக்கென்று தனியே ஒதுக்கி வைத்திருப்பதால், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் உலர்ந்துபோவார்கள்; அவர்களுடைய சேவையும் பலனுள்ளதாயிராது. தேவ ஊழியனே! உனக்கு அருமையான யாராகிலும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டுப் போயிருந்தால், அதற்குப் பின்னர் அந்நபரின் சுகநலனைக் குறித்த கவலையோ, பாரமோ உனக்கிருக்குமோ? அந்நபருக்காக நீ ஜெபம்பண்ணுவாயோ? இல்லையே! உன் வீட்டாருக்காக ஜெபம்பண்ணும்படி பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விதத்தில் பிரத்தியேகமாக உன்னை ஏவினாலன்றி, நீ அவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டிய அவசியமில்லை. நீ கர்த்தருடைய கரத்தில் ஒப்புவித்துவிட்டவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு கர்த்தருடையது! பெரும்பாலும் உன் வீட்டாருக்காக ஜெபிக்கும்படியான ஒரு ஏவுதலை அல்லது பாரத்தை அவர் உன் உள்ளத்தில் அல்ல, வேறொருவரின் உள்ளத்திலேயே வைப்பார். நீ உன் சொந்தக் குடும்பத்தைப் பற்றிப் பாரமுள்ளவனாயிருந்தால் அதினிமித்தம் அவர்கள் பின்மாற்றமடையக் கூடும்; அதாவது அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக வறண்டு, உள்ளான மனுஷனில் மரணமடையக் கூடும்!

பிரதிஷ்டையுள்ள ஜீவியம் என்பது மிக அருமையான ஒரு ஜீவியமாகும். தேவ ஊழியர்கள் வேறொன்றினாலும் திசைதிருப்பப்பட்டுவிடாமல், கர்த்தருக்கடுத்தவைகளிலேயே ஈடுபாடுகொண்டிருப்பதற்கு இது மிக இன்றியமையாததாயிருக்கிறது. மகா பரிசுத்தமான விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாம் செலுத்த வேண்டிய கிரயம் இதுவே. தேவனில் மாத்திரம் நம்பிக்கை வைத்து ஜீவிப்பதற்கும், முழுமையான பிரதிபலனை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் பிரதிஷ்டை அத்தியாவசியமானது.



**“*அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும், நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள்*”** (ரூத் 2 : 13).

**மென்மேலும் தாழ்த்துதல்:**

போவாஸ் ரூத்தைப் பாராட்டிப் பேசியபோது, அவளோ இன்னும் அதிகமதிகமாகத் தன்னைத் தாழ்த்தினாள். அவனுடைய எல்லாப் பாராட்டுதல்களுக்குப் பின்னரும் ரூத் அவனுக்களித்த மறுமொழியைப் பாருங்கள்! அவள் போவாசுக்கு எவ்வளவு நன்றியுள்ளவளாயிருந்தாள் என்பதை அவளுடைய மறுமொழி வெளிப்படுத்துகிறதன்றோ? உண்மையில் போவாஸ் பிரமாணத்தின்படிதான் செய்ய வேண்டியதாயிருந்ததையே அன்றி, விசேஷமாக வேறெந்த உதவியையும் அவளுக்குச் செய்யவில்லை. நாம் ஏற்கனவே கண்டபடி, அறுவடை சமயங்களில் பரதேசிகளும் எளியவர்களும் வயல்களில் சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்கிக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்பது தேவன் தம் ஜனங்களுக்கு அளித்திருந்த பிரமாணமாயிருந்தது (லேவி. 19 : 9, 10). போவாசும் அதைத்தான் ரூத்துக்குச் செய்திருந்தான்; அதைத் தவிர, பொதுவாக நில உடைமையாளர்கள் அறுவடை சமயங்களில் கதிர் பொறுக்கிக்கொள்ளும்படி வந்து தங்கள் வயல்களில் தொந்தரவு கொடுப்பவர்களிடம் கடினமாகச் செயல்படுவது போல அவன் ரூத்தைக் கடிந்துகொள்ளாமல், அவளிடத்தில் பட்சமாய்ப் பேசினான். இதற்காகவே அவள் அவனிடத்தில் மிகுந்த நன்றியுணர்வுள்ளவளாயிருந்தாள்: “நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே” என்று அவள் நன்றியுடன் அறிக்கைசெய்கிறாள்.

மேற்காணும் வேதபகுதியில் ரூத் போவாசை “என் ஆண்டவனே” என்றழைக்கிறாள். அவனுடைய வேலைக்காரரில் ஒருவருங்கூட அவனை ‘ஆண்டவன்’ என அழைக்கவில்லை!

யூதாஸ்காரியோத்து கர்த்தராகிய இயேசுவை ஒருபோதும் ‘ஆண்டவரே’ என்று அழைக்கவில்லை; ரபீ என்று மாத்திரமே அவன் அவரை அழைத்திருப்பதை நாம் வேதாகமத்தில் காண்கிறோம் (மத். 26 : 25). ஆனால் பேதுருவோ, தான் கர்த்தரை அறிந்துகொள்ளாதிருந்தபோதே, அவர் அவனுடைய படவிலிருந்துகொண்டு ஒரு அற்புதத்தைச் செய்தபோது, அவரை ‘ஆண்டவரே!’ என்றழைத்தான் (லூக்கா 5 : 8). ஆண்டவராகிய இயேசுவின் கர்த்தத்துவத்தைக் குறித்த ஒரு வெளிப்படுத்தல் அவனுக்கிருந்தது! அப்படியே, ரூத்தில் இருந்த மனத்தாழ்மை, போவாசை ‘ஆண்டவனே’ என்று அழைக்கும்படியான ஒரு வெளிப்படுத்தலை அவளுக்குக் கொடுத்தது. தேவ ஊழியர்கள் தாங்கள் கர்த்தருக்காகப் பிரதிஷ்டைபண்ண வேண்டியவைகளை மெய்யாகவே பிரதிஷ்டை செய்திருப்பார்களாயின், அவர்கள் சரியான விதத்தில் கர்த்தரைச் சார்ந்து ஜீவிக்கக் கூடியவர்களாயிருப்பது மட்டுமல்ல, சரியான வெளிப்படுத்தல் உள்ளவர்களாயும், கர்த்தரோடு சரியான ஐக்கியமுள்ளவர்களாயும் இருப்பர். சரியான பிரதிஷ்டையின் ஜீவியம் இல்லாதவர்களுக்குச் சரியான வெளிப்படுத்தலோ, கர்த்தரோடு சரியான உறவோ இராது. “உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே” என்பது, மூலபாஷையில், ‘நீர் உமது அடியாளின் *உள்ளத்தோடு* பேசினீரே’ என்று கூறப்பட்டுள்ளது. ஆம்! தேவன் நம்மோடு பேசும்போது, அவர் நம் இருதயத்தோடு பேசுகிறார். “நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி” என கர்த்தர் உரைத்திருக்கிறார் (ஓசியா 2 : 14). ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனத்திற்கான ஓரக் குறிப்பில் இது, ‘நான் அவளுடைய இருதயத்தோடு பேசுவேன்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சில வேளைகளில் அவர் நம்மோடு பட்சமாய்ப் பேசும்படி, சந்தடியற்றதும், தனிமையானதும், மனுஷ சஞ்சாரமற்றதுமான வனாந்தரத்திற்கு நம்மைத் தனியே அழைத்துச் செல்கிறார்; தனிமையில் அவர் நம் உள்ளத்தோடு பேசுகிறார்.



மேலும் ரூத், “நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும்” என்று போவாசிடம் கூறுகிறாள். வேறு வார்த்தைகளில் கூறின், ‘உம்முடைய வேலைக்காரி என்று அழைக்கப்படவும் நான் தகுதியுள்ளவளல்ல’ என்று கூறி, அவள் மிகத் தாழ்வானதும் கடைசியானதுமான இடத்தை மனமுவந்து எடுத்துக்கொள்கிறாள்! நாம் ஒருவேளை புறம்பாக ‘நான் சிறியவன்’ என்று கூறிக்கொண்டிருக்கக் கூடும்; ஆனால் அதே நேரத்தில், ‘நான் பெரியவன்!’ என்ற எண்ணம் நம் இருதயத்திற்குள் மறைந்திருக்கக் கூடும்! அது மெய்யான மனத்தாழ்மை அல்ல. நாம் சற்றும் தகுதியற்றவர்கள் என்று தேவ சமுகத்தில் நம்முடைய தகுதியின்மையை முழுமையாக உணர்ந்துகொள்வதே மெய்யான மனத்தாழ்மையாகும். ரூத் தன்னுடைய தகுதியின்மையை எத்தனை முறை திரும்பத் திரும்ப குறிப்பிடுகிறாள் பாருங்கள்! “நான் அந்நியதேசத்தாளாயிருக்க” (ரூத் 2 : 10), “நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும்” (வச. 13) போன்ற பதங்கள் அவளிலிருந்த ஆழ்ந்த தாழ்மையைச் சித்திரிக்கின்றன. மாறாக, வேதாகமத்தில் நெகேமியா என்ற மற்றொரு தேவமனிதனோ தான் செய்த நற்கிரியைகளையெல்லாம் தேவனிடத்தில் எடுத்துரைத்து, “என்னை நினைத்தருளும்” என்று வேண்டிக்கொள்கிறான் (நெகே. 13 : 14, 22, 31). இவ்விருவருக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்! நெகேமியா பல நற்கிரியைகளைச் செய்திருந்தபோதிலும், அவனுடைய சுபாவத்தில் பல குறைபாடுகள் இருந்தன. ஓய்வுநாள் கற்பனையை மீறியவர்களை, “நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன்” என அவன் மிரட்டினான் (வச. 21); தவறு செய்தவர்கள் மேல் சாப வார்த்தைகளைக் கூறி, அவர்களை அடித்து, அவர்களுடைய மயிரைப் பிய்த்தான் (வச 25); நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகக் குற்றம் செய்தவனைத் தன்னை விட்டுத் துரத்தினான் (வச. 28) – இவை போன்ற பிறரோடுள்ள பல கடினமான செயல்படுதல்கள் அவனில் இருந்தபோதிலும், அவனோ தன் பிழைகளை உணரக்கூடாதவனாயும்,

தன் செயல்கள் யாவும் நல்லவைகளே என்ற எண்ணமுள்ள வனாயும் இருந்து, தன்னை நினைத்தருளும்படி தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறான். "என்னை நினைத்தருளும்" என்று அவன் திரும்பத் திரும்ப வேண்டிக்கொண்ட போதிலும், அவரோ அவன் செய்த அப்படிப்பட்ட கிரியைகளுக்காக அவனைப் பாராட்டி யதாக நாம் வேதாகமத்தில் எங்கும் வாசிப்பதில்லை! தேவ வைராக்கியம் என்னும் மூடலின் கீழ் அவன் செய்த இச்செயல்கள் அவருக்கு உகந்தவையாயிருக்கவில்லை. இவ்விஷயத்தில் நெகேமியாவுக்கும் எஸ்றாவுக்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள்! தேவஜனங்களின் மத்தியில் ஒரு பிரச்சினை உண்டானபோது, நெகேமியா குற்றம் புரிந்தவர்களுடைய தலை மயிரைப் பிய்த்தான்; எஸ்றாவோ தன்னுடைய தலைமயிரையே பிடுங்கிக்கொண்டான்! (நெகே. 13 : 25 ; எஸ்றா 9 : 3). நெகேமியா தேவஜனங்களைச் சீர்திருத்தும் பகுதியில் எல்லாவற்றையும் அவசரமாகவும், பிறரைப் பலவந்தம்பண்ணியும், கோபத்துடனும், ஆத்திரத்துடனும் செய்தான். ஆனால் அது அவர்களுக்கிடையே ஒரு எழுப்புதலைக் கொண்டுவரவில்லை! ஆனால் எஸ்றாவோ தன்னைத்தான் தாழ்த்தி, காரியங்களை நிதானமாகவும், அமைதி யான முறையிலும், சமாதானத்துடனும், பொறுமையுடனும் செய்தான். அதுவே தேவஜனங்களில் மிகப் பெரிய எழுப்பு தலைக் கொண்டுவந்தது!

ரூத்தைப் போல நாமும் நம்மைத் தாழ்த்தி, இப்பூமியில் எல்லாரிலும் கடைசியான இடத்தை எடுத்துக்கொள்வோமாக. எஸ்றாவைப் போல நாம் ஒருவேளை பல உத்தரவாதங்களை வகிக்க வேண்டியவர்களாயிருப்பினும், மனத்தாழ்மையுடன் காரியங்களைக் கையாளுவோமாக. அப்போது, சிறுமையும் எளிமையுமானவர்களை நினைத்தருளுகிற தேவன் (சங். 40 : 17) நம்மையும் நினைத்தருளுவார். ஏழையானவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அமர்ந் திருப்பான்; கர்த்தர் அவனைத் தப்புவித்துப் பாதுகாத்துச் சுகமாய்



இருக்கப்பண்ணுவார் (சங். 10 : 14 ; 12 : 5 ; 34 : 6). வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மையே ஒப்புவித்த நமதருமை ஆண்டவரின் அடிச்சுவடுகளையே நாமும் பின்பற்று வோமாக (I பேதுரு 2 : 21, 23).

புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசுவின் தாயாகிய மரியாளைத் தேவதூதன், "கிருபை பெற்றவளே, வாழ்க" என வாழ்த்தினான் (லூக்கா 1 : 28). அவளோ, "இதோ, நான் ஆண்ட வருக்கு அடிமை (Behold the handmaid of the Lord)" என்று தன்னைத் தாழ்த்தினாள் (வச. 38). இங்கே ரூத், "உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்கவேண்டும்" என்று போவாசிடம் வேண்டிக் கொண்டதுடன், 'நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத் திக்கும் சமமானவள் அல்ல' (though I be not like unto one of thine handmaidens) என்றும் கூறுகிறாள். இவ்விருவரின் கூற்றுகளையும் ஒப்பிடுங்கால், ரூத்தின் தாழ்மை மரியாளின் தாழ்மையைக் காட்டிலும் ஒரு படி ஆழமாயிருந்தது என நாம் கூறலாம். ரூத், நகோமியைப் பின்பற்றுவதை விட்டுப் பின்வாங்கிய ஓர்பாளு டனோ, அல்லது வேறு யாருடனுமோ தன்னை ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களைப் பார்க்கிலும் தான் மேலானவள் என்று சொல்லிக்கொள்ளத் துணியவில்லை. ஒரு காலத்தில் தன் மாமியா யிருந்து, தற்போது தனக்கு நடைமுறையில் யாதொரு உறவு முறையும் இல்லாதிருந்த நகோமிக்காகத் தான் செய்த தியாகங் களைப் பற்றியோ, அவளுக்குத் தான் செய்துவரும் உதவிகளைப் பற்றியோ குறிப்பிட்டு, தான் மற்ற பலரைக் காட்டிலும் மேலானவள் என்று நிரூபிக்கவும் அவள் முற்படவில்லை. நாம் நம்முடைய தகுதியின்மையையும், மற்றவர்கள் நம்மைப் பார்க்கிலும் மேலானவர்கள் என்பதையும் எப்போதும் உணர வேண்டும். இந்தத் தாழ்மையின் ஆவியை நம் ஜீவிய காலம் முழுவதும் நாம் நம்மில் பேணிக் காத்துக்கொள்ள வேண்டும். 'உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் நான் சமமானவள்

அல்ல' என்பதின் ஆவிக்குரிய கருத்து, 'ஆண்டவரே, உமக்கு ஊழியம் செய்கிற அனைவரோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் எல்லாரிலும் நான் மிகச் சிறியவன்' என்பதாகும். இது தேவன் பாராட்டுகிற அருமையான ஒரு நற்பண்பாகும். நாம் சில வேளைகளில் மனமுறிவடைவதும், மற்றவர்கள் பேரில் மனத்தாங்கலாயிருப்பதும் ஏன்? நாம் அவர்களைப் பார்க்கிலும் மேலானவர்கள் அல்லது பெரியவர்கள் என்று எண்ணுவதி னாலேயே! 'பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனிலும் மிகச் சிறியவனாகிய (less than the least of all the saints) நான் கிறிஸ்து வினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' (எபே. 3 : 8) என அப். பவுல் எழுது கிறார். தேவ ஊழியரே, 'நான் பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனிலும் மிகச் சிறியவன்' என்று அறிக்கை செய்யுங்கள்; மற்றவர்களை உங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கள். இந்த எண்ணம் நீங்கள் தாழ்மையிலும் சாந்தத்திலும் மென்மேலும் வளர உங்களுக்கு உதவி செய்யும். ***தேவன் உங்களை அழைத் திருக்கும் நோக்கம் உங்களுக்கு வெளிப்படுத்தப்படுவதற்கு உங்களில் காணப்பட வேண்டிய மிக இன்றியமையாத நற்பண்புகளில் ஒன்று 'மனத்தாழ்மை' ஆகும். தேவ நோக்கம் உங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கும் பிரதான மாக அத்தியாவசியமானது மனத்தாழ்மையே ஆகும்.*** 'ஆண்ட வரே! நாளுக்கு நாள் நீர் என்னைச் சிறியவனாக்கும்' என வேண்டிக்கொள்வதே அத்தாழ்மையின் ஓர் அம்சமாகும். நீங்கள் உங்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருப்பவர்களைக் காட்டிலும் திறமையும், கல்வியறிவும், ஞானமும், தாலந்துகளும், கிருபை களும், வரங்களும் உள்ளவர்களாய்க் கர்த்தரின் சேவையில் பலவிதங்களில் உபயோகமுள்ளவர்களாயிருக்கக் கூடும். ஆயி னும், நீங்கள் உங்களை அவர்களிலும் மேன்மையானவர்கள் என எண்ணிக்கொள்வீர்களாயின், நீங்கள் நாசமடைவதற்கு அதுவே போதுமானதாயிருக்கும். 'எனக்கொரு தருணம் கொடுத்துப்



பாருங்கள்; நான் என் திறமையைக் காட்டுகிறேன்!' என்று நீங்கள் சொல்வீர்களாயின், அழிவே உங்கள் முடிவாயிருக்கும். அது லூசிபரின் ஆவியாயிருக்கிறது! ஆகவே உங்களில் மனத் தாழ்மையை விருத்தி செய்துகொள்ளக் கவனமாயிருங்கள். தன்னைத் தான் அதிகமதிகமாகத் தாழ்த்திக்கொண்டேபோன ரூத் கர்த்தராகிய இயேசுவின் ஒரு முற்பிதாவினுடைய தாயானாள்! நீங்கள் தாழ்மையாயிருக்கக் கற்றுக்கொள்ளும்படி நேரம் எடுத்துக் கொள்வீர்களாயின், தேவன் உங்களை எவ்வளவாக ஆசீர்வதித்துக் கனப்படுத்துவார் என்று அளவிட்டுக் கூற இயலாது! கர்த்தர் மனத்தாழ்மையுள்ளவராயிருக்கிறார்; மனத்தாழ்மையுள்ளவர்களால் மாத்திரமே அவரை அறிந்துகொள்ள இயலும்!

> ***"பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளைப் பார்த்து: நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடி யிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள் என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந் தாள்; அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான்; அவள் சாப்பிட்டு, திர்ப்தியடைந்து, மீந்ததை வைத்துக்கொண்டாள்"*** (ரூத் 2 : 14).

## மென்மேலும் தயை பெறுதல்:

போவாஸ் ரூத்தின்பேரில் கொண்ட விசேஷித்த கரிசனை யையும் சிரத்தையையும் நாம் இவ்வசனத்தில் காண்கிறோம். தான் அவனுடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமமானவள் அல்ல என்று கூறி அவள் தன்னைத் தானே தாழ்த்தியபோது, போவாசினிடத்திலிருந்து அவளுக்குக் கனம் கிடைத்தது. "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என நாம் வாசிக்கிற வண்ணமாக (நீதி. 18 : 12), நாம் நம்மைத் தாழ்த்தும்போதெல்லாம் தேவனால் கனம்பண்ணப்படுவோம். நாம் ஏற்கனவே கண்டபடி, வயலில் சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்குகிறவர்களால் நில உடைமையாளனுக்கு எவ்வித உதவியும் இல்லை; அவர்கள்

தங்களுக்காகவே அவ்வேலையைச் செய்கிறவர்களாவர். சாப்பாட்டு வேளையில் அவர்கள் அறுப்பறுக்கிறவர்களின் அருகில் உட்கா ரும்படி அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் ரூத்துக்கோ அறுக் கிறவர்களோடு உட்காரவும், போவாசின் அப்பத்திலே புசித்து, காடியிலே தன் துணிக்கையைத் தோய்த்துக்கொள்ளவும் தக்கதான சிலாக்கியம் கிடைத்தது. கிழக்கத்திய நாடுகளில் வசிப்போர் கோடை காலத்தின் உஷ்ணம் மிக்க நாட்களில், அப்பத்தை ஒரு விதமான காடியில் (vinegar) தோய்த்து உட்கொள்வது வழக்கம். இது, ஒருவனின் உடலுக்குக் குளிர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கும் என நம்பப்படுகிறது. போவாசின் வயலில் ரூத்துக்குக் கிடைத்த வரவேற்பு, உபசரிப்பு, தயை அனைத்துமே அவ ளுடைய வறண்டுபோயிருந்த உள்ளத்தைத் தேற்றிப் புத்துணர் வடையச் செய்தன! *போவாசோடும் அவனுடைய ஊழியக்கார ரோடும்* பந்தியிருத்தலை முறையே, பரிசுத்த ஆவியின் அபிஷே கத்தின் மூலமாக உன்னதங்களிலே ***கிறிஸ்துவுடன்*** உட்காருகிற அனுபவத்திற்கும் (எபே. 2 : 7), இனி அந்நியரும் பரதேசிகளுமா யிராமல் ***பரிசுத்தவான்களோடே*** ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அவரோடு ஐக்கியமுள்ளவர்களாயிருப்ப தற்கும் நாம் ஒப்பிடலாம் (வச. 19). இந்த ஐக்கியத்தில் மெய்யான இளைப்பாறுதலும் தேறுதலும் உண்டு. “கிறிஸ்துவுடனே ஐக்கிய மாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்” (I கொரி. 1 : 9) என நாம் வாசிக்கிறோம். ‘நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, எங்களுடைய ஐக்கியம் இயேசு கிறிஸ்துவோடு இருக்கிறது’ (I யோவான் 1 : 3) என அப். யோவான் சபைக்கு எழுதுகிறார். அந்நிய தேசத்தாளும் பரதேசியுமாய்ப் போவாசின் வயலுக்கு வந்த ரூத் எவ்வாறு படிப்படியாகத் தேவனால் கனம் பெறுகிறாள், பாருங்கள்!

ரூத் அழகுள்ள ஒரு பெண்பிள்ளையாயிருந்ததால் போவாஸ் அவள் மேல் கவனம் செலுத்தினான் என மாம்சீக சிந்தையுள்ள சிலர் எண்ணக் கூடும். ஆனால் அவள் அவ்வளவு



அழகுள்ளவளாய் இருந்திருந்தால் அவளை மீட்டுக்கொள்ள வேண்டியவனாயிருந்த மிக நெருங்கிய சுதந்தரவாளி அவளை விவாகம்பண்ண மறுத்திருந்திருக்க மாட்டானே! அவளுடைய வயல்நிலத்தை வாங்கிக்கொள்ள மனமுவந்திருந்த அவன், அவளை விவாகம்பண்ண மறுத்துவிட்டான் அன்றோ! (ரூத் 4 : 4 – 6). போவாஸ் மாம்சீகமான அன்பினால் அல்ல, தூய்மை யான தெய்வீக அன்பினாலேயே அவளைப் பராமரித்தான். மேலும் அவன் அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான் என நாம் வாசிக்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிர யாணம் செய்த நாற்பது வருடங்களாக மன்னாவைப் புசித்து வந்தனர். ஆனால் அவர்கள் கானானை அடைந்தபோது சுட்ட கதிர்களை அதாவது வறுத்த கோதுமையைப் புசித்தார்கள் (யோசுவா 5 : 11). ஆகவே ‘வறுத்த கோதுமை’ என்பது, பலமான ஆகாரத்தை அதாவது பரம கானானிலிருந்து நமக்குத் தேவனால் நேரடியாக அருளப்படும் ஆழமான வெளிப்படுத்தல்களைக் குறிக்கிறது. நாம் நம்மைத் தாழ்த்தும்போது, தம்முடைய ஆழமான காரியங்களை அறிந்துகொள்ளத்தக்கதாக தேவன் நம்முடைய மனக்கண்களைப் பிரகாசிப்பிப்பார்.

“*அவள் சாப்பிட்டு, திர்ப்தியடைந்து, மீந்ததை வைத்துக் கொண்டாள்*” என ரூத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். கர்த்தர் நமக்குத் தந்தருளுகிறது எதுவாயினும், அது நமக்குத் திருப்தியை யும் மன நிறைவையும் அளிக்கும். நமக்கு வெளிப்படுத்தும்படி பல ஆழமான மறைபொருள்கள் தேவனிடத்தில் உள்ளன. அவர் தம்முடைய ஆழமானவைகளை நமக்கு வெளிப்படுத்த விரும்பு கிறார். ஆனால் அதற்கு நம்மில் ஆழமான மனத்தாழ்மை அவசியமாயிருக்கிறது. தாழ்மை நம் ***மனதில்*** இருக்க வேண்டும். பெருமையும் மனமேட்டிமையும் உள்ளவர்களுக்கு அவை வெளிப்படுத்தப்பட முடியாது; ஏனெனில் அவ்வாறு வெளிப் படுத்தப்பட்டால் அது அவர்கள் இன்னும் அதிகமாகப் பெருமையடைந்து விழுந்துபோவதற்கே ஏதுவாகும். “அழிவுக்கு

முன்னானது அகந்தை” என நாம் வாசிக்கிறோமே! (நீதி. 16 : 18). மென்மேலும் பெரியவனாக வேண்டும் என விரும்பிய லூசிபர் பாதாளத்தில் தள்ளுண்டுபோனான். ஆகவே, ‘ஆண்டவரே, நேற்றைப் பார்க்கிலும் இன்று நான் இன்னும் சிறியவனாக வேண்டும்’ என நாம் வேண்டிக்கொள்வோமாக. ரூத் மனத் தாழ்மையின் ஆழங்களுக்குள் இறங்கிச் சென்றபோது, அவளுக்குப் போவாஸ் வறுத்த கோதுமையைக் கொடுத்தது போல, நம்முடைய இருதயம் தேவனோடு செம்மையாயிருந்து, நாம் மனத்தாழ்மையாய் நடப்போமாகில், தெய்வீக அன்பு, தெய்வீகத் தூய்மை, மெய்யான தாழ்மை போன்றவற்றைப் பற்றிய ஆழமான வெளிப்படுத்தல்களை அவர் நமக்குத் தந்தருளுவார். அவர் நமக்கு அளிப்பவை நம்மைத் திருப்தியடையச் செய்வது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப் போதுமானவையாயிருக்கும்!

**“*அவள் கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது, போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக்கொள்ளட்டும்; அவளை ஈனம்பண்ணவேண்டாம். அவள் பொறுக்கிக்கொள்ளும்படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான்*”** (ரூத் 2 : 15, 16).

### தயை பெறத்தக்கவர்கள் யார்?

“*அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக்கொள்ளட்டும்; அவளை ஈனம்பண்ணவேண்டாம்*” என்று போவாஸ் ரூத்தைக் குறித்துத் தன் வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான். சாதாரணமாக, கதிர் பொறுக்குகிறவர்கள் அரிக்கட்டுகளின் நடுவே பொறுக்கிக்கொள்ளும்படி அனுமதிக்கப்படுவதில்லை; கதிர்கள் யாவும் சேகரிக்கப்பட்டு, அவை அரிக்கட்டுகளாகக் கட்டப்பட்டு, வயலிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பின்னரே கதிர் பொறுக்குகிறவர்கள் சிந்திக்கிடக்கிறவைகளைத் தங்களுக்கென்று பொறுக்கிக்



கொள்ளும்படி வயலில் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர். ஆனால் இங்கேயோ ரூத்துக்கு மாத்திரம் இந்த விசேஷித்த சலுகை கொடுக்கப்பட்டது. அத்துடன் அவளை ஒரு விதவை, ஏழைப்பெண், கதிர்பொறுக்குகிறவள், அந்நிய தேசத்தைச் சேர்ந்தவள் என்று நினைத்து ஈனம்பண்ணவோ, அவளோடு கடினமாகச் செயல்பட்டு அவளை அவமதிக்கவோ கூடாது என்று போவாஸ் தன் வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான். நாம் நம்முடைய போவாசாகிய கிறிஸ்து இயேசுவினிடத்தில் வந்தபோது பிரியமானவராகிய அவருக்குள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டோம் (எபே. 1 : 5 - Eng. vs. 6). அவர் நம்முடைய நிந்தையையும் அவமானத்தையும் நீக்கி, நமக்கு மகிமையையும் கனத்தையும் அளித்திருக்கிறார். “உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்” என்பது கர்த்தரின் வாக்குத்தத்தம் (ஏசாயா 61 : 7). மேலும் போவாஸ் தன் அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும் தன்னுடைய வயல்நிலத்திற்கே வந்து, தன் வேலைக்காரிகளோடுகூடவே இருக்கும்படியாகவும் ரூத்தை அழைக்கிறான் (ரூத் 2 : 21). ஏழையும் பரதேசியுமாய் அங்கு வந்த ரூத், பலத்தவனும் மிகுந்த ஆஸ்திக்காரனுமாயிருந்த அந்நில உரிமையாளனிடத்திலிருந்து தனக்கு இவ்வளவு கனிவானதொரு வரவேற்பும், தயவுடன் கூடிய ஏற்றுக்கொள்ளப்படுதலும் கிடைக்கும் என்று சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை!

“*அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள்*” என்று ரூத்தின் நிமித்தமாகப் போவாசின் வயல்நிலத்தில் ஒரு கட்டளை பிறந்தது. ரூத் பொறுக்கிக்கொள்ளத்தக்கதாக அரிகளில் சிலதை வேண்டுமென்றே சிந்தவிடும்படி போவாஸ் தன் வேலைக்காரருக்குக் கற்பித்தான். சாதாரணமாக, எந்த நில உடைமையாளனும் தன் வேலையாட்களுக்கு இவ்விதமாகக் கட்டளையிடுவதில்லை; அரிக்கட்டுகளைச் சரியாகக் கட்டாமல் சில கதிர்களைச் சிந்தவிடுவோர் சோம்பலும் கவலையீனமுமுள்ளவர்கள் என்றே கணிக்கப்பட்டு, கடிந்துகொள்ளப்படுவர். இங்கேயோ ரூத்தின்

நிமித்தமாக, கட்டளை இதற்கு நேர்மாறானதாக வருகிறது! கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு மிகவும் விசேஷமானவர்களாயிருக்கிறோம். 'நாம் வேண்டிக்கொள்ளு கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்' (எபே. 3 : 20). அந்நிய தேசத்தா ளாகிய ரூத் போவாசினிடத்திலிருந்து இவ்வளவு ஒத்தாசைகளைப் பெற எவ்வளவேனும் தகுதியில்லாதவளாய் இருந்தும், அவள் நினைத்ததற்கும் எதிர்பார்த்ததற்கும் மிகவும் அதிகமாகவே அவன் அவளுக்குச் செய்தான்.

யூதர் புறஜாதியாரை நாய்களுக்குச் சமமாக எண்ணினர். மேஜையிலிருந்து விழும் துணிக்கைகள் மாத்திரமே நாய் களுக்குக் கிடைக்கும் என நாம் வாசிக்கிறோம் (மத். 15 : 26, 27). புறஜாதியாளான ரூத் ஒரு நாயைப் போல மிகத் தாழ்வாக மதிக்கப்படத்தக்கவளாயிருந்தும், அவளுக்காக நிறைய கதிர் களைச் (handfuls) சிந்தவிடும்படி போவாஸ் தன் வேலைக்கார ருக்குக் கற்பித்து, தன் வேலைக்காரிகளோடு கூடவே இருக்கும் படியாகவும் அவளிடத்தில் கூறுகிறான். இவ்வாறு ரூத்துக்குப் போவாசோடுள்ள ஐக்கியம் படிப்படியாக வளர்ந்துவருவதை நாம் காண்கிறோம். மிகுந்த ஆஸ்திக்காரனாயிருந்த போவாசுக்கு அநேக வயல்நிலங்கள் இருந்தன. அவனுக்குக் கோதுமை அறுப் பும், வாற்கோதுமை அறுப்பும் உண்டாயிருந்தன (ரூத் 2 : 23). ஆகவே அவனுடைய வயல் நிலங்களில் ரூத் மாத்திரமல்ல, வேறு பலரும் கதிர்பொறுக்கிக்கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருந் திருக்கக் கூடும். அவர்கள் எல்லாரிலும் ரூத்துக்கு மாத்திரமே போவாசின் கண்களில் விசேஷமான தயவு கிடைத்தது.

மேதிய பெர்சிய வல்லரசின் சகல நாடுகளிலிருந்தும் பல கன்னிப்பெண்கள் சூசான் அரமனையில் கூட்டப்பட்டிருந்த போதிலும், சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் யூதா தேசத்தி லிருந்து சிறைப்பிடித்துக் கொண்டுவரப்பட்டிருந்த எஸ்தருக்கு



மாத்திரமே ராஜாவின் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவளுடைய சிரசின் மேல் வைத்து, அவளைப் பட்டத்து ஸ்திரீயாக்கினான் என நாம் வாசிக்கிறோம் (எஸ்தர் 2 : 17). 'யோனத்தான் நிமித்தம் என்னால் தயவு பெறத்தக்கவன் எவனாகிலும் உண்டோ?' என்று தாவீது தன்னிடத்தில் தயவு பெறத்தக்க ஒருவனைத் தேடியபோது, இரு கால்களும் முடமானவனும் எதற்கும் பிரயோஜனமற்ற வனுமாயிருந்த மேவிபோசேத் என்பவன் ராஜாவின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டான். அவனுக்கு ராஜாவாகிய தாவீதின் கண்களில் தயை கிடைத்தது! "செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம் மாத்திரம்" என தன்னைத் தாழ்த்திய அவன், நித்தம் ராஜாவின் பந்தியில் போஜனம்பண்ணும் சிலாக்கியம் பெற்றான் (II சாமு. 9 : 7, 8, 13). யோனத்தான் நிமித்தம் அந்தத் தயவு அவனுக்குக் கிடைத்தது போல, நாமும் பிரியமானவருக்குள் (கர்த்தராகிய இயேசுவுக்குள்) தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, தேவ சமுகத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். மேலும், "இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்" என்று தன்னைத் தாழ்த்திய அபிகாயில் தாவீதின் மனைவியாகும்படி அவனி டத்தில் தயவு பெற்றாள் (I சாமு. 25 : 41). அவ்வாறே எவ்விதத் திலும் தகுதியற்றவர்களாகிய நாமும் கர்த்தரின் கண்களில் கடாட்சம் பெற்று, அவரிடத்தில் பல விசேஷித்த தயவுகளைப் பெறுகிறோம்! நாம் நாடோறும் பெற்றனுபவிக்கிற தயவுகள் யாவற்றிலும் மேன்மையான தயவு, அவர், தாம் வரும்போது நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளப் போவதேயாகும்!

இஸ்ரவேலின் தேவனுடைய செட்டைகளின் கீழ் அடைக் கலமாய் வந்ததினிமித்தமாகவே ரூத் இவ்வளவு விசேஷித்த தயவுகளுக்கும் உரியவளானாள். நம் ஜீவிய காலமெல்லாம் ஒவ்வொரு நாளும் கர்த்தர் நமக்குச் செய்யவிருக்கிற தயவைப் பெற்றனுபவிக்கும்படி நாமும் அவருடைய செட்டைகளின் கீழ்

தஞ்சம் புகுவோமாக. ஓரிரு நாட்களுக்கு அல்ல, நித்தியமாக அவர் நமக்குத் தயை செய்வார். "அவருடைய தயவோ நீடிய வாழ்வு" என்றும், "நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்" என்றும் நாம் வாசிக்கிறோமே! (சங். 30 : 5 ; ஏசாயா 54 : 8). 'என்னிடத்தில் தயை பெறத்தக்கவன் யாராகிலும் உண்டா' என்று கூறிக்கொண்டு கர்த்தர் பரலோகத்திலிருந்து இப்பரந்த உலகினைக் கண்ணோக்கும்போது, 'ஏழைகளையே' - மெய்யான மனத்தாழ்மை அல்லது ஆவியில் எளிமை உள்ளவர்களையே - அவர் தம் மிடத்தில் தயை பெறப் பாத்திரராகக் காண்கிறார் (சங். 68 : 10). "கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ***ஏழைக்குப்*** பெலனும், நெருக்கப்படுகிற ***எளியவனுக்குத்*** திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்" (ஏசாயா 25 : 4). சீயோனுக்குத் தயை செய்யும் தேவன் அதின் ***ஏழைகளை*** அப்பத்தினால் திருப்தியாக்குகிறார் (சங். 102 : 13 ; 132 : 15). "ராஜாவின் தயை விவேகமுள்ள ***பணிவிடைக்காரன்*** மேலிருக்கும்" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 14 : 35). தாழ்மையின் சிந்தையே அவனிலுள்ள விவேகமாகும். நாமும் கர்த்தரிடத்தில் தயை பெறும்படி மனத்தாழ்மையைத் தரித்துக்கொள்வோமாக. நாம் மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயத்துடன் நம்மைத் தாழ்த்தி, அவருடைய தயவில் நிலைத்திருப்போமானால் (ரோமர் 11 : 20, 22), முடிவாக அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவருடைய மணவாட்டியாக என்றென்றும் நித்தியத்தில் சீயோனிலும் புதிய எருசலேமிலுமிருந்து அவரோடு ஆளுகை செய்யும்படியாகவும் நமக்குத் தயவு கிடைக்கும். ஆம்! அவருடைய ஜனத்தில் ***சிறுமையானவர்கள்*** சீயோனிலே திடன் கொண்டு தங்குவார்கள் (ஏசாயா 14 : 32); "***சிறுமையானவர்கள்*** கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் ***எளிமையானவர்கள்*** இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்"! (ஏசாயா 29 : 19).

## அதிகாரம் 5

# தாழ்மையில் தங்கும் இளைப்பாறுதல்

“ *அப்படியே அவள் சாயங்காலமட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள்; பொறுக்கினதை அவள் தட்டி அடித்துத் தீர்ந்தபோது, அது ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற்கோதுமை கண்டது. அவள் அதை எடுத்துக்கொண்டு, ஊருக்குள் வந்தாள்; அவள் பொறுக்கினதை அவளுடைய மாமி பார்த்தாள்; தான் திருப்தியாய்ச் சாப்பிட்டு மீதியாக வைத்ததையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள்*” (ரூத் 2 : 17, 18).

நாம் ஏற்கனவே கண்டபடி, கதிர் பொறுக்குதல் என்பது மிகவும் தாழ்வான ஒரு வேலையாகும். அத்துடன், கதிர் பொறுக்குகிறவர்கள் நிலத்தில் சிந்திக் கிடக்கிற கதிர்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுக்கும்படி அறுப்பு அறுக்கிறவர்களைக் காட்டிலும் தரைமட்டும் அதிகமாகக் குனிய வேண்டியதாயிருக்கும். ரூத் நாள் முழுவதும் அவ்வேலையைப் பொறுமையுடன் செய்துகொண்டிருந்தாள். அந்நாளின் முடிவில் அவள் ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற்கோதுமையுடன் வீடு திரும்பினாள். நம்முடைய போவாசாகிய கிறிஸ்து இயேசுவின் வயல்நிலத்தில் - அவரது சேவையில் - நாம் எவ்வளவதிகமாக நம்மைத் தாழ்த்துகிறோமோ,

அவ்வளவதிகமாகப் பிரதிபலனைப் பெற்று, அவரால் கனம் பண்ணப்படுவோம் என்பதைப் போவாசின் வயல்நிலத்தில் ரூத்துக்குச் சம்பவித்ததில் நாம் நிழலாட்டமாய்க் காண்கிறோம். தங்களிலிருந்த பெருமையினிமித்தம் இந்த மகிமையான சுவி சேஷ ஊழியத்தில் நிலைத்திருக்கக் கூடாமற்போய், தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டவர்கள் பலர்! நமதருமை ஆண்ட வர்தாமே தமது அறுவடை நிலத்தில் தேவ ஊழியர் யாவரையும் முடிவு வரை மனத்தாழ்மையுள்ளவர்களாகக் காத்துக்கொள்வாராக!

## நலமானதைப் பிடித்துக்கொள்!

தான் பொறுக்கின கதிர்களை ரூத் தட்டி அடித்தாள். சேர்க்கப்பட்டுள்ள கதிர்களினின்று தாளடிகள் நீக்கப்பட்ட பின்னரே எவ்வளவு தானியம் சேகரிக்கப்பட்டுள்ளது என்பது தெரியும். அவள் அவ்வண்ணமே செய்து, முழு தானியத்தை மட்டுமே வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். போவாஸ் அவளுக் களித்திருந்த வறுத்த கோதுமையும் அவளிடத்தில் இருந்தது. தேவபிள்ளைகள் பலரும் 'தாளடிகளில்' அல்லது 'வைக் கோலில்' மாத்திரமே திருப்தியடைந்துவிடுகின்றனர். எத்தனை சந்தர்ப்பங்களில் ஆராதனை முடிந்து வீடு திரும்பும்போது அவர்கள் 'வைக்கோலையும் பதரையுமே' கொண்டு செல்கின்றனர்! வீடு திரும்பும்போது அவர்கள் சொல்லக்கூடியதெல்லாம், பிரசங்கம் செய்தவரின் குறைகள், பாடகரின் குறைகள், விசுவாசிகளின் குறைகள் போன்றவையாகவே இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் பிரசங்கங்களின் சில பகுதிகள் வைக்கோலாகவும் பதராகவும் இருக்கக் கூடும். நாமோ அவைகளைத் தட்டி அடித்து, முழு தானியத்தை மாத்திரம் எடுத்துச் செல்வோமாக.

ரூத் தானாகச் சேகரித்தவை தட்டி அடித்துச் சுத்திகரிக்கப் பட வேண்டியவையாயிருந்தன; ஆனால் போவாஸ் நேரடியாக ரூத்துக்கு அளித்தவையோ வறுத்த கோதுமையும் முழு தானியமு



மாகவே இருந்தன என்பது நம்மை ஊக்குவிக்கும் ஒரு விஷயமாகும் (ரூத் 2 : 14 ; 3 : 15). அவன் அவளுக்கு அளித்ததில் ஒருபோதும் வைக்கோலோ, பதரோ இருக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அவன் அவளுக்கு ஆறு படி வாற்கோதுமை கொடுத்தான். அதிலும் வைக்கோலோ, பதரோ இருக்கவில்லை. நாம் ஆசீர்வாதங்களையும், வெளிப்படுத்தல்களையும் கர்த்தரிடத் திலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளும்போது, அதில் சற்றா கிலும் 'வைக்கோலோ அல்லது தாளடியோ' இராது. நம்முடைய பிரசங்கிமார் யாவரும் தாங்கள் அளிக்கும் தூதுகளில் 'வைக்கோலும் பதரும்' இன்றி, அவரிடத்திலிருந்து கிடைக்கப் பெற்றவைகளை மாத்திரமே போதிக்கத்தக்கதாக, அவர்கள் அவரிடத்திலிருந்து நேரடியாக வெளிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக நாம் வேண்டிக்கொள்வோமாக. சபையின் அங்கத்தினர்களும் தாளடிகளைத் தட்டி அடித்து, பதரைத் தூற்றி அகற்றிவிட்டு, முழு தானியத்தை மாத்திரம் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச்செல்லும்படி நாம் அவர்களுக்காகவும் வேண்டிக் கொள்வோமாக.

## உன் பிரயாசம் வீண்போவதில்லை!

கதிர் பொறுக்கிக்கொண்டு வரும்படி வயல்வெளிக்குச் சென்ற ரூத், மாலையில் நிறைய வாற்கோதுமையுடன் வீடு திரும்பினாள். அதைக் கண்டு அவளுடைய மாமி ஆச்சரியப் பட்டாள். அத்துடன், போவாஸ் தனக்குக் கொடுத்த வறுத்த கோதுமையில் அவள் தன் மாமிக்கென்று மீதியாக வைத்திருந்த பங்கையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள். ரூத் இந்த அளவுக்குத் தன்னைத் தாழ்த்தி, எளிமையானதொரு வேலையைத் தானே மனமுவந்து தெரிந்துகொண்டு வயல்வெளிக்குச் செல்லு வாள் என்றோ, அங்கு நாள் முழுவதும் கடினமாக உழைத்து அதிகமான வாற்கோதுமையையும், அத்துடன், அவளுக்கு அங்கு கிடைத்த விசேஷமான ஆகாரத்திலிருந்து தனக்கென்று ஒரு பங்கையும் கொண்டுவரத்தக்கதாகத் தன் பேரில் அவ்வளவு

அன்பும் தயையும் பாராட்டுவாள் என்றோ நகோமி சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவள் பேரில் ரூத் பாராட்டிய தூய, தன்னலமற்ற, தெய்வீக அன்பு, அவளது தியாகம், மனவுண்மை போன்றவை மெய்யாகவே பலனளித்தன! அது வரை கடின உள்ளமுள்ளவளாய், வாழ்க்கையில் வெறுப்படைந்திருந்த நகோமியின் சுபாவத்தில் மாபெரும் மாறுதல்கள் உண்டாக ஆரம்பித்தன! ரூத் தான் நெடுநாட்களாக 'விதைத்துக்'கொண் டிருந்தவைகளை மகிழ்வுடன் 'அறுக்கும்' வேளை வந்தது! தேவபிள்ளையே, நீ கடின உள்ளங்கொண்டவர்களிடத்தும் தெய்வீக அன்பை வெளிப்படுத்திக்கொண்டிருப்பாயாகில், உன் பிரயாசம் வீண்போவதில்லை; "உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார் " (எரே. 31 : 16).

***" அப்பொழுது அவளுடைய மாமி: இன்று எங்கே கதிர்பொறுக் கினாய், எவ்விடத்தில் வேலைசெய்தாய் என்று அவளிடத்தில் கேட்டு; உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள்; அப்பொழுது அவள்: இன்னாரிடத்திலே வேலை செய்தேன் என்று தன் மாமிக்கு அறிவித்து: நான் இன்று வேலைசெய்த வயல்காரன் பேர் போவாஸ் என்றாள். அப் பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து: உயிரோடிருக்கிற வர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள்; பின்னும் நகோமி அவளைப் பார்த்து: அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின்முறையானும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள்"*** (ரூத் 2 : 19 , 20).

**நகோமியின் மாறுதல்:**

நகோமியின் சுபாவத்தில் உண்டாகிற மாறுதல்களைப் பாருங்கள்! அவளுடைய வாய்மொழியைக் கவனியுங்கள்! இங்கு அவள் முதல் முறையாகத் தன் வாயைத் திறந்து, "ஆசீர் வதிக்கப்படுவானாக" என்ற பதத்தை உச்சரிக்கிறாள். இவ்வேத



பகுதியில் இருமுறை அவள் இப்பதத்தை உபயோகிக்கிறாள். அது வரை அவளுடைய வார்த்தைகளெல்லாம் முறையிடுதலாகவும் கசப்புள்ளவையாகவுமே இருந்தன. 'சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்; அவர் என்னை வெறுமையாக்கி, சிறுமைப்படுத்தி, கிலேசப்படுத்தினார்' (ரூத் 1 : 20 , 21) போன்ற மனக்கசப்புள்ள வார்த்தைகளே அதற்கு முன் அவளது அதரத்தி னின்று பிறந்தன. ஆசீர்வாதம் அல்லது பாக்கியம் என்ற வார்த்தையை அது வரை அவளால் உச்சரிக்கக் கூடாதிருந்தது. இப்போதோ அவள் தேவன் தனக்குத் தயை செய்கிறவர் என் பதையும், அவர் தன்னோடு கசப்பான விதத்தில் செயல்பட வில்லை என்பதையும் உணருகிறாள்! இம்மாபெரும் மாறுதலை அவளது ஜீவியத்தில் கொண்டுவந்தது, ரூத் தன் ஜீவியத்தில் வெளிப்படுத்திய திவ்ய சுபாவங்களே ஆகும். ரூத்தின் ஜீவியம் மெய்யாகவே அவளோடு பேசிற்று! தேவன் பேரில் மனக்கசப் படைவதற்கு நகோமியைப் பார்க்கிலும் அவளுக்கே அதிகமான நியாயமான காரணங்கள் இருந்தன. 'நான் என் பழைய தெய்வங் களை விட்டு ஜீவனுள்ள மெய்த்தேவனாகிய இஸ்ரவேலின் தேவனைப் பின்பற்றிய போதிலும், அவர் எனக்கு என்னதான் நன்மை செய்தார்? எனக்குப் பிள்ளை இல்லை; அவர் என் புருஷனையும் மாமனையும் எடுத்துக்கொண்டார்; நகோமியும் எனக்கு இது வரை யாதொரு நல்ல ஆலோசனையும் அளிக்க வில்லை; அவள் எனக்குச் சொன்னதெல்லாம் *திரும்பிப் போ* என்பதே' என்றெல்லாம் குறைகூறி, அவள் நகோமியைப் பார்க்கிலும் அதிகமாக தேவன் பேரில் மனக்கசப்பு கொண்டிருந் திருக்கலாம். ஆனால் அவளோ தன் தாழ்மையும் எளிமையும் அன்பும் கரிசனையும் நிறைந்த ஜீவியத்தினால் நகோமியின் கடின உள்ளம் இளகக் காரணமானாள்!

ரூத் பிரதிஷ்டையுள்ள ஒரு மெய்யான தேவ ஊழியனுக்கு நிழலாட்டமாயிருக்கிறாள். ஒரு தேவ ஊழியன் பல்வேறு இடங் களுக்கு, பலதரப்பட்ட ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி

தேவனால் அனுப்பப்படக் கூடும். நகோமியைப் போன்றவர்களும், அவளைக் காட்டிலும் மோசமான சுபாவங்களுள்ளவர்களுங்கூட அவனுடைய சபையில் அல்லது அவனோடுகூட இருக்கக் கூடும். தேவ ஊழியர்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தேவனையும் அவருடைய வழிநடத்துதல் களையும் கேள்விகேட்கிறவர்களுமான உள்ளான பின்மாற்ற நிலையிலுள்ள சிலர் அவனோடிருக்கக் கூடும். அப்படிப்பட்ட வர்களின் சுபாவம் மாற்றப்பட வேண்டுமாயின் அவன் அவர் களோடு எவ்விதம் செயல்பட வேண்டும்? ரூத்தைப் போல அவன் அவர்களுக்கு மெய்யான தெய்வீக அன்பை வெளிப் படுத்தி, மனத்தாழ்மையோடு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்; அப்படிச் செய்வானாகில், அது ஏற்ற காலத்தில் நிச்சயமாகவே பலன் கொடுக்கும். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" (கொலோ. 1 : 28) என அப். பவுல் எழுதுகிறார். நம்மோடிருக்கிற வர்களுடன் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் ஜீவிக்கும்படி நமக்கு 'எல்லா ஞானமும்' தேவையாயிருக்கிறது. நம்மோடு வைக்கப்பட்டுள்ளவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருப்பினும், அவர்களும் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக நிறுத்தப்பட முடியும் என்பதை நாம் விசுவாசித்து, விவேகத்துடன் அவர் களோடு செயல்படுவோமாயின், நாளடைவில் அவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ளலாம். ரூத் தன் மாமிக்குப் பிரசங்கம் செய்ய முற்படவில்லை; ஆனால் அவ ளுடைய ஜீவியமே நகோமியோடு பேசிற்று! அவளுடைய ஜீவியத்தில் வெளிப்பட்ட தெய்வீகத் தூதுதான் நகோமியை மாறுதலடையச் செய்தது! அதுமுதல் நகோமி அவளுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவளானாள்! நாமும் எப்படிப்பட்டவர்களையும் ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி, "வசனத்தினாலும் நாவினாலு



மல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கட வோம்" (I யோவான் 3 : 18). முன்மாதிரியுள்ள ஒரு ஜீவியமே ஜனங்களை மாற்றக்கூடிய மிகுந்த வல்லமையுள்ள தூதாகும்.

**உன் இன்றைய சாட்சி:**

நகோமி ரூத்தை நோக்கி, 'இன்று நீ எங்கே கதிர் பொறுக்கினாய்? எவ்விடத்தில் வேலை செய்தாய்?' என்று வினவி னாள். ஒவ்வொரு நாளின் முடிவிலும், கடைசியாக நம் ஜீவி யத்தின் முடிவிலுங்கூட பரிசுத்த ஆவியானவர் இந்த முக்கிய மான கேள்வியை நம் ஒவ்வொருவரிடத்திலும் கேட்கக் கூடும். 'இன்று நீ எங்கே, யாருடைய வயல்நிலத்தில் வேலை செய்தாய்? மாம்சமாகிய வயல்நிலத்திலா? பேர், புகழ், வீண் மகிமை, ஆஸ்தி போன்ற வயல்நிலங்களிலா? அல்லது கிறிஸ்துவின் வயல் நிலத்திலா? நேற்றையத்தினம் நீ ஒருவேளை கிறிஸ்துவின் வயல்நிலத்தில் உழைத்திருக்கக் கூடும். ஆனால் ***இன்று*** நீ கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்தாயா?' என்றே அவர் நம்மைக் கேட்கிறார்.

'இன்று நீ வேதம் வாசித்தாயா? இன்றைய உன் வேத தியானத்திலிருந்து நீ பெற்றுக்கொண்ட வெளிப்படுத்தல்கள் யாவை?' என்று பரிசுத்த ஆவியானவர் நம்மை வினவுகிறார். "நீங்கள் *இப்பொழுது* பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள்" என்று உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களிடம் சொன்னார் (யோவான் 21 : 10). ஆம்! நேற்று பிடித்த மீன்கள் இன்றைய தினத்திற்கு நல்லதல்ல. நேற்று நீ ஒருவேளை நன்றாக ஜெபித்திருக்கக் கூடும். ஆனால் இன்று நீ ஜெபித்தாயா? இன்று நீ தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் போதுமான அளவு நேரம் செலவழித்தாயா? சிலருக்குத் தங்கள் கடந்த கால வாழ்க்கையின் மகிமையைப் பற்றிச் சொல்வதற்குச் சாட்சிகள் ஏராளம் உண்டு; ஆனால் இன்றையத்தினத்தின் தங்கள் ஜீவி யத்தைப் பற்றிச் சொல்வதற்கு அவர்களுக்குச் சாட்சி ஒன்றும்

இல்லை. ரூத் சுமந்துகொண்டு வந்த ஒரு மரக்கால் நிறைய வாற்கோதுமை, அவள் அன்றையத்தினம் எங்கே வேலை செய்தாள் என்பதை வெளிப்படுத்திற்று. ஆம்! மிகுந்த ஆஸ்திக் காரனாயிருந்த போவாசின் வயல்நிலத்தில்தான் அவள் அன்று வேலை செய்தாள். உன் ஜீவியமாகிய பாத்திரம் வெறுமையான நிலையில் உள்ளதா அல்லது ஆசீர்வாதங்களினால் நிறைந்தி ருக்கிறதா என்பதைப் பொறுத்து, நீ அக்குறிப்பிட்ட நாளில் எங்கே வேலை செய்தாய் என்பது விளங்கும்.

***"பின்னும் மோவாபிய ஸ்திரீயான ரூத்: அவர் என்னை நோக்கி, என் அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும், நீ என் வேலைக் காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார் என்றாள். அப்பொழுது நகோமி தன் மருமகளாகிய ரூத்தைப் பார்த்து: என் மகளே, வேறொரு வயலிலே மனுஷர் உன்னை எதிர்க்காதபடிக்கு நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது என்றாள். அப்படியே கோதுமை அறுப்பும் வாற் கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர் பொறுக்கும் படிக்கு, போவாசுடைய வேலைக்காரிகளோடே கூடியிருந்து, தன் மாமியினிடத்தில் தங்கினாள்"*** (ரூத் 2 : 21 – 23).

### தேவனின் சிறப்புத் திட்டம்:

இங்கு நகோமி தன் சுபாவத்தில் மாற்றப்பட்டவளாக, ரூத்தின் பேரில் மிகுந்த கரிசனையுள்ளவளாய், அவளுக்கு நல்ல ஆலோசனை அளிக்கிறாள்; இதுமுதல் ரூத்தின் புத்தகத்தின் முடிவு வரை அவள் தன் மருமகளுக்கு அளித்த ஆலோசனைகள் யாவும் மிகவும் அருமையானவையாகவும் அவளுக்கு மிகுந்த நன்மை பயப்பவையாகவுமே இருந்தன. அவள் ஒரு ஆசீர் வதிக்கப்பட்ட ஸ்திரீயாக மாறினதுடன், தன் மருமகளுக்கும் ஆசீர்வாதமானாள். முதலில் ரூத் நகோமிக்கு ஆசீர்வாதமா யிருந்தாள்; இப்போது நகோமியும் ரூத்துக்கு ஆசீர்வாதமா



யிருக்கும் விதத்தில் தன் ஜீவியத்தில் மாறுதலடைந்திருக்கிறாள். அவளுடைய ஜீவியத்தில் இம்மாறுதல் உண்டாகியிராவிடில், வயதுசென்றவளாயிருந்த அவள் தன் மரணபரியந்தம் தன் மருமகளுக்கு ஒரு பாரமாகவே இருந்திருப்பாள்.

இவ்வேதபகுதியில் போவாசும் நகோமியும் ஒரே ஆலோசனையை ரூத்துக்கு அளிக்கின்றனர். அறுப்பெல்லாம் முடியும் வரை அவள் போவாசின் வயல்நிலத்திலேயே, அவ னுடைய வேலைக்காரிகளோடு கூடவே இருக்க வேண்டும் என்பதே அவ்வாலோசனையாகும். அவளைப் பற்றிய தேவனின் மகத்தான திட்டம் அதாவது அவளுடைய எதிர்காலத்திற்கான தேவனின் சிறப்புத் திட்டம் அவளுடைய வாழ்க்கையில் நிறை வேறுவதற்கு இன்றியமையாத ஓர் ஆலோசனையே அவர்களால் அவளுக்கு நல்கப்பட்டது. அவள் அவ்வாலோசனையை அல்லத்தட்டி வேறெங்கேயாவது சென்றிருந்தால், தேவன் அவ ளுக்காக வகுத்திருந்த அருமையான திட்டம் அவளில் நிறைவேறக் கூடாமற்போயிருந்திருக்கும்.

ரூத்தின் பின்னாட்களை மகிமையானவையாக்கும்படி திட்டம் வகுத்திருந்த தேவன், அவளைப் படிப்படியாக அத்திட் டத்திற்கு நேராக வழிநடத்திக்கொண்டிருந்தார். தனக்கு அளிக்கப் படும் ஆலோசனைகளுக்கும் வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிவதி னால் பிற்காலத்தில் தனக்கு என்ன மேன்மை கிடைக்கப்போகிறது என்பதை அறியாமலே அவள் அவற்றுக்கு மனப்பூர்வமாகத் தன்னை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருந்தாள். தனக்குச் சொல்லப் பட்டிருந்தபடியே அவள் – ஓரிரு நாட்கள் அல்ல – போவாசின் வயல்களின் அறுப்பெல்லாம் தீருமட்டும் கதிர்பொறுக்கும் எளிமையான வேலையைச் சலிப்பின்றி செய்துகொண்டிருந்தாள். அவளுடைய எதிர்காலம் இன்னும் அவளுக்கு ஒரு கேள்விக் குறியாகவே இருந்தது. 'இதற்குப் பின் என்ன?' என்று அறியாத வளாய், தன் பின்னாட்களுக்கென்று சுயமாக யாதொரு திட்டமும்

வகுத்துக்கொள்ளாதவளாய், அவள் கர்த்தரில் விசுவாசம் வைத்து நடந்துகொண்டிருந்தாள். அவளுடைய இந்த நற்குணத்தையே போவாஸ் பிற்பாடு பாராட்டுகிறான் (ரூத் 3 : 10).

அருமையானவர்களே! தேவன் தம்முடையவர்களாகிய நமக்காக வகுத்திருக்கும் திட்டம் மகத்தானது! “பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவு களைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” (ஏசாயா 55 : 9) என்று அவர் உரைத்திருக்கிறார். ஆயினும் அவர் பெரும்பாலும் அதை ஆரம்பத்திலேயே முழுமையாக நமக்குத் தெரிவிக்கிறதில்லை; அவ்வப்போது நாம் எடுத்து வைக்க வேண்டிய அடுத்த அடி மாத்திரமே நமக்குக் காண்பிக்கப்படும். அதில் நாம் உத்தமமாய் அவரைப் பின்பற்றும்போது, அதற்கு அடுத்த அடி நமக்கு வெளிப்படுத்தப்படும். பல சந்தர்ப்பங் களிலும் ஏன், எதற்காக என்ற காரணங்கள் நமக்குத் தெரிவிக்கப் படுகிறதில்லை. ஆயினும் ஒன்று நிச்சயம்! அவர் தாமே தம்முடையவர்களை வழிநடத்திக்கொண்டிருக்கிறார்! அவர் நடத்தும் வழியில் அவரை உத்தமமாய்ப் பின்பற்றுவோரின் எதிர்காலம் வெற்றிகரமானதாயும், முடிவு மகிமையானதாயும் இருக்கும். அவருடைய வழிகள் செம்மையானவைகள் (ஓசியா 14 : 9); அவருடைய வழி உத்தமமானது (சங். 18 : 30). “நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் . . . அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே” (எரே. 29 : 11) என்பது அவருடைய வாக்குத்தத்தம்! இஸ்ரவேல் புத்திரரைக் கானானுக்குக் கொண்டுசெல்லும்படி அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின தேவன் ஆரம்பத்திலேயே அவர்கள் செல்ல வேண்டிய வழியின் முழு வரைபடத்தையும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு நாளும், அந்தந்த நாளில் அவர்கள் செல்ல வேண்டிய வழியை அவர்களுக்குக்



காட்டும்படி கர்த்தரின் மேகஸ்தம்பம் அவர்களுக்கு முன் சென்றது. அவரது அனுதின வழிநடத்துதலை விசுவாசியாமற் போனவர்கள் அந்த நல்ல தேசத்தை அடைந்துகொள்ளவில்லை; அதை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து, அவரை உத்தமமாய்ப் பின்பற்றியவர்களே அதை அடைந்துகொண்டார்கள். அத்துடன், தங்கள் வருங்காலம் குறித்துத் தாங்களாகவே சுயமாகத் திட்டம் வகுக்க அறியாதவர்களும், மனத்தாழ்மையும், களங்கமற்ற உள்ளமும் கொண்டவர்களுமான அவர்களுடைய ‘*குழந்தை களும் பிள்ளைகளும்*’ அதைச் சுதந்தரித்துக்கொண்டனர் (உபா. 1 : 32 – 39).

ரூத் சிறுபிள்ளையைப் போல் தன்னைத் தாழ்த்தி, களங்கமற்ற உள்ளத்துடன், அவ்வப்போது தனக்கு அளிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, கர்த்தர் தன்னை நடத்தும் வழியில் நடந்துகொண்டிருந்தபோது, ஏற்ற வேளையில் போவாசின் மனைவியாக அவரால் உயர்த்தப்பட்டாள்! போவாசும் நகோமியும் முறையே கர்த்தருக்கும், நம் மேல் உத்தரவாத முள்ளவர்களாய் தேவனால் நியமிக்கப்பட்டுள்ள பரிசுத்தவான் களாகிய தேவ ஊழியருக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர். நாம் கர்த்தராலும் அவருடைய பரிசுத்தவான்களாலும் அவ்வப்போது நமக்கு அளிக்கப்படும் ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்திருப் போமாயின், “தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப் போல” நாம் கிறிஸ்துவின் நாளில் அவர் முன் நிறுத்தப்படுவோம் (வெளி. 21 : 2). போவாசும் நகோமியும் ரூத்துக்கு ஒரே ஆலோசனையை அளித்தது, கர்த்தருக்கும், நம்மை நடத்தும்படி அவரால் நியமிக்கப்பட்டுள்ள மெய்யான பரிசுத்தவான்களுக்குமிடையே கருத்து வேறுபாடு இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. சபையைக் கற்புள்ள கன்னிகை யாகக் கிறிஸ்துவுக்கு முன் நிறுத்தும்படி பரிசுத்தவான்கள் தேவ வைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கின்றனர் (II கொரி. 11 : 2). கிறிஸ்துவின் ஒரே வைராக்கிய வாஞ்சையும் அதுவே (எபே. 5 : 27).

“எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது” என அப். பவுல் கூறுகிறார் (I கொரி. 2 : 16). நாமும் கிறிஸ்துவின் சிந்தை உள்ளவர்களாய், நம்மை நடத்தும் பரிசுத்தவான்களுடன் இசைந்து செயல்படுவோமாக.

ரூத் இஸ்ரவேலின் தேவனைத் தன்னுடைய சொந்தத் தேவனாக ஏற்றுக்கொண்டது முதல் அவரிடத்திலிருந்து சிறப்பான நன்மை ஏதும் அவளுக்குக் கிடைக்கவில்லை. தன் வாழ்க்கையில் சம்பவித்தவைகளை அவளால் விளங்கிக்கொள்ள இயலாவிடினும், பின்னாட்களில் மிகப் பெரிய நன்மையை அவளுக்கு அளிக்கும்படியாகவே சர்வவல்லவர் அவளை அப்பாதையினூடே வழிநடத்திக்கொண்டிருந்தார். இருளான அப்பாதையிலும் அவள் விசுவாசத்துடனும் மனத்தாழ்மையுடனும் அவரை உத்தமமாய்ப் பின்பற்றிக்கொண்டிருந்தபோது, அவர் சடுதியாக அவளுடைய இருளை வெளிச்சமாக்கிவிட்டார்! “செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்” என்று கூறப்பட்டுள்ளபடி (சங். 112 : 4), அவளுக்கு இருளிலே வெளிச்சம் உதித்தது! அவள் தன் கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தபோது, அவர் செய்தவை யாவும் நன்மைக்கேதுவாகவே இருந்ததை அவளால் உணர முடிந்தது. அவளுடைய புருஷன் மரித்திராவிடில், நகோமி மோவாப் தேசத்தினின்று புறப்பட்டிருக்க மாட்டாள். அதுவரை ரூத் பிள்ளைப்பேறுமற்று, தனித்து விடப்பட்டிருந்ததும் அவளது வருங்காலம் குறித்த தேவனின் சிறப்புத் திட்டத்திற்குட்பட்டதாயிருந்தது. யூதா தேசத்திற்கு வருதலும், போவாசின் சந்திப்பும், பின்னாட்களில் அவனுக்கு மனைவியாகும் பாக்கியமும், புத்திர பாக்கியமும், தாவீதின் வம்சத்திற்கும் கிறிஸ்து இயேசுவின் ஒரு முற்பிதாவுக்கும் தாயாகும் சிலாக்கியமுமாகிய இவை யாவும், ஆரம்பத்தில் அவளுக்கு நஷ்டம் போல் தோன்றிய பாதைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆம்! விலையேறப்பெற்ற தேவாசீர்வாதங்கள் அவளுக்கு நேரிட்ட இழப்புகளுக்குள்தான் பொதிந்து வைக்கப்பட்டிருந்தன. முடிவாக



அவள் தன் வாழ்க்கையில் ‘அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்’ (மாற்கு 7 : 37) என்றே சாட்சி பகரக்கூடியதாயிருந்தது!

> ***“பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?”*** (ரூத் 3 : 1).

## தெய்வீக அன்பின் வல்லமை:

ரூத்தின் சுகந்த வாசனையுள்ள ஜீவியம் எவ்விதமாக நகோமியின் வாழ்வில் பலன் செய்திருக்கிறது என நாம் இங்கு காண்கிறோம். நாம் தெய்வீக சுபாவங்கள் உள்ளவர்களாயிருந்தால், நம்மோடிருக்கும் யாராகிலும் மிக மோசமான சுபாவம் உள்ளவர்களாயிருப்பினும், அவர்களையும் அது மறுரூபப்படுத்திவிடும்! ஒரு ரோஜா மலர் ஒரு கற்பாறையின் மேல் விழுமாயின், அப்பாறையும் மணம் பெறுமன்றோ! நாம் தெய்வீக அன்பும், கிருபையும், மெய்யான பிரதிஷ்டையும் உள்ளவர்களாயிருந்தால், கல்லைப் போல் கடின உள்ளம் படைத்தவர்களும் மாறுதலடைவர்! அவர்கள் நமக்கு ஆசீர்வாதமாக மாறிவிடுவர்! ரூத் தனக்கு நேரிட்ட எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு, நகோமியை நேசித்துப் பராமரித்துவந்தபோது, நகோமியின் ஜீவியத்தில் மாறுதல் உண்டானது மாத்திரமல்ல, அவள் இப்போது ரூத்தின் மேல் மிகவும் அதிக கரிசனைகொண்டு, அவளுக்காகப் பொறுப்பெடுத்துக் கிரியை செய்யத் துவங்கிவிட்டாள்! ரூத்தின் புஸ்தகத்தின் 2 – ஆம் அதிகாரம் முழுவதிலும் ரூத் நகோமியின் மேல் அன்பு நிறைந்தவளாக, அவளைப் பொறுப்பெடுத்துப் பராமரித்ததாக நாம் கண்டோம். ஆயினும் நகோமியோ அவளுடைய சுகவாழ்வைப் பற்றி யாதொரு அக்கறையும் கொண்டதாகத் தெரியவில்லை. நம்மை விசாரிக்க மனமற்று, நம் பேரில் அன்போ, கரிசனையோ இன்றி, கடின உள்ளத்தோடிருப்பவர்களை நாம் உளமாற நேசித்து, விசாரித்து, பராமரிப்போமாகில், அவர்கள் நம்மை மிகவும் அதிகமாக நேசித்துப் பராமரிக்கத் தக்கதாக

தேவன் அவர்களை மாற்றிவிடுவார்! "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத். 7 : 12) என்ற கர்த்தராகிய இயேசுவின் பொன்னான கட்டளையை ரூத் அந்நாட்களிலேயே பின்பற்றியிருக்கிறாள்!

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக்கும் ஓர் ஊழியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அந்த உள்ளான தரிசனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். சில தேவ ஊழியர்கள் எங்கு அனுப்பப்பட்டாலும், அவர்கள் தங்கியிருக்கிற விசுவாச வீடும், அவர்களுடைய சபையும் பரலோகமாகி விடுகின்றன; அங்குள்ள கடின உள்ளங்கொண்டவர்களும் தங்கள் சுபாவத்தில் மாறுதலடைகிறார்கள். ஒரு முறை ஒரு நபர், தான் மிகவும் கடின குணமுள்ளவராகவும், முரட்டாட்டமும் பெருமையும் நிறைந்தவராகவும் இருந்ததாகவும், ஒரு குறிப்பிட்ட தேவ ஊழியரோடு சேர்ந்து ஊழியம் செய்யும்படி தான் அனுப்பப்பட்ட பின்பு அவரது ஜீவியமும் சுபாவமும் தன்னை மாற்றியமைத்துவிட்டதாகவும் சாட்சி பகர்ந்தார். நம் ஜீவியத்தில் வெளிப்படும் தெய்வீக அன்பு மற்றவர்களுடைய ஜீவியத்தின்மேல் பலன்செய்து, அதை மாற்றிவிடக்கூடிய சக்தி வாய்ந்தது. ஆரம்பத்தில், ரூத் வயல்வெளிக்குச் செல்லப் புறப்பட்டபோது, போவாசின் வயல்நிலத்துக்குப் போகும்படி அவளுக்கு ஒரு நல்ல ஆலோசனை சொல்லவும் அக்கறை கொள்ளாதவளாயிருந்த நகோமி, இப்போதோ அன்றிரவு போவாஸ் என்ன செய்யப் போகிறான் என்றும், அவனுடைய களத்திலே நடக்கப்போகிற வேலை என்ன என்றும் அறிந்துகொள்ளும்படி முயற்சிகள் எடுத்து, அதை ரூத்துக்கு அறிவித்து, அவள் செய்ய வேண்டியவற்றை அவளுக்குக் கற்பிக்கிறாள். அவளில் உண்டான இம்மாறுதல் குறிப்பிடத்தக்கது! 'என்னுடைய இந்த வயோதிப காலத்தில் இப்பெண் என்னைக் கண்காணித்துப் பராமரித்துக் கொண்டே இருக்கட்டும்; அவள் வாழ்க்கைப்பட்டு, தன் புருஷனின் வீட்டுக்குப் போய்விட்டால், அதன் பின் என்னைப் பராமரிப்பது யார்?' என்று எண்ணி அவள் வாளாவிருந்துவிடவில்லை. மாறாக அவள், ரூத் சுகமாய் வாழ்ந்திருக்கும்படி அவளுக்குச் சவுக்கியத்தைத் தேடினாள். ரூத் மெய்யான ஒரு தேவ ஊழியனுக்கு அல்லது மெய்யாகத் தன்னைக் கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கும் ஒரு தேவபிள்ளைக்கு அடையாளமாயிருக்கிறாள். தேவபிள்ளையே, மெய்யான தேவ அன்பு உள்ளவர்களோ, உன்மேல் கரிசனை கொண்டு உன்னைப் பரிவுடன் விசாரிக்கக்கூடியவர்களோ எவரும் இல்லாத ஓரிடத்தில் நீ ஒருவேளை வைக்கப்பட்டிருக்கக் கூடும். ஆயினும் நீ கடின உள்ளங்கொண்டவர்களையும் நேசித்துப் பராமரிக்கும்படி விசேஷமான முயற்சிகள் எடுத்துக்கொள்வாயாகில், தேவன் உன் நிமித்தமாக அவர்களையும் அன்புள்ளவர்களாகவும் கரிசனையுள்ளவர்களாகவும் மாற்றிவிடுவார்! அவர்கள் உனக்கு ஆசீர்வாதமாயிருப்பார்கள்!



## மெய்யான இளைப்பாறுதல்:

ரூத் 3 : 1 – இல் கூறப்பட்டுள்ள "என் மகளே, . . . நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?" என்பது ஆங்கிலத்தில், 'என் மகளே, நான் உனக்கு இளைப்பாறுதலைத் (rest) தேடாதிருப்பேனோ?' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே கண்டபடி, நாம் நமக்கு இளைப்பாறுதலை நாடித் தேடுவோமாயின், ஒருக்காலும் அதைக் கண்டடைய மாட்டோம்; நாம் அமைதியிழந்து (restless), இளைப்பாறுதலற்றவர்களாகவே இருப்போம். மாறாக, பரிசுத்த ஆவியானவர் நமக்கு இளைப்பாறுதலைத் தேடித் தருவாராயின், அது நமக்கு மெய்யான இளைப்பாறுதலாயிருக்கும். இவ்வேதபகுதியில் நகோமி பரிசுத்த ஆவியானவருக்கு நிழலாட்டமாயிருக்கிறாள். (பொதுவாக பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் ஆண்பாலுக்கே ஒப்பிடப்படினும், இச்சந்தர்ப்பம் போன்ற சில குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் பெண்பாலுக்கு ஒப்பிடப்படுகின்றனர்). நாம்

எப்போது நம்முடைய ஆவியில் இளைப்பாறுதலைக் கண்டடையக் கூடும்? யூதாவின் ராஜாவாகிய ஆசா தன் ஜனங்களை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடினோம், தேடினபோது, சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார் என்றான்; அப்படியே (பட்டணங்களைக்) கட்டினார்கள்; அவர்களுக்குக் காரியம் வாய்த்தது (they built and prospered)" (II நாளா. 14 : 7) என நாம் வாசிக்கிறோம். நாம் கர்த்தரைத் தேடும்போது - எப்பக்கத்திலும் இளைப்பாறுதலைக் கண்டடைவோம்; நம் சுபாவம் கட்டியெழுப்பப்படும்; நம் ஊழியமும் விருத்தியடையும். மேலும், "யூதா ஜனங்கள் ... தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு, தங்கள் முழுமனதோடும் அவரைத் தேடினார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத படிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணினார் " (II நாளா. 15 : 15) என்றும் நாம் வாசிக்கிறோம். நாம் *முழுமனதோடும் கர்த்தரைத் தேடுவோமாயின்* அவர் நம்மை இளைப்பாறப்பண்ணுவார்.

ரூத் எங்கே இளைப்பாறுதலைக் கண்டடைந்தாள்? போவாசின் பாதத்தண்டையில்! போவாசினிடத்திற்குப் போய் அவனுடைய பாதத்தண்டையில் படுத்துக்கொள்ளும்படி அவளுக்குச் சொல்லப்பட்டது (ரூத் 3 : 4). நகோமியின் இந்த ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து அவ்வண்ணமே செய்தபோது அவள் இளைப்பாறுதலைக் கண்டடைந்தாள். அவ்வாறே நாம் *கர்த்தராகிய இயேசுவின் பாதத்தண்டை* வரும்போது மெய்யான இளைப்பாறுதலைக் கண்டடைகிறோம். "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11 : 28 , 29) என்று அவர் யாவரையும் அழைக்கிறார். அவருடைய சமுகமே நாம் மெய்யான இளைப்பாறுதலைக் கண்டடையத்தக்க இடமாகும்.



நகோமி, "நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி" என்று ரூத்திடம் கூறுவதில், அவள் வாழ்க்கைப்படுவதையே கருதுகிறாள். ஆங்கிலத்தில் இது, 'நீ இளைப்பாறுதலைக் கண்டடையும்படி' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நகோமியின் முயற்சியினாலும் ரூத்தின் ஒத்துழைப்பினாலும், முடிவாக ரூத் போவாசுக்கு மனைவியானாள். ரூத் கிறிஸ்துவின் மணவாட்டிக்கும், போவாஸ் கிறிஸ்துவுக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர். *கிறிஸ்துவுக்கு விவாகம்பண்ணப்பட்டிருத்தலின்* மூலமாக நாம் நம்முடைய ஆத்துமாவில் இளைப்பாறுதலைக் கண்டடைகிறோம். நம்முடைய பரம மணவாளனாகிய கிறிஸ்துவோடு நாம் ஐக்கியப்பட்டிருப் போமாயின், அந்த நெருங்கிய உறவு நமக்கு இளைப்பாறுதலை யும் சவுக்கியத்தையும் அளிக்கும். 'அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி (என் கர்த்தர்) என்று சொல்லாமல், ஈஷி (என் புருஷன்) என்று சொல்லுவாய்; யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப் படுத்துக்கொண் டிருக்கப்பண்ணுவேன். நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்' என்று கர்த்தர் உரைத்திருக் கிறார் (ஓசியா 2 : 16 , 18 , 19).

ரூத் தனக்கென்று இளைப்பாறுதலைத் தேடாதிருந்தபோது, அவளுக்காகப் பொறுப்பெடுத்துக் கிரியை செய்யும்படி தேவன் நகோமியின் ஆவியை எழுப்பினார். அவ்வாறே, நகோமி தன்னலமற்றவளாய் ரூத்தின் சுகவாழ்வைத் தேடியபோது, முதிர் வயதில் அவளைப் பொறுப்பெடுத்து ஆதரிக்கும்படி ரூத்தையும் அவளுடைய குமாரனையும் தேவன் அவளுக்கு அருள்செய்தார் (ரூத் 4 : 15). ***தேவ ஊழியர்கள் தன்னலமற்றவர்களாயும், தியாக மனப்பான்மையுள்ளவர்களாயும் இருக்கும்போது தேவன் அவர்களை மரணபரியந்தம் மிகச் சிறப்பான விதத்தில் பொறுப்பெடுத்து நடத்துவார்; தேவனுடைய உண்மையை அவர்கள் தங்கள் ஜீவியத்தில் அனுபவிப்பார்கள்.*** ஆம்! "இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங். 48 : 14).

***“ நீ போவாசின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே, அவன் நம்முடைய உறவின்முறையான் அல்லவா? இதோ, அவன் இன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்”*** (ரூத் 3 : 2).

**சுத்திகரிப்பின் களம்:**

“*இதோ, அவன் இன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்*” என்று போவாசைக் குறித்து நகோமி கூறுகிறாள். “தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்” என்று கர்த்தராகிய இயேசுவைக் குறித்து யோவான்ஸ்நானன் கூறுவதை நாம் வாசிக்கிறோம் (மத். 3 : 12). கர்த்தர் தமது ***களத்தை*** (சபையை) நன்றாய் விளக்கி, பதரை அகற்றி, தமது கோதுமையைக் ***களஞ்சியத்தில்*** (நித்திய ராஜ்யத்தில்) சேர்க்கும் நாள் இதோ, வருகிறது! முழு கோதுமைமணிகள் மாத்திரமே அன்று அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படும்; மாய்மாலமான ஜீவியம் செய்பவர்களாகிய பதரைப் போன்றவர்கள், சோதனைகளாகிய காற்றினால் பறக்கடிக்கப்பட்டுப்போவார்கள் (சங். 1 : 4 , 5 ; ஆமோஸ் 9 : 9 , 10). நாமோ அவருடைய நித்திய ராஜ்யத்தில் சேர்க்கப்படும்படி மாயமுள்ள ஜீவியத்தை வெறுத்து, கிறிஸ்துவுக்குள் பூரணமாக்கப்பட்ட ‘முழுமையான கோதுமைமணிகளாய்’ மாறுவோமாக. போவாசின் வயலில் இருந்தவை அனைத்தும் அவனுடைய களஞ்சியத்தில் இடம்பெறுவதில்லை என்பதில் நம்மை நடுங்கச் செய்யும் ஒரு சத்தியம் உள்ளது. ***வயலில்*** களைகளும், பதரும், நிறைமேனியான தானியத்தையுடைய கதிர்களும் ஒன்றாக இருக்கும்; அறுப்பின் போது களைகள் முதலாவதாகப் பிடுங்கப்பட்டு, சுட்டெரிக்கப் படும்படி கட்டுகளாகக் கட்டப்படும்; ***களத்தில்*** தாளடிகள் அல்லது வைக்கோல் அகற்றப்பட்டு, பதர் அனைத்தும் தூற்றி நீக்கப்படும். முடிவாக முழு தானியம் மாத்திரமே ***களஞ்சியத்தில்*** சேரும்.



அவ்வாறே கர்த்தருடைய சபையிலும், அவரது சேவையிலும் இருக்கும் அனைவரும் பிதாவின் ராஜ்யத்தில் (புதிய எருசலேமிலும் சீயோனிலும்), பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்தில் காணப்படாமற்போகக் கூடும்! அவருடைய வயலில் களைகளும் பதருமாயிருந்தவர்கள் எரிநரகத்திலும், பூமியின் நற்பலனாயிருந்தவர்களோ நித்திய மகிமையிலும் பங்கடைவர்! (மத். 13 : 30 ; யாக். 5 : 7). இம்மையில் கர்த்தரின் சபையில் பிறருக்கு இடறல் உண்டாக்குகிறவர்களும் (களைகள்), மாயமுள்ள ஜீவியம் செய்கிறவர்களுமாயிருப்பவர்கள் (பதர்கள்), மறுமையில் பரலோக ராஜ்யத்தில் பங்கடைவதில்லை! தேவ ஊழியரிலும் விசுவாசிகளிலும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைந்தவர்கள் மாத்திரமே கர்த்தருடைய சம்பத்தாக மகிமையில் சேர்க்கப் படுவர். “என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் ... அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்” (மல். 3 : 17 , 18) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

***“ நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, அந்தக் களத்திற்குப் போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு. அவன் படுத்துக்கொண்டபோது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள்; அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான் என்றாள்”*** (ரூத் 3 : 3 , 4).

**கர்த்தரோடு நெருங்கிய உறவுகொள்ள இன்றியமையாதவை:**

நாம் கர்த்தராகிய இயேசுவோடு மிக நெருங்கிய ஐக்கியம் கொள்வதற்கான வழியை இவ்வேதபகுதியில் காண்கிறோம். ரூத்

இதற்கு முன்னதாகப் போவாசை அவனுடைய வாற்கோதுமை வயலில் சந்தித்திருந்தாள். ஆகிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விசேஷமான ஆயத்தங்கள் அப்போது அவளில் காணப்பட வில்லை. அவள் அவனை அங்கு தற்செயலாகச் சந்தித்தாள்; அவனோடு பேசினாள்; அவனிடத்திலிருந்து தயையும் இரக்கமும் கிடைக்கப்பெற்றாள்; அவ்வளவுதான்! ஆனால் இந்த விசையோ அவள் அவனுடன் என்றைக்கும் நிலைத்திருக்கக்கூடிய ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறாள். அதற்காக அவள் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டிய விதங்களை நகோமி அவளுக்குக் கற்பிக்கிறாள். அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களை நாம் கீழே காண்போம்.

(i) ***ஸ்நானம் பண்ணுதல்:***

கர்த்தராகிய இயேசுவுடன் நிலையான ஐக்கியம் உள்ளவர் களாயிருக்கும்படி நாம் அவருடைய பாதத்தண்டை இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவருடைய பாதத்தண்டை இருக்கும்படி முதலாவதாக நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். இங்கு போவாசைத் தனிப்பட்ட விதத்தில் சந்திக்கச் சென்ற ரூத்துக்கு நகோமி கற்பிக்கும் முதல் விஷயம் அவள் 'ஸ்நானம்பண்ண வேண்டும்' என்பதே. தேவன் நம்மைக் கழுவிச் சுத்திகரித்தலும், நாம் நம்மைக் கழுவிச் சுத்திகரித்துக்கொள்ளு தலும் இரு வித்தியாசமான அனுபவங்களாகும். நம்மைக் கழுவிச் சுத்திகரிப்பதில் கர்த்தர் தம்முடைய பகுதியைச் செய்வதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆயினும் நாம் நம்மை எல்லா அசுசிகளினின்றும் சுத்திகரித்துக்கொள்ள வேண்டிய நம்முடைய பகுதி ஒன்றுண்டு. சுத்திகரிக்கப்படுதல் நம் ஜீவியத்தில் தொடர்ச்சி யாக எப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஓர் அனுபவமாகும். "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" என அப். பவுல் எழுதுகிறார் (II கொரி. 7 : 1).



தேவன் நம்மைக் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவு தலில் இரண்டு அம்சங்கள் உள்ளன. 'அவர் ஒளியிலிருக் கிறதுபோல ***நாமும் ஒளியிலே நடந்தால்*** ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவத்தையும் (Eng.) நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்' (I யோவான் 1 : 7) என்றும், "நம்முடைய ***பாவங் களை நாம் அறிக்கையிட்டால்***, பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (வச. 9) என்றும் திருவசனம் கூறுகிறது. 7 – ஆம் வசனத்தில் '***சகல பாவத்தையும்***' என ஒருமையில் குறிப்பிடப்பட்டிருப்பது நம் பாவசுபாவத்தை யும், 9 – ஆம் வசனத்தில் '***பாவங்கள்***' என பன்மையில் குறிப் பிடப்பட்டிருப்பது நம்முடைய பாவக்கிரியைகளையும் குறிக் கின்றன. நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடும்போது பாவக்கிரியைகளிலிருந்தும், 'ஒளியிலே' அதாவது தேவசமுகத் தில் நடந்துகொள்ளும்போது பாவ சுபாவத்தினின்றும் கழுவிச் சுத்திகரிக்கப்படுகிறோம். தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம். ஆயினும் பாவசுபாவம் நம்மை விட்டு அகற்றப்பட்ட நிலையில் நாம் காக்கப்படும்படி, நாம் எப்போதும் தேவசமுகத்தின் வெளிச்சத்தில் நடக்கிறவர் களாயிருக்க வேண்டும். நாம் கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்க வேண்டுமாயின், பாவசுபாவத்தின் ஒரு சுவடும் நம்மில் இருக்க லாகாது. போவாசைச் சந்திக்கும்படி முதலாவதாக ஸ்நானம் பண்ண வேண்டும் என்று நகோமி ரூத்திடம் கூறியது போல, கர்த்தராகிய இயேசுவோடு நெருங்கிய தனிப்பட்ட ஐக்கியங் கொள்ள வேண்டுமாயின், முதலாவதாக நாம் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று ஆவி யானவர் நமக்கு உணர்த்துகிறார்.

(ii) ***எண்ணெய் பூசிக்கொள்ளுதல்:***

'நீ எண்ணெய் பூசிக்கொள்' என்பதே நகோமி ரூத்துக்குக் கற்பித்த அடுத்த காரியமாகும். எண்ணெய் பூசிக்கொள்ளுதல்

என்பது பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்படுதலைக் குறிக்கிறது. நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளுதலும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்படுதலும் ஒருங்கிணைந்தே போகின்றன - நாம் எவ்வளவதிகமாகக் கழுவிச் சுத்திகரிக்கப் படுகிறோமோ, அவ்வளவதிகமாகப் பரிசுத்த ஆவியின் புதிய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வோம்; நாம் எவ்வளவதிகமாகப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படுகிறோமோ, அவ்வள வதிகமாகச் சுத்திகரிக்கப்படுவோம். நாம் நம்முடைய ஆவியில் ஆழமானதொரு பரிசுத்தமாகுதலை மெய்யாகவே வாஞ்சிக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட பரிசுத்த வான்கள் பரிசுத்த ஆவியின் புதிய அபிஷேகத்தை மீண்டும் மீண்டும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக்கூடாரத்திலுங்கூட அதின் பணிமுட்டுகள் யாவற்றின் மேலும் இரத்தம் தெளிக்கப்பட்ட பின்பு, அவை அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணப்பட்டன. உண்மையில், ஒவ்வொரு சுத்திகரிப்பையும் தொடர்ந்து ஒரு புதிய அபிஷேகம் உண்டாகும். .நாம் நம்மைக் கழுவிக்கொள்ளும்போது, மெய்யான அபிஷேகம் நம்முடைய ஆவிக்குள் ஆழமாகப் பாய்ந்துவரும். ஆகவே ஒவ்வொரு நாளும் நாம் புதிதாக நம்மைக் கழுவிச் சுத்தி கரித்துக்கொள்வோமாயின், அந்தந்த நாளுக்குத் தேவையான ஒரு புதிய அபிஷேகம் நம் மேல் இறங்கும். நாம் நம்முடைய சுத்திகரிப்பை அதாவது தூய்மையை இழந்துபோகும்போது, நம்மிலுள்ள அபிஷேகத்தையுங்கூட இழந்துபோவோம். ஆகவே நம் அபிஷேகத்தைப் பாதுகாத்துக்கொள்ளும்படி, நாம் நம் முடைய ஜீவியத்தின் தூய்மையைக் காத்துக்கொள்வோமாக. நாம் மரிக்கும்போது, ஒரு பரிசுத்தமுள்ள ஆவி மாத்திரமே பரிசுத்த தேவனின் கரங்களில் அர்ப்பணிக்கப்பட முடியும். கர்த்தராகிய இயேசு, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி பிதாவின் கரங்களில் தம்முடைய ஆவியை ஒப்புவித்து, ஜீவனை விட்டார் (லூக்கா 23 : 46). நம்முடைய ஆவி பரிசுத்தமுள்ளதாகக் காக்கப்பட்டிராவிடில், நம்



மரணவேளையில் இவ்விதமாக ஜெபிக்க நமக்குத் தைரியம் இராது. மகா பரிசுத்தரான தேவனின் கரங்களில் பரிசுத்தமில்லாத ஒரு ஆவியை நம்மால் ஒப்புவிக்க இயலாதே! ஸ்தேவானுங்கூட தான் மரிக்குமுன்னதாக, தன் சரீரத்தையோ, ஆத்துமாவையோ அல்ல, தன்னுடைய ஆவியையே கர்த்தராகிய இயேசுவின் கரங்களில் ஒப்புவித்தான் (அப். 7 : 59). அவ்விதமாகவே நாமும் நம்முடைய ஜீவியத்தின் முடிவில் செய்யத்தக்கதாக, நம் அனுதின ஜீவியத்தில் தவறான ஆவிகளுக்கு இடமளிக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போமாக.

(iii) ***வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதல்:***

ரூத் தன் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள வேண்டும் என்பதே அவளுக்கு நல்கப்பட்ட மூன்றாவது ஆலோசனை யாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வஸ்திரம் (ரூத் 3 : 3 - Eng.), கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய வஸ்திரத்திற்கு நிழலாட்டமா யிருக்கிறது. அது நமது நீதியின் கிரியைகளை, அதாவது நாம் தேவநீதியைத் தரித்துக்கொள்ளுதலைக் குறிக்கிறது. "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கட வோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவ ருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளி. 19 : 7 , 8) என நாம் வாசிக்கிறோம். இவ்வேதபகுதியிலுள்ள சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் என்பது மண வாட்டிக்குரிய வஸ்திரமாகும். உலகில் சாதாரணமாக ஒரு மணப் பெண் தன் விவாக நாளன்று தன் சரீரம் முழுவதும் வஸ்திரங் களால் மூடப்பட்டு, அலங்கரிக்கப்படுகிறாள். கிறிஸ்துவின் மண வாட்டியைப் பற்றிய விஷயத்திலும் இது முற்றிலும் உண்மையே. அவருடைய மணவாட்டியாக மகிமையில் வெளிப்பட வேண்டிய நாம் இப்பூமியில் ஜீவிக்கும் காலமெல்லாம் முற்றிலுமாக 'மணவாட்டிக்குரிய வஸ்திரத்தால்' மூடப்பட்டிருக்க வேண்டும்.

ஆழ்கடலில் மூழ்குபவர்கள் தண்ணீர் உட்புகாத ஆடையைத் (water proof garment) தரித்துக்கொள்வது வழக்கம். இவ்வாடையைத் தரித்துக்கொண்ட ஒருவன் எவ்வளவு ஆழமாகத் தண்ணீருக்குள் சென்றாலும், வெளியிலுள்ள நீர் உட்புகவோ, அவனிலிருந்து வெளிவரும் வியர்வை போன்றவை புறம்பே வரவோ கூடாதவாறு அது ஒரு தடுப்புச்சுவரைப் போல நிற்கும். அவ்வாறே, நாம் இந்த மணவாட்டியின் வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டிருப்போமாயின், வெளியே நம்மைச் சுற்றிலுமுள்ள அசுசிகள் எதுவும் நம்மைத் தீட்டுப்படுத்த முடியாது; மற்றவர் களைத் தீட்டுப்படுத்தக் கூடிய எதுவும் நம்மிலிருந்து வெளிப் படவும் முடியாது. வேறு வார்த்தைகளில் இதனைத் 'தீட்டுப் படுதலைத் தவிர்க்கும் வஸ்திரம்' (defilement proof garment) என நாம் அழைக்கலாம். பிறருடைய வார்த்தைகளினாலோ, கிரியை களினாலோ நாம் தீட்டுப்படாதிருத்தலும், நம் கிரியை, வார்த்தை, தோற்றம் போன்றவற்றினால் பிறர் தீட்டுப்படுத்தப்படாதிருத் தலுமே மெய்யான பரிசுத்தமாகும். இதுவே ஒரு தேவபிள்ளையில் எதிர்பார்க்கப்படுகிற பரிசுத்தத்தின் மெய்யான அளவுநிலையாகும். சில வேளைகளில் மற்றவர்களுடைய கிரியைகளினாலோ, வார்த்தைகளினாலோ தீட்டுபட்டுவிடாதவாறு நாம் நம்மைக் காத்துக்கொள்ளக் கூடும்; ஆனால் நம்முடைய உரையாடல், செயல், உடை அணியும் விதம் போன்றவற்றால் நாம் மற்றவர் களைத் தீட்டுப்படுத்திவிடக் கூடும்.

ரூத் தனக்கு விருப்பமான எந்த வஸ்திரத்தையாகிலும் அணிந்துகொண்டு அன்று போவாசிடத்தில் சென்றிருந்திருக்க முடியாது. "நீர் எனக்குச் சொன்னபடியெல்லாம் செய்வேன்" என்று கூறி, அவள் தன் மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள் என நாம் வாசிக்கிறோம் (ரூத் 3 : 5 , 6). அவள் சிறிதும் பெரிதுமான சகல காரியங்களிலும் நகோமி தனக்குக் கற்பித்த படியே செய்துவந்தாள். நாமும் பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்பிக்கிறபடியே சகலத்தையும் செய்ய வேண்டும். நாம் தேவ



சமுகத்திற்குச் செல்லும்படி நமக்கு ஓர் ஆயத்தம் தேவையா யிருக்கிறது. சுத்திகரிக்கப்படாத நிலையிலோ, தகுந்த பரிசுத்த வஸ்திரம் இன்றியோ நாம் அவருடைய மிக நெருங்கிய சமுகத்தை அனுபவிக்க இயலாது (எசே. 44 : 16 – 18).

**(iv) *களத்திற்கு இறங்கிப் போகுதல்:***

மேற்கூறப்பட்டுள்ள ஆயத்தங்களுடன் 'களத்திற்கு இறங்கிப் போ (get thee down to the floor)' என்று நகோமி ரூத்துக்குக் கற்பிக்கிறாள் (ரூத் 3 : 3 –Eng.). 'இறங்கிப் போ' என்பது ஆவிக் குரிய பிரகாரமாக, 'உன்னைத் தாழ்த்து' என்று பொருள்படும். ரூத் ஏற்கனவே மனத்தாழ்மையுள்ளவளாயிருந்தாள் என்பதை முந்தின அதிகாரங்களில் நாம் கண்டோம். ஆயினும், மென்மேலும் தன்னைத் தாழ்த்தும்படி அவளுக்குச் சொல்லப்படுகிறது. போவா சின் மணவாட்டியாகும்படி அவள் மிகுந்த மனத்தாழ்மையைத் தரித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஏற்கனவே போவாஸ் அந்தக் களத்திற்கு இறங்கிப்போயிருக்கிறான். அவனைச் சந்திக் கும்படி அவளும் அதே இடத்திற்கு இறங்கிப்போக வேண்டியது அவசியமாயிருந்தது. 'ஆட்டுக்குட்டியானவரின்' மணவாட்டி யாகும்படி நாமும் அவரைப் போலவே தாழ்மையின் ஆழங் களுக்குக் கடந்து செல்ல வேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் நாம் ஆட்டுக்குட்டியானவருடனே எல்லா வானங் களுக்கும் மேலாக உயர்த்தப்படுவோம் (பிலி. 2 : 5 – 9 ; மத். 18 : 4). இப்பூமியில் மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர்களாயிருந்த தேவ ஊழியரே ஆட்டுக்குட்டியானவருடனே பரலோகத்தின் மிக உயர்ந்த வாசஸ்தலமாகிய உன்னத சீயோனில் காணப்படுவார்கள் (வெளி. 14 : 1).

களத்திற்கு இறங்கிப் போகும்படி ரூத் அதற்கு முன்னதாகக் கூறப்பட்டுள்ள மூன்று ஆயத்தங்களையும் செய்ய வேண்டியதா யிருந்தது போல, நாம் ஆழ்ந்த மனத்தாழ்மையை அடைந்து கொள்ளும்படி – சுத்திகரிக்கப்படுதல், மீண்டும் மீண்டும் புதிதாக அபிஷேகம்பண்ணப்படுதல், தீட்டுகளுக்கு நீங்கலாகி நீதியின்

கிரியைகளைச் செய்தல் போன்ற விலையேறப்பெற்ற அனுபவங்களை உடையவர்களாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. எந்த அளவுக்கு நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருப்போம். பரிசுத்தமும் மனத்தாழ்மையும் எப்போதும் ஒருங்கிணைந்தே செல்கின்றன. நம்முடைய ஜீவியம் தூய்மையாயிராவிட்டால், நாம் ஒருவேளை தாழ்மையுள்ளவர்களைப் போல புறம்பே காண்பித்துக்கொள்ளக் கூடும்; ஆனால் மெய்யான மனத்தாழ்மை நம்மில் இராது. நாம் மென்மையாகப் பேசுவதின் மூலமாகவோ, நம் கிரியைகளினாலோ தாழ்மையுள்ளவர்கள் போல புறம்பே தோற்றமளிக்கக் கூடும்; ஆயினும் மேற்கூறப்பட்டுள்ள அனுபவங்கள் நம்மில் இல்லாத பட்சத்தில் நமக்குள் மெய்யான, உள்ளான மனத்தாழ்மை இராது.

(v) ***போவாசின் பாதத்தண்டை படுத்துக்கொள்ளுதல்:***

கடைசியாக, போவாசின் பாதத்தண்டை படுத்துக்கொள்ளும்படி நகோமி ரூத்துக்குக் கற்பிக்கிறாள். ரூத் போவாசின் பாதத்தண்டை படுத்திருத்தல், நாம் கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருப்பதற்கு, அதாவது ஆழமான ஒரு ஜெபஜீவியத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஒரு ஆழமான ஜெபஜீவியம் செய்யும்படி நமக்கு மேற்கூறப்பட்டுள்ள நான்கு அனுபவங்களும் இன்றியமையாதவையாயிருக்கின்றன. நம்மில் ஓர் ஆழ்ந்த ஜெபஜீவியம் இருக்குமாயின், நம் ஆவி எப்போதும் தேவனோடு தொடர்பு கொண்டு, அவரோடு உறவாடிக்கொண்டேயிருக்கும். நீங்கள் ஒருவேளை வேலைசெய்துகொண்டோ, தூங்கிக்கொண்டோ, அல்லது நடந்துகொண்டோ இருக்கக் கூடும். ஆயினும் உங்களில் ஒரு ஆழமான சுத்திகரிப்பு இருக்குமாயின், நீங்கள் உங்கள் ஆவியில் இடைவிடாமல் தேவனோடு உறவாடிக்கொண்டிருக்கும் அனுபவத்தைக் காத்துக்கொள்வீர்கள். தேவசமுகம் குறிப்பாக மூன்று வகைப்படும். அவை, (i) *உணரக் கூடாத தேவசமுகம்,* (ii) *உணரக் கூடிய தேவசமுகம்,* (iii) *மிகவும் நெருங்கியிருக்கும் தேவசமுகம்* என்பவையாகும். இவற்றுள், 'மிக நெருங்கியிருக்கும் தேவசமுகம்' என்பது, தேவன் நம்மைச் சுற்றிலும் எப்பக்கமும் சூழ்ந்திருப்பதாக நாம் உணரும் அனுபவமாகும். இவ்வனுபவத்தில் நம் ஆவியானது விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல், ஸ்தோத்திரம்பண்ணுதல் போன்றவற்றினால் எப்போதும் தேவனோடு தொடர்புகொண்டிருக்கும்; தேவசித்தத்திற்குப் புறம்பாக ஒரு வார்த்தைகூட நம்மால் பேசக் கூடாதிருக்கும். நாம் எப்போதும் நம்மோடு மிக நெருங்கியிருக்கும் இந்தத் தேவசமுகத்திலேயே ஜீவிக்கவேண்டும். இதற்காக ஆழமாகச் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாக. தேவன் நமக்குள் ஓர் ஆழமான பரிசுத்தமாக்குதலின் வேலையைச் செய்துகொண்டிருப்பதற்கான அறிகுறி யாது? அப்போது யாரோ ஒருவர் நம்மைச் சுமந்துகொண்டு போவது போல, நாம் ஆவியில் மிகவும் இலேசாக உணருவோம். ஆனால் நாம் சுத்திகரிப்பை இழந்துபோகும்போதோ, பாரமும் கவலையுமுள்ளவர்களாக, கலக்கமுற்ற நிலையில் இருப்போம். ஆகவே நாம் எப்போதும் நம் ஜீவியத்தில் ஆழமான பரிசுத்தத்தை வாஞ்சித்து நாடவேண்டும். 139 – ஆம் சங்கீதமானது நம்மோடு மிகவும் நெருங்கியிருக்கும் தேவ சமுகத்தில் நாம் ஜீவித்தலைக் குறித்துப் பேசுகிறது (வச . 1 – 5). "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" என்று அதைக் குறித்து தாவீது கூறுகிறான் (வச . 6).



## ஆலோசனை அருளும் கர்த்தர்:

"*அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்*" என நகோமி ரூத்திடம் தொடர்ந்து கூறுகிறாள். ரூத் போவாசின் பாதத்தண்டையில் படுத்திருந்தால், *அப்பொழுது* அவள் செய்ய வேண்டியது இன்னதென்று அவன் அவளுக்குச் சொல்லுவான் என நகோமி கூறுகிறாள். தான் செய்ய வேண்டியது இன்னதென்று ரூத் அறியாதிருந்தாள்; ஆனால் செய்யப்பட வேண்டியது இன்னதென்பதைப் போவாஸ் அறிந்திருந்தான். நாம் எப்படிப்பட்ட ஜீவியம் செய்ய வேண்டும், எந்த

விதமான ஊழியம் செய்ய வேண்டும் என்றெல்லாம் கர்த்தர் நமக்குச் சொல்ல வேண்டுமாயின், இந்த மாதிரியையே நாமும் பின்பற்ற வேண்டும் – அவருடைய பாதத்தண்டை நாம் அமர்ந் திருக்க வேண்டும் (லூக்கா 10 : 39). அநேகருக்கு மெய்யான ஒரு ஜெபஜீவியம் அதாவது கர்த்தரின் பாதத்தருகே அமர்ந்திருக்கிற அனுபவம் இல்லாதபடியினால், கர்த்தரால் அவர்களோடு பேச முடிகிறதில்லை.

கர்த்தரின் பாதத்தருகே அமர்ந்திருக்கும்படி நாம் நேரம் எடுத்துக்கொள்ளாவிடில், நாம் செய்ய வேண்டியது இன்னதென்று அவரால் நமக்குத் தெரிவிக்கக் கூடாமற்போகும். தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் சவுல் கர்த்தராகிய இயேசுவால் சந்திக்கப் பட்டபோது, அவன் தரையிலே விழுந்து, "ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்று வினவினான். அப்போது அவன் செய்ய வேண்டியதை அவர் அவனுக்குத் தெரிவித்தார் (அப். 9 : 6). நாம் மெய்யாகவே கர்த்தரைத் தேடுவோமாகில், நாம் சுகமாய் வாழ்ந்திருக்கும்படியான வழியை அவர் நமக்குத் தெரிவிப்பார். ரூத் போவாசின் பாதத்தண்டை படுத்திருந்தபோது அவன் அவளுக்கு அதையே செய்தான்.

***"இராத்திரிக்குத் தங்கியிரு; ... விடியற்காலமட்டும் படுத் துக்கொண்டிரு என்றான்"*** (ரூத் 3 : 13).

போவாசோடு நெருங்கிய ஐக்கியங்கொள்ளும்படி, நகோமி யினால் தனக்குச் சொல்லப்பட்டபடியே தன்னை ஆயத்தப் படுத்திகொண்டு, களத்திற்கு இறங்கி வந்து, அவனது பாதத் தண்டை படுத்திருந்த ரூத்துக்கு அவன் கற்பித்தது என்ன? அவள் செய்யும்படி அவன் சொன்னதெல்லாம், '*இராத்திரிக்குத் தங்கியிரு; விடியற்காலமட்டும் படுத்துக்கொண்டிரு*' என்பதே! போவாஸ் தனக்குக் கற்பித்தபடியே ரூத் அவனுடைய பாதத்தண்டை இரவு முழுவதும் படுத்திருந்தாள். '***இரவு***' என்பது நம் ஜீவியத்தின் அந்தகாரமான வேளைகளை – சோதனைகளும் பிரச்சினைகளும் சூழ்ந்த காலகட்டத்தைக் குறிக்கிறது. இரவில் போவாசின் பாதத் தண்டை இளைப்பாறுதல், நம் சோதனை வேளைகளில் நாம் கர்த்தராகிய இயேசுவில் நம்பிக்கை வைத்து, அவரைச் சார்ந்து கொள்வதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. வியாதி, சோதனை, பிரச்சினை போன்றவற்றை நாம் சந்திக்கும் சமயங்களில், நாம் நம்முடைய கர்த்தரிலேயே நம்பிக்கை வைத்து, அவரையே சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ரூத் அந்த இரவில் போவாசிடம் போவதற்குப் பதிலாக வேறொரு நபரின் பாதத் தண்டை சென்றிருந்தால் என்ன சம்பவித்திருக்கும்? அவள் நாசமடைந்திருப்பாள்! தேவஜனங்களில் சிலர் தாங்கள் வியாதிப் படும்போது அல்லது அக்கினி சோதனைகளைச் சந்திக்கும்போது வேறு யாரையாகிலும், வேறு எதையாகிலும் சார்ந்துகொள்வது எவ்வளவு துக்ககரமான காரியமாயிருக்கிறது! அருமையான தேவ பிள்ளையே, உன் கஷ்ட நேரங்களில் நீ யாருடைய பாதத்தண்டை செல்லுகிறாய்? இளைப்பாறும்படி நீ கர்த்தரின் பாதத்தைத் தவிர வேறு எங்கு சென்றாலும் அது உன் இளைப்பாறுதலைக் குலைத்து விடும்! "மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" என திருவசனம் கூறுகிறதன்றோ? (சங். 118 : 8).



ரூத் தனக்குக் கற்பிக்கப்பட்டபடியே விடியற்காலமட்டும் போவாசின் பாதத்தண்டையில் படுத்திருந்தாள். '***விடியற்காலம்***' கர்த்தருடைய இரகசிய வருகையைக் குறிக்கிறது. அந்த மகிமை யான 'விடியற்காலம்' வரை நாம் வேறெங்கும் செல்லாமல், கர்த்தரின் பாதத்தண்டையிலேயே அமர்ந்திருக்க வேண்டும் – ஒரு இனிமையான ஜெபஜீவியத்தின் மூலமாக அவரோடு நாம் ஆழ்ந்த பரிசுத்த உறவுகொள்ள வேண்டும். மெய்யான பரிசுத்த வான்கள் ஜெபத்தைத் தங்கள் உயிர்நாடியாகக் கருதுகிறார்கள். நாம் இடைவிடாமல் சுவாசிப்பது போல, இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டுமென்று திருவசனம் கூறுகிறது (I தெச. 5 : 17). சரீரப்பிரகாரமாக நாம் சுவாசியாவிட்டால் மரணமடைய நேரிடும்;

அது போலவே, ஆவிக்குரிய பிரகாரமாக நாம் சுவாசியா திருந்தால் (ஜெபம் பண்ணாவிட்டால்) ஆவிக்குரிய பிரகாரமாக மரணமடைவோம். ஆகவே நாம் எப்பொழுதும் ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருப்போமாக.

களத்திற்கு இறங்கிப்போய்ப் போவாசின் பாதத்தண்டை படுத்திருத்தல் என்பது, ஒரு சாதாரணமான ஜெபஜீவியத்தைக் காட்டிலும் ஆழ்ந்த அனுபவத்தைக் குறிக்கிறது. அது, நாம் ஆழ்ந்த மனத்தாழ்மையுடன், உலகில் கடைசியானவர்களாக இருப்பதைத் தெரிந்துகொண்டு ஜெபம்பண்ணுதலாகும். சபை யானது ஒரு இராக்காலத்திற்குள் கடந்துபோய்க்கொண்டிருக்கும் இந்நாட்களில் நாம் மனத்தாழ்மையுடன் கர்த்தரின் பாதத்தண்டை விழுந்துகிடப்போமாக. தேவனுடைய வசனத்திலிருந்து வெளிப் படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும்படி நமக்கு ‘மனத்தாழ்மை’ மிகவும் இன்றியமையாததாயிருக்கிறது. தேவபிள்ளையே, உலகில் பெரியவனாகும்படி நீ ஒருபோதும் விரும்பாதே. பெருமை உன்னில் பிரவேசிக்குமாயின், அத்துடன் தேவ நோக்கம் உன்னில் நிறைவேறுவது நின்றுபோகும். பெருமையானது மிகவும் வஞ்சனை யுள்ளது. அது மிகத் தந்திரமான விதத்தில் உன்னில் பிரவேசிக்க வகை தேடும். அது உனக்குள் பிரவேசித்திருப்பதை நீ கண்டு கொள்ளக் கூடாதிருப்பாய்; ஆனால் மற்றவர்கள் அதனைக் கண்டுகொள்வார்கள். நீ மெய்யாகவே உன்னைத் தாழ்த்து வாயானால், கர்த்தரின் பாதத்தில் மெய்யான இளைப்பாறுதலைக் கண்டடைவாய்; நீ செய்ய வேண்டியவை அங்கே உனக்குச் சொல்லப்படும்! ரூத் போவாசினாலும் நகோமியினாலும் அவ்வப் போது தனக்குச் சொல்லப்பட்டவைகளை அப்படியே செய்து வந்தபோது, அவளுடைய சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்தது. அப்படியே நாமும் கர்த்தராலும் பரிசுத்தவான்களாலும் நமக்குக் கற்பிக்கப்படுகிறவைகளுக்கு மனத்தாழ்மையுடன் கேள்வியின்றி உடனுக்குடன் கீழ்ப்படிந்துகொண்டிருப்போமாயின், கர்த்தர் நம் எதிர்காலத்தை ஒளிமயமாக்கி, முடிவை மகிமையுள்ளதாக்குவார்!

## அதிகாரம் 6

# மெய்யான தூய்மை

***"போவாஸ் புசித்துக் குடித்து, மகிழ்ச்சியாயிருந்து, ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது அவள்: மெள்ளப்போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக்கொண்டாள். பாதிராத்திரியிலே, அந்த மனுஷன் அருண்டு, திரும்பி, ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு, நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள். அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; ...இப்போதும் மகளே, நீ பயப்படாதே"*** (ரூத் 3 : 7 - 11).

### எழுச்சிகளின் தூய்மை:

ரூத்தின் சரித்திரத்தின் வேறெந்தப் பகுதியிலும் காண முடியாத மிக முக்கியமானதொரு சத்தியத்தை நாம் இவ் வேதபகுதியில் காண்கிறோம். இங்கு போவாஸ், கிறிஸ்துவின் மிக அருமையானதொரு சுபாவத்தைப் பிரதிபலிக்கிறான். அது அவனிலிருந்த மிக மேன்மையான 'எழுச்சிகளின் தூய்மையே' ஆகும்.



போவாசையும் ரூத்தையும் முறையே கர்த்தராகிய இயேசுவுக்கும், அவருடைய மணவாட்டி சபைக்கும் ஒப்பிட்டுப் படிப்பதை நாம் ஒரு கணம் நிறுத்திவிட்டு, எழுத்தின்படியே ஒரு வாலிபப் பெண் ஒரு வாலிபனைச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பமாக நாம் இதனைச் சற்று தியானிப்போமாகில், போவாசில் வெளிப்பட்ட கிறிஸ்துவைப் போன்றதொரு 'எழுச்சிகளின் தூய்மையை' அதாவது 'உள்ளுணர்வுகளின் தூய்மையை' நாம் கண்டு கொள்ளலாம். ரூத் அவனிடத்தில் வந்து, அவனுடைய பாதத் தண்டை படுத்துக்கொண்டு, நள்ளிரவில் அவனை நோக்கி, 'நீர் உம்முடைய வஸ்திரத்தை உமது அடியாளின்மேல் விரியும்; நீர் நெருங்கிய சுதந்தரவாளி' (ரூத் 3 : 9 - Eng.) என்கிறாள். அருமையான நண்பனே! போவாஸ் அன்று சந்தித்ததைப் போன்றதொரு சூழ்நிலையை நீ சந்திப்பாயாகில், அவ்வேளையில் உன் மனநிலை எவ்வாறிருக்கும்? அன்றிரவு போவாஸ் சந்தித்ததைப் போன்ற சோதனை மிக்க ஒரு சூழ்நிலையை வேறு யாரும் சந்தித்ததாகவோ, அவ்வேளையில் அந்நபர் அவனைப் போல அருமையான ஒரு தகப்பனின் ஆவியுடன் செயல்பட்டதாகவோ வேதாகமத்தில் நாம் காண்பதில்லை. ஜீவியத்தின் தூய்மைக்குப் போவாஸ் நமக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான்.

சற்றேறக்குறைய போவாஸ் சந்தித்ததற்கு ஒப்பானதொரு சோதனையை யோசேப்பு என்னும் வாலிபனும் ஒரு முறை தன் ஜீவியத்தில் சந்தித்திருக்கிறான். போவாஸ், யோசேப்பு ஆகிய இவ்விருவரும் தங்கள் வாழ்க்கையில் சந்தித்த சோதனையான சூழ்நிலைகளைச் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள்! யோசேப்புக்கு அச்சோதனை ஒருசில நிமிடங்கள் மாத்திரமே நீடித்தது; அவன் அச்சூழ்நிலையினின்று தப்பி ஓடிவிட்டான் (ஆதி. 39 : 12). ஆனால் போவாசோ ஓர் இரவு முழுவதும் அல்லது பல மணி நேரம் இச்சோதனையைச் சந்தித்துக்கொண்டிருந்தான். அவன் சற்றும் எதிர்பார்த்திராத வேளையில்தான் இச்சோதனை அவனைச் சந்தித்தது. அவன் பாதுகாப்பற்றிருந்த வேளையில், முன்னேற்

பாடான யாதொரு ஆயத்தமும் அற்றவனாயிருந்த வேளை யில்தான் இச்சோதனையைச் சடுதியாய்ச் சந்திக்க நேரிட்டது. அவன் நல்லதொரு விருந்து அருந்திவிட்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்த வேளை அது! பரிசுத்தத்திற்கான ஒரு சோத னையை எதிர்கொள்வதற்கான மிக மோசமான வேளையே அது. அவன் அன்றிரவு தனக்கு ஒரு சோதனை வரப்போகிறது என்பதை அறிந்திருந்து, அதில் ஜெயங்கொள்ளும்படி உபவாசத் துடன் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்திருந்தாலாவது அவன் தேவனிடத்தில் மன்றாடி, கிருபை பெற்று, அந்நேரத்தில் ஜெயம் பெற்றான் என்று கூறுவதற்கு ஏதுவாகும். ஆனால் அவனோ தன் களத்தில் தானியத்தைத் தூற்றுகிற மற்ற நாட்களில் செய்வது போலவே அன்றையத்தினமும் புசித்துக் குடித்து, மகிழ்ச்சியா யிருந்து, படுத்துக்கொண்டான் (ரூத் 3:7). களத்தில் வாற் கோதுமை தூற்றுதல் என்பது, ஆடுகளை மயிர்கத்தரித்தல் போல, விசேஷமானதும், யூதர்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப் படுகிறதுமான ஒரு சம்பவமாகும். பொதுவாக அந்நாட்கள் விசேஷமான விருந்து நாட்களாயிருக்கும். அறுவடைக்குப் பின்னர் தானியமெல்லாம் ஒன்றுசேர்க்கப்படும் அந்நாட்களில் அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் பெரிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். பல வயல்நிலங்களின் சொந்தக் காரனாகிய போவாஸ் அன்றிரவு இப்படிப்பட்ட ஒரு விருந்தில் பங்குபெற்ற பின் படுக்கைக்குச் சென்றான். அது, அவன் பரிசுத்தத்திற்கான ஒரு சோதனையைச் சந்திப்பதற்கு மிக மோசமானதும் பாதுகாப்பற்றதுமான ஒரு சந்தர்ப்பமாயிருந்தது. அவ்வேளையில் அவ்வாலிபப் பெண்ணோ அவனோடு சகல விதமான உறவுகளையும் வைத்துக்கொள்ளும்படி தானாக மன முவந்து முன்வந்து, அவனது பாதத்தண்டை படுத்துக்கொண்டு, அவனுடைய சம்மதத்திற்காக எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருக்கிறாள். 'உம்முடைய வஸ்திரத்தை என்மேல் விரியும்' என அவள் அவனிடத்தில் கேட்டபோது, யூதருடைய வழக்கத்



தின்படி உண்மையில் அவள், அவன் தன்னை விவாகம்பண்ண வேண்டுமென்றே உரிமை கோரினாள். ஆயினும் அச்சூழ் நிலையில் அவன் எவ்வளவு நேர்த்தியாக, நிதானமாக, செம்மை யான விதத்தில் செயல்பட்டிருக்கிறான் பாருங்கள்! யாரும் அறியாத நிலையில், களத்தின் உரிமையாளனாக, முழு சுயா தீனமும் உள்ளவனாக, தான் தனிமையாகப் படுத்திருக்கும் வேளையில், அச்சோதனையைச் சரியான விதத்தில் எதிர் கொள்ளத் தன்னை ஆயத்தமாக்கிக்கொள்வதற்கும் தருணமின்றி, சடுதியாய் அதனைச் சந்திக்க வேண்டியதாயிருந்த அவ்வேளை யில், அச்சோதனையின் முன்னிலையில் அவனால் அவளை 'என் மகளே' என இருமுறை அழைக்க முடிந்திருக்குமாயின் (வச. 10, 11 - Eng.), அது அவனிலிருந்த மெய்யான 'எழுச்சிகளின் தூய்மையையே' காண்பிக்கிறது. அவனுடைய உள்ளுணர்வுகள், நினைவுகள், சரீர உணர்ச்சிகள் யாவும் கறைப்படாதவையாய் இருந்தன!

தன்னைச் சோதனைக்குள்ளாக்கும்படி வந்த மிக மோச மானதொரு சூழ்நிலையில் போவாஸ் அதற்கு இணங்கவில்லை. மாறாக, அவ்வேளையில் அவன் தனக்குள் இருந்த மெய்யான தூய்மையை வெளிப்படுத்தினான். அவன் அச்சோதனையில் தோல்வியுற்று, அதற்கு இணங்கியிருந்தாலும், அது தன் பகுதியி லுள்ள தவறல்ல என்று அவன் சாதிப்பதற்கான பல சாக்குப் போக்குகள் அவனுக்கு இருந்தன. 'நான் அவளைத் தேடிச் செல்லவில்லை; அவள்தான் என்னைத் தேடி வந்தாள்'; 'நான் அவளை அழைக்கவில்லை, அவள் தானாகவே என்னிடத்தில் வந்தாள்' ; 'நான் அவளைப் பலவந்தம்பண்ணவில்லை ; அவள் எனக்கு மிக அண்மையில் வந்து படுத்துக்கொண்டாள்; நான் என்ன செய்ய முடியும்?' என்றெல்லாம் அவன் சொல்லக் கூடியதாயிருந்தது. தேவபிள்ளையே, இப்படிப்பட்டதொரு சூழ் நிலையைச் சந்திக்க நேரிடும்போது ஒருவேளை எழுத்தின்படி சரீரத்தில் நீ பாவம் செய்யாதிருக்கக் கூடும்; ஆனால் உன்னுடைய

எழுச்சிகளும் உணர்ச்சிகளும் தீட்டுப்படாமல் காக்கப்பட்டி ருக்குமோ? உன் ‘எழுச்சிகளின் தூய்மை’ எந்நிலையிலுள்ளது? மிக மோசமான சோதனைக் கட்டத்தில் போவாசின் ஆவியும் (சிந்தைகள்), ஆத்துமாவும் (எழுச்சிகள்), சரீரமும் (உணர்ச்சிகள்) தூய்மையாயிருந்தன! ஆழமான சத்தியங்களோ, வெளிப்படுத் தல்களோ, பரிசுத்த ஆவி தனக்குள் வாசம்பண்ணும் அனு பவமோ, முழுமையான வேதாகமமோ, சபையோ இல்லாத பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த போவாஸ் இப்படிப்பட்ட ஒரு தூய ஜீவியம் செய்திருக்கக் கூடுமென்றால், இவையெல்லா வற்றையும் பெற்றிருக்கிற நாம் இக்கிருபையின் காலத்தில் அதினும் மேன்மையானதொரு தூய ஜீவியம் செய்ய வேண்டியது எவ்வளவு அதிக அவசியம்! இத்தகைய உன்னதமான பரிசுத்த ஜீவியம் செய்யும்படி நாம் நம்மை அர்ப்பணிப்போமாக. ***எல்லாச் சூழ்நிலைகளிலும் பரிசுத்தத்தைப் பாதுகாத்துக்கொள்ளுதல்,*** நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் அடைய வேண்டிய மிகப் பெரிய ஜெயங்களுள் ஒன்றாகும்.

நம்மைச் சுற்றிலும் உள்ள யாவரும் பரிசுத்தவான்களாயும், சுற்றுச் சூழல்கள் அனைத்தும் பரிசுத்தமாயும் இருக்கும்போது நாம் பரிசுத்தமாய் இருப்பது பெரிய காரியமல்ல. ஆனால் பரிசுத்தத்திற்கு அந்நியமான சூழ்நிலைகளில் – ஆபாசமான விதத்தில் உடை அணிந்திருக்கும் ஒரு நபரையோ, அல்லது அருவருப்பானதும், ஆசை இச்சைகளைத் தூண்டிவிடக்கூடியது மான படங்களையோ நாம் தற்செயலாகக் காண நேரிடும்போது – நம்முடைய எழுச்சிகள் அல்லது உள்ளுணர்வுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதைத் தேவன் கவனிக்கிறார். எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்முடைய விருப்பங்கள், உள்ளுணர்வுகள், கற்பனைகள் போன்ற யாவும் தூய்மையாய் இருக்க வேண்டு மென்று அவர் விரும்புகிறார். “ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத் திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்



கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரி லொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்” என திருவசனம் கூறு கிறது (I பேதுரு 1 : 22). நாம் சுத்த இருதயமுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே பிறரில் ஊக்கமாய் அன்புகூர முடியும். இல்லையேல், பிறர் மேலுள்ள நம்முடைய அன்பு மாயமுள்ளதாயிருக்கும். நம்முடைய உள்ளுணர்வுகள் தவறானவையாய் இருக்குமாயின், நம்மில் மெய்யான பரிசுத்தம் இராது. நம் உணர்ச்சிகள் தீட்டுப் படுத்தப்படுமாயின், அத்துடன் நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சி நின்றுபோகும்.

தாவீதையும் போவாசையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன் என்று தேவனிடத்தி லிருந்து சாட்சி பெற்றவன்; அவன் தேவனை மெய்யாகவே நேசித்தான்; அவன் பல சங்கீதங்களையும் இயற்றியிருக்கிறான். ஆயினும் அவனைச் சோதனைக்குள்ளாக்கக் கூடிய ஒரு சூழ் நிலை அவனுக்கு உண்டானபோது, அவன் எவ்வளவு எளிதாக அதற்கு இரையாகிவிட்டான்! போவாஸ் சந்தித்த சோதனையைப் போலன்றி, பத்சேபாள் சற்று தொலைவான இடத்தில் இருந்த போதிலும் அவன் அச்சோதனைக்கு இணங்கிவிட்டான். அவன் ஒரு பெரிய தேவமனிதனும், இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாகப் பாடுகிறவனுமாயிருந்தபோதிலும் மாம்ச இச்சையின் சோதனையில் படுதோல்வியடைந்தான்! ஆனால் இங்கேயோ அச்சோதனையில் வெற்றிசிறந்த ஒரு மனிதனை நாம் காண் கிறோம்! சோதனையின் முன்னிலையில் அவனுடைய உடனடி யான பிரதிக்கிரியை யாது? அவன் அவ்வேளையில் அப் பெண்ணிடம் பேசிய விதமே அவனுடைய உள்ளத்திற்குள் இருந்தது என்ன என்பதை மிகத் தெளிவாகக் காண்பிக் கிறது: அவன் அவளை நோக்கி, ‘என் மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக’ (Eng.) என்று கூறினான். இது அவனி லிருந்த மனத்தூய்மையைத் துல்லியமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறது!

ரூத் அன்றிரவு முழுவதும் பிறருக்குத் தெரியாமல் போவாசின் பாதத்தண்டை படுத்திருந்தாள். ஆயினும் இத்தகைய சோதனை மிகுந்த வேளையில் அவன் தனக்குச் சோதனையாக வந்த பெண்ணை 'என் மகளே' என்று அழைக்கக்கூடியவனாகவும், அவ்வேளையில் கர்த்தரைக் குறித்தும் அவரால் ஆசீர்வதிக்கப்படுதலைக் குறித்தும் பேசக்கூடியவனாகவும் இருந்தது, அவனிலிருந்த இணையற்ற தூய்மையைச் சித்திரிக்கிறது! இந்த ஆவியே பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர்களிலும் இருக்க வேண்டும். போவாசில் இந்த ஆவி இருந்திருக்குமாயின், சீயோனுக்கென்று அழைக்கப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் இந்த ஆவி இருக்க வேண்டியது எவ்வளவு அதிக அவசியம்! இதுவே அவர்களில் எதிர்பார்க்கப்படுகிற பரிசுத்தத்தின் தரமாகும். ஆட்டுக்குட்டியானவருடனே சீயோன் மலையின்மேல் நிற்கும் தேவ ஊழியர்களான பரிசுத்தவான்கள் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டவர்கள் ஆவர் (வெளி. 14 : 1). 'நெற்றி' என்பது சிந்தையைக் குறிக்கிறது. அவர்கள் யாவரும் தங்கள் சிந்தையில் பிதாக்களே! இவ்வுலகிலுள்ள பெண்கள் யாவருக்கும் ஒருவன் தகப்பனாயிருப்பானென்றால் அவர்களைப் பற்றிய அவனது மனப்பான்மை எவ்வாறிருக்கும்? அவனால் அவர்கள் யாவரையும் தன் குமாரத்திகளாகத் தானே காண இயலும்! மற்றவர்களைப் பற்றிய ஒரு தேவ ஊழியனின் சிந்தைகள், தன் பிள்ளையைக் குறித்த ஒரு தகப்பனின் சிந்தையைப் போலிருக்க வேண்டும். தேவ ஊழியர்கள் - வாலிபராயினும் முதியோராயினும், ஊழியத்தில் அனுபவம் குறைந்தவர்களாயினும் அனுபவம் மிகுந்தவர்களாயினும் - தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டவர்களாயிருக்க வேண்டும். அப்படியானால் மாத்திரமே சடுதியாகச் சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தாலும் அவர்களால் தங்கள் உள்ளுணர்வுகளிலும், சிந்தைகளிலும், உணர்ச்சிகளிலும் தூய்மையாயிருக்க இயலும்.

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் ஜீவித்த நாட்களில் ஒரு சந்தர்ப்பத்தில் பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஒரு ஸ்திரீ அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். அப்போது, அவர் தம்மிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதை உணர்ந்து, திரும்பி அவளைப் பார்த்து, "***மகளே,*** திடன்கொள்" என்றார் (லூக்கா 8 : 48). ஒருவேளை அவள் அவரைப் பார்க்கிலும் வயதில் பெரியவளாயிருந்திருக்கக் கூடும். ஆகிலும் வாலிபராயிருந்த அவர் அந்த ஸ்திரீயைத் தன் மகளாகவே கண்டார். தங்கள் ஜீவியத்தைத் தீட்டுப்படாததாகப் பாதுகாப்பதே தேவ ஊழியர்கள் தங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியமாகும். நம் ஜீவியத்தில் தூய்மையாகக் காக்கப்பட வேண்டிய மூன்று பகுதிகள் உள்ளன. அவை நம் ஆவி, ஆத்துமா, சரீரம் என்பவையாகும் (I தெச. 5 : 23). (i) *ஆவியின் தூய்மை* - நம் நினைவுகள், சிந்தைகள், எண்ணங்கள், கற்பனைகள், ஞாபகம், மனப்பான்மை, நோக்கங்கள் போன்ற யாவும் தூய்மையாயிருக்க வேண்டும்; (ii) *ஆத்துமாவின் தூய்மை* - நமது உள்ளுணர்வுகள் அல்லது எழுச்சிகள், விருப்பங்கள் போன்ற யாவும் தூய்மையாகக் காக்கப்பட்டிருக்க வேண்டும்; (iii) *சரீரத்தின் தூய்மை* - நம் கிரியைகள், சரீர உணர்ச்சிகள் யாவும் தூய்மையாயிருக்க வேண்டும். இம்மூன்று பகுதிகளிலும் போவாஸ் தன் தூய்மையைக் காத்துக்கொண்டான். இவ்வுலகில் பெரும்பான்மையினரும் இப்படிப்பட்ட ஒரு சோதனையைச் சந்திக்க நேர்ந்தால் சோதனைக்கு இணங்கிவிடுகின்றனர்; அல்லது தங்கள் மனதிலும் உள்ளுணர்வுகளிலும் உணர்ச்சிகளிலும் கறைப்பட்டுவிடுகின்றனர். ஆனால் இங்கேயோ தான் சந்தித்த மிக மோசமான ஒரு சோதனையின் உச்சகட்டத்தில் எப்பக்கமும் தன் தூய்மையைக் காத்துக்கொண்ட ஒருவனை நாம் காண்கிறோம்! இப்பரிசோதனையில், அவனுடைய ஆவி எவ்வளவு தூய்மையானதாயிருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது. அவன் தன் சோதனையின் உச்சகட்டத்திலும் தன் ஜீவியத்தின் தூய்மையில் எவ்வளவும் பாதிக்கப்படாதவனாய், சிறப்பான வெற்றிபெற்று வெளிவந்தான். அவ்வாறே நாமும் எக்காரணத்தைக் கொண்டும் நம்முடைய சிந்தைகள், உணர்ச்சிகள், நோக்கங்கள் போன்றவற்றில் தீட்டுப்பட மறுத்துவிடுவோமாக!

## எதிரிக்கு எதிரான அறைகூவல்!

கடைசி நாட்களில் பரிசுத்த ஜீவியம் செய்கிறவர்களுக்கு விரோதமான பிசாசானவனின் பலத்த தாக்குதல் ஒன்றுண்டு. பிசாசின் கூட்டமெல்லாம் சீயோனுக்கு அழைக்கப்பட்டுள்ள தேவ ஊழியருக்கு விரோதமாக ஒரே குறிக்கோளுடன் ஒன்றுதிரண்டு எழும்பும். 'சீயோன் தீட்டுப்படுவாளாக; எங்கள் கண் அதைக் காண்பதாக' (மீகா 4 : 11) என்பதே அவை ஒன்றுகூடி எழுப்பும் கோஷமாகும். ஒரு தேவ ஊழியன் எழுத்தின்படி தனக்குள்ள யாவற்றையும் பிரதிஷ்டை செய்வதைப் பிசாசானவன் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. எப்படியாயினும் அவனுடைய மனதைத் தீட்டுப்படுத்திவிட வேண்டும் என்பதே சாத்தானின் ஒரே ஆவலும் குறிக்கோளுமாகும். அவ்வூழியனின் மனது தீட்டுப்படுமாகில், அதற்குப் பின் அவனுடைய பிரதிஷ்டை, ஜெபம் போன்ற யாவுமே பயனற்றவையாகிவிடும் என்பதை அவன் நன்கறிவான். ஆகவேதான் தேவ ஊழியரின் மனதைக் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பாதாளத்திலுள்ள பிசாசின் கூட்டமெல்லாம் ஒன்றுகூடி அவர்களுக்கு விரோதமாகக் கலந்தாலோசித்து, சதித்திட்டமிடுகின்றன. 'எப்படியாகிலும் நாங்கள் சீயோனைத் தீட்டுப்படுத்தியே தீருவோம்!' என அவை ஒருமிக்க கோஷமிடுகின்றன. தேவ ஊழியனே, '*என்னதான் நேரிடினும் நான் என் நினைவுகள், உள்ளுணர்வுகள், விருப்பங்கள், உணர்ச்சிகள் - இவை ஒன்றிலும் தீட்டுப்படுவதில்லை; நான் என் ஜீவனையே இழக்க நேர்ந்தாலும் என் ஜீவியத்தின் தூய்மையைக் காத்துக் கொள்வதே என் இலட்சியம்!*' என்று நீ சாத்தானின் கூட்டத்திற்கு விரோதமாக எதிர்க்கோஷமிடுவாயாக. உன் முன் போவாஸ் காண்பித்திருக்கும் சிறந்த மாதிரியைப் பார்! 'இது முதல் என் நினைவுகளும், உள்ளுணர்வுகளும், கற்பனைகளும், குறிக்கோள்களும், வார்த்தைகளும், உணர்ச்சிகளும், என் ஒவ்வொரு அணுவும் பரிசுத்தமாகவே இருக்கும்' என்று நீ ஓர் ஆழமான,



உறுதியான தீர்மானம் செய்வாயாக. நம்முடைய தேவன் பரிசுத்தர்! அவருடைய நாமம் பரிசுத்தமானது! அவருடைய கிரீடம் பரிசுத்தமானது! அவருடைய சிங்காசனம் பரிசுத்தமானது! அவருடைய வஸ்திரம் பரிசுத்தமானது! அவருடைய பரலோகம் பரிசுத்தமானது! அவருடைய தூதர்கள் பரிசுத்தமானவர்கள்! அவருடைய வாக்குத்தத்தங்கள் பரிசுத்தமானவை! அவருடைய சமுகம் பரிசுத்தமானது! அவருடைய ஊழியர்கள் பரிசுத்தமானவர்கள்! அவரது வார்த்தைகள் பரிசுத்தமானவை! அவரது நடை பரிசுத்தமானது! அவருக்குச் செய்யப்படும் ஆராதனை பரிசுத்தமானது! அவருடைய ஆவி பரிசுத்தமானது! அவர் விடுக்கும் அழைப்பு பரிசுத்தமானது! அவரது அன்பு பரிசுத்தமானது! அவருடைய சபை பரிசுத்தமானது! அவருடைய விசுவாசம் மகா பரிசுத்தமானது! அவருடைய ஆலயம் பரிசுத்தமானது! அவருடைய பாத்திரங்கள் பரிசுத்தமானவை! அவருடைய நகரம் பரிசுத்தமானது! அவருடைய பர்வதம் பரிசுத்தமானது! அவருடைய மலை பரிசுத்தமானது! அவரோடு சம்பந்தப்பட்ட அனைத்துமே பரிசுத்தமானவை! அவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! அவர் மகா பரிசுத்தர்! இந்த மகா பரிசுத்த தேவனை நாம் பரிசுத்த அலங்காரத்துடனே சேவிப்போமாக!

## கிருபையினால் வரும் அமோக வெற்றி!

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோமர் 8 : 2) என்று அப். பவுல் எழுதுகிறார். நியாயப்பிரமாண காலத்தில் தேவஜனங்களால் முற்றிலும் பூரணமான பரிசுத்த ஜீவியம் செய்யக் கூடாதிருந்தது. போவாஸ், யோசேப்பு, தானியேல் போன்றோர் கிறிஸ்துவைப் போன்ற தூய்மைக்கு நிழலாட்டமாயிருக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவிக்கிற நாம் கிறிஸ்துவைப் போன்ற தூய்மையை நம் ஜீவியத்தில் உண்மைப்பொருளாக அல்லது

முழுமையாக அனுபவமாக்கும்படியாகவே கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தார். நாம் நம்முடைய சிந்தனைகள், சொப்ப னங்கள், கற்பனைகள் போன்ற யாவற்றிலும் தூய்மையாயிருப்ப தற்கென்றே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த போவாசின் வாழ்க்கை நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது! மலைகளுக்கும் குகைகளுக்கும் சென்று மெய்வருத்தித் தவமிருந்தால் தூய வாழ்க்கை கிடைக்கும் என சில மதங்கள் போதிக்கின்றன. ஆனால் கிறிஸ்தவ மார்க்கமோ, சோதனையே இல்லாத சூழ்நிலையில் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வதை அல்ல, சோதனைகளின் மத்தியிலும் சற்றும் மாசு படாத தூய ஜீவியம் செய்வது சாத்தியமாகும் என்று போதிக்கிறது! கிறிஸ்து இப்பூமியில் ஜீவித்த நாட்களில் திரள் கூட்டங்களின் மத்தியில் பரிசுத்தமுள்ளவராகச் சஞ்சரித்தார். "அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ள வில்லை" (யோவான் 1:5) என்று அவரைப் பற்றிக் கூறப் பட்டுள்ளதே! எப்பக்கத்திலும் சோதனைகளால் நெருக்கப்படும் போதும், சோதனைகளின் உச்சகட்டத்திலும் நாம் மெய்யான பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார். ஜீவியத்தின் எல்லாப் பகுதிகளிலும் நாம் நம்மைப் பரிசுத்த வான்களாக விளங்கப்பண்ண வேண்டும். அருமையானவர்களே, ***பரிசுத்தமாகும்படி நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். தற்போது உங்களுக்குள்ள பரிசுத்தத்தின் அளவில் திருப்திகொள்ள வேண்டாம்.*** பரிசுத்தத்திற்கு அந்நியமான, விகற்பமான சூழ்நிலை களிலும் உங்கள் உள்ளுணர்வுகளின் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள கவனமாயிருங்கள். 'துர்நடத்தையுள்ள பதினாயிரம் பெண்களின் மத்தியில் நான் தனித்து விடப்பட்டாலும், என் உணர்ச்சிகளில் மாறுதல் இராது' என ஒரு முறை நம் சபையின் ஸ்தாபகரான பாஸ்டர் பால் தைரியமாகச் சாட்சி பகர்ந்தார். 'நான் ஒரு பூரணமான பரிசுத்த ஜீவியம் செய்கிறேன்' என்பது கிறிஸ்து வுக்குள் நித்திரையடைந்த பாஸ்டர் A.C. தாமஸ் அவர்களின் அறைகூவலாயிருந்தது. வாலிபனான தேவ ஊழியனே! நீ சற்றும்



எதிர்பார்த்திராத நேரத்தில், நீ ஆயத்தமாயிராத சமயத்தில், பாதுகாப்பற்ற வேளையில், சடுதியாகப் பரிசுத்தத்திற்கான ஒரு சோதனை உன்னைச் சந்திக்குமாயின், உன் மனநிலை எவ்வா றிருக்கும்? உன் பிரதிக்கிரியை எப்படியிருக்கும்? உன்னில் பரிசுத்தத்திற்கு அந்நியமான உணர்ச்சிகள் தூண்டிவிடப்படுமோ? உன் மன அமைதி குலைக்கப்படுமோ? நீ தகாத எண்ணங்களால் வாதிக்கப்பட்டு, நிர்ப்பந்தமான நிலைக்குள்ளாகித் தவிப்பாயோ? அல்லது '*தேவ கிருபையினால் இவை ஒன்றினாலும் நான் அசைக்கப்படுவதில்லை!*' என்ற ஜெய கெம்பீர தொனி உன்னி லிருந்து பிறக்குமா?

எல்லாச் சூழ்நிலைகளிலும் மெய்யான பரிசுத்த ஜீவியம் செய்வது எப்படி? "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" என்று அப். பவுல் எழுதுகிறார் (ரோமர் 5:20). பாவ சோதனைகள் ஒரு தேவபிள்ளையை அதிகமாக நெருக்குகிற சூழ்நிலைகளில், அவற்றை மேற்கொள்வதற்கான கிருபையும் அவனுக்கு அதிகமாகப் பெருகிவரும். 'கர்த்தருக்குப் பரிசுத்தமாய்' ஜீவிப்பதற்கென்றே நாம் அழைக்கப்பட்டிருக் கிறோம். புதிய ஏற்பாட்டின் தேவ ஊழியர்களில் எதிர்பார்க்கப் படுகிற உன்னதமான பரிசுத்த ஜீவியம், அதாவது ஜீவியத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரிசுத்தமாயிருத்தல், சிலர் எண்ணுகிறபடி அசாத்தியமானதன்று. கிருபையினால் அது மெய்யாகவே சாத்தியமாகும். சோதனையின் உச்சகட்டங்களில் ஒரு தகப்பனைப் போன்ற ஆவியைக் காத்துக்கொள்வதே கிறிஸ்துவைப் போன்ற தூய்மையாகும். தேர்வில் ஒரு நல்ல மாணவனை இனங்கண்டு கொள்ளலாம்; புயலில் ஒரு சிறந்த மாலுமியை இனங்கண்டு கொள்ளலாம்; சோதனையில் ஒரு ***மெய்யான பரிசுத்தவானை*** இனங்கண்டுகொள்ளலாம். நாம் எப்படிப்பட்ட பரிசுத்த ஜீவியம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை, நாம் எதிர்பாராத நேரத்தில் நம்மைச் சந்திக்கும் ஒரு சோதனை வெளிப்படுத்திவிடும். அது வரை நம்மிலுள்ள பரிசுத்தத்தின் அளவு இன்னதென்று நாம்

அறியாமலிருப்போம்; நம் பரிசுத்தத்தைப் பரிசோதிக்க வரும் சோதனையே நம் மெய்யான நிலைவரத்தை நமக்கு விளங்கப் பண்ணும். வாலிபராயினும், வயோதிபராயினும் - அனைவரும் மாம்ச சரீரத்திலுள்ளவர்களே. ஆகவே இந்த மாம்ச சரீரத்தில் ஜீவிக்கும் தேவபிள்ளைகள் யாவரும் தங்கள் ஜீவியத்தில் உள்ளான பரிசுத்தத்தைப் பாதுகாத்துக்கொள்ளும்படி ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு தூய ஜீவியம் செய்யாமற் போவதற்கு ஒருவேளை நீங்கள் பல சாக்குப்போக்குகளைச் சொல்லக்கூடும். ஆனால் அவை ஒன்றும் தேவனால் அங்கீ கரிக்கப்படமாட்டா. தேவபிள்ளையே, உன் உள்ளுணர்வுகள் யாவும், நினைவுகள் யாவும், சரீரத்தின் உணர்ச்சிகள் யாவும் தூய்மையாயிருப்பதாக. அதற்காக நீ ஏங்கித் தவிப்பாயாக. தேவ கிருபையினால் அப்படிப்பட்ட ஜீவியம் செய்ய உன்னால் கூடும் என்று நீ விசுவாசிப்பாயாக. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவ தற்கேதுவாக நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியங்களில் ஒன்றும் கிடைக்கப்பெறாதிருந்தும் போவாஸ் அப்படிப்பட்ட மேன்மை யான பரிசுத்தமுள்ளவனாயிருந்திருக்கக் கூடுமாயின், இக்கிருபை யின் காலத்தில் நாம் அதினும் மேன்மையானதொரு ஜீவியம் செய்வது சாத்தியமானது என்பது எவ்வளவு நிச்சயம்! ஆகவே மாசற்றதொரு ஜீவியம் செய்யும்படி நீ இன்றே உன்னைத் தத்தம் செய்வாயாக.

நமக்கு ஏன் 'எழுச்சிகளின் தூய்மை' அவசியமாயிருக் கிறது? நம்மில் எழுச்சிகளின் தூய்மை இல்லாவிடில், நாம் மிக முக்கியமான ஆசீர்வாதம் ஒன்றினை என்றென்றுமாக இழந்து போவோம் - ஆவியின் கனியை அல்லது கிறிஸ்துவின் சுபாவத்தை நாம் இழந்துவிடுவோம்! "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலா. 5 : 22, 23). இங்கு கூறப்பட்டுள்ள அனைத்துப் பண்புகளும் நம்முடைய எழுச்சி களோடு அதாவது உள்ளுணர்வுகளோடு சம்பந்தப்பட்டவையே.



உதாரணமாக, அன்புக்கு உள்ளுணர்வுகள் உள்ளன - ஒரு தாய் தன் குழந்தையின் மீதுள்ள அன்பினால் அதைத் தன் கரங்களில் எடுத்து அணைத்துக்கொள்கிறாள், முத்தமிடுகிறாள். சந்தோஷத் திற்கும் உள்ளுணர்வுகள் உள்ளன - நாம் சந்தோஷமாக இருக்கும்போது பாடுகிறோம், கைகொட்டுகிறோம். இவ்வாறு ஆவியின் கனியின் அம்சங்கள் ஒவ்வொன்றுக்கும் எழுச்சிகள் உள்ளன. ஆகவே நாம் நம்முடைய எழுச்சிகளின் தூய்மையை இழந்துபோகும்போது, அக்கனியின் அம்சங்கள் யாவற்றையும் இழந்துபோவோம். அவை யாவற்றையும் சேர்த்து 'கிறிஸ்துவின் சுபாவம்' என நாம் அழைக்கலாம். எனவே, நாம் நம்முடைய எழுச்சிகளின் தூய்மையைப் பாதுகாத்துக்கொண்டால் மாத்திரமே கிறிஸ்துவின் சுபாவத்தில் வளர முடியும். ஆகவே ***தேவனுடைய கிருபையினாலே*** நம்மால் எழுச்சிகளில் தூய்மையுள்ளவர்களாய் ஜீவிக்க முடியும் என்பதை நாம் விசுவாசித்து, அதை அனுபவ மாக்கிக்கொள்வோமாக.

***"நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடி யாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்"*** (ரூத் 3 : 9).

### 'நான் ஆண்டவருக்கு அடிமை':

இங்கே ரூத் தன்னைப் போவாசுக்கு அறிமுகப்படுத்தும் விதத்தைக் கவனியுங்கள்! 'நான் மோவாபியப் பெண்பிள்ளை யாகிய ரூத்' என்றோ, 'அந்நிய தேசத்தாளாகிய ரூத்' என்றோ, 'விதவையாகிய ரூத்' என்றோ அவள் குறிப்பிடாமல், "நான் உம்முடைய அடியாளாகிய ரூத்" என்று கூறுகிறாள். அவள் அவனைத் தன்னுடைய எஜமானும் ஆண்டவனுமாக ஏற்றுக் கொண்டு, அவனுடைய அடிமையாகத் தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்திருந்தாள் என்பதையே அவளுடைய இவ்வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வசனத்தில் அவள் இரு முறை தன்னை அவனுடைய அடியாள் என்று குறிப்பிடுகிறாள்.

*"நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்"* – இவ்வேதபகுதியிலுள்ள போர்வை என்னும் பதத்திற்கு ஆங்கிலத்தில் 'skirt' (வஸ்திரம்) என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருப்பினும், மூலபாஷையில் அதற்கு 'செட்டை' என்னும் பொருள் கொண்ட ஒரு பதமே உபயோகிக்கப்பட்டுள்ளது. ரூத் 2 : 12 – இல் உள்ள 'செட்டை' என்ற வார்த்தைக்கும் மூலபாஷையில் அதே பதமே உபயோகிக்கப்பட்டுள்ளது. 'செட்டை', பாதுகாப்பைக் குறிக்கிறது (சங். 91 : 4). ஒருவன் ஒரு ஸ்திரீயின் மேல் தன் வஸ்திரத்தை (skirt) விரித்தல், அவளைத் தன்னுடைய பொறுப்பின் கீழ் ஏற்றுக்கொண்டு, அவளைப் பாதுகாத்து, ஆதரித்துப் பராமரிப்பதற்கான ஓர் அடையாளச் சின்னமாகும். யூதரின் வழக்கப்படி ஒருவனுக்கு விவாகம் ஒழுங்கு செய்யப்படும்போது அவன் தன் வஸ்திரத்தை அல்லது அங்கியை மணப்பெண்ணின் மேல் வீசி, அவளுடைய தலையை அதினால் மூடுவான். இவ்வஸ்திரம் தாலித் (Talith) என்றழைக்கப்படும். இப்படிச் செய்வதின் மூலம் அவன் அவளை முற்றிலுமாகப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பைத் தன் மேல் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கிறான். ரூத் கேட்டுக்கொண்டபடி, மறுநாளிலேயே போவாஸ் ரூத்தைத் தன் மனைவியாக்கிக்கொண்டு, அவளைப் பராமரிக்கும் பொறுப்பைத் தன் மேல் ஏற்றுக்கொண்டான். மேலும், 'வஸ்திரம்' என்பது பொதுவாக ஒருவரது சுபாவத்தைக் குறிக்கும். ஆகவே 'உம் வஸ்திரத்தை என்மேல் விரியும்' என்பது, 'கர்த்தாவே உம்முடைய சுபாவத்தினால் என்னைப் பொதிந்து பாதுகாத்தருளும்' என்று பொருள்படும். "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை" என்று நாம் நம்மைத் தாழ்த்திக் கர்த்தருக்கு அர்ப்பணிக்கும்போது, அவர் தமது சுபாவத்தால் நம்மை அலங்கரிப்பார்; அவருடைய பரிசுத்தம் நமக்குக் கிடைக்கும் பலனாயிருக்கும் (லூக்கா 1 : 38 ; ரோமர் 6 : 22).

***"அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது"*** (ரூத் 3 : 10).



**பிந்தின நற்குணம்:**

போவாஸ் தன் வயலில் ரூத்தை முதல் முறையாகச் சந்தித்தபோது அவளை 'என் மகளே' என அழைத்ததாக நாம் முன்பு கண்டோம் (ரூத் 2 : 8 - Eng.). இப்போது அவள் அவனுடைய களத்திற்கு வந்து, 'நீர் என் நெருங்கிய சுதந்தரவாளி; ஆகவே நியாயப்பிரமாண சட்டத்தின்படி நீர் என்னை விவாகம் பண்ண வேண்டும்' என்று அவனிடத்தில் தனக்குள்ள உரிமையைத் தெரிவிக்கிறாள் (ரூத் 3 : 9). அதைக் கேட்ட பின்னரும் அவன் அவளை 'என் மகளே' (Eng.) என்று இருமுறை அழைக்கிறான். மாயமுள்ளவனாக அல்ல, உண்மையும் நேர்மையுமுள்ளவனாகவே அவன் அவளைத் தன் மகள் என்று அழைக்கிறான். மாயமுள்ள ஒருவன் அப்படிப்பட்ட சடுதியான சோதனை வேளையில் ஒரு பெண்ணை 'என் மகளே' என அழைக்கவோ, அவளோடு கர்த்தரைக் குறித்துப் பேசவோ முடியாதே! எனவே இவ்வார்த்தைகள் மெய்யாகவே அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிறந்தவையே என்பது நிச்சயம்.

'வாலிபரின் பிறகே செல்லுதல்' என்பது, நாம் பாவம், இச்சை, பெருமை போன்ற உலகத்திலுள்ளவைகளின் பேரில் பற்றுள்ளவர்களாவதைக் குறிக்கிறது. ரூத் வாலிபரின் பிறகே போகாததைக் குறிப்பிட்டு, போவாஸ் அவளைப் பாராட்டுகிறான். ஒருவேளை அவள் யூதா தேசத்திற்கு வந்த பின் தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர் யாராகிலும் அவளைத் தங்கள்பால் ஈர்த்துக்கொள்ள முயற்சித்திருக்கக் கூடும். அவளோ அவர்கள் பின்னே போகவில்லை. அவள் அந்த வாலிபரின் பிறகே சென்றிருந்தால் போவாசின் பாதத்தண்டை வந்திருக்க முடியாதே! கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின்

பெருமை, நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கும் பாவம் போன்ற வற்றுக்கு நாம் இடமளிப்போமாகில், அவை நம்மை உலகத்தைப் பற்றிக்கொள்ளச் செய்துவிடும். அவ்வாறு நாம் உலகத்திலுள்ளவை களைப் பின்பற்றினால், நம்மால் கர்த்தரின் பாதத்தண்டை வரக்கூடாமற்போய்விடும். ரூத் வாலிபரின் பிறகே போகாததைப் போவாஸ் அவளுடைய பிந்தின நற்குணம் என்று குறிப்பிட்டு, அதனைப் பாராட்டுகிறான். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 'நற்குணம்' என்ற வார்த்தைக்கு, மூலபாஷையில் 'பயபக்தி' (piety) என்ற அர்த்தமுள்ள பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. அவள் தன் தேசத்தையும் தன் ஜனத்தையும் விட்டு நகோமியைப் பின்பற்றி வந்த அவளது முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும், நகோமியின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து போவாசின் பாதத்தில் சரணடைந்த அவளது பிந்தின நற்குணம் மேன்மையானது என போவாஸ் அவளைப் பாராட்டினான்.

போவாசின் பாதத்தண்டை செல்லும்படி ரூத்தை வழி நடத்தியவள் நகோமியே ஆவாள். நகோமி, பரிசுத்த ஆவியான வருக்கு நிழலாட்டமாயிருக்கிறாள். தேவபிள்ளையே! கர்த்த ருடைய பாதத்தண்டை அமர்ந்திருக்கும்படி, அதாவது ஜெபத்தில் போராடும்படி எத்தனை தரம் பரிசுத்த ஆவியானவர் உன்னைத் தட்டியெழுப்பியிருக்கிறார்! நீ கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டிய நேரத்தை அசட்டைபண்ணி, பல காரியங்களைச் செய்வதில் அலுவலாயிருந்து, அங்குமிங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறாயோ? அல்லது உன்னைக் கவர்ந்திழுக்கும் உலக சிற்றின்பங்களின் பிறகே நீ சென்று கொண்டிருக்கிறாயோ? உன்னை நீயே ஆராய்ந்து பார்! அந்நியமானவையாகிய இவற்றில் ஒன்றையும் பின்பற்றாதவனாய், உலகத்தின் மேல் சற்றும் பற்றுதல் அற்றவனாய், நீ ஆண்டவரின் பாதத்தில் தரித்திருப்பாயாகில், உன் பின்னாட்கள் அதாவது முடிவு மேன்மையானதாயிருக்கும். இவ் வேதபகுதியிலுள்ள "உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது" என்பது, 'உன் ஆரம் பத்தைப் பார்க்கிலும் முடிவு நல்லது' என்று பொருள்படும்.



## ஆரம்பமும் முடிவும்:

தேவ ஊழியரே, உங்கள் ஊழியத்தின் ஆரம்பத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு மிகவும் மேன்மையானதாய் இருக்க வேண்டும். உங்கள் ஜீவியத்தின் முடிவிலுங்கூட நீங்கள் சபையா ருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பாரமாய் மாறக் கூடாது. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்த ராஜாக் களில் ஒருவனாகிய யோராம் என்பவனைக் குறித்து, 'அவன் விரும்புவாரில்லாமல் இறந்துபோனான்' என்று கூறப்பட்டுள்ளது (II நாளா. 21 : 20). அவன் ஒரு ராஜ்யம் முழுவதற்கும் ராஜாவா யிருந்தபோதிலும், அவனது மரண வேளையில் அவனை விரும் புவார் ஒருவரும் இருக்கவில்லை! நாம் ஓரிடத்திலிருந்து இட மாற்றம் செய்யப்படும்போதோ அல்லது இவ்வுலகினின்று குடி பெயர்ந்து போகும்போதோ, யோராமைப் போல நற்சாட்சியற்ற வர்களாய்ப் பிரிந்து செல்லக் கூடாது. ரூத் எந்த வாலிபரின் பிறகேயும் செல்லாமல் போவாசின் பாதத்தில் தஞ்சம் புகுந்தபடி யினால் அவளுடைய பின்னாட்களும் முடிவும் மிகவும் மேன்மையானவையாயிருந்தன; அவள் மிகுந்த தயை பெற்றாள்.

தேவஜனங்களாகிய நம் ஒவ்வொருவருடைய ஜீவியத் திலும், நம் ஆரம்பத்தைப் பார்க்கிலும் முடிவே மிகவும் முக்கிய மானதாகும். நம் ஆரம்பத்தைப் பார்க்கிலும் முடிவு மேன்மை யானதாயிருந்ததாக நம் ஜீவியத்தின் முடிவில் நம்முடைய போவாசாகிய கர்த்தர் நம்மைக் குறித்துச் சாட்சி பகர வேண்டும். நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு மேன்மையானதாயிருக்க வேண்டும் என்பதைக் குறித்து தேவன் மிகுந்த கருத்துள்ளவராயிருக்கிறார். நம் ஆவிக்குரிய ஜீவியத்தோடு சம்பந்தப்பட்ட யாவுமே ஆரம்பத்திலிருந்ததைப் பார்க்கிலும் முடிவில் மேன்மையானவையாய்ச் சிறந்திலங்க வேண்டும். நாம் நம்முடைய முடிவை நெருங்க நெருங்க - நம்மிலுள்ள தயவு, தேவபயம், தேவபக்தி, தியாகம், ஜெபம், உபவாசம், தேவனுடைய வசனத்தைத் தியானிக்கும்படியான

ஆவல், அழிந்துபோகும் ஆத்துமாக்களைப் பற்றிய பாரம், கர்த்தரின் பாதத்தண்டை அமர்ந்திருக்கும்படியான வாஞ்சை போன்ற யாவுமே நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேயிருக்க வேண்டும். ‘கடந்த காலங்களில் நான் வெகு நேரம் ஜெபிப்ப துண்டு; ஆனால் இந்நாட்களில் எனக்கு ஜெபிக்கவே நேர மில்லை’ என்பது போன்ற பல சாக்குப்போக்குகளைச் சிலர் சொல்லுவதுண்டு. மேன்மையானதொரு முடிவுக்காக ஏங்கித் தவிப்போருக்கோ இதற்கு மாறான ஓர் அறிக்கையே உண்டா யிருக்கும்!

## *யாருடைய முடிவு மேன்மையானதாயிருக்கும்?*

(i) “நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்” என்று கூறப்பட்டுள்ளபடி (சங். 37 : 37), செம்மையான இருதயமுள்ள வர்களின் ஜீவியமும் முடிவும் சமாதானமுள்ளதாயிருக்கும்.

(ii) “உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக் கும்படி, ஆலோசனையைக்கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்” என நாம் வாசிக்கிறபடி (நீதி. 19 : 20), ஆலோசனையையும் புத்திமதியையும் ஏற்றுக்கொள்கிறவர்களின் முடிவு ஞானமுள்ளதா யிருக்கும்.

(iii) “உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம் முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்” என யோபு என்னும் தேவதாசனுக்குச் சொல்லப்பட்டது (யோபு 8 : 7). ஆங்கிலத்தில் இது, ‘உம்முடைய துவக்கம் சிறியதாயிருந்தாலும்’ என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நம் முடிவு சம்பூரணமாயிருக்கும்படியாக, நம்முடைய ஆரம்பம் சிறியதாயிருப்பதாக. ஆரம்பத்தில் மாத்திரமல்ல, நாம் எப்போதும் சிறியவர்களாகவே இருக்க நாடுவோமாக; உலகில் பெரியவர்களாகும்படி நாம் ஒருபோதும் நாட வேண்டாம்; அப்போது நம்முடைய முடிவு பூரணமானதா



யிருக்கும்; யோபைப் போல முடிவில் நாம் இரண்டத்தனையாக ஆசீர்வதிக்கப்படுவோம் (யோபு 42 : 10); நம் ஆரம்பம் ஒரு வேளை அற்பமானதும் அசட்டைபண்ணப்பட்டதுமாய் இருப்பி னும், நம் முடிவு தேவனால் கனம்பண்ணப்படும். அவர் நம்மில் தொடங்கிய தம்முடைய வேலையைச் சிறப்பாக முடித்துத் தீர்ப்பார் (சக. 4 : 9, 10).

(iv) “அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக்கொண்டால் நலமாயிருக்கும்” என்று கூறப் பட்டுள்ளபடி (உபா. 32 : 29), தங்கள் முடிவைச் சிந்தித்துக்கொள்ப வர்களே ஞானவான்கள் ஆவர். தங்கள் முடிவு மேன்மையானதா யிருக்க வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்களுக்கு வரும் பரீட்சைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வர். நாம் நம் முடைய முடிவைப் பற்றிச் சிந்திக்கத் தவறும்போது, தற்போதுள்ள நம் பரீட்சைகளில் பொறுமையிழந்துபோவோம். மாறாக, நாம் நமது முடிவைச் சிந்திப்போமாகில், ‘இச்சோதனைகள் குறுகிய காலத்திற்குத்தானே நீடிக்கும்; என் முடிவு மேன்மையானதாய் இருக்குமே!’ என்ற எண்ணம் நாம் அவற்றை ஜெயித்து முன் செல்லும்படி நம்மை ஊக்குவிக்கும். இவ்வாறு பொறுமையா யிருப்பவர்களின் முடிவு மேன்மையானதாயிருக்கும்: “இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்” (யாக். 5 : 11).

## *யாருடைய முடிவு மேன்மையானதாயிராது?*

நாம் எச்சரிப்படையும்படி வேதாகமத்தில் பலருடைய துக்ககரமான முடிவைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றை நாம் கீழே காண்போம்:

(i) “ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமை

யுள்ளவன் உத்தமன்” (பிர. 7 : 8) என நாம் வாசிக்கிறோம். பெருமையுள்ளவர்களும் பொறுமையற்றவர்களும் நல்முடிவைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என இதினின்று நாம் நிதானிக்க லாம். ‘தன் ஆவியில் பெருமையுள்ளவனைப் பார்க்கிலும், தன் ஆவியில் பொறுமையுள்ளவன் உத்தமன்’ என இவ்வேதபகுதி யின் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. நாம் நம்முடைய ஆவியில் பொறுமையிழந்துபோவோமாயின், நம்முடைய முடிவு நம் ஆரம்பத்தைப் பார்க்கிலும் மேன்மையானதாய் இராது. தேவதாசனாகிய மோசே பூமியிலிருந்த எல்லாரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தும், ஒரு சந்தர்ப்பத்தில் பொறுமை யிழந்து பதறிப் பேசினான்; கன்மலையோடு பேசும்படி தேவ கட்டளை பெற்ற அவன் அதை அடித்தான். இதினிமித்தம் அவனால் கானானில் பிரவேசிக்கக் கூடாமற்போயிற்று (எண். 12 : 3 ; 20 : 7 – 12); அவன் வாஞ்சித்த மேன்மையான முடிவு அவனுக்குக் கிடைக்கவில்லை!

(ii) பெருமையுள்ளவர்களின் முடிவு நிர்ப்பந்தமானதா யிருக்கும் என்பதற்கு அநேகம் எடுத்துக்காட்டுகளை வேதா கமத்தில் நாம் காணலாம். பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள சவுலின் ஆரம்பம் மிகவும் நல்லதாயிருந்தது. அவன் தேவஜனங்களின் முதல் ராஜாவாகத் தேவனால் உயர்த்தப்பட்டான். அவன் இஸ்ரவேலர் அனைவராலும் விரும்பப்பட்டவனாயும், அந்த ஸ்தானத்தை அடைவதற்குத் தான் பாத்திரன் அல்ல என்று தன்னைத் தாழ்த்துகிறவனாயும் இருந்தான். ஆனால் நாளடைவில் அவன் பெருமையுள்ளவனானான். அதுவே அவனுடைய நிர்ப்பந்தமான முடிவுக்குக் காரணமாயிற்று. பெலிஸ்தரோடுள்ள கடைசி யுத்தத்தில், அவர்கள் அவனை அதிகமாகக் காயப்படுத் தியபோதிலும், அவன் உடனடியாக மரிக்கவில்லை. அப்போது அவன் தன் ஆயுததாரியை நோக்கி, “அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, *என்னை அவமானப்படுத்தாதபடிக்கு*, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு” என்றான் (I சாமு. 31 : 4). அந்த மரண வேதனை யிலுங்கூட அவன் தன்னுடைய முரட்டாட்டமான கிரியைகளுக் காகவோ, தான் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்தில் குறிகேட் கும்படி சென்றதற்காகவோ மனஸ்தாபப்படுவதற்குப் பதிலாக, விருத்தசேதனமில்லாதவர்களால் கொல்லப்படுவதால் தனக்கு உண்டாகும் அவமானத்தைப் பற்றியே கவலையுள்ளவனாய் இருந்தான். இது பெருமையின் நிச்சயமான ஓர் அறிகுறியாகும். பெருமையினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த அவனுடைய முடிவு மேன்மையானதாயிருக்கவில்லை!



(iii) தேவனுடைய ஆளுகைக்கும் தேவபிள்ளைகளுக்கும் விரோதமாயிருப்பவர்களின் முடிவு மோசமானதாயிருக்கும். அமலேக்கின் முடிவைக் குறித்து, “அமலேக்கு முந்தியெழும் பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான்” என நாம் வாசிக்கிறோம் (எண். 24 : 20). அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தது. ஆகவே, ‘அவனை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம்பண்ணு வேன்’ என்று கர்த்தர் கூறினார் (யாத். 17 : 14, 16). மேலும் அமலேக் கியர் தேவஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, தேவனுடைய மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோத மாக ஆலோசனைபண்ணுகிறவர்களாயிருந்த ஒரு கூட்டத்தாராவர் (சங். 83 : 3 – 7). யாராகிலும் தேவனுடைய நடத்துதலுக்கும், அவரது மறைவிலிருக்கும் தேவபிள்ளைகளுக்கும் விரோதமாகக் கிரியை செய்துகொண்டிருப்பார்களாயின், அவர்கள் மனந் திரும்பாத பட்சத்தில், முற்றிலும் நாசமடைவதே அவர்களது முடிவாயிருக்கும்!

(iv) பிறரால் தாழ்த்தப்படும்போது முறுமுறுப்பவர்களின் பின்னாட்களும் முடிவும் மேன்மையானவையாயிருக்க முடியாது. பின்னாட்களில் நமக்கு நன்மை செய்யும்படியாகவே தேவன் சில சந்தர்ப்பங்களில் நம்மைத் தாழ்த்துகிறார். சிலர் பிறரால் தாழ்த்தப் படுதல், கடிந்துகொள்ளப்படுதல், திருத்தப்படுதல் போன்றவற்றை

விரும்புவதில்லை. கல்வாரிப் பாதையில் கர்த்தராகிய இயேசு திரள் கூட்டமான ஜனங்களின் முன்னிலையில் எவ்வளவாகத் தாழ்த்தப் பட்டார்! தேவன் உன் வாழ்வில் பிறரால் தாழ்த்தப்படுகிற பாதையை அனுமதிக்கும்போது, நீ அதை நல்ல மனப்பான்மை யுடன் ஏற்றுக்கொண்டு, உன் முடிவு நன்றாயிருக்கப்போகிறது என்றுணர்ந்து, அதில் சந்தோஷப்படுவாயாக. "உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, ... மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்துவந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும்" என நாம் வாசிக்கிறோம் (உபா. 8 : 15, 16). எபிரெய மொழியில் 'மன்னா' என்பதற்கு 'இது என்ன?' என்று பொருள். தேவபிள்ளையே, நீ உன் வாழ்க்கையில் பிரச்சினையுள்ள சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது, 'இது என்ன ஆண்டவரே?' என்று தேவனிடத்தில் கேள்வி கேட்பதற்குப் பதிலாக, அவற்றில் களிகூரக் கற்றுக்கொள்வாயாக. வனாந்தரப் பிரயாணம் முழுவ திலும் ஒவ்வொரு நாளும் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா கொடுக்கப்பட்டது. அப்படியே, ஒவ்வொரு நாளும் 'இது என்ன?' என்று நீ வியக்கத்தக்கதான ஒரே விதமான சோதனை, பிரச்சினை, அல்லது சூழ்நிலை மீண்டும் மீண்டும் தேவனால் உனக்கு அனுமதிக்கப்படுமாயின், அது உன்னுடைய பின்னாட்களை மகிமையுள்ளவையாக்கும்படியாகவே என்பதை நினைவிற்கொள் வாயாக. இஸ்ரவேலர் கானானைச் சென்றடைந்த பின் மன்னா வருஷிக்கப்படுதல் நின்றுபோயிற்று. அவ்வண்ணமாகவே, நீ பரம கானானைச் சென்றடைந்த பின் 'இது என்ன?' என்ற கேள்விக்கு அங்கு இடமிராது. உன் சோதனைகள் யாவும் நீ பரம கானானின் எல்லையை எட்டும் வரை மட்டுமே நீடிக்கும்; அக்கரையில் முடிவில்லா மகிழ்ச்சியே உன் பங்காயிருக்கும்! வனாந்தரத்தில் அளிக்கப்பட்ட மன்னாவினிமித்தம் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முடிவு ஆரம்பத்தைப் பார்க்கிலும் மேன்மையுள்ளதாக இருக்கவில்லை. அவர்கள் வனாந்தரத்திலேயே நாசமடைந்தார்கள்!



(v) பகையுணர்வுள்ளவர்களின் முடிவு கசப்பானதாய் இருக்கும். "அப்பொழுது அப்னேர் யோவாபைப் பார்த்துக் கூப்பிட்டு, பட்டயம் எப்போதும் சங்காரம் பண்ணிக்கொண் டிருக்கவேண்டுமோ, முடிவிலே கசப்புண்டாகும் என்று அறியீரோ, தங்கள் சகோதரரை விட்டுப் பின்வாங்கும்படிக்கு எந்த மட்டும் ஜனங்களுக்குச் சொல்லாதிருப்பீர் என்றான்" (II சாமு. 2 : 26). தாவீதின் படைத்தலைவனான யோவாபும் அவனோடிருந்தவர் களும் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரைத் தாக்கும்படி அவர்களைப் பின்தொடர்ந்த சந்தர்ப்பத்தில், முன்பு சவுலின் படைத்தலைவனாயிருந்த அப்னேர் இவ்விதமாகக் கூறினான். அவனுடைய கூற்று முற்றிலும் உண்மையே. நீங்கள் உங்கள் சகோதரரை ஒருவேளை சரீரப்பிரகாரமாகத் தாக்காமலிருக்கலாம்; ஆயினும் அவர்களைப் பழிவாங்கும் சிந்தையும் பகையுணர்வும் கசப்பும் உங்களில் இருக்குமாயின், உங்கள் முடிவு கசப்பானதா யிருக்கும். அப்னேர் கூறியபடியே தப்பாமல் யோவாபுக்குச் சம்பவித்தது. அவனுடைய முடிவு கசப்பானதாயிற்று! அவன் ராஜாவாகிய தாவீதின் படைத்தலைவன்! மகா பராக்கிரமசாலி! தாவீதுக்குப் பல வெற்றிகளை வருவித்தவன்! ஆனால் முடிவில் அவன் இஸ்ரவேல் புத்திரரான தன் சகோதரருக்குப் பயந்து, உயிர்தப்பும்படி கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று! ஆயினும் கர்த்தரிடத்திலிருந்தும் அவனுக்குச் சகாயம் கிடையாமல், அங்கேயே அவன் வெட்டிக் கொல்லப்பட்டான் (I இராஜா. 2 : 28 – 34). தாவீதின் பராக்கிரமசாலிகளின் பட்டியலில் யோவா புடைய ஆயுததாரியின் பெயர்முதலாய் இடம் பெற்றிருக்க (II சாமு. 23 : 37), அவனுடைய பெயரோ இடம் பெறவில்லை என்பதும் நாம் சிந்திக்கத்தக்கது!

(vi) தங்களுடைய முடிவைச் சிந்திக்காமல் நிர்விசாரமாய் வாழ்கிற யாவருடைய முடிவும் நிர்ப்பந்தமானதாகவே இருக்கும். என்றென்றைக்கும் நாயகியாயிருப்பேனென்று சொல்லி, தன்

கிரியைகளின் முடிவை நினையாமற்போன பாபிலோனுக்குத் தேவனால் கடும் நியாயத்தீர்ப்பு நிர்ணயிக்கப்பட்டது (ஏசாயா 47 : 7 – 15). தங்கள் சுய பெலத்தையும் திறமையையும் ஞானத்தையும் நம்பி, பெருமையாயிருப்பவர்களின் முடிவு பரிதாபமானதாயிருக்கும் (வச. 10, 11 ; வெளி. 18 : 7, 8). "துன்மார்க்கனுக்கு நல்முடிவு இல்லை" (நீதி. 24 : 20). தங்கள் முடிவைச் சிந்தித்துக்கொள்கிறவர்களோ தேவ உணர்வுள்ளவர்களாயிருந்து, மனத்தாழ்மையுடனும் தேவ பயத்துடனும் பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்துவார்கள்.

(vii) தேவபிள்ளைகள் என்று பெயர்பெற்றிருந்தும், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராயிருந்து, இம்மைக்குரிய ஆதாயங்களுக்காகவே கர்த்தரைப் பின்பற்றி, பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறவர்களின் முடிவு அழிவு என்று திருவசனம் கூறுகிறது (பிலி. 3 : 18 , 19). கேயாசி, யூதாஸ்காரியோத்து, தேமா போன்றோர் இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டுகளாவர்.

(viii) தங்கள் பரிசுத்தத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தவறி, பின்மாற்றமடைவோரின் பின்னிலைமை முன்னிலைமையிலும் அதிக கேடுள்ளதாயிருக்கும். "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்" என திருவசனம் நம்மை எச்சரிக்கிறது (II பேதுரு 2 : 20). கர்த்தருக்கென்று தாங்கள் விட்டுவிட்டவைகளைத் திரும்ப எடுப்பவர்கள், தான் கக்கினதைத் திரும்பத் தின்னும் நாய்க்கும், கழுவப்பட்ட பின் சேற்றிலே புரளும் பன்றிக்கும் ஒப்பானவர்களே! (வச. 22). கிறிஸ்தவ உலகில் தேவ ஊழியர்கள் என்றழைக்கப்படும் சிலர் பல வருடங்கள் கர்த்தரைச் சேவித்த பின், தங்கள் பல வருட அனுபவத்தி னிமித்தமாகத் தங்களுக்குக் கிடைக்கும் சுயாதீனத்தைத் துர்ப்பிரயோகம் செய்து, தங்கள் பழைய ஜீவியத்திற்குத் திரும்புவது



துக்ககரமான விஷயமாகும். சுயாதீனம் கிடைக்கும்போது, நாம் நமது முடிவைச் சிந்தித்து, முன்னிலும் அதிகமான தேவபயத்தோடு நடந்துகொள்ள வேண்டும். கட்டுப்பாடுகள் இன்றி சுயாதீனம் அளிக்கப்படும்போதுதான் ஒருவரது பிரதிஷ்டை உண்மையில் எந்நிலையில் உள்ளது என்பது தெரியவரும். ஆகவே பிறருடைய கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் நாட்களைப் பார்க்கிலும், உத்தரவாதமுள்ளவர்களாக வைக்கப்படும் நாட்களிலேயே தேவ ஊழியர்கள் தங்கள் ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாயிருக்க வேண்டும் (I பேதுரு 2 : 16).

இப்பூமியில் நம் ஜீவியம், ஊழியம் இவற்றின் முடிவு சிறப்பானதாய் இருக்கும்படியாக, நம் ஆரம்பம் நன்றாயிருந்ததில் மாத்திரம் நாம் திருப்தியடைந்துவிடாமல், நம் முடிவின் மேல் சிந்தையுள்ளவர்களாயிருப்போமாக.

***"இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். ... இராத்திரிக்குத் தங்கியிரு; நாளைக்கு ... அவன் உன்னை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தானேயாகில், நான் உன்னைச் சுதந்தர முறையாய் விவாகம்பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன்; விடியற்காலமட்டும் படுத்துக்கொண்டிரு என்றான்"*** (ரூத் 3 : 11 – 13).

## கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திரு!

நம்முடைய ஜீவியத்தில் வெற்றிசிறக்கும்படி நாம் செய்ய வேண்டியதெல்லாம், கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்வதேயாகும். ரூத் போவாசின் பாதத்தண்டை படுத்திருந்தது போல, நாம் கர்த்தரின் பாதத்தில் விழுந்து கிடப்போமாகில், போவாஸ் அவளிடம் சொன்னது போலவே கர்த்தரும் நம்மை நோக்கி, "மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம்

செய்வேன்" என்று சொல்லுவார். ***நாம் கர்த்தரின் பாதத்தில் விழுந்துகிடக்கக் கற்றுக்கொள்வோமாகில், நமக்கு வேண்டிய யாவற்றையும் அவரே நமக்குச் செய்வார்!*** "எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்" என தாவீது கூறுகிறான் (சங். 57 : 2). நம் ஜீவியத்தில் நமக்குத் தேவைப்படுகிற மிகச் சிறிய காரியத்தை யுங்கூட அவர்தாமே நமக்குச் செய்ய வாஞ்சிக்கிறார். அவர்தாமே சகலத்தையும் நமக்காகச் செய்யும்படி நாம் அவரது பாதத்தில் தரித்திருப்போமாக. பொதுவான ஜெபவேளைகளைத் தவிர, நாம் தனிப்பட்ட விதத்தில் கர்த்தரோடு உறவாடுகிற 'தனி ஜெப நேரம்' நமக்கிருக்க வேண்டும். நாம் எதிர்நோக்கியிருக்கிற 'மகிமையான விடியற்காலம்' வரை நாம் அவருடைய பாதத்தில் விழுந்து கிடப்போமாகில், "உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்" என்ற வாக்கினை அவர் நமக்கு நிறைவேற்றுவார். அவர் நமக்காக எல்லாவற்றையும் செய்ய வாஞ்சிக்கிறார். அவர் அப்படிச் செய்யும்படி நாம் அவருக்கு இடங்கொடுப்போமாக. சில சமயங் களில் தேவ சமுகத்தில் நீண்ட நேரம் தரித்திருந்து ஜெபிக்கக் கூடாத சூழ்நிலைகள் நமக்கு உண்டாயிருப்பினும், எப்போதும் நம் *உள்ளம்* கர்த்தரின் பாதத்திலேயே தங்கியிருக்க வேண்டும். அவருடைய சமுகத்திற்காக நாம் ஏங்கிக்கொண்டிருக்க வேண்டும்.

'நீ வேண்டிக்கொள்ளுகிற ***எல்லாவற்றையும்*** நான் உனக்குச் செய்வேன்' என்று கர்த்தர் நம்மிடம் உரைப்பது எவ்வளவு அருமையாயிருக்கிறது! பல சந்தர்ப்பங்களிலும் நாமே நமக்காகப் பலவற்றையும் செய்துகொள்வதால் அவர் நமக்காகக் கிரியை செய்யக்கூடாத நிலையில் இருக்கிறார். "கர்த்தர் உங்களுக் காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என திரு வசனம் கூறுகிறது (யாத். 14 : 14). ஆனால் அநேக சந்தர்ப்பங் களில் நாமே நமக்காக யுத்தம்பண்ணுவதினால் கர்த்தர் சும்மா யிருக்க வேண்டியதாகிவிடுகிறது! நாம் அவரில் அமர்ந்திருந்து, அவர் நமக்காகக் கிரியை செய்யும்படி அவரை அனுமதிப்



போமாக. 'அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் படுத்துக் கொள்ளச் செய்கிறார்' (சங். 23 : 2 - Eng.) என தாவீது தன் மேய்ப்பரான கர்த்தரைக் குறித்துக் கூறுகிறான். 'படுத்துக்கொள் ளுதல்', ஒரு நபர் செய்யக்கூடிய மிக இலகுவான காரியம் அல்லவா? ஆயினும் அதையுங்கூட கர்த்தர்தாமே நம்மைச் செய்விக்க விரும்புகிறார். கர்த்தர் நம்மைப் படுத்துக்கொள்ளச் செய்வாராயின், அது 'புல்வெளிகளில்' அதாவது நிறைவான சமாதானத்திலேயே இருக்கும் - அதாவது நம்முடைய முடிவுங் கூட சமாதானமும் இளைப்பாறுதலும் உள்ளதாயிருக்கும் (சங். 37 : 37 ; ஏசாயா 57 : 2). ஆகவே நாம் கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கும்படி நேரம் எடுத்துக்கொள்வோமாக. அப்போது எல்லாவற்றிலும் கர்த்தர் நமக்கு உதவி செய்வார். நாம் எவ்வள வதிகமாகக் கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கக் கற்றுக்கொள் கிறோமோ, அவ்வளவதிகமாக நமக்காக எல்லாவற்றையும் செய்யத்தக்கதாக கர்த்தருக்கு நம் ஜீவியத்தில் சுயாதீனம் இருக்கும்.

"விடியற்காலமட்டும் படுத்துக்கொண்டிரு" என்பது, கர்த்த ராகிய இயேசுவின் வருகை வரை அல்லது மகிமையான உயிர்த் தெழுதலின் காலை வரை நாம் அவரது சமுகத்தில் தரித்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ரூத் போவாசின் பாதத்தில் தரித்திருந்ததுமுதல், போவாஸ் அவளுக்காகக் கிரியை செய்வதில் மிகவும் அலுவலாயிருக்கிறான்! அதற்கு முன் பல நாட்களாக அவனுடைய வயலில் அவள் வேலைசெய்து கொண்டிருந்த காலமெல்லாம் அவன் அவளுக்கு ஒரு சில நன்மைகளைச் செய்ததைத் தவிர, அவளுடைய சுகவாழ்வுக்காக இவ்வளவு தீவிரமாகக் கிரியை செய்ததாக நாம் காண்பதில்லை. ஆனால் இப்போதோ அவளுக்கு வேண்டியதையெல்லாம் அவன் தானே செய்கிறான். நாம் ஜெபத்தில் தேவ சமுகத்தில் அமர்ந்திருப்போ மாயின், நம் ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் தேவையான யாவற்றையும் அவர்தாமே நமக்காகச் செய்வார். நாம் அவரது பாதத்தில் அமர்ந்திராவிட்டால், கர்த்தருக்காக ஒன்றுமே செய்யக்

கூடாதபடிக்குப் பிசாசானவன் நம்மை மிகுந்த அலுவலுள்ள வர்களாக்கிவிடுவான்! மாற்கு 5:5-இல் இரவும் பகலும் எப்பொழுதும் மிகவும் அலுவலாயிருந்த ஒருவனைக் குறித்து நாம் வாசிக்கிறோம்: "அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லு களினாலே தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான்". அவன் எவ்வளவு அலுவலாயிருந்திருக்கிறான் என்று பாருங்கள்! மலை களுக்கு ஓடுவதும், கல்லறைகளுக்குத் திரும்பி வருவதுமாக அவன் எப்போதும் இராப்பகலாக மிகுந்த அலுவலாயிருந்தான்! ஆனால் அவன் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் வந்தபோதோ புத்தி தெளிந்தவனாய், தன் தீராத அலுவலிலிருந்து ஓய்வு பெற்றவனாய் அமர்ந்திருப்பதை நாம் காண்கிறோம் (வச. 15). கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கக்கூடாதவர்கள் சொஸ்தபுத்தி யுள்ளவர்களல்லர் என்பதை இதினின்று நாம் விளங்கிக்கொள் கிறோம். கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்ளாத வர்கள் தெளிந்த புத்தியற்றவர்களாய், தங்கள் அனுதின ஜீவி யத்தில் தங்களைத் தாங்களே காயப்படுத்திக்கொண்டும், கூக்குர லிட்டுக்கொண்டும் இருப்பார்கள்.

மூலபாஷையில் 'விதவை' என்பதற்கும், 'ஊமை' என்ப தற்கும் ஒரே பதமே உபயோகிக்கப்பட்டுள்ளது. விதவையாய் அதாவது ஊமையாய் இருந்த ரூத்துக்காக இங்கே போவாஸ் தன் வாயைத் திறக்கிறான் (ரூத் 4:1-10). "ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 31:8). விதவையும், திக்கற்ற வளும், ஏழையும், உதவியற்றவளும், அந்நிய தேசத்தாளுமா யிருந்த ரூத் போவாசின் பாதத்தண்டை இருந்த நேரம்முதல், அவன் அவளுக்காகத் தீவிரமாகக் கிரியை செய்வதில் மிகவும் அலுவலாயிருந்து, அவளை மீட்டுக்கொள்வதிலும், அவளுக்கு உதவி செய்வதிலும், அவளுடைய சுகவாழ்வுக்காகச் சகலத்தையும் ஒழுங்குபடுத்துவதிலும் முனைந்துநின்றான். ரூத்தோ தனக்கென்று யாதொன்றும் செய்யாமல் இளைப்பாறிக்கொண்டிருந்தாள்!



(ரூத் 3:14, 18). தேவபிள்ளையே, நீ பலதரப்பட்ட பிரச்சினை களைச் சந்திக்கும்போது கர்த்தரின் பாதத்தில் அமரிக்கையுடன் அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்வாயாகில், அவரே உனக்காக எல்லா வற்றையும் செய்வார். நீ தேவ சமுகத்தில் உன் இருதயத்தை ஊற்றி விடும்போது, அவர் உனக்காகக் கிரியை செய்வதில் அலுவலா யிருப்பார்; உன் யுத்தங்கள் எல்லாவற்றையும் அவர்தாமே செய்வார்; நீயோ உன் ஆவியில் இளைப்பாறிக்கொண்டிருப்பாய்!

***"அவள் விடியற்காலமட்டும் அவன் பாதத்தண்டையில் படுத்தி ருந்து, களத்திலே ஒரு ஸ்திரீ வந்ததாக ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று அவன் சொல்லியிருந்தபடியால், ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தாள்"*** (ரூத் 3:14).

## மகிமையான உயிர்த்தெழுதல்!

அன்று போவாசின் களத்தில் பலர் படுத்துறங்கிக்கொண் டிருந்தனர். களத்தில் இருந்த அனைவரும் உறங்கிக்கொண்டி ருந்தபோது, முதலாவதாக போவாஸ் பாதிராத்திரியிலே எழுந் திருந்தான் (ரூத் 3:8). இது, உயிர்த்தெழுதலின் வரிசையில் கிறிஸ்துவே மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் என்ப தற்கு நிழலாட்டமாயிருக்கிறது (கொலோ. 1:18). "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பல னானார்" என நாம் வாசிக்கிறோமே! (I கொரி. 15:20). பின்பு விடியற்காலம் வரை போவாசின் பாதத்தண்டை படுத்திருந்த ரூத் அதிகாலையிலே, ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தாள். இது கர்த்தருடைய இரகசிய வருகை யில் அவருடையவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறிக்கிறது. இது முதலாம் உயிர்த்தெழுதலின் இரண்டாம் வரிசையாகும். "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவ ருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (வச. 23). மற்றவர்கள் எழுந்திருக்கும் முன்னதாகவே ரூத் எழுந்திருந்தாள். அவள்

எழுந்திருந்தபோது யாரும் அதைப் பார்க்கவில்லை. அவ்வாறே, பூரணமாக்கப்பட்டவர்களான ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் யாரும் அதை அறியா திருப்பர். ஆகவேதான் அது 'இரகசிய வருகை' என அழைக்கப் படுகிறது. போவாசின் களத்தில் படுத்திருந்த மற்றவர்கள் பிற்பாடு விழித்தெழுந்திருக்கக் கூடும். ஆனால் அவர்கள் துயில் எழுவதற்கு முன்னே ரூத் போய்விட்டாள்! அவ்வண்ணமாகவே உயிர்த்தெழுதலின் மற்ற வரிசைகளில் பங்கடைவோர் உயிர்த் தெழுமுன்னதாகக் கிறிஸ்துவின் மணவாட்டி இப்பூமியினின்று எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பாள்!

களத்திலே ஒரு ஸ்திரீ வந்ததாக ஒருவரும் அறிய வேண்டாம் என்று போவாஸ் விரும்பினான். அவன் தன்னுடைய கனத்தையும் நற்பெயரையும் பாதுகாத்துக்கொள்ளும்படியாக மாத்திரம் அல்ல, அந்த இளம் விதவையின் நற்பெயரும் பாதுகாக்கப்படும்படியாகவே அவ்விதம் விரும்பினான். அது மாத்திரமல்ல, போவாசைப் பார்க்கிலும் மிக நெருங்கின உறவின் முறையான் ஒருவன் அவளுக்கு இருந்தான். அவன் அவளுக்குச் செய்ய வேண்டிய கடமையினின்றும் உத்தரவாதத்தினின்றும் விலகிக்கொள்வதற்கு ஏதுவாக அவளைக் குறித்துத் தவறான வதந்தி உண்டாகாதபடிக்கும் போவாஸ் இவ்வாறு எண்ணியி ருக்கக் கூடும்.

***"அவன் அவளை நோக்கி: நீ போர்த்துக்கொண்டிருக்கிற போர்வையை விரித்துப்பிடி என்றான்; அவள் அதைப் பிடித்த போது, அவன் அதிலே ஆறுபடி வாற்கோதுமையை அளந்து போட்டு, அவள்மேல் தூக்கிவிட்டு, பட்டணத்திற்குப் புறப் பட்டுவந்தான். அவள் தன் மாமியினிடத்தில் வந்தபோது, அவள்: என் மகளே, உன் செய்தி என்ன என்று கேட்டாள்; அப்பொழுது அவள்: அந்த மனுஷன் தனக்குச் செய்ததை யெல்லாம் அவளுக்கு விவரித்தாள். மேலும் அவர், நீ உன் மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போக வேண்டாம் என்று***



***சொல்லி, இந்த ஆறுபடி வாற்கோதுமையை எனக்குக் கொடுத்தார் என்றாள்"*** (ரூத் 3 : 15 – 17).

**கிருபையின் திரட்சி:**

அதிகாலையில் ரூத் எழுந்திருந்தபோது, போவாஸ் அவள் போர்த்துக்கொண்டிருந்த போர்வையை விரித்துப் பிடிக்கச் சொல்லி, அதிலே ஆறுபடி வாற்கோதுமை அளந்துபோட்டு, அவள்மேல் தூக்கிவிட்டு, பட்டணத்திற்கு வந்தான். போவாஸ் ரூத்துக்கு விடியற்காலையில் அளந்துபோட்ட ஆறுபடி வாற் கோதுமை, கிறிஸ்துவின் நாளில் ஜெயங்கொண்ட பரிசுத்தவான் களுக்கு அருளப்படும் கிருபையின் திரட்சியைக் குறிக்கிறது. "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" என திருவசனம் கூறுகிறது (I பேதுரு 1 : 13). ரூத் போர்த்துக்கொண் டிருந்த போர்வை, நம்முடைய சாவுக்கேதுவான சரீரத்திற்கு அடையாளமாயிருக்கிறது (II கொரி. 5 : 1 – 5). "இந்தக் கூடாரத்தி லிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் *போர்வையைக்* களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் *போர்வை* தரித்தவர்களா யிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்" என அப். பவுல் எழுது கிறார் (வச. 4). கர்த்தராகிய இயேசு பிரசன்னமாகும் அந்தப் பிரகாசமான விடியற்காலத்தின்போது அவருடைய கிருபையின் திரட்சி நமக்கு அளிக்கப்படும். அக்கிருபையினால் நம்முடைய அற்பமான சரீரம் இமைப்பொழுதினில் மறுரூபமடையும்! கர்த்த ருடைய இரகசிய வருகையில் அதாவது அந்த உயிர்த்தெழு தலின் காலையில் – (i) அழிவுள்ள நம் சரீரம் ***அழிவில்லாததாயும்*** (incorruptible) (I கொரி. 15 : 42), (ii) கனவீனமுள்ள நம் சரீரம் ***மகிமையுள்ளதாயும்*** (glorious) (வச. 43), (iii) பலவீனமுள்ள நமது சரீரம் ***பலமுள்ளதாயும்*** (powerful) (வச. 43), (iv) நம் ஜென்ம சரீரம் ***ஆவிக்குரியதாயும்*** (spiritual) (வச. 44), (v) மண்ணான நம்முடைய சரீரம் ***வானத்துக்குரியதாயும்*** (heavenly) (வச. 48), (vi) சாவுக்

கேதுவாகிய நம்முடைய சரீரம் ***சாவாமையுள்ளதாயும்*** (immortal) (வச. 53) எழுந்திருக்கும். இந்த ஆறு அனுபவங்களையும் அவருடைய கிருபையின் திரட்சியினாலேயே நம் அற்பமான சரீரம் அந்த இமைப்பொழுதினில் பெற்று மறுரூபமடையும்!

மேலும் 'ஆறுபடி வாற்கோதுமை' என்பது, ஒரு நபர் சுமக்கக்கூடிய மிகவும் அதிகமான நிறை அளவாகும். இது நமக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையைக் குறிக்கிறது. "காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என அப். பவுல் எழுதுகிறார் (II கொரி. 4 : 17). ரூத் சுமந்துகொண்டு வந்தது அவளுடைய மாமியும் மற்ற அனைவரும் காணக்கூடியதாய் இருந்தது போல, நம்முடைய உயிர்த்தெழுதலின் சரீரத்தில் உண்டாயிருக்கப்போகிற மகிமை பிறர் காணக்கூடியதாகவும் பிரத்தியட்சமானதாகவும் இருக்கும். ஆரம்பம் முதற்கொண்டே ரூத் போவாசினிடத்தில் யாதொன்றும் கேட்காமலேயே அவன் தானாக மனமுவந்து அவளுக்குப் பல ஈவுகளை மென்மேலும் அளித்துக்கொண்டேயிருந்தான். *தன் வயலில்* அவளைச் சந்தித்த முதல் சந்திப்பிலிருந்து இப்போது *தன் களத்தில்* அவளைச் சந்தித்தது வரை அவன் அவளுக்குச் செய்த உபகாரங்களும், அவள் மேல் பாராட்டிய தயவும் மென்மேலும் அதிகரித்துக் கொண்டே வருவதை நாம் காண்கிறோம். அவ்விதமாகவே 'கிறிஸ்துவின் பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபை யின்மேல் கிருபைபெற்றோம்' (யோவான் 1 : 16). கடைசியாக, மகிமையின் நாளில் நாம் அவருடைய கிருபையின் திரட்சியைப் பெற்று, அவருடன் விண்ணில் பறந்தேகுவோம்!

## கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளுதல்:

ரூத்தின் சரித்திரத்தின் 2 - ஆம் அதிகாரத்தில் ரூத் போவாசின் முன் தரையிலே முகங்குப்புற விழுந்ததாக, அதாவது



அவனுடைய ***பாதத்தில் விழுந்ததாகவும்,*** அதின் 3 - ஆம் அதி காரத்தில் அவள் அவனுடைய ***பாதத்தண்டை*** படுத்திருந்ததாக, அதாவது **விழுந்து கிடந்ததாகவும்** நாம் பார்க்கிறோம். ஆனால் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் இரு வித்தியாசமான நோக்கங் களுடன் அவள் அப்படிச் செய்தாள். 2 - ஆம் அதிகாரத்தில், போவாஸ் தன்னிடத்தில் பட்சமாய்ப் பேசினபடியினாலும், தன் மேல் தயை பாராட்டி, தனக்குச் சில நன்மைகளைச் செய்தபடி யினாலும் அவள் தன் தகுதியின்மையை உணர்ந்தவளாய், நன்றி யுணர்வுடன் அவனுடைய பாதத்தில் விழுந்தாள். அது அவ ளுடைய ஆரம்ப அனுபவமாயிருந்தது (வச. 10). அவள் பொறுக் கிக்கொள்ளும்படி நிறைய கதிர்கள் சிந்தவிடப்படுதல், போவாசின் வேலைக்காரரோடு சேர்ந்து உணவருந்த அழைக்கப்படுதல், வறுத்த கோதுமை, அப்பம், காடி, தண்ணீர் இவற்றில் பங்கு கொள்ளுதல் போன்ற பல நன்மைகள் போவாசின் வயலில் அவளுக்குக் கிடைத்தன. ஆகிலும் போவாசிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்டவைகளில் மாத்திரம் அவள் திருப்தியடைந்து விடவில்லை. 3 - ஆம் அதிகாரத்தில் அவள் தனிமையாக அவனைச் சந்திக்கும்படி அவனது களத்திற்குச் சென்று, அவ னுடைய பாதத்தண்டை விழுந்து கிடந்தாள். இந்த விசை அவள் அவனிடத்திலிருந்து ஏதேனும் பொருள் சம்பந்தமான நன்மை களைப் பெற்றுக்கொள்வதற்காக அல்ல, ***போவாசையே*** தான் அடைந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனேயே அப்படிச் செய்தாள். போவாசினிடத்திலிருந்து கிடைக்கும் ஆதாயங்களை அல்ல, போவாசையே தனக்கு முற்றிலும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென அவள் விரும்பினாள்!

நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் தரமும் இவ்வித மாகவே இருக்க வேண்டும். முதலாவதாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும், நம் சரீர சுகத்திற்காகவும், மற்றும் பல ஒத்தாசைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் நாம் கர்த்த ராகிய இயேசுவினிடத்தில் வந்திருக்கக் கூடும். ஆயினும், நாம்

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்துவருகையில், அவரிடத்திலிருந்து நாம் பெற்றனுபவிக்கிற கிருபைகள், வரங்கள், நன்மைகள், ஆசீர்வாதங்கள் போன்றவற்றில் மாத்திரம் திருப்தி யடைந்துவிடலாகாது. நாம் கர்த்தராகிய இயேசுவோடு ஒரு நெருங்கிய, ஆழமான, நிலையான, தனிப்பட்ட உறவை வைத்துக் கொள்வதற்காக அவரை நாட வேண்டும். வேறெந்த ஆதாயத்திற் காகவும் அல்ல, ***அவரை ஆதாயப்படுத்திக்கொள்வதற்காகவே*** நாம் அவரை நாடிச் செல்ல வேண்டும். 'ஆண்டவராகிய இயேசு வினிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய வேறெதுவும் அல்ல, ***அவரே*** எனக்கு வேண்டும்!' என்று நம் ஆத்துமா அவர் பேரிலேயே ஏக்கங்கொண்டிருக்க வேண்டும்; "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" என்று சங்கீதக்காரன் கூறுகிறவண்ணமாக (சங். 42 : 1), நம் ஆத்துமா அவருக்காகவே ஏங்கித் தவிக்க வேண்டும். "தேவனே, நீர் *என்னுடைய தேவன்;* அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றது மான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" ; "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்" (சங். 63 : 1 ; ஏசாயா 26 : 9) என்பதே நம் உள்ளத்தின் அறிக்கையாயிருப்பதாக. ரூத் தன்னையே முற்றிலுமாகப் போவாசுக்கு அர்ப்பணிக்க விரும்பி னாள்! தன்னுடைய அன்பு, பாசம், பற்று - அனைத்தையும் அவனுக்கே அளிக்க அவள் முன்வந்தாள்! ஏதோ ஒருசில நன்மைகளுக்காகவோ, இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவோ கர்த்தரைத் தேடுதலாகிய சாதாரணமான நிலையிலுள்ள நட்புறவு கொள்ள அல்ல, அவரோடு உன்னதமானதும் உயர்தரமானதும் நிரந்தரமானதுமான ஆழ்ந்த உறவுகொள்ளும்படியாகவே நாம் நாட வேண்டும். தேவ ஊழியர்கள் இந்த ஆழ்ந்த அனுபவத்தை உடையவர்களாயிருந்தால் மாத்திரமே அவர்களால் விசுவாசி களுக்கும் அதைக் கற்பிக்க இயலும்.



2-ஆம் அதிகாரத்தில் ரூத் காணப்பட்ட நிலைமை யிலேயே இன்று தேவஜனங்களில் பலரும் இருக்கின்றனர். அவள் கொஞ்சம் கதிர் பொறுக்கிக்கொள்வதற்காகவும், அதைத் தொடர்ந்து கொஞ்சம் பாதுகாப்பும், தயவும், பொருள் சம்பந்தமான நன்மை களும் கிடைக்கப்பெறுவதற்காகவும் மாத்திரமே போவாசின் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தது போல, அவர்கள் தங்கள் குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படியாகவும், இம்மைக் குரிய ஆசீர்வாதங்களை நாடியும் சபைகூடுதல்களுக்கு வரு கின்றனர். கர்த்தர் அவர்களுடைய பிரச்சினைகளை நிவிர்த்தி செய்து, தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களை ஆசீர்வதிக் கிறார். அம்மட்டில் அவரோடுள்ள அவர்களது ஐக்கியம் நின்று விடலாகாது. "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என திருவசனம் நம்மை எச்சரிக்கிறதன்றோ? (I கொரி. 15 : 19). ரூத் போவாசோடு என்றென்று மாக உள்ள ஒரு நிரந்தரமான ஐக்கியத்தை நாடித் தேடியபோது, அவள் அவனுக்கு மனைவியானாள்; அதுமுதல் அவளுடைய மற்ற காரியங்கள் அனைத்தும் மிகச் சீரும் சிறப்புமாகப் பொறுப் பெடுக்கப்பட்டன! தம்மோடு நிலையானதொரு ஐக்கியத்தை அல்லது உறவை வைத்துக்கொள்ள நாடுகிறவர்களைச் சம்பூரண மாக ஆசீர்வதிக்கும்படி அவர் காத்துக்கொண்டிருக்கிறார்! இந்த நெருங்கிய ஐக்கியத்தைப் பெற்று, அதைப் பேணிக் காத்துக் கொள்ளும்படியாக - நாம் ஏற்கனவே கண்டபடி நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, அபிஷேகத்தைப் புதுப்பித்துக்கொண்டு, தீட்டுப்படுதலைத் தவிர்த்து அதாவது கர்த்தருக்கென்று நம்மை முற்றிலும் வேறுபிரித்துக்கொண்டு, நம்மை மென்மேலும் தாழ்த்தி இறங்கிவந்து, அவருடைய பாதத்தண்டை விழுந்துகிடப்போமாக. ரூத்தின் சரித்திரத்தில் புதைந்துகிடக்கும் ஆவிக்குரிய மறை பொருள்களை நாம் விளங்கிக்கொள்ளும்போது, அது எவ்வளவு அருமையானதொரு பொக்கிஷசாலையாயிருக்கிறது என்பதை நாம் கண்டுகொள்ளலாம்.

ரூத்தின் சரித்திரத்தில் போவாஸ்தான் முதலாவதாக ரூத்தைச் சந்திக்கிறான் (அதி. 2); அதன் பின்னர் ரூத் போவாசின் பாதத்தை நாடிச் செல்கிறாள் (அதி. 3). நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் வரிசைக் கிரமமும் இதுவே. முதலாவதாக, நாம் பாவிகளாயிருக்கையில் கர்த்தராகிய இயேசு நம்மைத் தேடி வந்தார். அவர் நம்மோடு பட்சமாய்ப் பேசி, நம்மைத் தம்முடைய வயலில், தம் வேலையாட்களுடன் இருக்கும்படி சேர்த்துக் கொண்டார். இப்போது நாம் அவருடைய பாதத்தையே நாடி, அவரை முற்றிலும் நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்.

போவாசின் வயலுக்கு வந்த ரூத், அவன் எவ்வளவு தயவும் கனிவுமுள்ளவன் என்பதைக் கண்டுகொண்டாள். கர்த்தருடைய வயலில் அவருக்கு ஊழியம் செய்கிறவர்கள் அவரை அறிந்து கொள்ளும் அளவிற்கு, சாதாரணமான தேவபிள்ளைகள் அவரை அறிந்துகொள்ள இயலாது. கர்த்தரின் சேவையிலேயே அன்றி, வேறெங்கும் நாம் அவரைச் சரியாக அறிந்துகொள்ள முடியாது. நாம் அவருக்கு ஊழியம் செய்யும்போது மாத்திரமே அவரை அறியவேண்டிய பிரகாரமாக அறிந்துகொள்ள முடியும். ஆகவே கர்த்தருக்கு ஊழியஞ்செய்தல் ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய சிலாக்கியமாகும். ஆரம்பத்தில் ரூத் போவாசின் வயல்நிலத்திற்கு 'இரந்துண்ணும் ஒரு பரதேசியைப் போல' எளிமையானவளாகக் கதிர்பொறுக்கச் சென்றாள்; இறுதி வரை அவள் தன் மனத்தாழ்மையைக் காத்துக்கொண்டாள். அவ்வாறே ***நாமும் மெய்யான மனத்தாழ்மையுடன் கர்த்தருக்கு ஊழியம் செய்யத் துவங்கி, மனத்தாழ்மையிலேயே இப்பூமியில் நம் சேவையை முடிப்போமாக.*** ஆரம்பத்தில் போவாசின் பாதத்தில் விழுந்து வணங்கிய ரூத் முடிவாக அவனுடைய பாதத்தண்டையிலேயே ஒரு இராமுழுவதும் விடியற்காலம் வரை படுத்துக் கிடந்தாள். அவ்வாறே, ஆரம்பத்தில் கர்த்தரின் பாதத்தில் விழுந்து வணங்கிய நாம், 'மகிமையான விடியற்காலம்' வரை இராமுழுவதும் அவரது பாதத்தண்டையிலேயே விழுந்துகிடப்போமாக.



ரூத் மென்மேலும் தன்னைத் தாழ்த்தியபோது, காரியங்கள் படிப் படியாக அவளுக்குச் சாதகமாக மாறுதலடைந்து, முடிவாக அவள் போவாசைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டது போல, மெய்யான மனத்தாழ்மையினால் நாம் அவரை ஆதாயப்படுத்திக்கொள்வோமாக; அவரே நம் ஆத்துமாவின் ஒரே வாஞ்சையாயிருப்பாராக. 'ஆண்டவரே, உம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறவைகளை அல்ல, ***உம்மையே*** என் உள்ளம் நாடுகிறது' என்று நம்முடைய ஒவ்வொரு அணுவும் கர்த்தரை நோக்கிக் கதறுவதாக!

தேவபிள்ளையே, ரூத் போவாசோடுள்ள நிரந்தரமான ஐக்கியத்தையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தது போல, கர்த்தரோடு முறிக்கப்படாத, நிலையானதோர் ஐக்கியம் உனக்கு உண்டா? கர்த்தராகிய இயேசுவை - அவருடைய அன்பு, தூய்மை, தாழ்மை போன்ற தெய்வீக சுபாவங்களையே - அதிகமதிகமாக அடைந்துகொள்ள வேண்டும் என்ற தீராத ஆவல் உனக்கு உண்டா? அப்படிப்பட்ட ஓர் ஆவல் உனக்கிருக்குமாயின், முழு இரவும் கூட நீ அவரது பாதத்தில் விழுந்துகிடக்க விரும்புவாய். நீ வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாகவே அவர் உனக்குச் செய்ய வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். அப். பவுலைப் போல, 'எப்படியாயினும் நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும்' என்பதே உன் உள்ளத்தின் ஒரே ஏக்கமாயிருப்பதாக (பிலி. 3 : 9). அப்போது அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

**வெறுமையும் நிறைவும்:**

"நீ உன் மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போக வேண்டாம்" என்று கூறி, போவாஸ் தன் பாதத்தண்டை வந்த ரூத்தை அவள் சுமக்கக்கூடிய நிறைபாரமான வாற்கோதுமையுடன் அனுப்பிவைத்தான். கர்த்தராகிய இயேசுவின் பாதத்திற்கு வருகிற எவரும் வெறுமையாய்த் திரும்புகிறதில்லை. ஆம்! தம் பாதத்தண்டை அமர்ந்திருக்கிறவர்களை அவர் ஒருபோதும்

வெறுமையாய் அனுப்பிவிடுகிறதில்லை. போவாசினிடத்திலிருந்து திரும்பிப் போகையில் ரூத் நிறைவான தானியத்துடன் சென்றது போல, கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருப்பவர்கள் அவரிடத்திலிருந்து நிறைவான ஆசீர்வாதங்களைப் பெற்றுத் திரும்புவர். நம்முடைய அனுதின ஜெப ஜீவியத்தில், நாம் தேவ சமுகத்திற்குச் செல்லுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் – கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருக்கும்படி ஒருவேளை மிகக் குறுகிய நேரம் மாத்திரமே நமக்குக் கிடைத்தாலும் – அவரிடத்திலிருந்து நிச்சயமான ஆசீர்வாதங்களையும், அவரது வார்த்தைகளையும் பெற்றுக்கொண்டோம் என்ற நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும். ***கர்த்தரின் பாதத்தண்டை அமர்ந்திருத்தல்*** என்பது, நம்மை நாமே தாழ்த்தி, இவ்வுலகில் கடைசியான இடத்தை எடுத்துக்கொண்டு, மெய்யான மனத்தாழ்மையுடன் அவருடைய சமுகத்திற்குச் செல்வதாகும். நம்முடைய ஜெபம் மேலோட்டமானதாக இருக்குமாயின், வெறுமை உணர்வுடனேயே நாம் தேவ சமுகத்தினின்று கடந்து செல்ல வேண்டியதாயிருக்கும். மாறாக, நாம் மெய்யாகவே கர்த்தரின் முகத்தைத் தேடுவோமாயின், அளவிறந்த ஆசீர்வாதங்களுடன் அவர் நம்மைச் சந்திப்பார்; அவர் தனிப்பட்ட விதத்தில் நம்மோடு பேசுவார். இவை யாவும் நாம் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியம் கொள்வதிலேயே தங்கியிருக்கின்றன.

வெறுமையானவளாய்ப் போவாசினிடத்திற்குச் சென்ற ரூத் நிறைபாரமான தானியத்தைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள் (ரூத் 3 : 17). ஆனால் முன்னொரு நாள் நிறைவுள்ளவளாய் யூதா தேசத்தை விட்டு வெளியே சென்ற நகோமியோ வெறுமையாய் வீடு திரும்பினாள்! (ரூத் 1 : 21). இவ்விருவருக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்! நகோமி தேவ சமுகத்தை விட்டு விலகிச் சென்றதே அவள் வெறுமையானதின் காரணமாகும். *அவளுடைய வீடு வெறுமையாயிற்று* – அவளுடைய புருஷனும் பிள்ளைகளும் மரணமடைந்தனர்! *அவளுடைய பணப்பை வெறுமையாயிற்று* – அவள் பசியாற்றுவதற்காகத் தன் மருமகளைக் கதிர்



பொறுக்கி வரும்படி வயல்வெளிகளுக்கு அனுப்புமளவிற்கு வறுமையடைந்தாள்! *அவளுடைய உள்ளமும் வெறுமையாயிற்று* – யாதொரு நம்பிக்கையுமற்று அவள் நிராசையடைந்திருந்தாள்! இதன் மூலம் கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார்! தேவ சமுகத்தை விட்டு விலகுதலின் முடிவு வெறுமையாயிருக்கும்; தேவ சமுகத்தை நாடிச் செல்வதின் முடிவோ நிறைவான ஆசீர்வாதமாயிருக்கும்!

***“அப்பொழுது அவள்: என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாற மாட்டான் என்றாள்”*** (ரூத் 3 : 18).

### யாவையும் செய்து முடிப்பவர்:

மேற்கூறப்பட்டுள்ளவை போவாசைக் குறித்து நகோமி ரூத்திடம் கூறிய வார்த்தைகளாகும். ஆரம்பத்தில் நகோமி பின்மாற்றமும் வாழ்க்கையில் நிராசையும் அடைந்தவளாகவும், கடின உள்ளங்கொண்டவளாகவும் இருந்ததாக நாம் கண்டோம். ரூத் அவளோடுகூட யூதா தேசத்திற்கு வர விரும்பியபோது, நகோமியோ (அவளைத் தன் சொந்த தெய்வங்களண்டைக்குப் போகும்படி மீண்டும் மீண்டும் வறுபுறுத்தி) அவளுக்குத் தவறான ஆலோசனையையே அளித்துக்கொண்டிருந்தாள். ரூத் கதிர் பொறுக்கச் சென்றபோதும், போவாசின் வயலுக்குச் செல்லும்படி அவளுக்கு ஆலோசனை சொல்லக்கூட அவளுக்கு மனம் வரவில்லை. ஆனால் நாளடைவில் அவள் முற்றிலும் மாற்றப்பட்டாள்! அது முதல் அவள், போவாஸ் எவ்வளவு அன்பும் தயவும் கனிவுமுள்ளவன் என்பதை ரூத்திடம் கூறியதாகவும், ரூத்தின் ஜீவியமே நகோமியில் உண்டான இம்மாறுதலுக்குக் காரணம் என்றும் நாம் ஏற்கனவே கண்டோம். இப்போது அவள் அவனைக் குறித்து நம்பிக்கையூட்டும் வார்த்தைகளை ரூத்திடம் கூறுகிறாள்! மிகவும் கடின உள்ளங்கொண்டவர்களும் நம் ஜீவியத்தின் மூலமாக மிகச்

சிறந்த பரிசுத்தவான்களாக மாற முடியும் என்னும் பெரிய பாடத்தை நாம் ரூத்தின் சரித்திரத்தின் வாயிலாகக் கற்றுக்கொள் கிறோம்.

ரூத் போவாசின் பாதத்தண்டை இருக்கும்படி சென்றபோது, சூழ்நிலைகள் அவளுக்கு அவ்வளவு சாதகமாய் இருக்கவில்லை. "நீர் சுதந்தரவாளி" என்று அவள் உரிமையுடன் அவனை அணு கியபோது, "என்னிலும் கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக் கிறான். … அவன் உன்னை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தா னேயாகில், நான் உன்னைச் சுதந்தரமுறையாய் விவாகம்பண்ணு வேன்" என்ற நிச்சயமற்ற ஒரு பிரதியுத்தரமே அவனிடத்திலிருந்து பிறந்தது (ரூத் 3 : 9 , 12 , 13). அவ்வேளையில் அவனிடத்திலிருந்து அவளுக்கு நிச்சயமான யாதொரு வாக்குறுதியும் கிடைக்கவில்லை. ஆயினும், "அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாறமாட்டான்" என்று நகோமி அதற்குப் பின் அவனைக் குறித்துக் கூறிய வார்த்தைகள் அவளில் நம்பிக்கையை மலரச் செய்தன! அந்த நம்பிக்கையும், அதற்காக அவள் பொறுமையுடன் காத்திருந்ததுமே அவளுக்கு வெற்றியை வருவித்தன.

"அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாறமாட்டான்" என்று போவாசைக் குறித்து நகோமி கூறுகிறாள். போவாஸ் கர்த்தராகிய இயேசுவுக்கும், நகோமி பரிசுத்த ஆவியானவருக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர். கர்த்தராகிய இயேசு கல்வாரிச் சிலுவையில் நம்மை மீட்கும் வேலையை நிறைவேற்றி முடித்தவராய், '*முடிந்தது*' என்று கூறி, இளைப்பாறும்படி தம் தலையைச் சாய்த்து, தம் ஆவியை ஒப்புக் கொடுத்தார் (யோவான் 19 : 30). பாவமன்னிப்பாகிய இரட்சிப்பில் நம்மில் அவர் ஒரு நற்கிரியையைத் தொடங்கினார்; நம் சரீர மீட்பாகிய கடைசி இரட்சிப்பில் அது நிறைவுபெறும். அவர் நம்மில் ஆரம்பித்த அந்த நற்கிரியையை நிச்சயமாகவே நிறை வேற்றி முடிப்பார். "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர்



அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி" (பிலி. 1 : 5) என அப். பவுல் எழுதுகிறார். அவர் அதை நம்மில் நிறைவேற்றி முடிக்குமுன் இளைப் பாறுவதில்லை. "என் மகளே … பொறுத்திரு" என்பது ஆங்கி லத்தில், 'என் மகளே, அமர்ந்திரு (sit still)' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நம்மில் தாம் ஆரம்பித்த நற்கிரியையை ***அவரே*** நம்மில் நிறைவேற்றி முடிப்பார் என்ற விசுவாசத்துடன் நாம் அவருடைய பாதத்தண்டை அமர்ந்திருப்போமாக. நாம் அவருடைய பாதத்தில் அமர்ந்திருப்போமாகில், அவரால் நமக்காகக் கிரியை செய்யாமல் அமர்ந்திருக்கவே முடியாது. "அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சி யாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்" (ஏசாயா 62 : 7) என எழுதப்பட்டுள்ளது. நம் ஜீவியத்தில் அவ ருடைய வேலை முழுவதுமாய் முற்றுப்பெறும் நாளில், "ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்று பரலோகத்தின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் திருவுளம் பற்றுவார்! (வெளி. 21 : 5, 6). அது வரை நாம் அவருடைய உண்மையையும் வல்லமையையும் சற்றும் சந்தேகிக்காமல், விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் நீடிய பொறுமையுடனும் அவரில் அமர்ந்திருக்க வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்பிக்கிறார் (எபி. 6 : 11, 12, 15 ; 10 : 36). தேவபிள்ளையே, அவர் தாம் உனக்காகக் குறித்திருக்கிறவைகளை நிச்சயமாகவே உன்னில் நிறைவேற்றி முடிப்பார் (சங். 138 : 8 - Eng.). இம்மட்டும் உன்னை வழிநடத்தியவர் முடிவுபரியந்தம் நித்தமும் உன்னை நடத்தி, பூரணப்படுத்தி, தம் மகிமையில் சேர்த்துக்கொள்வார். உன்னில் பூரணத்தைக் காணுமட்டும் அவர் ஓய்வதில்லை. தம் முடைய வருகையில் உன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி உன்னை ஆயத்தப்படுத்துகிறவர் அவரே! (II கொரி. 5 : 2, 5). "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" என்று கூறப்பட்டுள்ளதே! (I தெச. 5 : 23, 24). இப்படியிருக்க, அந்நாளில் நீ கைவிடப்படுவாயாகில், நீ உன் வாழ்வில்

மனப்பூர்வமாக இடமளிக்கும் மறைவான பாவங்கள் மட்டுமே அதின் காரணமாயிருக்க முடியும்!

கர்த்தர் உன்னில் தம் வேலையை வெற்றியுடன் நிறை வேற்றி முடிக்கும்படி நீ ஒரு 'ரூத்'தாக இருப்பாயாக. பரிசுத்த மாக்கப்படாத சுபாவங்களுள்ளவர்களாய் உன்னோடிருக்கும் சில 'நகோமி'களைப் பற்றி நீ கவலைப்படாதே. உன் நற்கந்தமுள்ள ஜீவியத்தின் வாயிலாக அவர்களையும் தேவன் மாற்றுவார்!

'அவன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிப்பான்' என்று நகோமி உறுதியாகக் கூறுகிறாள். 'இன்றைக்குக் கர்த்தராகிய இயேசு வெளிப்படக் கூடும். இன்று அவர் வெளிப்படுவாராயின், அவ ருடைய கிருபையினால் நான் அவரோடு எடுத்துக்கொள்ளப் படுவேன்' என்பதே நம்முடைய உறுதியான விசுவாசமாகவும் அறிக்கையாகவும் இருக்க வேண்டும். நகோமி ரூத்திடம் போவாசைக் குறித்துச் சொல்லியிருந்தபடியே அவன் *அன்றையத் தினமே* ரூத்தைப் பற்றிய காரியத்தைச் செய்து முடித்தான் என நாம் 4 – ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். நம்முடைய போவா சாகிய ஆண்டவரின் உண்மையை நாம் விசுவாசித்து, அவரில் இளைப்பாறுவோமாகில், சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிற அவர் தம்முடைய மீட்பின் வேலையை வெற்றிகரமாக நம்மில் நிறைவேற்றி முடிப்பார். நம்மைப் பரிசுத்தஞ்செய்கிறவர் ***தம்முடைய பரிசுத்தத்திற்கு*** நம்மைப் பங்குள்ளவர்களாக்கி, தம் மகிமையில் சேர்த்துக்கொள்ளுவார் (எபி. 2 : 10 , 11 ; 12 : 10). அல்லேலூயா!

## அதிகாரம் 7

# மகிழ்ச்சிகரமான முடிவு!

### துரிதமாகச் செயல்படுபவர்!

போவாஸ் தன் களத்தில் ரூத்தோடு பேசிய அன்றையத் தினமே அவளுடைய விவாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டான்! அவன் இவ்வளவு தீவிரமாகச் செயல்படக் காரணம் என்ன? ரூத் மிகவும் அழகுள்ளவளாய், ஐசுவரிய முள்ளவளாய் இருந்ததினாலோ? அவள் மிகவும் அழகுள்ள வளாயிருந்தாள் என்று கூறுவதற்கு நமக்கு வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை. அவள் ஒருவேளை அழகுள்ள ஒரு பெண்ணாய் இருந்திருந்தாலும் - அவளது ஏழ்மையும், அவளுடைய வாழ்வில் நேரிட்ட சோக சம்பவங்களை அவ்வப்போது எண்ணியெண்ணி அவள் சிந்திய கண்ணீரும், அவள் மோவாபிலிருந்து கானானுக்கு நடந்துவந்த நீண்ட பயணமும், போவாசின் வயலில் நீண்ட நாட்களாகக் கடும் வெயிலில் அவள் மேற்கொண்ட கடின உழைப்பும் அவளது அழகைக் குலைத்திருக்கக் கூடும். மேலும் அவள் மிகவும் ஏழையான ஒரு விதவையும், அந்நிய தேசத்தைச் சேர்ந்தவளுமாயிருந்தாள். அவளைப் போலவே நாமும் ஒரு காலத்தில் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், அந்நியரும், பரதேசிகளுமாயிருந்தோம். நாம்



கர்த்தராகிய இயேசுவின் மணவாட்டியாகும்படி தெரிந்துகொள்ளப் பட்டது, அவர் நம்மேல் வைத்த தூய அன்பும் இரக்கமும் பரிவும் மாத்திரமே! அவர் நம்மைத் தெரிந்துகொள்வதற்கோ, நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி, நம்மை மீட்டுக்கொள்ளும்படி தம் இரத்தத்தையே கிரயமாகச் செலுத்துவதற்கோ நம்மில் எந்த நன்மையும் இருக்கவில்லை. ஆயினும் அவர்தாமே மனமுவந்து நம்மை மீட்டுக்கொள்ள முன்வந்தார்.

போவாஸ் ரூத்தை மீட்டுக்கொள்ளும்படி மிகத் துரிதமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது போல, நம்முடைய 'மீட்பர்' நமக்காக மிகத் துரிதமாகக் கிரியை செய்பவர்! 'போவாஸ்' என்ற பதத்திற்கு, 'துரிதமாகச் செயல்படுபவன்' (agile, fleetness) என்ற ஒரு பொருளும் உண்டு. "சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் *தீவிரமாய்* நடப்பிப்பேன்" (ஏசாயா 60 : 22) என்ற வாக்குத்தத்தம் மிகச் சிறியவளாகத் தன்னைத் தாழ்த்திய ரூத்தின் வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய நாள் வந்தது! தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ள வராயிருந்து, *சீக்கிரத்திலே* அவர்களுக்கு நியாயஞ்செய்வார் (லூக்கா 18 : 7 , 8) என்றும், "அவர் நீதியோடே *சீக்கிரமாய்த்* தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே *சீக்கிரமாகவே* காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" (ரோமர் 9 : 28) என்றும் நாம் வாசிக்கிறோமே! அவர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் ***செய்யவும்***, தமது வேலையாகிய அபூர்வமான வேலையை ***நிறைவேற்றவும்*** எழும்புவார் என்று கூறப்பட்டுள்ளபடி (ஏசாயா 28 : 21), அவரே நம்மில் தம்முடைய வேலையைத் தொடங்கி, அதைப் பூரணமாகச் செய்து முடிக்கிறவர்! "அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்கு முன் இளைப்பாற மாட்டான்" என்று நகோமி போவாசைக் குறித்துச் சொன்னபடியே (ரூத் 3 : 18), அவன் அன்று அதிகாலையிலேயே பட்டணத்திற்குப் புறப்பட்டு வந்தான் (ரூத் 3 : 14, 15 ; 4 : 1);

அன்றைக்கே அந்த வேலையை முடிக்குமுன் அவன் இளைப் பாறவுமில்லை! (ரூத் 4 : 10). நாம் தேவசித்தத்தில் இளைப்பாறுகிறவர் களாய் தேவசமுகத்தில் அமர்ந்திருக்கும்போது (sit still), கர்த்தர் நம்மைக் குறித்த தமது மகத்தான திட்டத்தை நம்மில் வெற்றிகர மாக நிறைவேற்றி முடிப்பார்.

சும்மாயிருப்பதே நமக்குப் பெலனாயிருக்கும் என திருவசனம் கூறுகிறது (ஏசாயா 30 : 7). 'அமர்ந்திருப்பதே' (sit still) நம் பெலன் என இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள் ளுங்கள்" என்று கர்த்தர் உரைக்கிறார் (சங். 46 : 10). ரூத் போவாசின் பாதத்தண்டை விழுந்துகிடக்கக் கற்றுக்கொண்ட சமயமே, அவன் அவளுக்காக எல்லாவற்றையும் செய்ய முனைந்ததின் ஆரம்பமா யிருந்தது! நாமும் இதனைக் கற்றுக்கொள்வோமாக. 'அதிகாலை யில் கர்த்தரோடு உறவாடும் அரை மணி நேரம், மாலையில் ஒரு மணி நேர பாவ அறிக்கையைத் தவிர்த்துவிடும்' என ஒரு பக்தன் கூறுகிறார். மாலையில் நாம் மனஸ்தாபத்துடன் கர்த்தரின் சமுகத்திற்குச் சென்று, 'ஆண்டவரே, இன்று நான் இன்னின்ன தவறுகளைச் செய்துவிட்டேன்; பிறரது செயல்களால் நான் என் மனதில் புண்பட்டிருக்கிறேன்; என் சிந்தையில் இன்னின்ன தவறுகள் வந்தன' என்றெல்லாம் அறிக்கை செய்ய வேண்டியதா யிராதபடி, அதிகாலையில் நாம் அவரைத் தேடுவோமாக.

***"போவாஸ் பட்டணவாசலில் போய், உட்கார்ந்துகொண் டிருந்தான்; அப்பொழுது போவாஸ் சொல்லியிருந்த அந்தச் சுதந்தரவாளி அந்த வழியே வந்தான்; அவனை நோக்கி: ஓய், என்று பேர் சொல்லிக் கூப்பிட்டு, இங்கே வந்து சற்று உட் காரும் என்றான்; அவன் வந்து உட்கார்ந்தான்"*** (ரூத் 4 : 1).

**கர்த்தரின் பொக்கிஷம்:**

ரூத்தை மீட்கும்படியாக, அதாவது அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும்படியாகப் போவாஸ் பட்டணவாசலுக்குச்



சென்றான். அவன் தன் களத்தில் ரூத்தோடு தனிப்பட்ட விதத்தில் பேசிய அன்றையத்தினம் அதிகாலையிலேயே அவளை மீட்கும் கிரியையில் ஈடுபடலானான். அவன் அறுவடை செய்திருந்த கோதுமையும் வாற்கோதுமையுமெல்லாம் இன்னும் அவனுடைய களத்தில்தான் இருந்தன; அவற்றைத் தூற்றும் வேலை இன்னும் முடிவு பெறவில்லை என்பதை இங்கு நாம் நினைவிற்கொள்ள வேண்டும். போவாசுக்கு மற்ற எல்லாவற்றையும் பார்க்கிலும் ரூத் தான் மிகவும் விலையேறப்பெற்றவளாய் இருந்தாள்! நம்முடைய 'போவாசாகிய' கர்த்தர் நம் மேல் பாராட்டியிருக்கும் அன்பு எவ்வளவு பெரியது! போவாஸ் ரூத்தைத் தனக்கு மனைவியாகக் கொள்ளும்படி கோதுமையையும் வாற்கோதுமையையும், தன் அலுவல்களையும் அப்படியே விட்டுவிட்டு, பட்டணவாசலுக்குச் சென்றான். ஆனால் நம்முடைய ஆண்டவரோ நம்மைத் தமக்குச் சொந்தமாக மீட்டுக்கொள்ள வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, பரலோகத்தில் தமக்கிருந்த மகிமையையும் கனத்தையும் பேரின் பத்தையும் மகத்துவத்தையும் துறந்தவராய், இந்த நிர்ப்பந்தமான பூமிக்கு இறங்கிவந்தார்: "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலி. 2 : 6 , 7). ரூத்தின் விஷயத்தில், அவளுக்கு மரணமடைந்த தன் புருஷனின் வம்சவழியில் போவாசின் மீது சிறிதளவாகிலும் உரிமை இருந்தது என நாம் கூறலாம். ஆனால் நம்மைப் பொறுத்த வரையிலோ, நம் தகுதியின்மையை ஒத்துக்கொள்வதைத் தவிர, எதையாகிலும் உரிமைகோரவோ, எதையாகிலும் அடைந்துகொள்ளப் பாத்திரர் என்று கூறிக்கொள்ளவோ நமக்கு ஒன்றுமே இல்லை! அப்படி யிருந்தும், பரலோகத்தைப் பார்க்கிலும், பரிசுத்த தூதர்களைப் பார்க்கிலும், வேறெதையும் பார்க்கிலும் நாமே அவருக்கு அதிக விலையேறப்பெற்றவர்களாயிருக்கிறோம்! "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்" என்றுரைத்தவர், நம்மைத் தமக்கே சொந்தமான பொக்கிஷம் என உரிமைகோருகிறார் (மல். 3 : 17).

***“அப்பொழுது அவன் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேரை அழைத்து, இங்கே உட்காருங்கள் என்றான்; அவர்களும் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவன் அந்தச் சுதந்தரவாளியை நோக்கி: எலிமெலேக் என்னும் நம்முடைய சகோதரனுக்கு இருந்த வயல்நிலத்தின் பங்கை, மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்த நகோமி விற்கப்போகிறாள். ஆகையால் நீர் அதை ஊராருக்கு முன்பாகவும், என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும் வாங்கிக்கொள்ளும்படி உமக்கு அறியப்பண்ணவேண்டும் என்றிருந்தேன்; நீர் அதைச் சுதந்தரமுறையாக மீட்டுக்கொள்ள மனதிருந்தால், மீட்டுக் கொள்ளும்; அதை மீட்டுக்கொள்ள மனதில்லாதிருந்தால், நான் அதை அறியும்படிக்கு எனக்குச் சொல்லும்; உம்மையும் உமக்குப்பின்பு என்னையும் தவிர, அதை மீட்கத்தக்கவன் வேறொருவனும் இல்லை என்றான்”*** (ரூத் 4 : 2 – 4).

**நகர வாசலுக்குப் புறம்பே!**

ரூத்தின் சரித்திரத்தில், ரூத்தை மீட்டுக்கொள்வதற்கான *திட்டம்* இரகசியமாக நடைபெற்றது. ஆனால் அவளை மீட்டுக் கொள்ளும் *கிரியையோ* வெளியரங்கமாக நடைபெற்றது. புதிய ஏற்பாட்டில் இது நம்முடைய இரட்சிப்புக்கு அடையாளமா யிருக்கிறது. முந்தின இரவில் போவாஸ் தனிப்பட்ட விதத்தில் ரூத்திடம், தான் அவளை மீட்டுக்கொள்ள ஆயத்தமாயிருப்பதாகக் கூறினான் (ரூத் 3 : 13). இது அவ்விருவருக்கும் மாத்திரமே தெரிந்திருந்தது; வேறொருவரும் இதனை அறிந்திருக்கவில்லை. நம்முடைய இரட்சிப்புக்கான திட்டமும் பரலோகத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய திரித்துவ தேவனால் இரகசிய மாகவே வகுக்கப்பட்டது (ஏசாயா 6 : 8 ; 48 : 16). ஆனால் நம்மை மீட்கும் கிரியையோ கல்வாரியில் நம் கர்த்தராகிய இயேசுவால் வெளியரங்கமாகச் செய்து முடிக்கப்பட்டது. போவாஸ் *‘பட்ட ணத்து வாசலில்’* ரூத்தை மீட்டுக்கொள்ளும்படியான கிரயம் செலுத்தியது போல (ரூத் 4 : 1, 9 , 10), நம்முடைய கர்த்தராகிய



இயேசுவும் நகர வாசலுக்குப் புறம்பே கல்வாரிச் சிலுவையில் பாடுபட்டு மரித்து (எபி. 13 : 12), நம்மை மீட்கும்படியாகத் தமது இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தினார். ‘நகரவாசலுக்குப் புறம்பே’ அதாவது இஸ்ரவேலின் பாளயத்துக்குப் புறம்பே என்பது புறக்கணிக்கப்பட்டவர்கள் தங்குமிடமாகும். நாமும் அவருடைய நிந்தையைச் சுமந்துகொண்டு, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் போகக்கடவோம் (வச 13). அவரோடு கூடப் பாடுபட வேண்டுமாயின், நாமும் அவர் இருக்கிற இடத்திற்கே – நகர வாசலுக்குப் புறம்பே – புறப்பட்டுச் செல்ல வேண்டும். நகரவாசலுக்குப் புறம்பே பாடுபடுதல் என்பது, நாம் பிறரால் புறக்கணிக்கப்படும்போது நம்மை நாமே தாழ்த்துவதைக் குறிக்கிறது. சில வேளைகளில் புறக்கணிக்கப்படுதல், தள்ளப் படுதல், துன்புறுத்தப்படுதல் போன்ற பாடுகளினூடே நாம் கடந்து செல்வதுண்டு. ஆயினும் நம்முடைய ஆவியிலுள்ள பெருமை தகர்க்கப்படாத நிலையிலேயே நாம் அப்பாடுகளை எதிர் கொள்கிறோம். ***பெருமையுள்ள ஆவியோடு நாம் அனுபவிக்கும் பாடுகள் நமக்குப் பிரதிபலனை வருவிப்பதில்லை; மனத் தாழ்மையுடன் பாடுபடுதலே பெரிதான பிரதிபலனை நமக்கு வருவிக்கும்.*** நாம் பாடுகளினூடே கடந்து செல்லும்போது கேள்விகேட்டு, முறுமுறுத்து, முறையிட்டுக்கொண்டிருப்போமாயின், நாம் தவறான மனப்பான்மையுடன் பாடுபடுவதால் அது பலனற்ற தாயிருக்கும்; அது நகரவாசலுக்குப் புறம்பே *‘கர்த்தரோடு’* பாடு படும் அனுபவமாயிராது. அவரோடு கூட நாம் பாடுகளைச் சகித்தோ மானால் – மனத்தாழ்மையுடன் பாடுபடுவோமானால் – அதுவே மிகுந்த பலனுள்ளதாயிருக்கும் (ரோமர் 8 : 17 ; II தீமோ 2 : 12).

ரூத்தை மீட்பதற்கான நடவடிக்கை மூப்பர்களின் முன் னிலையில் செய்யப்பட்டது. போவாஸ் பட்டணத்து மூப்பர்களில் பத்துப் பேரை அழைத்து, அவர்கள் முன்பாகவே இந்த மீட்பின் நடவடிக்கைகளைச் செய்தான். அவ்வாறே கர்த்தராகிய இயேசுவும் வெளியரங்கமாகச் சிலுவையிலறையப்பட்டு, நம்மை மீட்கும்

கிரியையைச் செய்து நிறைவேற்றினார். பழைய ஏற்பாட்டின் ‘அடிக்கப்பட்ட கன்மலை’, அவர் வெளியரங்கமாகச் சிலுவையில் அறையப்பட்டதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. இஸ்ரவேலின் மூப்பர்களின் கண்களுக்கு முன்பாகவே அக்கன்மலை அடிக்கப் பட்டது (யாத். 17 : 5 , 6). போவாஸ் மீட்பின் கிரயத்தைச் செலுத்தும் போதும் பட்டணத்து மூப்பர்கள் அவனைச் சூழ நின்றனர். நாம் செய்யும் ஊழியம் எதுவாயிருப்பினும், அது நம் மேல் உத்தர வாதமுள்ளவர்களாக நியமிக்கப்பட்டுள்ள பரிசுத்தவான்களாகிய மூப்பரால் அங்கீகரிக்கப்பட்டதாயிருக்க வேண்டும் என்ற மற்றொரு பாடத்தையும் இவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம்.

போவாஸ் பட்டணவாசலில் ‘*உட்கார்ந்து*’, ரூத்தினிமித்தம் பரிந்துபேசிக்கொண்டிருந்தது போல, இப்போது நம்முடைய ஆண்ட வராகிய இயேசுவும் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து, நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார் (ரோமர் 8 : 34).

**“ *அதற்கு அவன்: நான் அதை மீட்டுக்கொள்ளுகிறேன் என்றான். … நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக் கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்* ”** (ரூத் 4 : 4, 6).

“என்னிலும் கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான்” (ரூத் 3 : 12) என்று போவாஸ் ரூத்திடம் சொல்லியிருந்த நபரின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வார்த்தைகளை நாம் இங்கு காண்கிறோம். ரூத் 4 : 4 – இல், “நான் அதை மீட்டுக்கொள்ளு கிறேன்” என்று கூறிய அவன், 6 – ஆம் வசனத்தில், “நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்” என்று திரும்பத் திரும்பக் கூறுகிறான். நம்முடைய போவாசாகிய கர்த்தராகிய இயேசுவுக்கும் முன் பாகவே நமக்கு மிகவும் நெருங்கின உறவின்முறையானாக இருந்து, ஒன்றுக்கொன்று முரண்பட்ட வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருந்த இச்சுதந்தரவாளி யார்? அவனைக் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு



முந்தினதாயிருந்த ***நியாயப்பிரமாணத்திற்கும்*** (ரோமர் 8 : 2 , 3 ; கலா. 3 : 23), ஆவிக்கு முந்தினதாயிருக்கிற ***மாம்சத்திற்கும்*** நாம் ஒப்பிடலாம் (கலா. 4 : 23 , 29 ; யோவான் 3 : 6).

(i) ***நியாயப்பிரமாணம்:***

போவாசுக்கும் முந்தினவனாயிருந்த சுதந்தரவாளி செய்யா ததைப் போவாஸ் ரூத்துக்குச் செய்தான். அச்சுதந்தரவாளி அவளை மீட்டுக்கொள்ள மறுத்தபோது, போவாஸ் அவளை மனமுவந்து மீட்டுக்கொண்டான். அப்படியே, நியாயப்பிரமாணம் நமக்குச் செய்யக் கூடாதிருந்ததைத் தேவகுமாரன் நமக்குச் செய்தார். “அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும் படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்” (ரோமர் 8 : 3).

(ii) ***மாம்சம்:***

‘ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளி’ என்பது ‘நம்முடைய மாம்சத்தையும்’ குறிக்கிறது. “ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்ச மானது ஒன்றுக்கும் உதவாது” என நாம் வாசிக்கிறோம் (யோவான் 6 : 63). நம்முடைய மாம்சமோ, மாம்சத்தின் கிரியைகளோ, நம் சுய நீதியோ நம்மை மீட்டுக்கொள்ள முடியாது. ஆகிலும் மாம்ச மானது தன்னுடைய இயலாமையை முதலில் ஒத்துக்கொள்வ தில்லை. ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளி முதலில் சொன்னது போல, ‘நான் மீட்டுக்கொள்வேன்; என்னால் ஆகும்’ என்றே அது மேன்மைபாராட்டிக்கொண்டிருக்கும். நம் மாம்சம் ‘என்னால் இயலாது’ என்று தன் உண்மையான நிலைமையை ஒத்துக் கொள்ளும் வரை கர்த்தராகிய இயேசு நம்மை மீட்டுக்கொள்ளக் கூடாமல் அமர்ந்திருப்பார். ஆனால், ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளி அவளை மீட்டுக்கொள்ளத் தன்னால் இயலாதென்று கூறிய பின்னர் போவாஸ் அவளை மீட்டுக்கொண்டது போல, நம்

சுயமுயற்சிகளாலும், சுயநீதியாலும், மாம்சத்தின் கிரியைகளாலும் நம்முடைய ஆத்துமாவை மீட்டுக்கொள்ள நம்மால் இயலாது என்று நாம் ஒத்துக்கொண்ட பின்னரே அவர் நம்மை மீட்க முன்வருகிறார். இதையே ரூத் 3 : 13 – இல் உள்ள போவாசின் கூற்றில் நாம் நிழலாட்டமாகக் காண்கிறோம்: “அவன் உன்னைச் சுதந்தர முறையாய் விவாகம்பண்ணச் சம்மதித்தால் நல்லது, அவன் விவாகம்பண்ணட்டும்; அவன் உன்னை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தானேயாகில், நான் உன்னைச் சுதந்தரமுறையாய் விவாகம்பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன்”.

மாம்சமானது இயற்கையாகவே மேன்மைபாராட்டும் தன்மை யுள்ளது. ஒரு பாவியின் நிலையும் இதுவே. அவன் தன் சுய நீதியினாலும் திறமையினாலும் சாமர்த்தியத்தினாலும் தன்னைத் தானே விடுதலையாக்கிக்கொள்ளக் கூடும் என்று எண்ணுகிறான். அவனிலுள்ள மாம்சத்தின் மேன்மைபாராட்டல் – ரூத்தின் நெருங் கின சுதந்தரவாளியைப் போல – கர்த்தர் அவனை மீட்பதற்கு இடையூறாகவே இருக்கிறது. அது தன் இயலாமையை ஒத்துக் கொள்ளும்போது மாத்திரமே கர்த்தராகிய இயேசு அவனை மீட்டுக்கொள்ளும்படி அடியெடுத்து வைக்கிறார். அப்போது, கர்த்தராகிய இயேசுவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்பதை அவன் தன் ஜீவியத்தில் அறிந்துகொள்கிறான். நாம் மறுபடியும் பிறந்து, ஆவிக்குரிய அனுபவங்களுக்குள் வந்த பின்னருங்கூட, இந்த ‘நெருங்கின சுதந்தரவாளியின்’ தன்மையை உணர்ந்தவர்களாய் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ‘என் மாம்சத் தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை’ (ரோமர் 7 : 18), அதாவது ‘என்னில் நன்மை ஏதும் இல்லை; என்னால் ஒன்றும் இயலாது’ என நாம் ஒத்துக்கொள்ளும் வரை, *‘நம்முடைய போவாசினால்’* தம்முடைய மீட்பின் வேலையை நம்மில் தொடர இயலாது. நாம் அதை ஒத்துக்கொள்ளும்போதோ, அவர் மகிழ்வுடன் அக்காரியத்தைப் பொறுப்பெடுத்துக்கொள்கிறார். நம்முடைய



மாம்சத்தின் கிரியைகளால் அதாவது சுயமுயற்சிகளால் நாம் ஒருக்காலும் தேவநீதியை அடைந்துகொள்ள இயலாது என்பதை எப்போதும் நினைவிற்கொள்வோமாக.

**மகா ராஜாவின் சிங்காசனம்:**

ரூத்தின் நெருங்கிய சுதந்தரவாளி அவளை மீட்டுக்கொள்ள தன்னால் கூடாது என்று தன் இயலாமையைத் தெரிவித்து, அந்த உத்தரவாதத்தினின்று விலகிக்கொண்டபோது, அதற்குரிய சரியான நபராகிய போவாஸ் முன்வந்து, அவளுக்குத் தான் செய்ய வேண்டியதாயிருந்த தன் கடமையை நிறைவேற்றி, அவளை முற்றிலும் பொறுப்பெடுத்துக்கொண்டான். அவளுடைய ஆரம்பம் அற்பமானதாயிருந்தபோதிலும் முடிவு மகிழ்ச்சிகரமானதாயிற்று! கர்த்தரை அவருக்குரிய சரியான இடத்தில் வைக்கிறவர்கள் பாக்கியவான்கள்! அவர்களுடைய ஜீவியமும் முடிவும் வெற்றி கரமாயிருக்கும்.

கிறிஸ்து நம்முடைய ஜீவியத்தின் ஏதோ ஒரு மூலையை அல்ல, மத்திய ஸ்தானத்தையே உரிமை கோருகிறார். அவரையே நம் வாழ்க்கையின் மையமாய், மையப்பொருளாய் நாம் கொண் டிருக்க வேண்டும். மையப்பகுதியிலேயே அன்றி, வேறெதிலும் அவர் திருப்திகொள்கிறதில்லை. “உன் தேவனாகிய கர்த்தர் உன் **நடுவில்** இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப் பார்” என நாம் வாசிக்கிறோமே! (செப். 3 : 17). கர்த்தராகிய இயேசு சிலுவையிலறையப்பட்டபோதும் அவர் தம்மோடு சிலுவையில் அறையப்பட்டவர்களின் வலது பக்கத்திலோ, இடது பக்கத் திலோ அல்ல, மூவரில் நடுவராகவே தொங்கினார். ‘யூதருக்கு ராஜாவானவர்’ வேறெந்த இடத்தையும் வகிக்க இயலாது! நம் முடைய சிந்தைகள், நினைவுகள், எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் அனைத்திலும் அவரே நம் மையப்பொருளாய் இருப்பாராக. நம் ஜீவியம் முற்றிலும் அவரையே மையமாகக் கொண்டிருப்பதாக. அப்போது அவர் வல்லமையுள்ளவராயும், நம்மை இரட்சிக்கிறவராயும் நம் ஜீவியத்தில் வெளிப்படுவார். நாம்

ஒருவேளை தவறான யாதொன்றையும் சிந்திக்காமலிருக்கக்கூடும்; ஆயினும், நாம் அவரையே நம் சிந்தனையின் மையமாகக் கொள்ளாமல் இருக்கக் கூடும். அவர் தாமே நம்முடைய சிந்தனை களின் மையமாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நம்முடைய மணவாளன் நம்மைக் குறித்து மகா வைராக்கியங் கொண்டிருக்கிறார். நம் சிந்தனை மண்டலத்தின் மையப் பகுதியையே அவர் உரிமை கோருகிறார். நம் மனது அவருடைய சிங்காசனமாயிருக்க வேண்டும் என அவர் வைராக்கிய வாஞ்சை யுள்ளவராயிருக்கிறார். தன் மனைவியின் பேரில் உரிமை பாராட்டும் ஒரு புருஷனைப் போல, நம் ஆத்தும நேசர் நம்மை முழுவதுமாகச் சொந்தம்பாராட்டி, முற்றிலும் ஆட்கொள்ள விரும்புகிறார்.

ராஜாவாகிய சவுலோடு தாவீது போஜனம்பண்ண வேண்டிய தாயிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், முதல் நாளில் தாவீதின் இடம் காலியாக இருந்தது; மறுநாளிலும் அவனுடைய இடம் காலி யாகவே இருந்தது என நாம் வாசிக்கிறோம் (I சாமு. 20 : 25 , 27). அவன் அப்பந்தியில் பங்குகொள்ளவே இல்லை! அதன் காரணம் என்ன? தலைமை ஸ்தானத்தில் சவுல் இருந்ததே அதன் காரண மாகும். தாவீதைக் கொலைசெய்ய வகை தேடிக்கொண்டிருந்த சவுல் தலைமை ஸ்தானத்தில் இருந்தது வரை, தாவீது அங்கு வர முடியாதிருந்தது! உண்மையில் தாவீது தேவனால் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாகவும், அவனே தலைமை ஸ்தானத் திற்கு உரியவனாகவும் இருந்தான். ஆனால் சவுல் அவ்விடத்தை வகிக்கும் வரை தாவீது வனாந்தரங்களிலேயே அலைந்து திரிய வேண்டியதாயிருந்தது. 'தாவீது' கர்த்தராகிய இயேசுவுக்கு அல்லது ஆவியின்படி நடத்தலுக்கும், 'சவுல்' பிசாசுக்கு அல்லது மாம்சத் தின்படி நடத்தலுக்கும் நிழலாட்டமாயிருக்கின்றனர். நம்முடைய ஜீவியத்தில் ராஜாதி ராஜாவாகிய இயேசுவுக்கு மிக முக்கியமான ஸ்தானமாகிய ராஜாசனமே கொடுக்கப்பட வேண்டும். நம்முடைய மாம்சத்திற்கு அந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்குமாயின், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் சமுகம் அங்கு இராது.



தாவீது அப்போஜனபந்தியில் கலந்துகொள்ளாதிருந்ததைக் குறித்து சவுல் மிகவும் கோபமும் விசனமும் அடைந்தான். தாவீது வராமற்போனதினிமித்தம் அவன் தன் குமாரனாகிய யோனத்தான் மீதும் கோபமுற்று, அவனையும் கொல்ல எத்தனித்தான். ஆனால் சவுல் சிங்காசனத்தில் இருக்கும் வரையிலும் தாவீது அதில் கலந்துகொள்ள இயலாதே!

நாம் ஒருவேளை இந்தச் சவுலைப் போல இருக்கக் கூடும். நாம் நம்முடைய ஜீவியத்தில் ஆண்டவராகிய இயேசுவுக்கு ஏதோ ஒரு இடத்தைக் கொடுக்க விரும்புகிறோமேயன்றி, மையப் பகுதியை அதாவது முக்கியமான ஸ்தானத்தைக் கொடுக்க முன்வருவதில்லை. நம்முடைய சொந்தத் திட்டங்களுக்கும் சுயசித்தத்திற்கும் நம் ஜீவியத்தில் முக்கிய இடத்தை அளித்து விட்டு, அதே சமயத்தில் அவரையும் நம் வாழ்வில் பங்கு கொள்ளும்படி நாம் வரவேற்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறின், நாமே ராஜாவுக்குரிய ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, அதே சமயத்தில் நம்முடைய ஆண்டவர் நமதருகில் ஏதாகிலும் ஒரு இடத்தில் இருக்க வேண்டுமென நாம் விரும்பு கிறோம். அது சாத்தியமானதல்ல! தேவபிள்ளையே, ***உன்னுடைய ஆண்டவராகிய இயேசு உன் ஜீவியத்தில் பங்குகொள்ள வேண்டுமென நீ விரும்புவாயாகில், அவருக்கு உன் வாழ்வில் 'ராஜாசனமே' கொடுக்கப்பட வேண்டும் - நீ அவருக்கே உன் வாழ்வில் முதலிடமளிக்க வேண்டும்.*** உன் ராஜா 'தம்முடைய சிங்காசனத்தையே' உரிமைகோருகிறார்! கர்த்தர் உன் ஜீவியத்தை ஆண்டு நடத்தினால் மாத்திரமே அது ஆசீர்வாதமுள்ளதாய் இருக்கும். மாறாக, மாம்சம் அதை ஆளுகை செய்யுமாயின், உன் ஜீவியமே நிர்ப்பந்தமானதாயிருக்கும்! உன் ஜீவியத்தின் சிங்கா சனம் பிசாசுக்கோ, மாம்சத்திற்கோ அளிக்கப்படுமாயின், கர்த்த ராகிய இயேசுவின் ஆளுகை உன் வாழ்வில் இராது. கோபம், இச்சை, பொறாமை போன்றவை உன் வாழ்வில் ஆளுகை செய்ய நீ இடமளிப்பாயாகில், கிறிஸ்துவின் சுபாவம் உன்னில் வளர முடியாது.

தாவீது இஸ்ரவேலின் ராஜாவான பின்னரோ, முடவனான மேவிபோசேத்திற்கும் ராஜாவின் பந்தியில் ஒரு இடம் கிடைத்தது! (II சாமு. 9 : 13). அவன் தன் ஜீவிய காலமெல்லாம் ராஜாவின் பந்தியில் பங்குகொள்ளுவான் என ராஜா அவனுக்கு வாக்குப் பண்ணினான் (வச . 7). தேவபிள்ளையே, நீ ஆவிக்குரிய பிரகாரமாக முடவனாக, குறைகளும் தேவைகளும் உள்ளவனாக இருப்பினும், உன் வாழ்வில் கர்த்தராகிய இயேசுவுக்கே சிங்காசனம் அளிக்கப்படுமாயின், உன் ராஜா உன்னை அன்புடன் ஏற்றுக் கொள்வார்; அவர், 'உன் வாழ்நாளெல்லாம் நீ என் பந்தியில் அமர்ந்து என் நன்மைகளை அனுபவித்துக்கொண்டிரு; பயப்படாதே; முடிவுபரியந்தம் நான் உன்னை ஆதரிப்பேன்' என்று உன்னை நோக்கிக் கனிவுடன் கூறுவார். உன் ஜீவியத்தின் ஆளுகை அவருடைய தோளின்மேல் இருக்குமாயின் - நீ அவரை அதிசயமானவராகவும், ஆலோசனைக் கர்த்தராகவும், வல்லமையுள்ள தேவனாகவும், நித்திய பிதாவாகவும், சமாதானப் பிரபுவாகவும் அனுபவிப்பாய்! (ஏசாயா 9 : 6). 'சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர்' உன் வாழ்வில் சகலத்தையும் புதிதாக்குவார்! அவர் உனக்கு அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருந்து, சகலத்திலும் உன்னை வெற்றிசிறக்கச் செய்வார்! (வெளி. 21 : 5 , 6). ஆகவே கர்த்தருக்கு அவருக்குரிய சரியான இடத்தை அளிப்பது மிக முக்கியமானதாகும். நம்முடைய முடிவு மகிழ்ச்சிகரமானதாயிருக்க வேண்டுமாயின், நம் வாழ்வில் நம் ஆண்டவருக்கே உரிய மையப்பகுதியை - சரியான ஸ்தானத்தை - ராஜ பக்தியுடன் நாம் அவருக்கு அளிக்க வேண்டும்; நம் ஜீவியம் கர்த்தருடைய சிங்காசனமாய் இருக்க வேண்டும் (எரே. 3 : 17).

“***அப்பொழுது போவாஸ்: நீர் நகோமியின் கையிலே அந்த வயல்நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்தரத்தில் அவன் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் கையிலும் வாங்கவேண்டியது என்றான்***” (ரூத் 4 : 5).



**நிலத்தில் புதைத்திருந்த பொக்கிஷம்:**

'நீர் அந்த நிலத்தை வாங்கும்போது, ரூத்தையும் வாங்கிக் கொள்ள வேண்டும்' என்பதே ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளியினிடத்தில் போவாஸ் கூறிய இவ்வார்த்தைகளின் உட்கருத்தாகும். அவன் அதற்கு இசைய மறுத்தபோது, போவாஸ் முழு உரிமையுடனும் அந்நிலத்தையும் ரூத்தையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான் (ரூத் 4 : 9 , 10). 'ஒரு நிலத்தைக் குறித்தும் அந்நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பொக்கிஷத்தைக் குறித்தும்' கர்த்தராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னார் (மத். 13 : 44). அந்த நிலத்தை வாங்கும்படியாக ஒருவன் தனக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும் விற்றுவிட்டான். இம்முழு உலகமும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டிய வயல்நிலமாய் இருக்கிறது. நிலத்தை வாங்கிக்கொண்டவன் கிறிஸ்து இயேசுவுக்கு நிழலாட்டமாயிருக்கிறான். நம்முடைய இரட்சகர் மனுக்குலத்தைத் தமக்குச் சொந்தமாக மீட்டுக்கொள்ளும்படி தம்முடைய கடைசிச் சொட்டு இரத்தம் வரை சிந்தி, நிகரற்ற கிரயம் செலுத்தியிருக்கிறார். 'நிலத்தில் புதைத்திருந்த பொக்கிஷம்', கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்கு நிழலாட்டமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு முழு மனுக்குலத்தின் மீட்பிற்காகவும் இரத்தம் சிந்தி மரித்திருப்பினும், அவருடைய விலையேறப்பெற்ற மணவாட்டியாகிய சபையே அவருடைய ஆத்தும வருத்தத்தின் '*தக்க பலன்*' ஆகும் (ஏசாயா 53 : 11). அவர் சிலுவையைச் சகித்த வேளையில் அவருக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷம் அதுவே! (எபி. 12 : 2). போவாஸ் ரூத்தைத் தனக்கு மணவாட்டியாக்கிக்கொள்ளும்படியாக எலிமெலேக்கினுடையதாயிருந்த வயல்நிலத்தையும் வாங்கிக் கொண்டதில் மறைந்திருக்கும் சத்தியம் இதுவே.

மேலும், போவாஸ் மனப்பூர்வமாக ரூத்தை மீட்டுக் கொண்டது போல, தேவ ஊழியர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்தும்படி தாங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் மனப்பூர்வமான இருதயத்துடனேயே செய்யவேண்டும் என்னும் பாடத்தையும் இவ்வேதபகுதி நமக்குக் கற்பிக்கிறது.

தேவ ஊழியர்களின் வேலை கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்துவதேயாகும். கிறிஸ்து தம்முடைய மணவாட்டி சபைக்காகத் தம்மையே கிரயமாகச் செலுத்தினது போல, அவருடைய மணவாட்டியை ஆயத்தப்படுத்தும்படியாகத் தேவ ஊழியர்களும் செலுத்த வேண்டிய மிகப் பெரிய கிரயம் ஒன்றுண்டு. போவாஸ் தானாகவே மனமுவந்து முன்வந்து கிரயம் செலுத்தி ரூத்தை மீட்டுக்கொண்டான். அவன் அப்படிச் செய்யத் தயங்கவும் இல்லை; அதில் விசனமடையவும் இல்லை. கர்த்தராகிய இயேசுவும் சந்தோஷத்துடன் மனப்பூர்வமாகத் தம்மையே பலியாக்கி, தம் சொந்த இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தி, நம்மைப் பாவம், வியாதி, சாபம் போன்றவற்றினின்று மீட்டுக்கொண்டார். அவ்வாறே நாமும் கர்த்தருடைய சபைக்காக எதைச் செய்தாலும் அதை மனப்பூர்வமாகச் செய்வோமாக. நாம் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிவோமாயின், சிறப்பான ஓர் ஆசீர்வாதம் நமக்குண்டு. 'நீங்கள் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்' (ஏசாயா 1 : 19 – Eng.) என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தமாகும். 'தேசத்து நன்மையைப் புசித்தல்' என்பது பரலோக ராஜ்யத்தின் நன்மையாகிய ஆவியின் கனியில் பங்கடைதலைக் குறிக்கும். இதற்கு நம் கீழ்ப்படிதலில் ஒரு மனப்பூர்வம் எதிர்பார்க்கப்படுகிறது. மனப்பூர்வமில்லாமலும் நாம் கீழ்ப்படியலாம்; ஆனால் அப்போது நம் மாம்சத்தில் அதற்கு எதிராக ஒரு போராட்டம் உண்டாயிருக்கும். நாம் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தால் மாத்திரமே *மெய்யான பரிசுத்த ஜீவியம்* நமக்குப் பலனாகக் கிடைக்கும் (ரோமர் 6 : 17 , 22).

**" *அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்* "** (ரூத் 4 : 6).

## மனத்தாழ்மையுள்ளவன் கனமடைவான்!

ரூத்தின் நெருங்கின சுதந்தரவாளி எலிமெலேக்கின் சுதந்தரமான வயல்நிலத்தை வாங்க மறுத்ததின் காரணம் யாது? "நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்" என்று அவன் கூறுகிறான். அதை மீட்டுக்கொள்வதினிமித்தம் தன்னுடைய சொந்த மேன்மை அழிந்துவிடுமோ, அல்லது கெடுக்கப்பட்டுப்போகுமோ என்பதைக் குறித்தே அவன் கவலையுள்ளவனாயிருந்தான். நம்மில் பலருடைய நிலையும் இதுவே. நம்முடைய மேன்மை, அந்தஸ்து, கௌரவம், பேர், புகழ் போன்றவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்தே நம் மாம்சமானது எப்போதும் அக்கறையுள்ளதாயிருக்கிறது. யூதருடைய பிரமாணத்தின்படி, ஒரு ஸ்திரீக்குப் பிள்ளையில்லாதிருக்க, அவளுடைய புருஷன் மரித்துப்போவானாகில், அவளுக்கு நெருங்கின உறவின் முறையானாகிய சுதந்தரவாளி அவளை விவாகம்பண்ண வேண்டும்; அவளுக்குப் பிறக்கும் தலைப்பிள்ளைக்கு மரித்துப்போன முந்தின புருஷனின் பெயரே தரிக்கப்பட வேண்டும் (உபா. 25 : 5 , 6 ; ரூத் 4 : 4, 5). இங்கு ரூத்தின் நெருங்கின உறவின் முறையானோ தன்னுடைய பெயரைப் பேணிக்கொள்வதைக் குறித்தே அதிக அக்கறையுள்ளவனாயிருந்தான். அவன் இவ்வசனத்தில் மாத்திரம் நான்கு முறை 'நான்' என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள்! (ரூத் 4 : 6). அந்த அளவுக்கு அவன் தன்னுடைய கனத்தையும் கௌரவத்தையும் பற்றியே கருத்துள்ளவனாக, சுயத்தினால் பொதியப்பட்டிருந்தான்! ஆனால் தன்னுடைய பெயரைக் குறித்து அவ்வளவு அக்கறையுள்ளவனாயிருந்த அந்நபருடைய பெயர் வேதாகமத்தில் இடம்பெறவில்லை! (ரூத் 4 : 1). தன்னுடைய பெயர் கெடுக்கப்பட்டுப்போய்விடாமல் அதைப் பேணிக்கொள்ள மிகவும் கவனமாயிருந்த அந்நபரின் பெயர் சரித்திரத்தில் அறியப்படாமலே போய்விட்டது! தன்னுடைய பெயரை நிலைநாட்டுவதில் சற்றும் அக்கறைகொள்ளாதிருந்த போவாசின் பெயரோ வேதாகமத்தில் – புதிய ஏற்பாட்டிலுங்கூட இடம் பெற்றுள்ளது! (மத். 1 : 5 ; லூக்கா 3 : 32). ரூத்தை மீட்டுக்கொள்ளும் நற்கிரியையைச் செய்த அவனுடைய பெயர் இன்றும் இஸ்ரவேலில் வானத்து நட்சத்திரம் போல் பிரகாசிக்கிறது! அவன்

பேர் இஸ்ரவேலிலே பிரபலமாயிற்று! ஆம்! உலக மீட்பரான கர்த்தராகிய இயேசுவுக்கும், இஸ்ரவேலின் இணையற்ற, தலை சிறந்த ராஜாவாகிய தாவீதுக்கும் முற்பிதாவாகப் போவாஸ் இன்றும் கனம்பெற்று விளங்குகிறான்! பெயரையும் புகழையும் நாடித் தேடாத போவாசுக்குச் சகல கனமும் உண்டாயின. "நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ் பெற்றிருக்கக்கடவாய்" என்று ஒலிமுக வாசலிலிருந்த சகல ஜனங்களும் மூப்பர்களும் அவனை வாழ்த்தினர் (ரூத் 4 : 11). தன் பெயரைத் தற்காத்துக்கொள்ள விரும்பிய மற்ற சுதந்தரவாளிக்கோ ஒரு மேன்மையும் கிடைக்கவில்லை. தேவபிள்ளையே, சத்தியத்தி னிமித்தமாக உன் பெயர் கெடுக்கப்பட்டுப்போகும்போது அதை நீ மனமுவந்து ஏற்றுக்கொள்வாயாகில், நீ தேவனால் மிக மேன்மையாகக் கனப்படுத்தப்படுவாய்! "மனுஷகுமாரன் நிமித்த மாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந் நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" என நமதாண்டவர் கூறியிருக்கிறாரே! (லூக்கா 6 : 22 , 23).

***" மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப் படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்ற வனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு. அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்"*** (ரூத் 4 : 7 , 8).

**இவரே என் நேசர்!**

இஸ்ரவேலில் நிலவிவந்த வழக்கப்படி, தன் பாதரட்சை களைக் கழற்றிப்போடுவதின் மூலம் ஒருவன் இனி அந்தச் சுதந்தரத்தின் மேல் நடப்பதற்குங்கூட தனக்கு யாதொரு உரிமை யும் இல்லை என்பதை வெளியரங்கமாக அறிக்கை செய்கிறான் (Dake's Annotated Bible). ரூத்தின் நெருங்கின உறவின்முறையான் தன் பாதரட்சைகளைக் கழற்றிப் போவாசுக்குக் கொடுத்ததின் மூலம், எலிமெலேக்கின் வயல்நிலத்தின் மேலும், ரூத்தின் மேலும் இனி தனக்கு யாதொரு உரிமையும் இல்லை என்பதை அவன் மூப்பர்களுக்கு முன்பாகப் போவாசுக்குத் தெரியப்படுத்தினான். ஒரு காலத்தில் நம் மேல் உரிமைபாராட்டிக்கொண்டும், தன்னால் எல்லாம் கூடும் என்று தன்னைக் குறித்து மேன்மைபாராட்டிக் கொண்டுமிருந்த நம் மாம்சமானது முடிவாக, நம் மேல் அன்பு கூர்ந்து நமக்காகத் தம்மையே கிரயமாகச் செலுத்திய நம்முடைய மெய்யான மீட்பர் இயேசுவின் முன்னிலையில், நம் மேல் தனக்கு உரிமை ஏதும் இல்லை என்பதையும், நம் மேல் முழு அதிகாரமும் அவருக்கே உரியது என்பதையும் ஒத்துக்கொள்கிறது. நம்முடைய மாம்சத்தின் மேன்மைபாராட்டல்கள் அனைத்திற்கும் அங்கே ஒரு முடிவுண்டாகிறது. அதுமுதல் மாம்சத்தின் மேல் நமக்கு உள்ள நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போய், நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மாத்திரமே மேன்மைபாராட்டுகிறவர்களாகிறோம் (பிலி. 3 : 3). அதுமுதல் நாம், "இவரே என் நேசர்; ... இவரே என் சிநேகிதர்" (உன். 5 : 16) என்று கூறத்தக்க இடத்திற்கு நாம் வந்துசேருகிறோம்!



சுதந்தரவாளி தன் பாதரட்சைகளைக் கழற்றிப்போடுதல், நாம் நம்முடைய மாம்சீகத்தைக் களைந்துபோடுதலைக் குறிக்கிறது. ஒரு காலத்தில் நாம் மாம்சத்தின்படி நடந்துவந்தோம். ஆனால் நம் முடைய மாம்சமானது தன் பெலவீனங்களை உணர்ந்து, தன் தோல்விகளையும் இயலாமையையும் ஒத்துக்கொண்டபோது, நம்முடைய போவாசாகிய கர்த்தர் மனமுவந்து நம்மை மீட்டுக் கொண்டார். மீட்கப்பட்டவர்களாகிய நாம் அதைத் தொடர்ந்து ஆவிக்கேற்றவர்களாகவே நடந்துகொள்வோமாயின், மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்போம் (கலா. 5 : 16). "மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (ரோமர் 8 : 6). நாம் நம்முடைய சிந்தைகளிலும் கற்பனைகளிலும்

ஜெயமுள்ளவர்களாயிருக்கும்படி, மாம்சத்தின்படி நடவாமல், எப்போதும் பரிசுத்த ஆவிக்குள் ஜீவிக்கக் கற்றுக்கொள்வோமாக. கர்த்தரோடு ஒரு நிலையான ஐக்கியத்தையும் உறவையும் நாம் பேணிக்கொள்ள வேண்டுமாயின், நம்முடைய மாம்சீகமான சுபாவங்களும், பரிசுத்தமற்றதும் தேவபக்திக்கு ஏதுவல்லாததும் வீணானதுமான சிந்தைகளும் நம்மை விட்டு அகற்றப்பட வேண்டும்.

***“ அப்பொழுது போவாஸ் மூப்பரையும் சகல ஜனங்களையும் நோக்கி: எலிமெலேக்குக்கு இருந்த எல்லாவற்றையும் கிலி யோனுக்கும் மக்லோனுக்கும் இருந்த எல்லாவற்றையும் நகோமியின் கையிலே வாங்கிக்கொண்டேன் என்பதற்கு இன்றையதினம் நீங்கள் சாட்சி. இதுவுமல்லாமல், மரித்தவ னுடைய சகோதரருக்குள்ளும், ஊராருக்குள்ளும், அவனுடைய பேர் அற்றுப்போகாமல், மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த, நான் மக்லோனின் மனைவியாயிருந்த மோவாபிய ஸ்திரீயான ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன்; அதற்கும் இன்றையதினம் நீங்கள் சாட்சி என்றான்”*** (ரூத் 4 : 9 , 10).

## புழுதியினின்று உயர்த்துகிறவர்!

ரூத் மீட்டுக்கொள்ளப்பட்டதின் நோக்கம், மரித்தவனுடைய பேர் அற்றுப்போகாமலிருக்க வேண்டும் என்பதே. ஆதாமுக்குள் நாம் யாவரும் மரிக்கிறோம். நாம் ஒரு காலத்தில் அக்கிரமங் களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாய் இருந்தோம் (எபே. 2 : 1). அவ்விதம் மரித்தவர்களாயிருந்த நாம் நம்முடைய மீட்பரான இயேசுவின் மூலம் உயிர்ப்பிக்கப்பட்டு, எழுப்பப்பட்டிருக்கிறோம் (வச . 5). நாம் அவருடைய கொத்தடிமைகளாயிருக்கும்படியாக அல்ல, அவருடைய மணவாட்டியாயிருக்கும்படியாகவே அவர் நம்மைக் கிரயம் செலுத்தி வாங்கியிருக்கிறார். ஆகவே நாம் அவருக்குச் செய்யும் சேவை எதுவாயினும், அது அன்பினால்



நெருக்கி ஏவப்பட்டதாயும், சந்தோஷத்துடன் செய்யப்படுவதாயும் இருக்க வேண்டும். “கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகை யால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” என திருவசனம் கூறுகிறது (I கொரி. 6 : 20). ரூத் ஓர் ஏழை விதவையாக, எந்த அளவுக்குத் தாழ்ந்த நிலையில் இருந்தாள் என நாம் முன்பு கண்டோம். அவள் இப்போது மகிமையான இடத்திற்கு உயர்த்தப் படுகிறாள்! கதிர் பொறுக்கிக்கொள்வதற்காகப் போவாசின் வயலுக்குச் சென்றவளும், அந்நிய தேசத்தாளும், திக்கற்றவளுமாயிருந்த அவள் இப்போது மிகுந்த ஆஸ்திக்காரனாகிய போவாசுக்கு மணவாட்டியாக உயர்த்தப்படுகிறாள்! ‘கர்த்தர் சிறியவனைப் புழுதி யிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்து கிறார்’ என அன்னாள் நன்றியுடன் கர்த்தரைத் துதித்தது போலவும் (I சாமு. 2 : 8), “என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. ... அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்” என கர்த்தராகிய இயேசுவின் தாயாராகிய மரியாள் ஆண்ட வரைப் புகழ்ந்துரைத்தது போலவும் (லூக்கா 1 : 46 , 48), தேவன் எளியவளான ரூத்தைக் குப்பையினின்று மகா மேன்மையாக உயர்த்திவிட்டார்! அவ்வாறே, எவ்விதத்திலும் தகுதியற்றவர் களாகிய நமக்குக் கர்த்தர், “நித்திய விவாகத்துக்கென்று உன்னை *எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்;* நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை *எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்.* உண்மையாய் உன்னை எனக்கு *நியமித்துக்கொள்ளுவேன்;* நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்” (ஓசியா 2 : 19 , 20) என்று உறுதி யான வாக்களித்து, நம்மைத் தம்முடைய மணவாட்டியாகும்படி உயர்த்தியிருக்கிறார்! நம்முடைய தாழ்வில் நம்மை நினைத் தருளிய அவரது தயவை எண்ணி, நாம் நம்முடைய வாழ் நாளெல்லாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் நடந்துகொள்வோ மாக (சங். 136 : 23). பயங்கரமான குழியினின்றும், உளையான சேற்றினின்றும், இருண்ட பாவச் சிறையினின்றும் அவர் எவ்வித மாக நம்மைத் தூக்கியெடுத்தார் என்பதை நாம் எப்போதும்

நன்றியுடன் நினைவுகூருவோமாக. ரூத் போவாசினாலும் நகோமியினாலும் தனக்குச் சொல்லப்பட்டவைகளுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தபோது பின்னாட்களில் மிகச் சிறந்த நன்மையை அனுபவித்தது போல, நாமும் கர்த்தருக்கும் பரிசுத்தவான்களுக்கும் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவோமாகில், சிறப்பான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்வோம்.

**"*அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி: நாங்கள் சாட்சிதான்; உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப்போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக; நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக்கடவாய்*"** (ரூத் 4 : 11).

## எழுந்து கட்டுவீர்!

ரூத் போவாசின் மனைவியாக அவனுடைய வீட்டிற்கு வந்துசேர்ந்தது போல, தேவ ஊழியரே, நீங்கள் கர்த்தருடைய வீட்டிற்கு வந்துசேர்ந்திருக்கிறீர்கள். எதற்காக? 'இஸ்ரவேல் வீட்டைக்' கட்டியெழுப்புவதற்காக! கர்த்தருடைய சபையைக் கட்டியெழுப்புவதற்காகவே நீங்கள் அவரால் அவருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்; நீங்கள் அவருடைய உடன்வேலையாட்களாயிருந்து, அவரோடு சேர்ந்து கட்ட வேண்டும் (சங். 147 : 2 ; I கொரி. 3 : 9 , 10). இடித்துப் போட அல்ல, ஊன்றக் கட்டவே அவர் உங்களுக்கு அதிகாரம் அளித்திருக்கிறார் (II கொரி. 13 : 10). மறுபக்கத்தில் நீங்களும் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தவான்களுடனே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவர வேண்டும் (எபே. 2 : 22). "நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய



அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (வச . 19 – 21). ஆகவே நீங்கள் ஆவியில் எழுப்புதல் அடைந்து, "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று கூறிக்கொண்டு, இந்த நல்ல வேலைக்கு உங்கள் கைகளைத் திடப்படுத்துவீர்களாக! (நெகே. 2 : 18).

**"*போவாஸ் ரூத்தை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு மனைவியானாள்; அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது, அவள் கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம்பண்ணினார்*"** (ரூத் 4 : 13).

போவாஸ் ரூத்தை மீட்டுக்கொண்ட பின்னர் அவள் ஒருபோதும் 'மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்' என்று அறியப்படவில்லை. அவ்வண்ணமே நாம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, மீட்கப்பட்டபோது நம்முடைய கடந்த காலப் பாவங்கள் முற்றிலுமாக மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்டு, குலைத்துப் போடப்பட்டுவிட்டன (ஏசாயா 43 : 25 ; 44 : 22); நம் முந்தின அக்கிரமங்களும் பாவங்களும் தேடப்பட்டாலும், அவை இனி ஒருபோதும் காணப்படாதிருக்கும்! (எரே. 50 : 20).

போவாஸ் ரூத்தை விவாகம்பண்ணினான். அவனைக் குறித்து நகோமி ரூத்திடம் சொல்லியிருந்த வார்த்தைகள் இதோ, நிறைவேறின! (ரூத் 3 : 18). அன்றையத்தினம் அவன் ரூத்தின் காரியத்தை நிறைவேற்றி முடிக்குமட்டும் இளைப்பாறவில்லை! போவாசின் உண்மையை நாம் இங்கு காண்கிறோம். நம்முடைய மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் உண்மை மகா பெரியது (I தெச. 5 : 23 , 24). அவரே நம் நம்பிக்கைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

ரூத்தின் ஜீவியத்தில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்பட்ட அவளது ***மனத்தாழ்மையும்***, போவாசின் ஜீவியத்தின் சிறப்பு அம்சமாகிய அவனது ***மனத்தூய்மையும்*** குறிப்பிடத்தக்கவை!

கிறிஸ்துவோடு நித்திய விவாகம்பண்ணப்படும்படியாக நாமும் தாழ்மையினாலும் தூய்மையினாலும் அலங்கரிக்கப்படுவோமாக. ரூத் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள். அவனே ராஜாவாகிய தாவீதின் பாட்டனாவான். கர்த்தராகிய இயேசுவும் அந்த வம்சத்தில் அவதரித்தார். இவ்வாறு ரூத்தின் மூலமாகப் பெத்லெகேம் பிரசித்தி பெற்ற இடமாயிற்று. போவாசும், நகோமியும், பெத்லெகேமும் அவள் நிமித்தமாக ஆசீர்வதிக்கப்பட்டு, அனைவரும் மகிழ்ச்சி யடைந்தனர்! கிறிஸ்துவே நம் ஜீவியத்தின் மையமாயிருப்பா ராயின் - அவரோடு நிலையானதும் முறிக்கப்படாததுமான ஒரு ஐக்கியத்தை நாம் கொண்டிருப்போமாயின் - மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதத்தின் ஊற்றாயிருப்போம்.

**“ *அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்த ருக்கு ஸ்தோத்திரம்; அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபல மாகக்கடவது* ”** (ரூத் 4 : 14).

“அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபலமாகக்கடவது” என்பது ஓபேதைக் குறித்துக் கூறப்பட்டிருப்பது போல் தோன்றினும், போவாசையே குறிக்கின்றது என வேதபண்டிதர்கள் கருது கின்றனர் (Dake's Annotated Bible ). கர்த்தராகிய இயேசுவைக் குறித்த ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட உண்மை இதில் மறைந்துள்ளது. இஸ்ர வேலில் மட்டுமல்ல, அகிலாண்டத்திலும் நமதருமை ஆண்ட வராகிய இயேசுவைப் போல் புகழ்பெற்றவர் எவரேனும் உண்டோ? ‘அவர் பதினாயிரம்பேர்களில் சிறந்தவர்’ என மணவாட்டி கூறுகிறாள் (உன். 5 : 10). பூலோகத்திலும் பரலோகத் திலும் அவருடைய நாமம் பிரபலமாயிருக்கிறது! (பிலி. 2 : 9 - 11). ஆம்! “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரரா யிருக்கிறார்” (வெளி. 5 : 12).



போவாஸ் தன்னுடைய பெயரையும் கௌரவத்தையும் இழந்துபோவதற்கும் ஆயத்தமுள்ளவனாக, மோவாபிய ஸ்திரீ யாகிய ரூத்தை மீட்டுக்கொண்டான். அவ்வாறே கர்த்தராகிய இயேசு நம்மை மீட்டுக்கொள்ளும்படியாக இப்பூமிக்கு இறங்கி வந்தபோது, மகா பரிசுத்தரும் குற்றமற்றவருமான அவர் முடிவில் ‘அக்கிரமக்காரரில் ஒருவராக’ எண்ணப்பட்டார்! (ஏசாயா 53 : 12). பிலாத்து நியாயாசனத்தில் அமர்ந்து, கூடி வந்திருந்த ஜனத்திரளை நோக்கி, “எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டு மென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?” என்று கேட்டபோது, அவர்கள் பரபாசையே விடுதலையாக்கும்படி கேட்டுக்கொண்டனர் (மத். 27 : 18 - 21). கொலைபாதகத்திற்கும் கலகத்திற்கும் பேர்போன ஒரு குற்ற வாளியாகக் காவல்பண்ணப்பட்டிருந்த பரபாஸ் ஏற்றுக்கொள்ளப் பட்டான்; மாசில்லாத ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவோ பாதகன் போல் கட்டப்பட்டு, சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டார்! அவர் தம்முடைய நற்பெயரை முற்றிலும் இழந்தார்! தேவபிள்ளையே, இவ்வுலகில் நீ பேர், புகழ், பிரஸ்தாபம், நன்மதிப்பு போன்றவற்றை நாடித்தேடுவாயாகில், கர்த்தரால் மறக்கப்பட்டுப்போவாய்! அவர் சிறுமையும் எளிமையுமானவர்கள் மேலேயே நினைவாயிருக்கிறார் (சங். 40 : 17). சிலர் தங்களைத் தாங்களே தாழ்த்த முன்வருவர்; ஆனால் பிறரால் தாழ்த்தப் படுதலை ஏற்றுக்கொள்ளக் கூடாதவர்களாயிருப்பர். கிறிஸ்து தம்மைத் தாமே தாழ்த்தியது மாத்திரமல்ல, கல்வாரிப் பாதை யில் மற்றவர்களாலும் மிகவும் அதிகமாகத் தாழ்த்தப்பட்டார். ‘நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டிருக்கிறேன்’ என்பதின் பொருள், ‘நான் கிறிஸ்துவுடனேகூடத் ***தாழ்த்தப் பட்டிருக்கிறேன்***’ என்பதே! ஏனெனில் ‘சிலுவையிலறையப் படுதல்’, தாழ்த்தப்படுதலின் அனுபவமேயாகும். போவாஸ் ரூத்தை மீட்கும்படி நமதாண்டவரைப் போல அந்த அளவுக்குத் தாழ்த்தப்படுதலை ஏற்க வேண்டியதாயிருக்கவில்லை. ஆயினும் விதவையும், புறஜாதியைச் சேர்ந்தவளுமான அவளை மீட்டுக்

கொள்ளுமளவிற்கு, மிகுந்த செல்வாக்குடையவனாயிருந்த அவன் தன்னைத் தாழ்த்தினான். அவளை மீட்டுக்கொள்வதினால் தனக்கு யாதொரு ஆதாயமும் இல்லாவிடினும், அவன் மனமுவந்து அதைச் செய்தான். இதினால் *இஸ்ரவேலில்* அவனுடைய பெயர் பிரபலமாயிற்று. நம்மை மீட்கும்படியாகச் சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்திய நமதாண்டவரோ எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தைப் பெற்று, *பரலோகத்திலும் பூலோகத்திலும்* பரமபிதாவினால் கனம்பண்ணப்பட்டிருக்கிறார் (பிலி. 2 : 8 – 11).

***"அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன்; உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள். அயல் வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்"*** (ரூத் 4 : 15 – 17).

நாம் மீண்டும் ஒருமுறை இங்கு ரூத்தைக் கவனிப்போம். தேவபிள்ளைகள் சிலர், தாங்கள் தாழ்வடைந்திருக்கும்போது மற்றவர்களோடு நெருங்கிய ஐக்கியம் உள்ளவர்களாயும், பிறரோடு ஒன்றுபட்டு ஒத்துழைக்கிறவர்களாயும் இருப்பர். ஆனால் அவர்களுக்கு உயர்வும் செழிப்பும் உண்டாகி, அவர்கள் வாழ்வடைந்திருக்கும்போதோ, தங்களுக்கு அறிமுகமானவர்களையும் நண்பர்களையுங்கூட மறந்துவிடுவர்! ஆனால் ரூத்தைப் பொறுத்த வரையில் அவளுடைய விவாகமோ, ஆஸ்தியோ, புத்திரபாக்கியமோ, வேறெதுவுங்கூட நகோமியின் பேரில் அவள் வைத்திருந்த அன்பினின்றும் பயபக்தியினின்றும் அவளைத் திசைதிருப்ப இயலவில்லை. "உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும்



உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள்" என்று ரூத்தைக் குறித்து நகோமிக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இதனை நிரூபிக்கின்றன. எவ்வளவு தன்னலமற்றதும் களங்கமற்றதுமான தூய அன்பு இது! தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்காகவே தேவன் நம்மை உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்டார் (எபே. 1 : 4). நாம் எந்நாளும் அந்த அன்பிலே நடந்துகொள்ளுவோமாக (எபே. 5 : 2).

ரூத் பெற்ற குமாரனுக்கு 'ஓபேத்' என்று பேரிடப்பட்டது. 'ஓபேத்' என்பதற்கு, தாசன் அல்லது பணிவிடைக்காரன் (servant) என்று பொருள். அவன் நகோமியின் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், அவளுடைய முதிர்வயதில் அவளை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன் என்று அவனைக் குறித்துக் கூறப்பட்டது. நாம் கர்த்தருடைய இருதயத்தையும் பரிசுத்தவான்களின் இருதயத்தையும் குளிரப்பண்ணுகிறவர்களாயிருக்கும்படி பணிவிடையின் ஆவியுள்ளவர்களாயிருப்போமாக.

**உன் துக்கம் சந்தோஷமாக மாறும்!**

வேதாகமத்தின் மற்ற சில புத்தகங்களைப் போலல்லாது, ரூத்தின் சரித்திரம் மகிழ்ச்சிகரமான ஒரு முடிவைப் பெற்றுள்ளது. அவ்வாறே நம்முடைய ஜீவியத்தின் முடிவும் மகிழ்ச்சிகரமானதாயிருக்க வேண்டும். "என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும் ... விரும்புகிறேன்" என அப். பவுல் கூறுகிறார் (அப். 20 : 24). ரூத்தில் இருந்த குறிப்பிடத்தக்கதும் தலைசிறந்ததுமான ஒரு நற்பண்பு, அவள் எப்போதும் தன்னைத் தாழ்த்த மனமுவந்திருந்ததேயாகும். நாம் ஒரு மகிழ்ச்சிகரமான முடிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், இறுதி வரை மனத்தாழ்மையுடன் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும். ரூத் ஜீவனுள்ள மெய்த்தேவனைப் பின்பற்றியதினிமித்தம் பெற்றுக்கொண்ட எண்ணிறந்த ஆசீர்வாதங்களைக் குறித்து மோவாப் தேசத்தில் ஓர்பாள் கேள்விப்பட்டு, ஒருவேளை மனங்கசந்து

அழுதிருக்கக் கூடும். தான் வாக்குத்தத்த தேசத்தை நோக்கிப் பயணம் புறப்பட்டும், வழியில் பின்னிட்டுத் திரும்பிப் போய் விட்டதினிமித்தம், தனக்காக வைக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங் களை இழந்துபோனதை எண்ணியெண்ணி அவள் வியாகுலப்பட் டிருக்கக் கூடும்! இப்போதோ காலம் கடந்துவிட்டது! அவள் கர்த்தருக்காகச் சரியான வேளையில், சரியான தீர்மானங்களைச் செய்யத் தவறிவிட்டாள்!

இந்நூலை வாசிக்கும் அருமை நண்பரே! நீர் ஒருவேளை ஆவிக்குரிய பிரகாரமாகப் பின்தங்கிய நிலையில் இருக்கக் கூடும். நீர் உமது ஆவிக்குரிய வாழ்க்கையில், கடந்த நாட்களில் சில சந்தர்ப்பங்களில் சரியான முடிவெடுக்கத் தவறியிருக்கக் கூடும். ஆகிலும் அதிக தாமதமாகும் வரை நீர் காத்திருக்க வேண்டாம். இன்று இந்நூலின் வாயிலாக நீர் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பீராகில், உம்முடைய இருதயத்தைக் கடினப் படுத்த வேண்டாம். அவரில் அன்புகூர்ந்து, ஒரு குறிப்பிட்ட விதத்தில் அவருக்கு ஊழியம் செய்யும்படியாக அவர் உம்மை அழைத்திருப்பாராகில், நீர் சற்றும் தாமதியாமல், முற்றும் கீழ்ப்படி வீராக. அப்படிச் செய்தால் ரூத்துக்குச் சம்பவித்தது போல, உம்முடைய எதிர்காலம் மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும்; உம் துக்கம் சந்தோஷமாக மாறும்!

தேவபிள்ளைகளே, நாம் கர்த்தராகிய இயேசுவின் பாதத் தண்டை அமர்ந்திருப்போமாயின், அவர் நம் மேலுள்ள தமது அன்பினிமித்தம் நமக்காகச் சகலத்தையும் அமைதியாகத் திட்ட மிடுவார்; நாம் அவருடைய அன்பில் இளைப்பாறிக்கொண் டிருப்போம்! ஆகவே நாம் எப்போதும் ‘உன்னதமானவரின் மறை விடத்திலேயே’ வாசம்பண்ணுவோமாக (சங். 91 : 1 –Eng.). தம் மிடத்தில் அன்புகூர்ந்து, தமக்குக் காத்திருக்கிறவர்களுக்காக அவர் ஆயத்தமாக்கியிருப்பவைகளை உலகத்தோற்றம் முதற் கொண்டு ஒருவரும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, அவை மனுஷருடைய இருதயத்தில் தோன்றியதுமில்லை! (ஏசாயா 64 : 4 ; I கொரி. 2 : 9).



பரிசுத்த வேதாகமத்தில் உள்ள *ரூத்தின் சரித்திரம்* என்னும் சிறு புத்தகம் ஒரு குடும்பத்திலிருந்த மூன்று ஆண்களின் மரணத்திற்குப் பின் அழுதுகொண்டிருந்த மூன்று விதவைகளைப் பற்றிய விவரத்துடன் ஆரம்பமாகிறது. ஆனால் அப்புத்தகம் கடைசியாக ஒரு மகிழ்ச்சிகரமான விவாகத்தில் முடிவுறுகிறது. மேலும் ரூத் மக்லோனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தபோது பிள்ளை யற்றவளாய், ஒரு மலடியைப் போல இருந்தாள். ஆனால் அவள் போவாசை விவாகம் செய்துகொண்ட பின்னரோ கனியுள்ளவளாக மாறிவிட்டாள்! அவளுடைய வாழ்க்கையில் போவாஸ் பிரவே சித்தது முதல் சகலமும் மகிமையாகவும் ஒளிமயமாகவும் மாறிவிட்டன! அவ்வாறே, சுவிசேஷத்தின் மூலமாக நம்முடைய நிந்தை நீக்கப்பட்டிருக்கிறது! கிறிஸ்துவின் மூலமாக நம் இருள் சூழ்ந்த வாழ்வில் நம்பிக்கையின் ஒளி உதித்திருக்கிறது! இதோ, ஓர் ஒளிமயமான எதிர்காலம் நம் முன் இருக்கிறது! ரூத்தின் மூலமாக நகோமியின் வாழ்க்கையுங்கூட மேன்மையுள்ளதாயிற்று! அவள் வாழ்விலும் மகிமை உதித்தது! யூதரின் பாரம்பரியத் தின்படி ரூத்தின் பிள்ளை நகோமியின் பிள்ளை என்னப்பட்ட தினால், நகோமியின் குடும்பத்தில் வாரிசு அற்றுப்போகவில்லை! ரூத்தும் நகோமியும் போவாசும் மகிழ்ச்சியடைந்தனர்! மூவரின் அழுகையுடன் ஆரம்பமாகும் இப்புத்தகம் மூவரின் உவகையுடன் முடிவடைகிறது. “நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய்; ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்”; “உன் துக்கநாட்கள் முடிந்துபோம்” (ஏசாயா 60 : 15 , 20); “நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் **உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்**” (யோவான் 16 : 20) ஆகிய தேவ னுடைய வாக்குத்தத்தங்கள் ரூத்தின் சரித்திரத்தில் எதிரொலிக் கின்றன!

# முடிவுரை

ரூத்தின் சரித்திரமானது பஞ்சம், துக்கம், அழுகை, மரணம், தனிமை போன்றவற்றில் ஆரம்பித்து, மகிழ்ச்சியில் முடிவுறுகிறது. ரூத்தின் வாழ்க்கையின் ஆரம்பம், ஜீவனுள்ள தேவனை ஏற்றுக்கொண்டதுமுதல் பல இழப்புகளும் வெறுமையுமே அவளுக்குப் பங்காகக் கிடைத்தன என்று கூறத்தக்க நிலையில், ஒரு சோகக்கதை போல் இருந்தபோதிலும், அவள் தொடர்ந்து கர்த்தரை விடாமல் பற்றிக்கொண்டபோதோ, அவளது பின்னாட்களும் முடிவும் சீரும் சிறப்பும் மிக்கவையாய், ஒளி வீசிப் பிரகாசித்தன! மென்மேலும் தன்னைத் தாழ்த்திக்கொண்டே போன ரூத்தை அதிகமதிகமாகக் கனப்படுத்தி, உயர்த்துவதில் தேவன் பிரியங்கொண்டார். தாழ்மை, தெய்வீக அன்பு, தியாகம், பொறுமை போன்ற கிறிஸ்துவின் திவ்ய சுபாவங்களைத் தன் வாழ்வில் பிரதிபலித்த ரூத்தின் வாயிலாக - தன் வாழ்க்கையில் சலிப்படைந்திருந்த நகோமியின் ஜீவியமும் ஒளிமயமாயிற்று; போவாஸ் தாவீதின் முற்பிதாவாகி, பெத்லெகேமில் புகழ்பெற்றவனானான்; அந்த வம்சத்தில் கிறிஸ்து அவதரிக்கவே, முன்பு யூதேயாவின் ஆயிரங்களுக்குள் மிகச் சிறியதும், எண்ணப்படாததுமாயிருந்த பெத்லெகேம், பின்னாட்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாயிற்று; பெத்லெகேமுக்குத் 'தாவீதின் நகரம்' என்று பெயர் வருவதற்கும் ரூத் மூலகாரணமானாள்! சுருங்கக் கூறின் ரூத்தின் மூலமாக எப்பக்கமும் சகலமும் மகிமையடைந்தன! அருமையானவர்களே, கிறிஸ்துவே நம் ஜீவியத்தின் மையமாயிருப்பாராயின், அவரோடு நாம் நிலையான, மிக நெருங்கிய உறவு வைத்திருப்போமாயின், நம்மைச் சுற்றிலுமுள்ள சகலமும் நம் நிமித்தமாக மகிமையுள்ளவையாகும்! தங்கள் ஜீவியம் மகிமையுள்ளதாகும்படி யாவரும் நம்மை நாடி வருவார்கள்; நாம் அனைவருக்கும் ஆசீர்வாதத்தின் ஊற்றாகத் திகழ்வோம். ரூத் மூலமாகப் போவாசும், நகோமியும், பெத்லெகேமும் ஆசீர்வதிக்கப்பட்டு மேன்மையடைந்தது போல, நம் மூலமாக யாவரும் ஆசீர்வதிக்கப்படுவர்!

போவாஸ் ரூத்துக்கு ஆசீர்வாதமாயிருந்தான் என்பது உண்மையே. ஆயினும் ரூத் போவாசுக்கு ஆசீர்வாதமாக மாறினாள் என்பது நம் உள்ளத்தைக் கவர்ந்துகொள்கிறதன்றோ! நாம் கர்த்தருடைய இருதயத்திற்குப் பிரியமானவர்களாயிருப்பதும், பிறருக்கு ஆசீர்வாதமாயிருப்பதும், அவரோடு ஒரு நிலையான ஐக்கியம் வைத்துக்கொள்ளும்படி நமக்குள்ள ஆவலையே சார்ந்துள்ளன. ஆகவே நாம் அவரோடுள்ள நிலையானதும் முறிக்கப்பட முடியாததுமான ஐக்கியத்தை உறுதியாகப் பேணிக் காத்துக்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தேவபிள்ளையே, நீ உன் வாழ்வில் வெற்றிசிறப்பதற்கான ஒரே வழி கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருப்பதே! உன் முடிவு மகிழ்ச்சிகரமானதாயும் மகிமையுள்ளதாயும் அமைவதற்கான ஒரே வழி நீ அவரோடு ஆழ்ந்த, நிலையான ஐக்கியங்கொண்டிருப்பதே! அவ்வப்போது முறிந்துபோகிற, நிலையற்றதோர் உறவை மாத்திரமே நீ கர்த்தரோடு வைத்திருப்பாயாகில், உன் வாழ்க்கை நிராசையில் முடிவுறும். எனவே அவரது சமுகத்தில் அமர்ந்திருக்கும்படி போதுமான நேரம் எடுத்துக்கொள்வதில் நீ கவனம் செலுத்துவாயாக. அவர் மாத்திரமே உன்னைத் திருப்தி செய்ய வல்லவர். உன் **சகல** தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு அவரே! உன் சகல வேதனைகளையும் பிரச்சினைகளையும் உள்ளபடியே விளங்கிக்கொள்ளக் கூடியவர் அவர் ஒருவர் மாத்திரமே! மற்ற எவரையும் காட்டிலும் உன் இருதயத்தோடு மிகவும் நெருங்கியிருக்கக்கூடியவர் அவர் மாத்திரமே! இதை நீ உணருவாயாகில், அவரோடு மிக நெருங்கிய ஐக்கியங்கொள்ளும்படி உன் உள்ளம் எப்போதும் ஏங்கிக்கொண்டிருக்கும். அந்த 'மகிமையான விடியற்காலம்' வரை நீ எல்லாருக்கும் கடைசியானவனாய் உன்னைத் தாழ்த்தி, மிகுந்த மனத்தாழ்மையுடன் அவருடைய பாதத்தில் விழுந்து கிடக்கத் தீர்மானிப்பாயாக. அப்போது அவருடைய பரிசுத்தம் உன் பங்காயிருக்கும்; **மனத்தாழ்மையும் மனத்தூய்மையும்** உன்னை அவருடைய மணவாட்டியாக்கிவிடும்! ரூத்தின் சரித்திரத்தின் முடிவைப் போல உன்னுடைய முடிவும் மகிமையானதாயிருக்கும்; இம்மையில் உன் ஜீவியத்தில் சகலத்தையும், மறுமையில் உன் நித்தியத்தையுங்கூட அவர் நேர்த்தியானவையாக்கிவிடுவார்; உன் ஜீவியமும் ஊழியமும் மகிழ்ச்சியில் முடிவுறும்!